
1501

உ

# ஜீவகோடி ரஹஸ்யம்.

THE

# WORLD'S




# Secret Science

AND

# PHILOSOPHY.

...istered Copy Right.

1926.

21 DEC 1926

R
N26
77654

626
294.5

உ

உலக அனுபவ உண்மை

என்னும்

# ஜீவகோடி ரஹஸ்யம்.

THE

# WORLD'S SECRET SCIENCE

AND

# Philosophy.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 DEC 1926
MADRAS

BY

Sri R. K. Namasivaya Swamigal.

PUBLISHED BY

K. N. SIVAYOGA DAESIGAR,

*Registered Copy Right.*

Price Re. 1.]          1926.          [விலை ரு 1.

## இப்புத்தகம் விற்குமிடங்கள்.

மதுரை புதுமண்டபம் புக்ஷாப்கள்.

K. N. சிவயோகம் பிள்ளை, 4/15 மஞ்சணைக்காரத் தெரு, மதுரை.

மு. செ. முத்துரெத்தினம் செட்டியார், ஷாப் மர்ச்சென்ட், 5/15 மஞ்சணைக்காரத் தெரு, மதுரை.

V. K. பார்த்தசாரதி நாயகர், நிர். 4 பஜார் ரோட், ராயப்பேட்டை மதறாஸ்.

குறிப்பு:—நேரிலும் வி. பி. மூலமாயும் பெற்றுக்கொள்ளலாம். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

M.V.Press, Madura

77654

Printed at the Meenakshi
Vilas Press, Madura -26.

# முகவுரை.

"ஆயிரமுகத்தா னகன்றதாயினும் பாயிரமல்லது பனுவ லன்றே" என்ற முதுமொழிப்படி இம்முகவுரை எழுதலா யிற்று, நிகழப்படாநின்ற அனுபவ விஷயங்களைத் திரட்டி ஆக்கிய இந்நூல் மூலமாக உலகில் உண்மையை வெளியாக்கி வைப்பது ஓர் பேருபகாரமென்று எமதெண்ணத்திலும், நமதன்பர்களெண்ணத்திலு முதித்தது. ஏனெனில் அனு போகத்திற்கு மிஞ்சின ஞானமும், அதிலும் மேம்பாடான படிப்பும் வேறெதுவுமில்லை, மேலும், அனுபவமே வித்து ஆதாரம், அனுபவமே வேதம் சாஸ்திரம், அனுபவமே சட் டம் நூல், அனுபவமே அரசன் குரு, அனுபவமே தந்தை தாய், அனுபவமே காட்சி சாட்சி, அனுபவமே ஆராய்ச்சி நேசன்! இவ்வாறே மற்றெல்லாவற்றிற்கு மெல்லாமுமாய் நிற்பதும் அனுபவமே. அல்லாமலும் உலகமே அனுபவ திருஷ்டாந்த காரணமா யிருக்கின்றது.

நமது முன்னேற்ற விஷயத்தில் முன்னோர்களின் கருத்தை ஆராயப்புகின், நுண்ணிய அறிவுடையாருக்கே எட்டுமாறு அமைக்கப்பட்டிருக்கிறது. தேய்வம் நட்சத்தி ரக் கூட்டம்போல் ஒருவனென்றால் நாம் எப்படியாய்ந்து எவ்வாறு தெளிகிறது? உலகப்பிரயோசனமான காரியம் இன்னதென அறியும் மார்க்கத்தைக் காணவே காணும். இதுபற்றியே முன்னுள்ள அறிவாளிகளும் தத்துவ சாஸ் திரிகளும் வெகுகாலம் மிகுபிரயாசையுற்றுச் சுருதி, யுக்தி, அனுபவத்தில் கண்டறிந்த உண்மைகளை அவர்கள் நூல்களி லிருந்தும் நம்முன்னோர்கள் நம்மனோர்கள் அனுபவாராய்ச்சி யிலிருந்தும் தெரிந்து வெளியாக்க தற்கால நாகரீகவழியே நாவலெனும் கதாபூர்வமாய் "மின்னொளிக்கெதிராக ஓர் மின் மினிப்பிரகாசத்திற் கொப்பாகும்" எம் சிற்றறிவிற் கெட்டிய படி எளிய நடையிலெழுதலான இந்நூலே உலகம் தெளி ந்து முன்னேறவும், உலகவாழ்க்கைச் சுகமடையவும், அவ சிய ஆராய்ச்சி உதிக்கச்செய்யவும் முக்கிய காரணமா யிருக்கின்றது.

**R. K. Namasivayam,**

## நூலின் கருத்து.

நம் இந்து மதத்தில் சித்தாந்தம் வேதாந்த மெனக் கொள்கைகளிரண்டென்றும், ஸ்தூல, சூக்கும, காரணமெனச் சரீரம் மூன்றென்றும், ஆதாரம் ஆறென்றும், தொண்ணூற்ருறு தத்துவமென்றும் அதைக் கடந்தால் மோட்சமென்றும், அதுபோல் பிற மதங்களிலும் பற்பல விதமாய்க் கூறிய தந்திரம் மோசம் முதலான மதப்புரட்டுகளை வெளிப்படுத்தியும், ஜாலவித்தை ஏமாற்றுகளை விளக்கியும், வெண்ணெயுருக்கி நெய்யாமென்ற வுண்மையைப்போல பல தேசத்து அறிவாளிகளால் கண்ணாரக்கண்டு மனதார அனுபவித்துத் தெளிந்து செய்த உண்மை நூலென்னும் சயின்ஸ் (Science) முதலான அனுபவ சாஸ்திரங்களிலிருந்து உலகம் தாபரம் உயிர், பொருள், செயல், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், பிருதிவு, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் முதலியவைகளின் மேலான உண்மைகளைத் திரட்டி நன்கு விளக்குமிந்நூல் சகல மதங்களும் சமயங்களும் ஒப்புக்கொள்ளக் கூடிய தெய்வ லட்சணம் நன்கு துலக்கி தன்ம கன்ம, பாவ புண்ணிய, பிறப்பிறப்பு, ஞானபதவி இன்னதெனத் தெளிவாய்ச்சொல்லி, உலகப் பிரயோசனமான வஸ்து இன்னது தானென்றும், அதைத் தேடும் வழி யின்னதென்றும் உலகிலிதுவரை வெளிவராத அநேக உண்மை ரகசியங்களையும் மர்மங்களையும் வெளியாக்கிக் கவலை யென்பது அணுவளவு மணுகாது நித்திய ஆனந்தத்தையும் சுகத்தையு மனுபவிக்கச் செய்யும் ஔடதமாகி, எல்லோரும் கைக்கொண்டொழுகு மாயுதமுமா யிருப்பதாலிதைச் சகல பாஷையிலு மொழி

பெயர்த்து அச்சிட்டு வெளிப்படுத்த வேண்டிய தவசியமாதலால் அப்படியும் கூடிய சீக்கிரம் வெளிவரும்.

உலகில் எண்ணிலடங்கா நூல்கள் மலியக்கிடப்பினு மிதுவரை யிதுபோலொன்று முண்மையைச்சரியாய் வெளிப்படுத்தவில்லை யென்பது நிச்சயமாதலால் உலகில் மனிதரெனப் பிறந்த அறிவுடைய ஒவ்வொருவர் கையிலு மிப்புஸ்தகம் டைரிபோல விளங்கவேண்டியது. முக்கியமாய் பெண்கள் மாணவர், வியாபாரி, விபசாயி, ஆராய்ச்சிக்காரர்கள் முதலியோர் சகலருக்கும் இப்புத்தகம் அத்யாவசிகமானதே.

அமிழ்தினுமினிய அருந்தமிழறிந்த அன்பர்காள்! இதை வாசிக்கும் நண்பர்களை அன்னம் போற் குற்றங்களைந்து குணத்தை யேற்று ஆதரிக்க வேணுமாயும், இதன் பிந்திய பதிப்பில் சேர்க்கத் திருத்த வேண்டியவைகளைத் தெரிவிக்கும்படியாயும், இறைஞ்சிக் கேட்பதுடன் அவர்கட்கு நன்றி செலுத்தி மிகுந்த வந்தனமும் செய்கின்ற

தங்கள்,

**K. N. Sivayogam.**

OFFICE OF THE REGISTRA
21 DEC 1926

| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| 9 | 5 | உறபத்தி | உற்பத்தி |
| 12 | 24 | கோபா:—இன்று பாண்டி நாட்டிலிருந்து ஒருவர் வந்திருக்கின்றார். உலக ஆதி உற்பத்தியைப்பற்றி பிரசங்கம் செய்யப்போகின்றாராம், அதைக் கேட்டுச் செல்லவேண்டி உன்னை இந்த மைதானத்திற்கு கூட்டிவந்தேன் (இது விட்டுப்போனது) | |
| 43 | 9 | கற்பமாகி—கர்ப்பமாகி | |
| 44 | 15 | அர்ச்சுணன்—அர்ச்சுனன் | |
| 48 | 6 | வந்து × வாளைப்பிரயோகித்து அனேகரை மகம்மதியர்களாக்கி யிருக்கிறார்கள், ஆனால் கிறிஸ்தவர்களோ (வி) | |
| 183 | 14 | பட்டனம்—பட்டினம், பட்டணம். | |
| 59 | 9 | குட்டியும்—பன்றிவயிற்றில் யானைக்குட்டியும் (வி) | |
| 62 | 5 | (படம் 13) (வி) | |
| 66 | 23 | அரனை அரணை | |
| 67 | 16 | மூன்றாள் கட்டி அணைக்கும் படியான பூதவர்க்க வாழையுமுண்டு (வி)<br>வாளை × வாழை | |
| 68 | 1 | மகாந்தம்—மகரந்தம் | |
| 71 | 10 | பூசிணி—பூசணி | |
| 94 | 18 | (ஒரு கைதி ஆஜரானான்) (வி) | |
| 105 | 27 | கொண்—கொண்டு | |
| 107 | 4 | பாண்டியன் சமாதி—பழனி போகர்சமாதி (வி) | |
| 129 | 20 | அறிவு (வி) | |
| 141 | 1 | மனம்—அறிவு | |
| 142 | 8 | ஸிம்நம் பிளிசம் (வி) | |
| 173 | 8 | பரவை—பறவை | |
| 143 | 1 | மனம்—ஸிம் நம்பிளிசம் | |

# THE
# WORLD'S SECRET SCIENCE
# AND
# PHILOSOPHY.

## உலக அனுபவ உண்மை.

### என்னும்

# ஜீவகோடி ரகசியம்.

## முதலாவது அத்தியாயம்.

---

ஆ! என்ன ஆச்சரியம்! என்ன மாயமோ! எங்குங் காணோமே! எண்ணிலைமாடத்துப் பரிக்கையினின்று பார்க்கின்றேனே, இன்னுந் தென்படவில்லையே! இவ்வரண்மனை பாலைவனமெனத்தகிக்கின்றதே! வீடுகாடாய்விட்டதே, உல்லாசமாயுடனிருந்த நாயகன் திடீரென்றோடினரே, எங்கு சென்றனரோ, எவ்விடமேகினரோ, கொடும்போர் விளைந்ததோ, குழவி எக்கெதியாயிற்றோ? ஐயோ! எனதன்பே! ஆசைக்கடலே! பாசக்கயிறே! எனதாசைக் கணுவிலாக் கரும்பே! அரைக்கணங்கூடப் பிரியச்சகியோமே, எவ்வாறு சகிப்பேன் இறந்துவிடத்துணிந்தேன், ஒருவாறு சேயும் பதியுந்திரும்பிலெங்கணமுய்யும், சென்றவிடம் நோக்கிச் செல்வேன்; இவ்வேடத்தோடேகி னிடையூறுண்டாமாதலின், நம்பதியினுடுப்பணிந்து பயணச்செலவிற்கு வேண்டி

யன கைக்கொண்டு சுரங்கவழியே நள்ளிரவிலே சென்றேன், கடுவெளி கடந்தேன், பலவூர் நடந்தேன், ஆங்காங்குமாராய்ந் தேன், செய்தியொன்றுமெட்டவில்லை, இனி எங்கு செல் வது யாரைக்கேட்பது என்று திகைத்து பரியினின்றிறங்கி நிற்கின்றேன். அதோ ஒருவர் செல்கின்றார், சென்றார் நின் றாரை நோக்கி நும்மூர், நும்பெயர் யாதென வினவினர்.

நின்றார்:—நன்னாடு தென்னாடு, பெயர் ஞானவிலோ சனன், நும்மூர் நும்பெயர் வினவ அவாவுறுகின்றேன்.

சென்றார்:— அதோ தெரிகின்ற சத்தியபுரிநாடு, பெயர் சச்சிதானந்தன், தங்கள் ஜாதியைக்கேட்க விரும்பு கின்றேன்.

## ஜாதி.

ஞானவிலோசனன்;—ஜாதி யென்பது சாயம், சலர், மேப்பூச்சு, வேஷம் என்று தெரியாதா, பெயருக்கேற்ற விவேகமில்லையே, எனைக்கண்ணுற்றும் ஜாதியறிந்திலீர் போ லும், என் ஜாதி மானிடர் ஜாதி.

சச்சிதானந்தன்:—ஈதாரறியார், யானென்ன பயித்தி யக்காரனா? தெரிந்துரைக்க, என்ன வர்ணம்?

ஞானவி;—ஓதித்தான் தெளிவீர்போலும், எவ் வர்ணமெனில் சிகப்பு வர்ணம்.

சச்சி:—யானோதாது நும்மையே வினவினேனெனக் கவலைபோலும், என் ஜாதி பிள்ளைமார் இனியாவது நும்ஜாதி யோதுக.

ஞானவி:—என் ஜாதி தகப்பன்மார்.

சச்சி:—என்ன, பரிகாசஞ் செய்கின்றீர்போலும், தகப்பன்மாரென்றொரு ஜாதியுமிருக்குமா? உம்மைவிட மாட்டேன்.

ஞானவி:—பிள்ளையிருந்தால் தகப்பனிருக்கவேண்டியதவசியந்தானே, ஜாதிப்பயித்தியமென்னும் பித்தேறியதினாலல்லவா இவ்வாறு புகலுகின்றீர். ஈதகலுமாறு அனுபவாமிர்த சஞ்சீவிலேகியம் பின்னால் தருகின்றேன், உட்கொண்டீரேல் உடனே நீங்கிவிடும்.

சச்சி:—ஈதென்ன ஒருநாளுமறியாத செய்தியாயிருக்கின்றது, கடவுளால் ஜாதி ஜாதியாகப்பிரிக்கப்படவில்லையா?

ஞானவி:—அதிலுஞ்சந்தேகமா, மாட்டுச்சாதி, குதிரைச்சாதி, பாம்புச்சாதி, பல்லிச்சாதி, இன்னுமெத்தனையோ அளவற்ற ஜாதிகளுண்டும்.

சச்சி:—நானதைக்கேட்கவில்லை, மனிதர்களைமட்டுங் கேட்கின்றேன்.

ஞானவி:—மனித ஜாதியில் வெவ்வேறு ஜாதியாய்ப் பிரித்ததற்கு தகுந்த நியாயம் சொல்லும், அதில் எந்த ஜாதிக்காவது அவயவ இந்திரிய பேதங்களுண்டா? ஆண் பெண்மாறிக்கூடினால் கருத்தரிக்கமாட்டாதா? உயர்குலத்தாருண்பதற்கொருவாய், கீழ்குலத்தாருக்கொருவாயா? கலவியின்றிக்கருத்தரிப்பதுண்டா? வித்தை அவித்தை, சுத்தா சுத்தம், உண்டி உடை பழக்கத்தைப் பொருத்ததா, ஜாதியைப்பொருத்ததா? தொழில் வித்தியாசத்தால் ஜாதியை நிரூபிக்கமுடியுமா? சர்ஜன்ஜெனரல் மூலமாயாவது சரீர இரத்தசோதனை செய்து ஜாதியைச் சொல்லக்கூடுமா? நிறங்கள் மாறுதல் தேசத்தையும் சரீரத்தையுங் குறித்ததா? ஒருவருக்கொருவரடங்கி நடக்கப்பணமொன்றே காரணமாயிருக்க, ஜாதியொன்று வேண்டியதவசியமா? பிறதேசங்களில் ஜாதிப்பிரிவினையிருக்கின்றதா? நம்மறியாமையினாலிப்படிப்

பிரிந்தோமென்பதைத்தவிர வேறெக்காரணமாவது சொல்ல வியலுமா? "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொக்கும் செய்தொழில் வேற்றுமையால்" என்றபடி தொழில்பற்றி ஜாதி யேற்பட்டது, "கல்லாவொருவன்குலநலம்பேசுதல் நெல்லினுட் பிறந்த பதராகும்மே" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. நன்ருய் யோசித்துப்பாரும், நமதண்டையில்நிற்கின்றவர்யாவர்?

சச்சி;—சற்று யோசித்து ஐயா! இனி உங்களிடத்தில் உண்மையே பேச விரும்புகின்றேன். இவர் மந்திரவாதி, அதோதெரியும் ஆலமரத்தருகில் பெரியதாம்பூரப்பாத்திரத்திற் பல்லாயிரக்கணக்கான தங்க நாணயங்கள் புதைக்கப்பட்டிருக்கின்றதாயும், அதைத்தம்முடைய தேவதை சக்தியினுலெடுத்துத்தருவதாயும், அதன் பூசைச்செலவிற்குந் தன் பிரயாசைக்குமிருநூறு ரூபாய் கேட்கின்ருர், அதைப்பற்றி யோசிப்பதற்காகவே யித்தனியிடத்திற்கு வந்தோம், இச்செலவு துகையை நாமிருவரும் போட்டு அகப்பட்டதைப் பாகித்துக்கொள்ளலாம், என்ன சொல்லுகின்றீர்.

ஞானவி:—என்ன, ஏராளமான துகையை யெடுத்து உம்முடைய கையிற்கொடுத்துவிட்டு, இவ்வற்பதுகையை விரும்பும் இத்தந்திரவாளிதான் பயித்தியக்காரனு அல்லது அவன் நம்மைத்தான் பயித்தியக்காரனென்று நினைக்கிருனு என்று சந்தேகித்துப் புன்னகையுடன் நிற்கின்றேன். "கண்ணின்று கண்ணறச்சொல்லினுஞ் சொல்லற்க முன்னின்று பின்னேக்காச்சொல்" என்றபடி எந்தப்பேச்சும் நேரிற் பேச வேண்டும்.

சச்சி:—சரிசரி, தெரிந்துகொண்டேன் வெட்கக் கேட்டை வெளியிற்சொல்லவேண்டாம், அவையெல்லாம் ஏமாற்றென்றறிந்துகொண்டேன். ஆனல் மந்திரவித்தை யாவது உண்மையா?

## மந்திரம்ஜாலம்.

ஞானவி:—கேளும், வித்தைக்காரன் ஒரு உழக்கிலிருந்து சர்க்கரை, கடலை, ரூபாய், பவுன் தருவிக்கிறான். அவ்வுழக்கிலநேக சொருகுகளுண்டும், அதைப்பிரித்துக்காண்பிக்கிற சம்பிரதாயம்; செப்படிவித்தை-கையடக்கச் சம்பிரதாயம், பெட்டிவித்தை-பெட்டியில் ஒருத்தியைக் கட்டிப்போட்டுக் கத்தியால் குத்துகிறான், பெட்டியைத்தூக்க இலேசாயிருக்கின்றது, பெட்டியினடியில் ஒரு வெளியுண்டு. அதின் மூலம் பாரம் பூமியில் தாக்கும்படியிருந்துகொண்டு பெட்டியை இலேசாகக்காண்பிவித்துக் கத்தியைப்பிடித்துப் பக்கத்தில் விட்டுக்கொண்டு, பவுடர் சாயத்தை கத்தியில் தடவிவிடுகிறாள். மரப்பெட்டியில் பாக்கிங் செய்வதாய்ச் சொல்லி ஆளைமறைவாய் வெளியேற்றிவிட்டு வெறும் பெட்டியைப்பாக் செய்ய வெளியிலிருந்து அவன் வருகிறான். ஒரு தூணில் ஒருவனைகயிற்றாலிருக்கிக்கட்ட அடுத்ததூணில் கட்டப்பட்டிருக்கிறான். கட்டைத்தானே அவிழ்த்துக்கொண்டு பழையபடி கட்டிக்கொள்ளும் ஜாலம். வீட்டில் தீப்பிடிக்கிறது தீமுறுகிப்பாஷாணவேலை, கல்முதலியனவந்து விழுகிறது கையாள்வேலை. மேற்படி பாஷாணத்தை வாயிலடக்கம் செய்துகொண்டு ஊத வாயில் தீ வருகிறது, அதை ஒரு கந்தைத்துணியிற்சுற்றி ஊதுகிறான் புகைவருகிறது, மேலே சுற்றியவேஷ்டி எரிந்ததாக நினைக்கிறோம். மேற்படி பாஷாணத்தை ஒலிவாயில் எண்ணெய்யிலரைத்து முகத்திற் பூசிக்கொண்டு இருட்டுவீட்டில் நிற்கிறான், முகம்பிரகாசமாய்த்தெரிய தேவதையை வரவழைத்ததாய் ஏமாற்றுகிறான். வளையவித்தை-வளையத்தைச் சேர்க்கப்பிரிக்க அதில் ஜாயி

ண்டுகளுண்டும். மாஞ்செடி வித்தை-மாங்கொட்டையைப் பூமியிற் புதைக்கிருன், கவிழ்த்தியிருக்கும் கூடைப்பெட்டியில் சொருண்டு அதில் காயுடன் கொப்புகளை மறைத்துவைத்தும், அல்லது மூடுந்துணியிலடக்கஞ்செய்தும், முன்னுடியே தான் செய்யப்போகுமிடத்திலடக்கஞ் செய்தும், அதைத் தரையில் முளைத்தபாவனையாகக் காண்பிக்கிருன். துப்பாக்கியிலிருந்து வெத்துவேட்டைக்கிளப்பி மறைத்துவைத்திருந்த புருவை எறிகிருன். கத்தியைகண்ணிற் செலுத்துவது போல உடுப்பில் செலுத்திவிட்டுக்கத்திமுனைத் துண்டைக்கண்ணிற் சொருகிவிட்டு, கத்திமுனையைப் பிடித்திழுப்பது போல உடுப்பில் விட்டிருந்தகத்தியை இழுத்துவிடுகிருன். நூலை வயற்றிலிருந்திழுப்பது போலக்கையடக்க நூற்பந்தை விடுகிருன். காந்தவித்தை-அடியிலிரும்புத்தகடு, காந்தத்தின் மூலம் அந்தரத்தில்நிற்கிருன், விக்கிரகம் அந்தப்படிநிற்கிறது பொம்மைகள்கூத்தாடுகிறது. ரசக்கண்ணுடியைச் சாயலாய்ச் சேர்த்து அமைத்து வைத்துக்கொண்டு கை, கால், முண்டம் காண்பிக்கிருன். தலைமயிரின் முனையை ஒரு சிமிளிலொட்ட வைத்து அதுநகர்வதாகக் காண்பிக்கிருன். அப்படியே ஒரு ட்டிவாத்து தண்ணீரில் முங்கி நீந்துகிறது. மாம்பாலை அல்லது சாருயத்தை ஊட்டிய திரி தண்ணீரில் விளக்கெரிகிறது. வீட்டில் கொட்டியிருந்த சாதம் முதலியவைகளை அவ்வீட்டின் கீழறையிற் செலுத்திவிட்டு தேவதை சாப்பிட்டு விட்டதாகப்புரட்டுகிருன். வெங்காரத்தைபொரித்து முட்டைபோலச்செய்து கழுவினகோப்பையிற்போட அது ஊறிக்கரைந்து போய்விடும். மோடிக்காரனை அதையெடுக்கச்சொன்ல் முடியாது, மோடிவித்தையும் கையாள்வேலை. குழாயில்

கயறு இழுக்கிறது - கயற்று நுனியில் ஈயத்துண்டைக் கட்டிவிட்டிருக்கிறான். மஞ்சளைக் கரைத்த தண்ணீரில் நீர்முள்ளி விதைத்தூளை விபூதியுடன் போட்டுக்கலக்கி எடுக்க மஞ்சள் உருண்டையாய்வரும், எலுமிச்சம் பழத்தி லாவது முட்டையிலாவது ரசத்தைச் செலுத்தி வெயிலில் போட ஆடும். தேங்காயுள் சுண்டெலியை விட்டுவிடத்தேங் காயுருளும். முட்டையின் வெள்ளைக்கருவைக் காயவைத்து பொடித்து சாறுயத்தில் போட பால்போலாகும். ஆதாளைப் பாலை விபூதிபோல பூசிக்கொள்ள காய்ந்தால் தெரியாது, பின் கிணற்றில் முழுகிவெளியில்வர விபூதி பூசியிருப்பதாய்த் தெரியும், பாலை கோவணத்துணியிலூட்டிக் காயவைத்துக் கட்டிக்கொண்டு கிணற்றில் முழுகி துணியின்பாலை ஒருசெ ம்பிற் பிழிந்து பாலைவெளியிற் கொண்டுவர ஆச்சரியப் படு வார்கள். வாழைப்பழத்தினுள் ஊசியால் துண்டு துண்டு களாய்க்கண்டித்து உரிக்க துண்டு துண்டுகளாய்விழும். ஒரு வனைக் கோரரூபமாயச்சிங்காரித்து ஆற்றுமணலில் மறைத்து வைத்து பேயைத்தருவிப்பதாய்ச் சொல்லிஅவன் திடீரெனக் கிளம்பி ஆரவாரிக்கவும் அலறி ஓடுவார்கள். அமாவாசை யன்று பூர்ணசந்திரனைக் காண்பிக்க-ஒருபானைவாயில் இலே சானகாயிதத்தை ஒட்டிஉள்ளே விளக்கைக் கொளுத்தி தோ ப்பின் ஒரு மரத்தின்மேல் இருட்டில் தூக்கிக்காண்பிக்க ஆச் சரியப்படுவார்கள். ஏவல்புலி-புலிமாதிரி ஒருவன் வேஷம் போட்டுக் கொண்டு அகாதநேரங்களிற் போய் எதிரியைப் பயப்படும்படி செய்து அவனை அதன்பயக்கெலியாற் கொல் லுகிறது. ஏவலென்பது விஷமருந்தீட்டினால் ஆளைக்கொல்லு கிறது, வியாதியை உண்டுபண்ணுகிறது; மாரணமென்பதும்

அதுவே; சாதனைசெய்துவந்தபழக்கத்தால் விஷம், பாஷாணம், அக்கினித்திராவகம், கல், மண், சுண்ணும்பு மரத்துண்டு, இரும்பாணி, பாதரசம், உருகினஈயம், முதலியவைகளை உட்கொள்ளுகிறார்கள். இப்படி முறிவுசாதகம் முதலிய அநேக எமாற்றுகளுண்டும். Practice makes perfect.

---

## இரசவாதம்.

தங்கக்காசு செய்து நிறத்தைமாற்றி அதை ஒரு சிலிமியினடியிற்போட்டு அதைப்போல் ஒரு செம்புக்காசை மேலே வைக்கச்செய்து கஞ்சாவை இழுத்துக்கொட்ட தங்கக்காசு மேலே தோன்றும். தங்கக்கம்பியை நாக்குப்பூச்சியுட்செலுத்திக்கண்டித்து காயவைத்து, வேரைப்போடுவதாய்ச் சொல்லி இதைப்போட்டுச் சேர்த்துருக்க தங்கம். காடிக்காரத்தூளையும் இரசத்தையும போட்டுருக்க ரசம்ஓடிப் போய் காடிக்காரத்திலுள்ள வெள்ளி உருகிநிற்கும். எதையும் நன்ருய்ச்சோதித்துப்பார்த்தால் வெளியாய்விடும். ஆகையால் இரசவாதம், மந்திரம், எட்சினி, மாரணம் உச்சாட்ணம் முதலியயாவும் ஜால தந்திர வித்தை. தேவதை யென்பதும் பேய்பசாசென்பதும் பொய்.

பெண்கள் பேயாடுவது பெண்களுக்குள்ள நரம்பு இசுவைப்பற்றிய வியாதி.

சச்சி:—ஐயா! சரி. இனி ஜோதிடமாவது நிஜமாயிருக்கலாமா?

---

## சோதிடம்.

ஞானவி:—சோதிட ஜாதககணிதநேரம்—சிசுவின் சிரசு உதயநேரமென்றும், ஜலக்குட முடைந்தநேரமென்றும் கை கால் உதயநேரமென்றும், அது முதற் சுவாசமிட்டநேர மென்றும், சிசுபூமியில் விழுந்தநேரமென்றும், கருஉற்பத்தி யான நேரமென்றும், சுக்கிலம் உற்பபத்தியான நேரமென் றும், சொல்லுகிறார்கள். இதிலெதையும் நிச்சயிக்கமுடியாது, ஆனல் வயிற்றைக்கிழித்து குழந்தையை எடுத்து விடுகிறார்க ளே! அதற்கு நேரம் எப்படி நிச்சயிப்பார்களோ என்ன சமா தானம் சொல்லுவார்களோ? ஆபினும் மேற்சொல்லியவை களிலொன்றை நிச்சயித்தார்களென்றுவைத்துக் கொண்டா லும் விஞடிகூடப்பிசகாமல்நேரம்கண்டு பிடிப்பதுமுடியாது. எப்படி யென்றால்-ஆயிரங் கெடியாரங்களை ஒரேஇடத்தில் வைத்தாலும் ஒன்றுகூட ஒத்து மணி அடிப்பதில்லை. தவிர மணிக்கணக்கும் பூமியின் சுழற்சியினுலிடத்துக்கிடம் வித்தி யாசப்படுகிறது. (படம் 2) எத்தனையோ கோடிக்கணக்கான மைல்களுக்கப்பாலிருக்கும் கிரகங்களுக்கும், இப்பூமியிலிரு க்கு முயிர்கட்கும் என்ன சம்மந்தம். ஒரு குழந்தை பிறக்கி றது அதே நேரத்தில் எத்தனையோ லட்சக்கணக்கான உயிர் களும் பிறக்கிறதல்லவா? அந்தக்குழந்தைக்கு ஜாதகப்படி நடக்கிறதாய் ஒத்துக்கொண்டாலும் மேற்சொல்லிய எல்லா உயிர்களுக்கும் கர்மம், சகோதரத்வம், ஆயுள், யோகம், புத்ரகளத்ரபாகம் முதலிய பலன்கள் ஒத்துநடக்குமா? ஆழ் ந்துயோசிக்க. தவிர சூரியனைச்சுற்றி வரும் எல்லாக்கிரகங் களையும் சரியாய்த்தெரிந்து கணக்கிடவுமில்லை இராகுகேது வென்னுமிரண்டுந் தனிக்கிரகங்களல்ல, சாயல் அதாவது

சாயாக்கிரகம் அதையும் பிந்தி சேர்த்திருக்கிறார்கள். அன்றியும், பிற்காலங்களிற் கண்டுபிடிக்கப்பட்ட யுரேனஸ், நெப்சூன் முதலிய கிரகங்களும், செவ்வாய்க்கும் வியாழனுக்குமிடையில் முன் ஒரே நட்சத்திரமாயிருந்து சிதருண்ட ஆஸ்டிராய்ட்ஸ் Astroyds என்னும் ஆயிரம் நட்சத்திரங்களும், ஷை சூரியனைச் சுற்றிவருகின்றதே, அவைகளை அக்காலத்தில் தெரிந்துகொள்ளாததினால் அவைகளையும் மேற்படி கிரகங்களுடன் சேர்க்காமல் சோதிடத்தைக்கணிதம் செய்து முடித்துவிட்டார்கள். அக்குறைவிற்கு என்ன சமாதானம் சொல்லமுடியும். சாலியவாகனன் காலமாகிய இரண்டாயிரம் வருடங்களுக்குமுந்தி சோதிடமே கிடையாது, அவன் அரசுக்குவந்தவுடன் தன் ஞாபகார்த்தமாக சகாப்தம் உண்டுபண்ணி வானசாஸ்திரத்தை விஸ்தரித்துச்செய்தான். அதன் பின் சில ஏமாற்றுக்காரர்கள் சோதிடம் என்று கற்பித்தார்கள். சோதிடத்தில் பலன் தவறும் விஷயத்தில் கணிதநேரம் பிசகியிருக்குமென்று ஜவாப்சொல்லி விடுகிறார்கள். இரேகை சாஸ்திரமோ பலவித அர்த்தங்கொள்ளக்கூடிய கவிகளைக் கட்டி பழைய ஏடுகளில் எழுதிச்சேர்த்து வைத்துக்கொண்டு ஏமாற்றிவிடுகிறார்கள், ஆதலால் சோதிடமென்பது பேதை மானிடர்களை ஏமாற்றிப்பொருள் சம்பாதித்து வயிறு பிழைக்கவும், மதப்புரட்டுகளை ஸ்தாபித்து நம்மைக்கெடுக்கவும் ஏற்பட்ட நூல். ஆதலால் அதை ஒருபோதும் நம்பொணாது.

சச்சி:—ஐயா, இனி ஒருபோதும் தங்களைப்பிரியவே மாட்டேன், நாமிருவரும் ஒருமுறை தேசமெங்கும் சுற்றிப் பார்த்துவர விரும்புகின்றேன். எனதில்லத்திற்கெழுந்தருளுக, போஜனந்தயாராயிருக்கின்றது அருந்துக. போஜன

மருந்திப்பின்பு, நான் தங்கள் தேசவாசி இங்குவந்து பல்லாண்டாகிறது, வெகுதிரவியம் சம்பாதித்து வைத்திருக்கின்றேன், மீந்தநிதியில் தருமம் செய்ய நினைக்கின்றேன். எவ்வகையான தருமம் இட்டாரையும் ஏற்றாரையுங் கூடுதலுண்டாக்கும். உத்திரவின்பிரகாரம் செய்கின்றேன்.

## தருமம்.

ஞானவி:—ஆஹா! நம்யோசனையை மெச்சுகின்றேன், "ஆண்டுதருமத்தை யறியாதான் செய்கருமம் மாண்டமரத்திற்கணைத்தமண்" என்பதுபற்றி நம் தேசாச்சாரமாய் தருமமென்று சொல்லப்படுவன முப்பத்திரண்டு, அதில் தருமம் செய்தவனுக்கே ஆபத்தும், பெற்றுக்கொண்டவர்களுக்குஆபத்தும் அதைச்சார்ந்தவர்களுக்கு ஆபத்துக்களும் துன்பங்களும் நேரிட்டுவிடுகின்றது; விளையும் வினைகளைச் சொல்லப்புகின திகப்படும். எல்லாவற்றையுமாராய்ந்து பார்த்ததில் கொடுத்தாற் குறையாததும் பெற்றோர்களுக்குந் திருப்தியும் முன்னோர்கள் வாக்கியப்பொருத்தமுள்ளதும், என்னறிவிற்கெட்டியதும் வித்தியாதானமன்றி வேறமையவில்லை. அது பற்றியே, "எண்ணென்பவேனை யெழுத்தென்பவிவ்விரண்டுங் கண்ணென்பவாழு முயிர்க்கு," "செல்வத்துட் செல்வம் செவிச்செல்வ மச்செல்வம் செல்வத்துளெல்லாந்தலை" என்றும் "கல்வியினூங்கில்லை சிற்றுயிர்க்குற்றதுணை" என்றுங் கூறியுள்ளார், என்றுபேசிக்கொண்டிருக்கும் போழ்து, அவ்வூர் பூபதியென்னுந் தனபதி இவர் வரவைக்கேட்டு விசாரித்து மிக்க சந்தோஷங்கொண்டு தன் சிநேகிதன் சச்சிதானந்தனையும் ஞானவிலோசனனையுந் தன்மனைக்கழைத்து விருந்து

நடத்திவைத்தார் 'வித்துமிடல் வேண்டுங் கொல்லோ விருந் தோம்பி மிச்சின் மிசைவான் புலம்'' உலகப்பிரயோசனமான ஒரு பிரசங்கம் செய்யும்படி அவரைக் கேட்டுக்கொண்டனர். உடனே இன்றுமாலை ஐந்து மணிக்கு "ஆதிஉற்பத்தி" யென் னும் விஷயமாய் சங்கமேடையிற் பிரஙசகமென்று தண்டோ ராச்செய்து நோட்டீசு கொடுக்கப்பட்டது.

ஆஹா! ஆகாயம் மாசுமறுவற்று தத்துவ ஞானிகள் மனம்போற் களங்கமின்றி விளங்கிற்று, தென்றலும் சிலுசி லுவென்றடிக்கத் தொடங்கிற்று. சூரியன் தன் செவ்விய கிர ணங்களென்னுந்திரையை ஆகாயத்தில் விரிக்கச்செய்தான். கிள்ளைகள் முதலான பறவைகள் தத்தம் இனங்களைக் கூட்டிக் கொண்டு திரள் திரளாய்க் கூட்டை நோக்கிச்சென்றன. சீமான்களும் சீமாட்டிகளுங் குழந்தைகளைக் கூட்டிக்கொ ண்டு உலாவிக்கொண்டிருந்தார்கள். எங்கும் புஷ்பத்தின் கந் தம் வீசிக்கொண்டிருந்தது. இந்நேரத்திற் றுன்பத்திலாழ்ந் தனர் யாவரும் ஆனந்தத்தில் மூழ்கினரானார்கள்.

மைதானத்தை நாடிச்செல்லு மிருவரிலொருவன்,

ராமன்:—இதுவென்ன ஆச்சரியம்! ஒருநாளுங் காணப்படாத காட்சியா யிருக்கின்றதே! மேக மண்டலத்தை யளாவியும், பார்க்கப் பதினுயிரங்கண்ணும் போதுமோவென்றையுறும் படி, எங்குபார்த்தாலுந் தூண்களுந்தோரணங்களும், மத்திய மேடையிற் பந்தலும், சுற்றிலும் நாற்காலிகளும் போட்டிருப் பது இன்று பிரசங்கம்போல் விளங்குகின்றதே! இது விஷய முனக்குத் தெரியுமா?

கோபாலன்:—ஆம், இவ்வூர் ஜனங்கள் யாவருக்குந் தெரிந்தவிஷயமே, உனக்குத் தெரியாதது ஆச்சரியம்.

ராமன்:—நான் வீட்டில் தூங்கிக்கொண்டிருந்து நீ வருவதற்குச்சற்று முன்பே எழுந்திருந்தேன்.

கோபா:—உனக்கென்ன குறை, உங்களப்பா உத்தியோகத்திற் சம்பாதிக்கிறார், நீ நண்ணுப்ச்சாப்பிடுவது முறங்குகிறதுமாயிருக்கிறாய்.

ராமன்:—பலேபேஷ்! நண்ணுயிருக்கின்றது, நீ என்னை சுத்தசோம்பேறியாக்கிவிட்டாய்போலும், உனக்கென்ன மகாராஜன் உங்களப்பா கோவிற்பட்டர், கோவிலுக்கு வருகிறவர்களை ஏமாற்றி காணிக்கைகளை யெல்லாம் விழுங்கிவிட்டு உள்ளது உரியதைப் பிடுங்கிக்கொண்டு வழிப்பறி செய்து பொருள் சம்பாதிக்கிறார், எங்களப்பாவோ அப்படியல்ல சேவகம் செய்தால்காசு "என்புருஷனுக்கும் அரண்மனைச்சேவகம் அரைப்பணம் சம்பளம்" என்று பெண்கள் சொல்லிக்கொள்ளும் பெருமையே தவிர வரும்படியில்லை. சரி, அதிருக்கட்டும் இதைச் சொல்லடா.

ராமன்:—இதுவென்ன, ஆச்சரியம்! ஜனங்கள் மேகக்கூட்டம்போல் வந்துகொண்டிருக்கிறார்கள், நாமும்போயுட்கார்ந்துகொள்வோம், வாவா சீக்கிரம் அதோ நல்லதலமிருக்கின்றது.

ஓர் வண்டியிலிருந்து நாலுபேர்களிறங்க, ஜனங்கள் கரகோஷம் செய்கின்றார்கள். நிற்க பூபதியென்னுந்தனபதி மேடைமீதேறி வரவேற்புப்பத்திரம் வாசித்தபின் ஞானவிலோசனனென்பவர் மேடைமீது நின்றுகொண்டு சபையோர்களுக்கு வந்தனம் செய்து "நானிப்போது பேசப்போகும் ஆதிபூர்வ உற்பத்தி என்னும் விஷயத்தை அன்னம் நீரைப் பிரித்துப்பாலைப் பருகுவதுபோல கற்றோரும் மற்றோரும் கேட்டானந்திப்பீர்களென்று நம்புகின்றேன், (கரகோஷம் முளங்கிநின்றது) ஒருவர் பூமாலை கொண்டுவந்து போடுகின்றார்.

# ஆதி உற்பத்தி நுபுலா.

## (இரண்டாவது அத்தியாயம்.)

---

(படம் 4) ஞானவிலோசனன்:—என் சகோதர சகோதரிகளே! ஆதியந்தமிலாததாய், காலவரை கடந்து எங்கும் நிறைந்ததாய், எக்காலத்திலுமழிவற்றதாய், எல்லாந்தானுய்த்தானே எல்லாமுமாய், அதுவிலதுவாய் எல்லாவற்றையுந் தன்னிடங்கொண்ட அகண்ட இருண்ட வெளியில் நிறைந்த சக்தி-Power மயமாகிய ஈதர்-Eather என்னும் வாய்வணுக்கள் நெருங்க நெருங்க செயல் உருவுடையதாய் ஜோதிமயமாகிய சுயம்பாக்கினி இயற்கையாயதினின்று தோன்றி பிரமாண்டரூபமாய் புகை-Gas போல வெளியிற்பரந்து கிடந்தது. அப்படி வெகுகாலம் சென்று தன்னுட்டோன்றிய எலக்டிரிக்-Electric சக்தியினுல் ஒன்றுசேர்ந்து,சேறுபோல அக்கினிமயமாகிய பெரிய கோளரூபமாய் அசைவுகொண்டிருந்தது. இதுதான் ஆதி உற்பத்தி, அப்பிண்டத்துக்கு நுபுலா-Nebula அதாவது அக்கினிச்சேறென்று பெயர். (படம் 1) காலக்கிரமத்தில் அதுநெருங்க ஆரம்பித்து திகிரி போல சுற்றிக்கொண்டிருந்தது. அப்படி வெகுகாலம் செல்லச் செல்ல மத்தியில் அதிகப்பிரகாசத்தையும் அதிக அக்கினியையும் அமைத்துக்கொண்டதாய் நெறுங்கி அதிகவிசையுடனும் சுற்ற ஆரம்பித்தது. மத்தியில் நின்ற அக்கினிப்பிரகாசமான கோளம் சூரியன் அதுதானுய் நின்ற நிலையிற்றன்னைச் சுழற்றிக்கொண்டும், மேற்சொல்லிய அக்கினிச்சேற்றையுமிழுத்துக்கொண்டும் வெகுகாலம் வெகுவேகமாய்ச் சுற்றிக்கொண்டிருந்தது. பின்பு பலகாலங்களில்

அவ்வக்கினிச்சேருனது அநேகம் துண்டுக்கோளங்களாய்ச் சிதறிப்பிரிந்துபோயிற்று. மேற்படி துண்டுகள் புகையுடனும், செயலுடனும், ஒளியுடனும் அக்கினிமயமாய்க் காலவடைவில் இறுகிக்குறுகி, ஒன்றுக்கொன்று சம்மந்த இழுவையுடன் பிரிந்தோடிப்போகாமலும், சுற்றுந்தொழிலுடைய தாய்க் கிரகங்களாய் ஆகாயத்திலமைந்தது. இப்படி எத்தனையோதடவை அழிந்தும் உண்டாகியுமிருக்குமென்றும், இதுபோலனேக நுபுலாக்களும், உடுக்களும், பிர்மாண்ட சூரியர்களும், சந்திரர்களும், நட்சத்திரங்களும், பூமிகளும் ஆகாயம் முழுதும் நிறைந்தும், இன்னும் அநேகம் உண்டாகிக்கொண்டும், அதிலிருந்து பிரிந்துகொண்டும் பூமிகளாக ஆகிக்கொண்டும், அரைகுறையாயிருந்து கொண்டுமிருக்கிறதென்றும், பிர்மாண்ட பூமிகளுக்குத்தகுந்தபடி பிர்மாண்ட தாபர ஜீவர்களும், சிறிய பூமிக்குத்தகுந்தபடி அற்பதாபர ஜீவர்களும், அதிக ஆராய்ச்சி அறிவுநாகரீகமடைந்த ஜீவர்களும், குறைந்தஜீவர்களும், ஆச்சரிய அபூர்வ ஜீவகோடிகளுமிருக்குமென்று நம்பவேண்டியதிருக்கிறது.

## கிரகங்கள் நட்சத்திரங்கள்.

மேலே சொல்லப்பட்டபடி ஆகாயத்திலமைந்துள்ள துண்டுகளிலொன்று நாமிருக்கும் இப்பூமி, அது தன்னைச் சேர்ந்த ஜலம், மேகம், வாய்வுக்களுடன் தன்னைச் சுழற்றிக்கொண்டும், தன்னிலிருந்து பிரிந்த சிறியதுண்டாகிய சந்திரனைத்தன்னைவிட்டு நீங்கச்செய்யாமற் றன்னைச்சுற்றச்செய்து கொண்டும், சூரியனாகிய பெரியபிண்டத்தை மற்றபிண்டங்களாகிய கிரகங்களைப்போற் சுற்றிக்கொண்டும் வந்துகொண்


டிருக்கிறது. (படம் 11) அப்படி ஒரு சுற்று ஒரு வருஷம் அதாவது 365 நாள், 5-மணி, 48-நிமிஷம், 49-விநாடி, முற் காலங்களிலிப்படிச் சுற்றிவர அதிகநாள் பிடித்தது, மணிக் கணக்கும் முன் குறைந்திருந்தது இனி அதிகப்படும்.

சந்திரனில் :—24000 அடி உயரமுள்ள மலையுண்டு. அதற்கு நியூட்டன் என்று பெயரிடப்பட்டிருக்கிறது. அப்படி அநேக மலைகளும், எரிமலைகளுமிருப்பதாயும், சந்திரனிற்றெரியுங் களங்கமதுதானென்றும், ஜலம் பிராணவாய்வு முதலிய ஜீவாதாரப்பொருள்கள் அதில் நம்க்குத்தோன்றும் பக்கத்திலில்லையென்றும், அதினால் அதில் தாபர ஜீவபிராணிகள் உண்டாகவில்லையென்றுங் கண்டறிந்திருக்கிறார்கள்

ஆனால், இந்தப்பூமியாகிய கோளம் அவ்வக்கினிச் சேற்றிலிருந்து பிரிந்த காலம் 58 கோடி வருஷமிருக்குமென்றும், பிராணவாய்வு முதலான வாய்வுக்களும், தண்ணீரும் நிறைந்து அதிக அக்கினியில்லாமலுமிருக்கும் பல காரணங்களினால் இப்பூமியில் உயிர் நிறைந்திருக்கிறதென்றும், அப்படியே செவ்வாயிலுமிருப்பதாயும், அதை சாஸ்திரிகள் கண்ணாடிக்கருவிமூலம் சோதித்ததில், பூமிக்கு அது அடுத்துவருங்காலத்தில் ஆல்பஸ் என்னும் உயர்ந்த மலையிலிருந்து லைட் கிளப்பியதாயும், அதற்கு அவர்களும் பதில் செய்ததாயும் சொல்லுகிறார்கள். தற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மைக்கிராப்போன் என்னும் ஒரு கருவியினால் செவ்வாயிலிருக்கும் ஜனங்கள் நம்முடன் பேச அவர்களனுப்பும் செய்தியைக் கிரகித்துச்சொல்லுகிறதாம், ஆனால் அப்பாஷை விளங்கவில்லை, இன்னும் ஆராய்ச்சி செய்துவருகிறார்கள். ஆக செவ்வாயிலுள்ளவர்கள் நம்மிலும் ஆராய்ச்சியில்

சிறந்தவர்களென்று மதிக்கிறார்கள். இவ்வித ஏதுக்களில்லாத கோளங்களில் உயிர்கள் நிலைக்க ஏதுகரமில்லை யென்றும், ஆகாயத்திலிருக்கும் நட்சத்திரங்கள் பிர்மாண்ட சூரியர்களென்றும், இன்னுமிவ்வித மாறுதலடையாமல் சூரியனைப் பார்க்கிலும் அதிக உஷ்ட்ண முடையதாய் சிலது நீலநிறமாயும் சிலது மஞ்சள் நிறமாயும் சிலது செந்நிறமாயும் உஷ்ட்ண மிகுதி குறைவுக்குத் தகுந்தபடி பிரகாசித்துக் கொண்டிருக்கிறதென்றும், சிலது இன்னும் புகை மயமாயிருப்பதாயும் கண்டறிந்திருக்கிறார்கள்.

சூரியன் பிரகாசமில்லாத பிண்டமென்றும், அதைச் சுற்றீயஉஷ்ட்ணப்பிரகாசவாய்வென்னும்ஜலவாய்வு-Hydrogen gas-நிறைந்திருப்பதாயும், அதினின்று உஷ்ட்ணம் வெளிகிளம்புவதாயும், செவ்வாய்க்கு நாலு, வியாழனுக்கு ஏழு, சனிக்குப் பத்து, யுரேனஸ்கு நான்கு சந்திரர்களும்; சனியைச்சுற்றி நுபுல்லாப்போன்ற அநேக கோடி உபகிரகங்கள் கூடிய ஒருவளைய மிருப்பதாயும், சிலது வால் போலும் நீண்டதாயும், இருண்டதாயும், கூட்டமுடையதாயும், மேகம் போற் பரந்ததாயும் பற்பல விதமாயுமிருக்கின்றது என்றும் ஆராய்ச்சியிற் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது.



## பூமி மனிதன் ஜீவகோடிகள்.


ஆதியில், இப்பூமியும் அக்கினிப்பிண்டமாய், கொடிய உஷ்ட்ணமுடையதாய், புகை மயமாய், நீராவியும் வாயுவுங் கலந்த உடையை உடுத்திக்கொண்டு, மேலே சொன்னபடி தன்னையும் சூரியனையும் சுற்றிக்கொண்டுவந்து கொண்டிருக்கின்றது. வேகம் அதிகரிக்க, அதிகரிக்க மேற்பரப்பிற் கிட்டம்போல் ஒருகடின பதார்த்தமாய்ப் பூமி ஏற்பட்டு வந்தது. உள்ளே அக்கினி உருவிற் குறைந்து கொண்டிருக்கிறது. மேலே சுற்றிலுங்கவிந்து நின்ற வாய்வும் நீராவியுங்கலந்து ஓயாத இடிமின்னல் முழக்கமுடன் வெந்நீர் மழைபெய்ய ஆரம்பித்ததிலிருந்து, மேற்பரப்பு பூராவும் வெந்நீராய்க் கொதித்து, மேற்சொல்லிய கடினபதார்த்தத்தை யிளக்கி மண்ணு கவும் சேருகவுமாக்கி தன்னுட்படியச்செய்து சூடானசேறும் ஜலமுமாகவிருந்தது. அந்தச் சேறுதான் பின்பு மண்ணுகத் தோன்றியது. அப்படி எங்கும் வெந்நீராய் நிறைய ஜலந்தோன்றியகாலம் பத்துக்கோடி வருஷமிருக்குமென்றும், அப்படி 280 லட்சவருஷமும் சென்றது. அப்போது பூமி யென்பது தெரியாமல் இரண்டுமைல் ஆழமுடையதாய் வெந்நீர் சமுத்திரமாய் உலகைச் சுற்றிக்கொண்டு அதிஉஷ்ட்ணமாயிருந்த காலம். அதன்பின் மழையும் ஓயாமற் பெய்துவர பூமியின் அம்சம் அதிகம் உண்டாக, உள்ளேயிருக்கும் சுயம்பக்கினி உள்ளே உருவிற்குறைய, வெளியில் வாய்வுந் தன் அம்சங்களினின்று பிரிந்து கலந்து கவிந்து நின்றது. அதினுல் சூடுதணிந்து ஜலமும் குளிர்ச்சியடைய ஆரம்பித்தது. அப்போது தான் பூமி தன் ஆதிபுராதன வாய்வையடைந்த காலம். அப்படியாக 180 லட்சவருஷம் சென்றது. அதன்பின் பாசியும், அதிலிருந்து சங்கு முதலிய சில நுட்ப பிராணிகளாகிய உயிரென்பது முதல் முதலில் ஜலத்திற்றோன்ற ஆரம்பித்தது. பூமியின்


மேற்பரப்பு பூராவும் இரண்டுமைல் ஆழமுடையதாய்க் குளிர்ந்த ஜலமும் சேறும் சகதியுமாயமைந்திருந்தது. அப்படியாக 180 லட்சவருஷம் சென்றது. பின் வாய்வினலும் நீராவியினலும் ஓயாத மழையினலும் பூமி குளிர்ச்சியடைந்தது. மேற்பரப்பு இறுக இறுக உள்ளேயும் இறுக ஆரம்பித்தது; அதினல் பூகம்பங்களதிகமாயுண்டாகி அக்கினியைக் கக்கும் எரிமலைகள் வெளியிற்கிளம்ப வாரம்பித்தது. அதினல் ஆழமான சமுத்திரங்களும் மலைமேடுகளான பூமியும் வெளிதோன்ற ஆரம்பித்தது. அக்காலத்தில் சமுத்திரத்தில் சிப்பி, பவளம், சங்கு, சிறு மீன்கள், பெரிய ஊர்வனங்களுமுண்டாயிற்று. அப்படியாக 120 லட்ச வருஷம் சென்றது. பின் செம்மண் சரளைமேடுகளும், தரையிடங்களுந் தோன்றிற்று. மழையினல் ஜலம் பெருக்கெடுத்து ஓடைகளும், ஆறுகளும், ஏரிகளுமுண்டாயிற்று. சமுத்திரத்தில் சகல மீன்வகைப் பிராணிகளும், பெரிய கடல் மிருகங்களுமுண்டாயிற்று. தரையில் பஞ்சுபோன்ற பாசியும் பூண்டுகளும் அற்பஜெந்துக்களும் ஒன்றின்பின்ஒன்ருக உண்டாகவாரம்பித்தது. அப்படி 60 லட்ச வருஷம் சென்றது, பின் தரையில் பெரிய கந்தமூலங்களும், நீண்ட இலைகளுடைய இடவாழையென்னும் Ferns செடிகளும் நெருங்கி ஓங்கிவளர்ந்தன. பின் அவைகள் மடிந்து பிர்மாண்ட மரங்களுண்டாவதற்கு ஏதுவான சத்தான உரமாயின. அப்படி 60 லட்ச வருஷம் சென்றபின் தரையில் பிர்மாண்ட பூதவிருட்சங்களும் தாபரகந்தமூலங்களும், நீண்டவாலும் பாம்பின் தலைபோற் பெரிய தலையும் 80 அடி நீளம் 14 அடி உயரமுள்ள பிர்மாண்ட நாற்காற் பிராணிகளும், நகரும் ஜெந்துக்களுமுண்டாயின. அவைகள் அப்போது உண்டாயிருந்த வெள்வால்போலும் பெரிய டிராகூன்ஸ்—Dragocns—என்னும் பட்சிகளைப் பிடித்

துத் தின்று வளர்ந்தன. ஒரு தாவில் 50 அடி தாவும் இராட்சதத் தவளைகளென்னும் 15 அடி நீளமுள்ள தவளை களுமுண்டாயின. அவைகளின் புதைபட்ட எலும்புக்கூடு கள் இன்னும் டெக்ஸாஸ்—Decsas—என்னுமிடத்திலகப் பட்டுக்கொண்டிருக்கிறது. ஒட்டகைக்கோழிகளும்:Ostrich அதிலும் பெரிய அதாவது 25 அடி நீளமுள்ள சிறகுகளு முடைய பட்சிகளுமுண்டாயிற்று. பிர்மாண்ட பூதயானைக ளாகிய மம்மவுத்ஸ்-Mammouths-என்னும் பதின்மடங்கு பெரிய யானைகள் நாலு கொம்புகளுடையதாய் உடம்பில் நிறைந்த மயிருடனும் உண்டாகி ஷை தாபரங்களிலே மேய்ந்து வளர்ந்தன. அவைகளின் சரீரங்கள் பனிக்கட்டி யிற் புதைபட்டிருந்து வெளியில் எடுக்கப்பட்டு காட்சிசாலை யிற் சேர்க்கப்பட்டிருக்கிறது. (படம் 6) ஆறடி உயரமுள்ள கொரியான்ஸ் - Gorians - என்னும் மனிதக் குரங்குகளும், கட்டை வாலுள்ள நாய்த்தலைக் குரங்குகளும், அவரங்க டாங்ஸ்-Ourangatangs-என்னும் காட்டு மனிதவாலில்லாக் குரங்குகளும் மந்திவர்க்கங்களுமுண்டாயிற்று. அவைகள் காய், கனி, கிழங்குகளைத் தின்று வளர்ந்தன, சிங்கப்பல் லுடைய புலிகளும், யாளிகளும், சிங்கங்களுமுண்டாயிற்று. அவைகள் ஜீவஜெந்துக்களைக் கொன்று தின்று வளர்ந்தன. அப்படியாக 60 லட்ச வருஷம் சென்று பின் மேற்சொல்லிய பிராணிகளிலிருந்து வெவ்வேறு விதமாகிய பிராணிகளும், பறவைகளும் ஒன்றிற்பலவாய் சீர்திருந்தி (devoloped) உண் டாயிற்று. அப்படி 30 லட்ச வருஷம் சென்றது (படம் 7-8) பின்னும், அதிலிருந்து யானைகளும் குதிரைகளுற்பத்திக்குக் காரணமாயிருந்த ஆர்பிலோரின் (Arbilorin) என்னும் பிரா ணிகளும் அதிலிருந்து குதிரைகளும்; மனித உற்பத்திக்குக் காரணமாயிருந்த எப்ஸ் அதாவது குரங்கு மந்திவர்க்கத்தி


விருந்துண்டாகியதுமான ஆர்போரியல் (Arborial) என்னும் பிராணிகளும், அதிலிருந்து டிரிப்ட் மனிதன் (Drift man) என்னும் காட்டுப் பிராணிகளாகிய மனித மிருகங்களும், காண்டாமிருகம், புலி, கரடி, நாய், ஓநாய், நரி, முதலை முதலிய சகல மிருகங்களும், சிறகுகளுடைய பல்லிகளும் ஊர்வன நகர்வன முதலிய சகல ஜெந்துக்களும், பட்சிகளும் தரையிலும் மலைகளிலுமுண்டாகி ஜீவித்துவந்தன. அதுபோல், சமுத்திரத்தில் சகல மீன், மச்சம், பெரியமிருகம் சிறிய மிருகங்கள் யாவும் பலவகையாயுண்டாகி ஜீவோற்பத்தி அநேகமாய் முடிந்த காலம்.



அப்படியாக 26 லட்ச வருஷம் சென்றது. பின் பனிக்கட்டிக்காலம் ஆரம்பித்தது. அதுதான் பூமி ஒழுங்கடைந்து நின்றகாலம் (Earth's formation time) அக்காலத்தில் அடிக்கடி உண்டாயிருந்த பிர்மாண்ட பூகம்பங்களினுல் அநேக பழைய பூமிகள் அமுங்கிச் சமுத்திரமாகியும், அநேக மலைகளும் தரையிடங்களும் சமுத்திரத்தினின்று புதிதுபுதிதாகவும் தோன்றிற்று. அதினுலும் பனிக்கட்டித் தொந்தரவினுலும் அநேக மிருகங்களும், பிராணிகளும் சந்ததியன்னியில் மடிந்தன. உஷ்ண தேசங்களுக்கு அநேகம் ஓடிவந்தன குளிர்ச்சி ஒத்துக்கொண்ட பிராணிகள் அங்கேயே தங்கி வசித்தன. அநேக பிர்மாண்ட தாபரங்களும் பூண்டுகளும் பூமியிற் புதைபட்டன. அப்படி 3 லட்ச வருஷம் சென்றது. சீதோஷ்ணங்களுக்குத் தகுந்தபடி பிராணிகளுக்கு உடம்பு ஏற்படலாயிற்று. அதுவரை மேற்சொல்லிய பத்துக்கோடி வருஷத்தில் ஒன்பது கோடியே தொண்ணூற்றிரென்பது லட்சமும் நீங்கி பாக்கியிருப்பது ஒருலட்ச வருஷகாலம் அதிலிருந்து காட்டுமனிதப் பிராணிகாலம்.




அவைகள் காட்டுப்பிராணிகளுடன் பிராணிகளாய்த் திரிந்து கூரியமரம், எலும்பு, கல் முதலிய ஆயுதங்களால் மம்மவுத்ஸ் என்னும் பூதயானைகள், ஓநாய், கழுதைப்புலி, கரடி Cave-bears முதலிய மிருகங்களுடன் சண்டைசெய்து தப்பி உயிர்பிழைத்து அவைகளைக்கொன்று தின்றும் மரங்களிலும், உயர்ந்தபாறைகளிலும், குகைகளிலும் வசித்துவந்தன. மேற்படி ஆயுதங்கள் அவைகள் வசித்துவந்த குகைகளிற் புதைந்திருந்து அநேகம் எடுக்கப்பட்டிருக்கின்றன. மேற்சொல்லிய சம்பவங்களினால் இப்பூமியும் அதிலுள்ள சகல பொருள்களும், தாபரம் முதலிய சகல பிராணிகளும் ஒருவனால் ஒருகாலத்தில் உண்டாக்கப்படவில்லை யென்றும், தானாய் இயற்கையாயுண்டாயிற்றென்றும் கைக்கனி கண்ணாடிபோல் வெளியாகிறது.










ஒருடசன் குழந்தைகளை சிறுபிள்ளைகளாயிருக்கும் போதே மனிதசஞ்சாரசப்தங்கூடக் கேட்காதபடி தனியான

வேறுயிடத்தில்வைத்துக்காப்பாற்றிவந்து பின் அவைகளைப் பார்த்தால் பேச்சு நடை உடை பாவனை முதலிய மனிதசுபாவமே தெரியாத மிருகமாகவேயிருப்பதாக சோதித்தறிந்திருக்கிறார்கள். அப்படிமிருகமாயிருந்த மனிதப்பிராணிகளாகிய நம்முன்னோர்கள் மிருகத்தினின்றும் வேறுபட்டு வெளியில்வந்து நெருப்பின் பிரயோசனந்தெரிந்து அறிவடைந்து இலைகளையும், மரஉரி, தோல்உரி, முதலிய ஆடைதரித்து மிருகம்போல் ஊமைகளாய் வெகுகாலம் பேச்சற்று பின் அபிநயப்பேச்சிலிருந்து, பின் பிராணிகள் சப்தத்திலிருந்தும் கொஞ்சங்கொஞ்சமாய்பேச அறிவிற்கும் நாக்குக்கும் சக்தியுண்டாகி மிகுந்த அனுபவமேலிட்டு ஒலிவடிவாய்ப் பேசத்தெரிந்து பின்வரிவடியாய் தமிழ் பாஷையுடையவர்களாய் இமயமலை இந்தியாவிலுற்பத்தியாகி, வில், அம்பு உடையவர்களாய் கடலிலும் தரையிலும் மரங்களால் கட்டடங்கட்டிக் குடியிருந்தும், மிருகங்கள் பட்சிகளைத்தின்றும், மீனைப்பிடித்துத்தின்றும், காய்கனி கிழங்குகளைத்தின்றும், அவைகளுங்கிடைக்காத சமயங்களில் மனுஷாளைத்தின்றும் ஜீவித்து விருத்தியாகி வந்திருக்கிறார்கள். அதன்பின் ஆடுமாடுகளைமேய்த்து அதன்பால் முதலிய பலன்களைக்கொண்டும், தானிய தவசங்களைக்கொண்டும், ஜீவித்து வளர்ந்து வந்த தொண்ணூறுயிர வருஷங்களும் சென்றுவிட்டது, பின் சரித்திரகாலமாகிய பதினாயிரவருஷம் வந்துவிட்டது. அதுதான் இப்போது நடப்புக்காலம். (படம் 1-2.)

ஒருமுறை சூரியனைப்பூமி சுற்றிவரும் நாளைக்கணக்கிட்டு ஒருவருஷமென்றும், தேய்பிறை வளர்பிறை யென்னுமிரண்டு பட்சங்களையும் ஒருமாசமென்றும், அக்காலத்திற்றெரிந்துகொண்ட ஏழுகிரகங்களை எழுகிழமை அதாவது ஒருவாரமென்றும், பூமிதன்னைச்சுற்றிக்கொள்ளும் ஒருநா

ளைத்தேதியென்றும் வருஷம் மாசம் தேதி கிழமை வாரமேற் படுத்தியும், ஆகாயவெளியை பன்னிரண்டு ராசிகளாகப்பா கம்செய்து அதில் ராசிக்கு இரண்டேகாலாக இருபத்தேழு நட்சத்திரங்களை அமைத்தும், பொன், வெள்ளி, செம்பு, இரும்பு முதலான லோகங்களின் பிரயோசனந்தெரிந்தும், நவரெத்தினங்களைக்கண்டு தெரிந்துகொண்டும், ரசாயனம் முதலான அநேக உண்மைசாஸ்திரங்களும் கைத்தொழில்க ளும் உற்பத்திசெய்தார்கள். பலவகையான ஆயுதங்களைச் செய்துகொண்டு சகல பிராணிகளுக்கும் மேலான வல்லமை யுடையவர்களாய் வீடுகள்கட்டிக்குடியிருந்தும், வயல்தோட் டம் உற்பத்திசெய்து வெள்ளாண்மை மூலம் தவசதானியம் விளைவித்தும், பருத்திமுதலிய கிருஷிகள்மூலம் பஞ்சை உற் பத்திசெய்து அதனல் உடைகளையும் ஆடைகளையும் நெசவு மூலம் தயாரித்துக்கொண்டும், அதன்பின் பட்டுப்பூச்சியால் பட்டும் அதினின்று பட்டுஉடைகளையும் உற்பத்திசெய்து, நாடுநகரங்களாகி கடலிலும் தரையிலும் வியாபாரம்கொண்டு செய்தும், ஒன்றுக்கொன்று போர்புரிந்தும் அரசுசெய்தும் வந்தார்கள். ஆதிகாலத்திலேயே இந்தியாவினின்று வெளி யேறிய அநேககூட்டத்தார்கள் தமிழ் உலகமென்னும் பற் பல இடங்களிலும் குடியேறி பலவிதபாஷை, சமயம், நடை, உடை, பாவனை முதலிய மதக்கொள்கைகளுடையவர்களா னார்கள் உலகமுழுதும் ஏழுகிழமை என்பது என்றும் மாறா மலும், ராசிக்கணக்கும், வருஷத்திய நாட்கணக்கும் ஒரே விதமாயிருப்பதாலும், சகல ஜனங்களும் ஒரேயிடத்திற்பி றந்து குடியிருந்து வளர்ந்து வந்தவர்களின் சந்ததிகளென்று ரூபிக்கப்படுகிறது.


உலகத்தை 360 டிக்கிரிகளாகப் பிரித்து சர்வே செய்தது மூலம், பூமியானது 25020 மைல் சுற்றளவு

197,310,000 சதுரமைல் பரப்பளவு; அதில் தரையிடம் 5 கோடி சதுரமைல், சூரியனை மணிக்கு 6,800 மைல் வேகமுடனும், தன்னை மணிக்கு 1,000 மைல்வேகமுடனும், சூரியனை 5,860,300,000 மைல் சுற்றுவட்ட வீதியில் ஒருவருடகாலத்தில் சுற்றிவருகிறது. ஆறுமாசம் வடக்குப்புறத்தையும், ஆறுமாசம் தெற்குப்புறத்தையும் சூரியனுக்கெதிரில் சாய்த்துக் கொடுத்துச் சுற்றிவருவதால் அயனம் ஏற்படுகிறது, அதினால் அதிவடக்கிலும் தெற்கிலும் ஆறுமாசகாலம் இருட்டும் ஆறுமாசகாலம் வெளிச்சமுமுண்டு. வெளிச்சகாலத்தில் ஆகாயத்தில் சூரியன்வட்டமிடும், இருட்டுக்காலத்தில் வடக்கில் ஒரோரோ பொரியாலிஸ் (Ororoboralis) என்னுமொரு நட்சத்திரம் வெளிச்சம் கொடுக்கும். பூமியின்கனம் 40,000,000,000,000. டண் நிறையென்றும், அதாவது 40 கோடிக்குக் கோடிடண் எடையென்றும், பூமியைச்சுற்றிய காற்றின் கனம் 5,864,000,000,000,000,000 டண் நிறையென்றும், பூமியைவிடசூரியன் 1,300,000 மடங்குபெரிதென்றும், பூமியின்வடகோடியும் தென்கோடியும் கொஞ்சந்தட்டைவடிவமாய முங்கியிருக்கிறதென்றும், பூமியினுள் அதாவது 35மைல் ஆழத்தின்கீழ் 7930மைல் குறுக்களவுள்ள சுயம்பக்கினிச்சமுத்திரம் உருண்டைவடிவாய் ஜொலித்துக்கொண்டிருக்கிறதென்றும், வியாழன் சொற்பச்சுயம்பிரகாசமுடையதென்றும், ஒருநிமிஷத்தில் வெளிச்சம் 20 லட்சம் மைல்வேகம் செல்கிறதென்றும், பூமியின்வட அந்தியத்தைக்காணும் பொருட்டு மிகுபிரயாசைப்பட்டு வெகு உயிரைக்கொடுத்து பனிக்கட்டியாயுறைந்த சமுத்திரத்தை அக்கினிக்கப்பலால் பிளந்து போய்ப்பார்க்க அவ்விடத்தில் திசைகாட்டுங் கருவி மாறிகாண்பித்தது. அவ்விடமிருந்துதான் பூமியின் ஒரு காந்தச்சத்து கிளம்பி மேற்படிகருவி

யின் மூலமாய் வடதிசையைக்காண்பிக்கிறதென்றும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. பூமி ஆராய்ச்சிகளும், மற்ற கிரகங்களைப்பற்றியும், கோளங்களைப்பற்றியும், வால்நட்சத்திரம், ஜோதி நட்சத்திரம், நட்சத்திரமேகக்கூட்டம், நட்சத்திர வான வேடிக்கைகளைப்பற்றியும், வடக்கில் மாறுதிருக்கும் வட நட்சத்திரம் வடதுருவநட்சத்திரத்தைப்பற்றியும் (North star, Urzamajor) வால்நட்சத்திரம் Comet $75\frac{1}{2}$ வருஷத்துக்கொருதடவை பூமிக்குத்தெரியும் அப்படி 1682, 1758, 1835, 1912வது வருஷங்களில் தெரிந்ததுஎன்றும் கண்டறிந்திருக்கிறார்கள். 210 கோடிமைல்தூரத்தில் ஜனனபுரி நட்சத்திரமிருப்பதாயும் அதிலிருந்து வெளிச்சம்வர 3வரு 3மீ செல்லுமென்றும் 630 கோடிமைல்தூரத்தில் சுகுணபுரி நட்சத்திரமிருப்பதாயும் வெளிச்சம்வர 1400வருஷம் செல்லுமென்றும், சூரியனைப்பார்க்கிலும் 1000மடங்கு பெரிதான சுவாதிநட்சத்திரமிருப்பதாயும், சூரியனைவிட எத்தனையே லட்சமடங்கு பெரிதாகிய நட்சத்திரங்களுமிருக்கின்றதாயும், ஒன்றுக்கொன்று இவ்வளவு தூரத்திலிருக்கின்றதென்றும், சூரியனைச்சுற்றிய ஆகாயவீதிகளையும், ராசிகளையும், கணக்கிட்டிருக்கிறார்கள். மற்ற ஆராய்ச்சிகளையும் சொல்லப்புகின் விரியும்.

சந்திரன் 2000 மைல் குறுக்களவுள்ளது, பூமிக்கு 23,900மைல் களுக்கப்பாலிருக்கின்றது. பூமியை 29நாள் 12 மணி 44நிமிஷம் 3விநாடியில் சுற்றிவருகிறது. தன்னை 23 மணிநேரத்திற் சுழற்றிக்கொள்ளுகிறது. ஜப்ஜேஷ்டா நட்சத்திரம் 22,000 மைல் குறுக்களவுள்ளதென்றும், ஹரிஷி 37,000மைல் குறுக்களவுள்ளதென்றும் கண்டுபிடிக்கப்பட்டி


ருக்கிறது. இன்னும் ஆகாயத்திற்றெரியும் நீலவர்ணம், யாதெனில் ஆகாயமானவெளி அளவற்ற எல்லையற்ற முடிவில்லாத பொருளாயிருக்கின்றது. அதில்நிறைந்தஇருட்டு அப்படி நீலவர்ணமாய்த் தோற்றுகின்றது, ஆகாயம் முழுதும் உயிர்ப்பிராணிகள் நிறைந்திருக்கிறதென்றும், ஒருகன அங்குல ஆகாயத்தில் எண்பதினாயிரம் எலக்டிரிக் கற்றன்ட்ஸிருக்கிறதென்றும், இப்படி அநேககாலங்களில் அநேக தத்துவ சாஸ்திரிகளும் வானசாஸ்திரிகளும், அறிவாளிகளும் பலவிதக்கருவி கண்ணாடியந்திரங்களினாலும், வெளிச்சம் பூமிக்கு வந்து சேரச்செல்லும் நேரத்திலிருந்தும், பூமியிலும் சமுத்திரத்திலும் புதைந்துள்ள எலும்பு நிலக்கரிமுதலிய பொருள்களின் உற்பத்திக் காலங்களிலிருந்தும், பனிக்கட்டிகளில் புதைபட்டிருந் தெடுக்கப்பட்ட சரீரங்களின் காலத்தைச் சோதித்தும், பவளக்கொடி வளர்ந்து வந்திருக்கும் காலத்தைக்கண்டறிந்தும், மழையினால் பூமிகழுவப்பட்டு சமுத்திரத்துட்போய்ச் சேர்ந்துள்ள உப்பின் கைப்பு மிகுதியைத் தெரிந்து கணக்கிட்டும் காலநிர்ணயம், கோளநிர்ணயம், பூமிநிர்ணயம், தூரநிர்ணயம், பிராணிநிர்ணயம், சரீரநிர்ணயம் முதலிய மற்றெல்லா நிச்சயமும்செய்து தீர்மானித்திருக்கிறார்கள்.



## (படம் 15) மூன்ருவது அத்தியாயம்.

### கிரகங்கள் விபரம்.

| கிரகங்கள் | சூரியனிலிருந்து தூரம் புரோப்போர்ஷன் அளவு | குறுக்களவு மைல் | தன் சுற்று | சூரியனிலிருந்து தூரம் மைல் | சூரியனைச் சுற்றிவரும் காலம் | பூமியைவிட மடங்கு பெரிது |
|---|---|---|---|---|---|---|
| | | | ம.நி.வி. | | | 1கோடி |
| சூரியன் | 0 | 883217 | | 0 | $26\frac{1}{4}$ நா. | 30 ல. |
| புதன் | 4 | 3000 | | $3\frac{1}{2}$ கோ | 88 | 1/3 பூமி |
| சுக்கிரன் வெள்ளி | 7 | 7700 | | $6\frac{3}{4}$ | 225 | $\frac{3}{4}$ |
| பூமி | 10 | 8000 | 23 50 4 | $9\frac{1}{2}$ | 365 | 1 |
| செவ்வாய் | 16 | 4000 | 243733 | $14\frac{1}{2}$ | 687 | $\frac{1}{8}$ |
| ஆஸ்டிராய்ட்ஸ் | 28 | சிதருண்ட | ஆயிரம் | கோள | ங்கள் | |
| வியாழன் குரு | 52 | 88000 | 9 55 0 | 50 | 12வரு | 1410 |
| சனி | 100 | 75000 | 10 14 0 | 90 | 30வரு | 700 |
| யுரேனஸ் | 196 | 35000 | | 180 | 84வரு | 74 |
| நெப்சூன் | 388 | 37000 | | 285 | 165வரு | 150 |



## கைத்தொழில்கள்.

ஸ்டீம், ஆயில், காஸ், எலக்டிரிக் மூலமாயும், பிரிண்ட், போட்டோ, ஸைக்கிள், டிராம், மோட்டார், ரயில்வே, ஸினிமா கிராமபோன், எலக்டிரிக்லைட், ஷிப், டார்பிடோ, பெலூன், ஸெப்ளின், ஏர்ஷிப், டெலிபோன், பிராட்காஸ்ட், டெல்ல கிராப், வயர்லெஸ், ஷார்ட்ஹாண்ட், டயிப் காஸ்டிங், டயிப் பிங், எலக்ட்ரோ டயிப்பிங், ஸ்டிரியோ, எங்கிரேப், மைக் ரூஸ்கோப், டெல்லஸ்கோப், பரோமீட்டர், தர்மாமீட்டர், ஸ்டிராமீட்டர், ஸிக்ளாமீட்டர், கிளாக், வாச், காம்பஸ், ரேடியம், எக்ஸ்ரேஸ், மெஸ்மரிசம், ஹிப்நாட்டிஸம் முதலிய வைகளும், அநேக நூதன யந்திரக்கருவிகள் மூலமாயும், மில்கள் மூலமாயும் தொழில்களுங் கண்டு, பூமியிலும் பூமிக் குள்ளும், சமுத்திரத்திலும் சமுத்திரத்துக்குள்ளும் ஆகா யத்திலும் வசித்தும் யாத்திரை முதலானது செய்தும் வருகின்றார்கள்.

ஆனல், அறியாமை எனும் வேரும், தேசமென்னுங் கொப்பும், ஒற்றுமையின்மையெனும் கிளையும், ஜாதியென்னு மிலையும், விவகாரமென்னும் சாறும், பக்தியென்னு மரும் பும், வேதபுராண சாஸ்திரச்சடங்கு முதலிய கொள்கைக ளென்னும் பிஞ்சுகளும், வீண் செலவுகளென்னும் காய்க ளும், முத்தியென்னும் வித்துகளும், பொய்யென்னும் ரசங் களும், தெய்வங்களென்னுங் கனிகளையுமுடைய விருட்சங் களி னிழலடியில் மானிடப்பூடுகள் வசித்துவந்தாலும் இக் காலத்தில் கல்வி, தொழில், செல்வம், நாகரீகம் முதலிய சகல சுகங்களையு மனுபவித்து, அதன்பலனுகிய புது நூதன

அற்புத அதிசய ஆனந்தங்களைக் கண்டுதெளிந்து பழைய மூடபக்திகளை நீக்கி உண்மைகளை உணர்ந்து அறிவு விருத்தியடைந்து வருகிறார்கள்.

---

## சரித்திரக் காலவிபரம்.

கி.மு.

13000 கிறிஸ்து பிறப்பதற்கு 13 ஆயிரம் வருஷங்களுக்கு முன் அதாவது இதுமுதல் 15,000 வருஷங்களுக்கு முன் இந்தியாவிலிருந்து வெளியேறி பர்சியா, பாபிலோன், நைல், யூப்பர்டீஸ் நதிக்கரை முதலான இடங்களிலும், சைனா, ஜப்பான், அமெரிக்கா, ஆப்ரிக்கா முதலியவிடங்களிலும் ஜனங்கள் குடியேறி வசித்து நாகரீகமடைந்தது.

8,000 அதாவது இதுமுதல் 10,000 வருஷம் சரித்திர காலம்

6,000 மனுச்சக்கரவாத்தி பாபிலோன் தேசத்தை அரசாண்டது, பர்சியாவிலிருந்து பாரசீகர்களும் இந்தியாவுக்கு வடக்கேயிருந்த யவனர்களும் வட இந்தியாவில் குடியேறியது.

5,000 பாபிலோனில் பிரியாமிட்ஸ் செய்தது.

2,000 பாபிலோனியர்கள் வட இந்தியாவில் குடியேறி சூரியனையும் அக்கினியையும் தெய்வமென்று வணங்கிக்கொண்டு ஆரியர்களெனப் பெயரிட்டுக்கொண்டது பின் தென் இந்தியாவில் தமிழர்களுடன் போர்புரிந்து தோல்வியுற்றது.

1,000 அகஸ்தியர் சூழ்ச்சிசெய்து வடஇந்தியாவிலிருந்து இராமனை தென்இந்தியாவின் அரசன் நிலந்தரு பாண்டியன் என்னும் இராவணனுடன்போர் புரியச்செய்தது. ஐரோப்பா முதலியவிடங்களில் ஜனங்கள் குடியேறியது. இந்தியாவில் பார்சீகர்களென்னும் ஸ்மிருதிப் பிராமணர்கள் இருக்குவேதம் பாரதக்கதை புராண ஸ்மிருதிகளை உண்டாக்கி அரச, வணிக, வேளாள என்றிருந்த மூன்றுவகுப்பைத் தங்களுடன் பிர்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரெனநான் காக்கியது. சிவன், விஷ்ட்னு, பிர்மனென்னும் மும்மூர்த்திகளை வணக்கம்செய்துகொண்டு மூன்று யுகங்கள் முன்னிருந்ததாகவும் கலியுகத்தில் 2,000வருஷம் செல்லாகி யிருப்பதாகவுங் கற்பித்தது.

700 ஐரோப்பாவில் உரோமாபுரி அரசாக்ஷி இந்தியாவில் வரதாயின ஞானபுத்திரன் கவுதமன் இவர்களால் (Right faith Knowledge and action) ஜீவகாருண்ய ஜயினமதம் விருத்தியடைந்தது.

600 உபநிடத உற்பத்திகாலம்.

550 ஜப்பானில் புத்தமதம் உற்பத்தி.

500 இந்தியாவில் புத்தர்கள் விருத்தி, ஆரியர்கள் புத்தர்களை சூழ்ச்சிசெய்ய வாரம்பித்தது. சீனாவில் புத்தமதம் உற்பத்தி.

400 மகாபாரதபுராணகாலம்.

கி. மு.

350 அலெக்சாந்தர் இந்தியாவின்மீது படையெடுத்தது. புத்த அரசன் சந்திரகுப்தனும் செலியூக்சும் சமாதான சினேகமாயிருந்தது.

300 இராமாயண புராணகாலம்.

250 மகததேசம் புத்தஅரசனான அசோகனால் ஆளப்பட்டது.

58 விக்ரமாதித்தன்காலம்.

கி பி. கிறிஸ்து பிறப்பு, இந்தியாவில் உக்ரகுமாரபாண்டியன் கடைச்சங்கம், திருவள்ளுவர் முதலியோர் காலம்.

300 சீனா, ஜப்பான் முதலியவிடங்களில் புத்தமதம் விருத்தி, இந்தியாவில் இந்துமதம் அழிவு.

700 இந்தியாவில் அழிந்துபோன இந்துமதம் வேரூன்றப்பட்டது.

800 எகிப்தில் மகம்மது அரசர்கள் வம்சம்ஸ்தாபிக்கப்பட்டது.

1,000 கஜினிமாமூது இந்தியாவின்மீது படையெடுப்பு.

1,200 இந்தியாவில் புத்தமதம் நசித்தது.

1,400 கொலம்பஸ் அமெரிக்காவைக்கண்டது.

1,500 போர்ச்சுகீஸ்காரர்கள் இந்துசமுத்திரம்வந்தது.

1,600 பிரான்சுக்காரர்கள் முதல்முதல் இந்தியாவுக்கு வந்தது.

1,605 ஈஸ்ட் இந்தியா கம்பெனி ஏற்படுத்தி இங்கிலீஷ்காரர்கள் முதல்முதல் இந்தியாவுக்கு வியாபாரிகளாய் வந்தது.

## உண்மை இப்படியிருக்கிறது.

## மதப்புரட்டு.

சூரியன் ஏழு குதிரையைப் பூட்டிய ஒற்றச் சக்கரத் தேரை ஆகாயவீதியிற் செலுத்திக்கொண்டு உதயகிரியிலு தித்து அஸ்தகிரியில் மறைந்துவிடுகிறதாயும், ஷை சூரியன் பூமிக்குவந்து கன்னிப்பெண்ணாகிய குந்தமாதேவியைச்சேர்ந்து உடனே கர்னனை அவளுடைய கன்னத்தின்வழியாய்ப் பெற்றதாயும், சந்திரன் தன்குருவாகிய வியாழனுடைய பத்தினியைக் கூடினதைக் குரு தெரிந்து அவரிட்டசாபத்தால் தேய்ந்தும் வளர்ந்தும் வருகிறதாயும் ராட்சஸனாகிய இராகு கேது வென்னும் பாம்புகளால் தீண்டிவிழுங்கப்பட்டு சூரிய சந்திரகிரகணங்களுண்டாகிறதென்றும், சனி பூமிக்குவந்து நளன் முதலியவர்களைத் துயர்ந்து துன்பம் செய்தானென்றும், மற்றக் கிரகங்களும் பூமிக்குவந்து அநேக கிருத்தியங்கள் செய்ததாயும்; அக்கினி, வருணன், வாயு முதலியவைகளும் உயிருள்ள தேவபிராணிகளென்றும் சொல்லுவது பொருந்துமா? (படம் 10-3)

பூமியின் சாயல் அதாவது நிழல் சந்திரனில் விழுங் காலத்தில் என்பது, பூமி சநதிரனை மறைக்குங்காலத்தில் சந்திர கிரகணமும், சநதிரன் சூரியனை மறைக்குங்காலத்தில் சூரியகிரகணமுமுண்டாகிறது. அதுகாரணம்பற்றியே அக்கிரகணங்களும் விருத்தவடிவாய்த் தோன்றுகின்றது. சந்திரன் சுயம் பிரகாசமில்லாதது சூரியஒளியாற் பிரகாசிக்கின்றது. அதுசூரியனுக்கும் பூமிக்குமிடையிலிருக்கும் ஸ்தான வித்தியாசங்களில் பூமிக்குத்தெரியக்கூடிய பிரகாசமுடைய பாகம் சிறுத்தும் பெருத்துந்தெரிவதினால் தேய்பிறை வளர்பிறை உண்டாகிறது. கிரகங்கள் இப்பூமியைப்போல் அக்கி

ணிப்பிண்டமாகையால், அவைகள் பூமிக்குச்சமீபித்தால் ஒன்றையொன்று இழுத்துக்கொண்டு சாம்பலாயெரித்துவிடும். அவைகள் பூமிக்கு வந்ததாய்ச்சொல்லுவதுசரியா? (படம் 3.)

தவிர, பாரதம், ராமாயணம், திருவிளையாடல் முதலிய புராணங்களில் சமணர்களெனும் புத்தர்கள் மதுரையை அழிக்க யானைமலை, நாகமலை, பசுமலை இவைகளை யாகத்தினுற்பத்திசெய்து அனுப்பியதாகவும், அப்பிராணிகளைச் சிவன் கல்லாய்ச்சபித்துவிட்டதாயும், இந்திரன் உத்திரவுப்படி சமுத்திரம் பொங்கி மதுரையை அழிக்கவந்ததாயும், வேலினால் உக்ரபாண்டியன் அதைச்சுவறிடச் செய்ததாயும், மதுரையில் நடந்த மீனாட்சி கல்யாணத்தில் மலைமலையாய் மிஞ்சியிருந்த அன்னபானாதி உணவுகளைத்தின்ற ஒருபூதத்துக்குப் பசியாறாததுகண்டு வற்றாத அன்னக்குழியையுப், வைகையாற்றையும், ஒருகாலத்திற் கங்காநதியையும், சிவன் தருவித்ததாயும், மாமியார் கடல்ஸ்நானம் செய்யும்பொருட்டு, இறந்துபோன தன்மாமனையும், ஏழுகடலையும், மதுரையில் வரவழைத்தாரென்றும், கைலையில்நடந்த பரமசிவன் கல்யாணத்துக்கு அகஸ்தியர் முதலிய் அநேகர் போயிருந்ததாயும் அப்பாரத்தினால் பூமிதாழ்ந்து தெற்கே உயர்ந்துவிட்டதாயும், அகஸ்தியர் தன் திருவோட்டைத்தென்றிசைக்கெறிந்திடவும் அதன் பாரத்தினால் பூமிசமப்பட்டதாயும், பாண்டியன் சப்தமேகங்களையும் விலங்கிட்டுச் சிறையிலடைக்க வெள்ளாளன் ஜாமீன்கொடுத்து மீட்டிவிட்டபடியால் அவனைக்கார்காத்தானென்றும், செண்டால் மேருவை அடித்துஉடைத்துவிட அதிலிருந்த தனங்களைக் கொண்டும், சிவனால் அளிக்கப்பட்ட துலையாக் கோட்டையைக் கொண்டும், வெள்ளாளனை பஞ்சநிவர்த்தி செய்ததாலவனைத்துலையாக்கோட்டை வெள்ளாளனென்று வழங்கிவருகிறதாயும், உயிருடன் பறந்து

திரிந்தமலைகளின்சிறகுகளை இந்திரன்தன்வச்சிராயுதத்தினுல் அரிந்துவிட்டானென்றும், அடியார்களுடைய பாடல்களினு லும் குருட்டுக்கண்ணனைச் செந்தாமரைக் கண்ணனென்று புகழ்ந்து புளுகும் கம்பர், சோளர், கேழ்வரகர், ஒட்டக்கூத் தர், அவ்வையார், மலைக்கொழுந்தர், மொச்சைப்பருப்பர், உலக்கைக்கழுந்தர் முதலிய வித்துவான்கள் கவியினுலும் நெல்மாரிமண்மாரி பெய்ததாகவும், வெட்டுப்பட்டபலாச்செ டியும், பனைமரத்துண்டும் பாடினவுடனே மரமாகிப்பூத்துக் காய்த்துப்பழம் பழுத்ததென்பது மின்னுமனேக அசாத்திய மான காரியங்கள் நடந்ததாயும், குடத்திலிருந்த அங்கத்தி லிருந்து செட்டிப்பெண் உயிர்பெற்றெழுந்தாளென்பதும் விந்தையே! ஓர் அரக்கன் சமுத்திரத்திலொளிந்துகொள்ள அவனைக் கண்டுபிடிக்க கலசத்திற்பிறந்த அங்குஷடப்பிரமா ணமுள்ள அகஸ்தியர் சமுத்திரம் பூராவையும் தன் உள்ளங் கையிற் கிரகித்துச்சாப்பிட்டுவிட்டதாயும், அறுத்துச்சமயல் செய்யப்பட்ட சீராளனை சிவன் உயிருடன் எழுப்பிவிட்டதா யும், ஆகாயத்திலிருந்த திரிபுரத்தை சிரித்துஎரித்துவிட்ட தாயும் மன்மதனைத்தன் நெற்றிக்கண்ணுலெரித்து விட்டதா யும், பின் அரூபியாயிருக்கும்படி உயிர்ப்பித்தாரென்றும், பெற்றதாயைப் பெண்டாட்டியாக்கிக்கொண்ட மகாபாதக னுக்கு முத்திகொடுத்ததாயும் சொல்லப்பட்டிருக்கிறது; விஷ் ட்ணு சமயக்காரர்கள் பாகவதம், ஆழ்வார்புராண முதலான வைகளை உண்டுபண்ணவும், சைவசமயக்காரர்கள் திருவிளை யாடல் பெரியபுராணம் முதலியவைகளைக் கட்டிமுடித் தார்கள்.

ஓர் அரக்கி மூக்குக்கு முந்நூறு பிள்ளைகள் பெற்று உடனே சண்டைக்கனுப்பிக்கொண்டிருந்தாளென்றும், விநா யகர் அவள் வயற்றிலிருந்த கும்பகலசத்தை தன் துதிக்

கையாலெடுத்து விட்டதாயும் அதனால் சுப்பிரமணியர் அரக்கிகை ஜெயித்தாரென்றும், ஒரு அரக்கன் தேவர்களைக்கொல்ல நினைத்து அவர்கள் பெருஞ்சமபலில் விழுந்து கரைந்து விட்டதாயும், அதை அருந்தியவர்கள் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளியில்வந்ததுமூலம் அவர்களைக்கொன்றதாயும், அகஸ்தியர் அதுதெரிந்து தன் இடதுகையால் வயிற்றைத் தடவி அவனை ஜீரணம் செய்துவிட்டாரென்றும்; அஷ்டதிகஜங்களும், அஷ்டமலைகளும், ஆயிரந்தலையுடைய ஆதிசேஷனும், அதனடியில் ஆமையாய் விஷ்ட்ணு மூர்த்தியும் இப்பூமியைத் தாங்கிக்கொண்டிருப்பதாயும், தலைமாற்றுங்காலங்களில் பூமிஅசைந்து பூகம்பங்களுண்டாவதாயும், பூமிகடாசியில் அண்டச்சுவர்களிருப்பதாயும், விஷ்ட்ணு ஆதிசேஷன் மீதும், ஆலிலைமீதும் பாற்கடலில் பள்ளிகொண்டிருப்பதாயும், அப்படிச் சயனித்திருக்குங்காலத்தில் தன் உந்திக்கமலத்திலிருந்து ஆதியில் இப்பூமியையும் அதிலுள்ள சகல உயிர்களையும் பொருள்களையும் சிருஷ்டித்ததாய்ச் சொல்லப்பட்ட பிரமன் பிறந்தானென்றும், அவன் தன்சரீர அவயவங்களிலிருந்து பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரென்னும் நால்வகைமனித ஜாதியைப் பெற்றானென்றும், சிலநூலில் வியாசர் மேற்படி ஜாதியை வகுத்ததாயுங் கூறப்பட்டிருக்கிறது. பூமியைத் தாங்கிக்கொண்டிருக்கும் ஆதிசேடன் பூமிக்கு வந்ததாய்ச் சொல்லுவதும் விந்தையே!

இன்னும், காசிபர் தன் பத்தினி அனுதையையென்ற பட்சியைச்சேர்ந்து இரண்டுமுட்டையிட்டு அடைகாத்துவந்ததில் கெருடன் ஒன்றில்பிறந்ததாயும் மற்றொன்றை அவசரப்பட்டு பிட்டுப்பார்க்க அதில் அருணன் குறைக்காலுடன் பிறந்ததாயும், அவன் சூரியனுக்குச் சாரதியாயிருந்து வருவதாயும், டிஸ்மிஸ்ஸான சாரதியாரோ! அனுமார் சூரியனிடம்

வித்தைகற்றுக்கொள்ள அவருக்கு முன்வேகமாய்ச் சென்று கொண்டு அவர் எழுதிப்போட்ட அரசிலையை எடுத்துவாசித்துப்படித்துக் கொண்டதாயும், கீழேலுலகம் மேலேலுலகமிருப்பதாயும், அனுமார் ஈவடிவெடுத்து தாமரைத்தண்டு வழியாய் கீழ்உலகத்துக்குப்போய் மயிலிராவணனைக் கொன்றதாயும், அவர் சிரஞ்சீவியென்றும், பெரியவிஸ்வரூபமெடுப்பாரென்றும், அநேகமலைகளை வேரோடுபிடுங்கி எறிந்தாரென்றும், ஓர்அரசன் பூமியைப்பாயாய்ச்சுருட்டி கக்கத்திலடக்கிக்கொண்டுபோய் சமுத்திரத்தி லொளித்ததை விஷ்ட்ணு கண்டுபிடித்துத் திருப்பிக்கொண்டுவந்து சேர்த்துவிட்டதாயும், விநாயகர் சமுத்திரத்தைத் தன் தும்பிக்கையாலிழுத்துச் சாப்பிட்டுவிடவும், பாற்கடலில் பள்ளிகொண்டிருந்த தன்மாமன் அதிலகப்பட்டு விழுங்கப்பட்டது தெரிந்து தன் சிறுநீர் வழியாயவரை வெளியேற்றிவிட்டதாயும், பின் விஷ்ட்ணு அவரைப்பூஜைசெய்து அதில் தவறிய தன்சக்கரத்தைப்பெற்றுக்கொண்டதாயும்; கங்கையென்னும் பெண்ணை சிரசில்வைத்திருக்கும் சிவன் தன் இடதுபாகத்தைப் பார்வதிக்கும், வலதுபாகத்தை விஷ்ட்ணுவுக்கும் கொடுத்துவிட்டாரென்றும், விஷ்ட்ணு தன்தேவியை நெஞ்சிலும், பிரமன் நாவிலும் வைத்துக்கொண்டிருக்கிறார்களென்றும், ஒருஸ்திரீயின் கற்பை அழிக்க திரிமூர்த்திகளும் சென்றதாயும், அவர்களை அவள் குழந்தைகளாய்ச் செய்துவிட்டதாயும், பின் திரிமூர்த்திதேவிகள் போய் அவளைப்பணிந்து தாலிப்பிச்சைகேட்டுத் திருப்பிக்கொண்டுவந்ததாயும் சொல்லப்பட்டிருக்கிறது.

தென்னாட்டை ஆண்ட மிக்க அறிவும், மூளையும், பலமுமுள்ள கருநிறமுடைய வீரனும் தமிழ் இலக்கண

இலக்கிய நூலாகிய தொல்காப்பியத்தை விர்த்திசெய்த அர சனுமாகிய நிலந்தருபாண்டியனே அவனிடம் தோல்வியுற்ற ஆரியர்களால் அவனே அசுரனென்றும், அவனுக்குப் பத்து தலைகள் இருபது கைகளுண்டென்றும், துஷ்டனென்றும் இழிவாய் கூறப்பட்டிருக்கிறது. அவன் கயிலாயகிரியைப் பெயர்த்ததாயும், அவ்வசைவுகண்டு சிவன் தன் பெருவிரலை ஊன்ற ராவணனகப்பட்டுக்கொள்ள, தன் சிரசில் ஒன்றைக் கொய்து அத்துடன் நரம்புகளிசைத்து வீணை வாசிக்கவும், சிவன் அவனை விடுவித்து மூன்றரைக்கோடி ஆயுளும் மற் றும் வரங்களும் கொடுத்ததாயும், விஷ்ணு அதை அரைக் கோடி வயதாகும்படி சூழ்ச்சிசெய்துவிட்டதாயும் கூறப்பட் டிருக்கிறது. அப்படி அவன் அதிலிருந்து அரைக்கோடி அதாவது, ஐம்பது லட்சம் வருஷம் அரசுசெய்தானென்பது எப்படிக்கூடும்? இதுவரை ஷஷ்டி யுகத்திலிருந்து இருபத்தி ஒண்ணரைலட்ச வருஷந்தானாகிறது. தவிர அவனுடன் பிறந்த கும்பகர்ணன், தாடகை, சூர்ப்பநகை முதலானவர் களும் அவன் புத்திரன் இந்திரசித்து முதலியவர்களும் அவ னுடன் அவ்வளவு காலம் ஜீவித்திருக்க எந்த சிவனிடத்தில் வரம் பெற்றுக்கொண்டார்களோ அதையும் சேர்த்துப்புளுக மறந்துவிட்டார்கள்போலும், நன்றாய் ஆலோசிக்க!

ஆயிரங்கண்ணுடைய தேவேந்திரன் கவுதமரிஷி பத் தினியாகிய அகலிகையைச்சேர்ந்ததாயும், ரிஷிக்குத்தெரிந்து அவர்களைச் சபித்ததாயும், அவர்களுக்கு ராமன்காலத்தில் விமோசனமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விரா மனே சிறைமீட்டிவந்த தன் மனைவியை தேசப்பிரதிஷ்டம் செய்திருந்தும் ஒருகுழந்தையுடன் போனவள் இரண்டுகுழந் தைகளுடன் திரும்பிவந்ததுகண்டு சினந்து அவளைவெட்டிப் புதைத்து, தானும் ஊரார்பழிச்சொல்லுக்கு அஞ்சி சரயுநதி

யில் முழுகிஇறந்து போனதாயும் தெரிகிறது. கவுதமரிஷி காலமாகிய மூவாயிரம் வருஷங்களுக்கு முந்தி தமிழருக்கும் ஆரியருக்கும் நடந்தசண்டையை ராமாயணமாகக்கூறியிருக்கிறதாயும், ஆரியர் தங்களைத் தேவர்கள் சுரர்களென்றும், தமிழர்களை வானரர்கள் நரர்களென்றும், மேற்சொல்லியபடி புத்தகவுதமரை இழிவுகூறியிருப்பதும் விளங்கவில்லையா? அதைத்திரேதாயுகத்தில் நடந்திருப்பதாக எழுதிவைத்தது சரியா? தவிர வருஷத்திற்கொரு ஸ்திரீயை விவாகம் செய்துகொண்டு அறுபதினாயிரம் ஸ்திரீகளை மனைவிகளாகப்பெற்று தசரதன் அறுபதினாயிரம் வருஷம் அரசுபுரிந்தானென்பதும், மணலைக்குடமாக்கி தண்ணீர்கொண்டுவரும் ஒரு கற்புடைய ஸ்திரீ ஆயிரம் தலையுடைய ஒருவனுடைய நிழலைத்தண்ணீரில் கண்டவுடன் கற்புக்குலைந்து போனதாயும், அவளைத்தன்தகப்பன் சொற்படி கொலைசெய்த பாசுராமன் க்ஷத்திரியர்களை அறுபதினாயிர வருஷம் கருவறுத்தானென்பதும், அவ்வளவு நீண்டகாலம் உயிருடனிருந்தார்களென்பதும் விந்தையே! ராவணனுக்குத்தகப்பன் ராமன் என்றும், ராவணனுக்கு சீதைமகளென்றும், அவள் ராமனுக்குத் தங்கையென்றும் பற்பலவிதமாய்க்கூறும் ராமாயணம் ஒன்றுக்கொன்று வித்தியாசமுடையதாய் இதுவரை தொண்ணூற்றென்பது தோன்றியிருக்கிறபடியாலும் அதுஉண்மை நூல் அல்லவென்று வெளியாகிறது.

தேவலோகத்தில் கேட்டதெல்லாங் கொடுக்கும் காமதேனு, கற்பகவிருச்சம், சங்கநிதி, பதுமநிதியிருப்பதாயும், தேவரம்பைகளாகிய எழுதாசிகள் என்றுமழியாத முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தி எண்ணாயிரம் ரிஷிகளுக்கும் இன்பசுகங்கொடுத்துக்கொண்டு என்றுமழியாமலிருப்பதாயும், இந்திராணியோ வெகுகோடிகாலத்துக் கொருவராய்

பட்டத்துக்குவரும் தேவேந்திரர்களுக்கெல்லாம் ஒரே பத்தினியாயிருந்து என்றுமழியாமலிருக்கிறாளென்பதும், மோட்ச காமத்தை இச்சித்த பேராசைகொண்ட காமாந்தர்களுக்குச் சொன்ன கதையெனவிளங்க வில்லையா? ஏழுபேர்கள் சிரஞ்சீவிகளென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. கற்பயுகாந்த காலத்தில் சகல கோளங்களும் அழிந்து ஏக அக்கினிமயமாகுமென்று சகலமதங்களும் ஒத்துக்கொண்டிருக்க, தேவலோகமென்னும் ஒருலகமிருந்திருக்கும் பட்சத்தில் அதுவுமழிந்து போகும்போது, ஷடிதேவர்களும், சிரஞ்சீவிகளும், இந்திரன், இந்திராணி, ரிஷிகள், முனிவர்களும், ரம்பைகளும் முதலாகிய சகல முதிர்ந்தபழங்களும் வற்றல்களும் சாகாமல் எங்கு ஒளித்துக்கொள்ளுவார்களோ! ஆலோசிக்கவேண்டும்.

சிவன் ரிஷிபத்தினிகளைக் கூடிய தோஷத்தால் சிவனையும் பார்வதியையும் ஜனனேந்திரியங்களாகும்படி ரிஷிகள் சபித்தபடியால் அவர்கள் ஆவுடைலிங்கமாக ஆய்விட்டார்களென்றும், சிலநூலில் மிகுந்த தபசுபுரிந்தும் தனக்குவந்து காட்சிகொடுக்காமல் சிவனும் பார்வதியும் காமக்களியாட்டத்திலிருந்தபடியால், ஷடிரிஷிக்குக் கோபமுண்டாகி அப்படிச் சபித்துவிட்டதாயும் சொல்லப்பட்டிருக்கிறது. விஷ்ணு தன் நெற்றியிலணிந்த நாமத்தின் உற்பத்தி விஷயமோ இதினுமிக்க ஆபாசமுடையதாய் நிதம்பக்குறியென்றுங் கூறப்பட்டிருக்கிறது. தேவேந்திரனடைந்த சாபமோமிக்க கேவல ஆபாசமுடையதே.

---

## கருவோற்பத்தி.

பெண்களிற் சிலருக்கு கரு உற்பத்தியாகாமலும் போய்விடுகிறது, கருத்தரிப்பது ஸ்திரீகள் ரஜஸ்வலையான 12 நாட்களிலென்றும் ரஜஸ்வலைக்கு 4-நாளைக்கு முன்னிருந்தே 16-நாட்களிலென்றும் மதித்திருக்கிறார்கள். பெண்களுக்கு கருப்பையின்வலது பார்சத்தில் ஆண்கருக்கூடும், இடதுபார்சத்தில் பெண்கருக்கூடுமிருக்கிறது. அப்படியே புருஷர்களுக்குமுண்டு அதற்கு கிட்ணியென்று சொல்லப்படும். இந்திரியம் பீஜத்திலுறபத்தியாகி ஷைபையில் சேமிக்கப்படும். ஆண்சிசுஉற்பத்திக்கு- ஸ்திரீயின் ஆண்கரு சுரோணிதமும் புருஷனின் வலதுபீஜத்தி லுற்பத்தியாகி வலதுகிட்ணியில் சேமித்திருக்கும் ஆண்கரு சுக்கிலமும் கலவியில் ஏககாலத்தில் ஒத்துஸ்கலிதமாகிக் கலக்கவேண்டியது. அப்படியே பெண்சிசுவுக்கு இடதுபக்கத்துக் கருக்கள். ஜாதிபேதித்தால் கருவை தரிக்காது. அதுவும் உயிருடைய வித்தாய் கோளரூபமாய் முட்டைபோல அதிபந்தோபஸ்தாய் ஒரு கூட்டிலமைக்கப்பட்டிருக்கிறது: பின்பு கலவியில் தாயுடையவித்துடன்கலந்து அண்டமாகி கருப்பைபோய்ச் சேர்கிறது. அதுவும் அதிபோகம், உஷ்ட்ணம், காற்று, தண்ணீர்முதலிய ஆபத்துகளுக்குத்தப்பி க்ஷேமமாய் கருப்பை போய்ச்சேர ஒருவாரம் செல்லும் இதனிடையில் கிருமிகள் முதலிய ஜந்துக்களுக்குத்தப்பி பத்துமாதம் ஆபத்தின்றிவளர்ந்து குழவி உருவடைந்து பிறக்கிறது எவ்வளவோ அருமை-பின்னும் வரும். இப்படிமனிதசுபாவமிருக்க அதற்குமாறாக ரிஷிபிண்டம் ரத்தங்காதுஎன்றும் அவர்கள் மான்மரை ஸ்திரீகளைக் கூடினவுடனே பிள்ளைகளைப்பெற்றதாயும், மந்திரசக்தியினு

லும் வேள்விகளினாலும் குழந்தைகளைச் சிருஷ்டித்ததாயும், உடம்பின் அழுக்கு, வியர்வை, கொட்டாவி, சுவாசம், தெர்ப்பை முதலியவைகளிலிருந்தும் குழந்தைகளை உற்பத்தி செய்ததாயும், இன்னுமெத்தனையோ அசாத்தியமான காரியங்களைச்செய்து முடித்தார்களென்றும் சொல்வது உண்மையாகுமா? உள்ளபடி அவர்கள் குருத்துரோகம் விபசாரம் முதலிய அக்கிரமமுடையவர்களென்று வெளியாகிறது. சிலர் தவளைவயற்றிலும், கிளிவயற்றிலும், மான் மரை கழுதை வயற்றிலும் மனிதனால் கற்பமாகிப்பிறந்தார்களென்பதின்மூலமாக அவர்கள் அக்கிரமஸ்தர்களென்றும் வெளியாகிறது. மகமேருவைமத்தாகவும், வாசுகியெனும் பாம்பைக் கயிறாகவும் தேவர்களும் அசுரர்களும்சேர்ந்து பாற்கடலைக் கடைந்ததாகவும், அதிலிருந்து காமதேனு, கற்பகவிருக்ஷம், சங்கநிதி, பதுமநிதி, சீதேவி, மூதேவி முதலிய அநேக தேவபிராணிகளுற்பத்தியானதாகவும், அதில் விளைந்த அமிர்தத்தை அதாவது வெண்ணெய்யை அசுரர்களுக்குக் கொடுக்கவில்லையென்றும், தேவர்களருந்தி என்றும் சாகாமலிருப்பதாகவும், பட்டகஷ்டத்தினால் வாசுகிகக்கியவிஷத்தைச்சிவன் உண்ண, பார்வதி குரல்வளையைப்பிடிக்க விஷம் அங்கேயே தங்கிக் கறுத்துவிட்டதாயும், சிவன் பிரமன்சிரசில் ஒன்றைக் கிள்ளிவிட்டதிலிருந்து அக்கபாலம் கையில் ஒட்டிக்கொண்டு பித்தேறிவிடவும், மைத்துனன் விஷ்ட்ணு சூழ்ச்சியாய் பாரத யுத்தத்தை ஆரம்பித்து அக்கபாலத்துக்கு எதேஷ்டமான இரத்த உணவைக் குடிப்பிக்கச் செய்ததிலிருந்து கபாலம் கையைவிட்டு நீங்கிப்பித்தந் தீர்ந்தானென்பது என்ன நியாயம் அழகுப்பிள்ளைபோக சொக்குப்பிள்ளை தெண்டம்

கொடுத்தாராம். அவர்செய்த குற்றத்துக்கு ஊரிலுள்ளார் ரத்தம்சிந்தவும் அதற்குவிஷ்ட்ணு சூழ்ச்சிசெய்ததும் என்ன நீதியோ! பின் ஒருகாலத்தில் விஷ்ட்ணு கொண்டமோகினிப் பெண் அவதாரத்தைக் கண்டு சிவன் மயங்கிவிட்டதாயும், அதினல் அவரிடமிருந்து வெளியேறிய சுக்கிலத்திலிருந்து அநேக தேவ பிராணிகளுண்டானதாயும் சொல்லப்பட்டிருக் கிறது. பாண்டு ராஜபத்தினிகள் எமன், வாயு, இந்திரன், அசுவினி தேவதைகளைச்சேர்ந்து உடனே ஐந்துபுத்திரர்க ளைப்பெற்றதாயும், அதைக்கண்டு பொருமைப்பட்டு காந்தாரி இருப்புலக்கையால் இடித்துக்கொள்ள தன்பனிரண்டுவருஷ கர்ப்பம்கலங்கி இரத்தம்வெளியிற்கிளம்ப அதை நூறு கலசங் களிற் பிடித்துவைக்க, அதிலிருந்து துரியோதனுதி நூற் ளுருமக்கள் பிறந்ததாயும்; ஒரே அஸ்திரத்தாற் போடப் பட்ட சரக்கூடத்தினல் சப்தமேகங்களும் கூடிப்பொழிந்த மழையைத்தடுத்து அர்ச்சுணன் காண்டாவனத்தை எரித்த தாயும், பீமன் ஆகாயத்திலெறிந்த எழுகடகம் யானைகள் சுழ லிலகப்பட்டு இன்னும் சில சமயங்களில் இற்ற எலும்புகள் ஆகாயத்திலிருந்து விழுந்து கொண்டிருப்பதாயும், விஷ்ட்ணு தன் சக்கரத்தால் சூரியனைமறைத்து அஸ்தமிக்கச்செய்த தா யும் சொல்லப்பட்டிருக்கிறது, அதாவது அன்று சாயந்திரம் 3 மணிக்கு சூரியகிரகணமென்று தெரிந்துகொண்டு அப்படி ஏமாற்றிவிட்டிருப்பதாய்ச் சொல்லுகிறுர்கள். தென்னுட்டில் வீரனுயிருந்த கருப்பணனெனபவனெருவனைத் துணைக்கொண்டு பாண்டுமக்கள் துரியோதனுதிகளை ஜெயித்ததாயும், அவனைக் கிருஷ்ட்ணனென் றழைக்கப்பட்டதாயும், அவனைத் தென் னுடுகளில் கருப்பணசுவாமியென்று பூஜித்து வருகிறுர்க

ளென்றும் வெளியாகிறது. ஷை கிருஷ்ட்ணன் கோவர்த்தனகிரியைக் குடையாய்ப்பிடித்து மழையைத் தடுத்ததாயும், அவர் நித்திய பிர்மச்சாரி, அறுபதினுயிரம் கோபஸ்திரீகள் அவர் வைப்பாட்டிகளென்றும், எல்லாரிடத்திலும் ஏககாலத்தில் அறுபதினுயிரம் கிருஷ்ட்ணனுகி சுகமனுபவித்தாரென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஏழுலகத்தையும் தன் வாயிற் காண்பித்தாராம். நரசிம்மவேடந்தரித்து ஆயுதபாணியாய்த் தூண்மறைவில் மறைந்திருந்து திடீரெனப்பாய்ந்து இரணியனைக் கொன்றதாயிருக்கலாம், தூணைப்பிளந்து நரசிம்ம அவதாரமெடுத்துக் கொன்றதாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. கார்த்த வீரியார்ச்சுனனுக்கு ஆயிரம் சிரசுகளும் இரண்டாயிரம்கைகளுமிருந்ததென்றும், தேவலோகத்துக்கு அனேகர்போக்குவரத்தாயிருந்ததாயும், சுந்தரமூர்த்தி, சேரமான், ஒளவை முதலியவர்கள் உயிருடன் கைலாயம்சென்றிருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிக் கதைகளனேகமுண்டும், இதிலுண்மை யெந்தமட்டிலிருக்குமென்று கவனித்து நன்ருய் புத்தியைச்செலுத்தி ஆலோசித்துப் பார்க்க.

---

## புத்த சமயம் அழிவு.

சமணர்களென்னும் புத்தர்களை ஆரியர்கள் சூழ்ச்சிசெய்ய ஆரம்பித்தும் அக்காலத்தில் முடியாமல் எங்கும் புத்தமதமே நிறைந்திருந்தது. கடாசியில், கூன்பாண்டியன் புத்தமதத்திலிருந்தாலும், அவன் மனைவியும் மந்திரியும் ஆரியர் மதத்தினர்களாயிருந்தார்கள். இவர்கள் சீர்காழியில் ஞானசம்பந்தனென்னும் ஒரு ஆரியனுடன் கலந்து சூழ்ச்சிசெய்ய ஆரம்பித்தார்கள். ஷை சம்மந்தனும் தனக்கு ஆறு

யிரம்பேர் சிஷ்யர்களென்று பெயர்வைத்துக்கொண்டு ஆறு யிரம் யுத்தவீரர்களைத் தயாரித்து மதுரைக்கு வந்து ஒரு கூறைக் கட்டடத்திலிறங்கியிருந்தார்கள். அன்று இரவில் தாங்களே தங்கள் கட்டடத்தில் தீயைவைத்துவிட்டு புத்தர் கள்பேரில் பழிதூற்றி அவர்களுடன் போர்புரிந்து வென்று; தன் மதத்துக்கு வந்து விபூதிபூசிக்கொண்டவர்கள் போக பாக்கிப்பேரில் சிலரைச் செக்கில்போட்டு ஆட்டியும், சில ரைக் கழுவிலேற்றியும் கொலைசெய்துவிட்டார்கள். ஆ! என்ன கொடுமை, என்ன அநீதி, என்ன பரிதாப சிக்ஷை! அரசனை முதுகில் மிதிக்கக் கூன் நிமிர்ந்துவிட்டது. மற்றவிடங்களிலு மிப்படியே வெற்றியடைந்து இந்தியாவில் புத்தமதத்தை அடியோடே களைந்துவிட்டார்கள். அவஸ்தைப்பட்ட புத் தர்கள் சமயம்பார்த்து எதிரிகள் கோவிலுக்குள் சென்றிருக் கும்போது தீயைவைத்துக் கதவைச்சாத்திக் கொளுத்திப் பழிதீர்த்துவிட்டார்கள் ஜோதியிற் கலந்து முத்தியடைந்து விட்டதாகவும், சமணர்களை வாதில் வென்றதாகவும் புரா ணம் எழுதிமுடித்துவிட்டார்கள்.

பாரதம், ராமாயணம் பொய்க்கதையென்று ஆரியரா கிய அகஸ்தியரும் தன் நூலிற் சொல்லியிருக்கிறார். மேற் சொல்லியபடி சைவசமயக்காரர்களும் வைஷ்ணவசமயிகளும் ஒருவருக்கொருவர் வீம்புபோட்டு, தங்கள் தங்கள் சமயத் தையும் மூர்த்திகளையும் பெருமைபாராட்டிப் புறச்சமயங் களையும் மூர்த்திகளையும் இழிவுகூறி புராணங்களுண்டாக்கிப் புளுகிக் கட்டிவைக்க ஆரியர்களே வாத்தியார். அவர்கள் தங்களையும் தங்கள் வகை அகஸ்தியர் முதலியவர்களையும் எவ்வளவோ பெருமைபாராட்டியிருப்பதும் நன்குவிளங்கும்.

மனதுக்கும் புத்திக்கும் அறிவிற்கும் அனுபவத்துக்கும் சிறிதுகூட ஒற்றுமைப்படாத பித்தங்கொண்டவன் எண்ணம்போற் பிதற்றிய மேற்சொல்லிய கதை புராணங்களை நம்பிக்கொண்டு அதில் மூழ்கியிருக்கும் ஜனங்களுக்கு இன்னுந்தெளிவுவராது மயங்கிக்கிடப்பது அவர்கள்செய்த சூழ்ச்சியின் பயனே.

தற்காலத்தில் சைனா, ஜப்பான், பர்மாமுதலிய நாட்டில் அறுபது கோடிக்கு மேற்பட்ட ஜனசங்கையுள்ள ஜீவகாருண்யக் கொள்கையுடைய புத்தசமயத்தை அனுசரித்த ஆதிசைவர்களாகிய தமிழர்களில் சிலர் பூஜைத்தொழிலைக் கைக்கொண்டு பண்டாரக்குருக்களாகிப் பின் பிராமணர்களானார்கள்.

---

## 4-வது அத்தியாயம்

### மதச்சண்டை.

மதவாச்சாரி, சங்கராச்சாரி, நீலகண்டாச்சாரி முதலியவர்கள் வைணவ வேதாந்த சைவமுதலிய சமயங்களை ஸ்தாபிக்க, ஒவ்வொருவரும் அவரவர்கள் காலங்களில் கீழக்கடை ஜனங்களை வசப்படுத்தி அநேகரைச் சேர்த்துக்கொண்டு அவர்களை வைணவ வேதாந்த சைவப்பிராமணர்களாக்கி பூணூலையும் நாமத்தையும்போட்டு அடிதடிப் பிரயோகம் பண்ணி அநேகரைத் தங்கள் தங்கள் சமயங்களிற்சேர்த்திருக்கிறார்கள். தற்காலத்திலும் அவர்களைப் பேச்சு வித்யாசத்தினு லறிந்துகொள்ளலாம். ஆனால் வேதாந்த சமயத்திலோ சாமியென்பதும் ஜாதிவித்தியாச மென்பதுமில்லை.

அப்படிக்கிருக்க இக்காலத்தில் ஷெகொள்கைக்கு விரோத மாய் வித்தியாசம் பாராட்டிவருகிறார்கள். ஆரியர்களோ சமயம்போல வேலை செய்தவர்கள். புத்தர்களுக்கு மிவர் கட்கும் கொள்கையில் சொற்பமாறுதல்தான், அதற்காகச் செய்தகொடுமை எவ்வளவு மகம்மதியர்கள் துருக்கிதேசத்தி லிருந்து இந்தியாவுக்குவந்து உள்விழுந்து வேலைசெய்து அனேகரைக் கிறிஸ்தவராக்கிக் கொண்டிருக்கிறார்கள். அநே கமாய் இந்தியாவிலிருக்கும் மகம்மதியர்களும், கிறிஸ்துவர்க ளும் நம் இந்துக்களே. ஆரியசமாஜத்தார்கள் அநேகஜனங் களை ஆரியராக்கிச் சேர்த்துக்கொண்டு வருகிறார்கள். பிர்ம சமாஜத்தாரும் இந்துமகாசங்கத்தாரும் அப்படியே ஒன்று படுத்துகிறார்கள். இந்தியாவில்நடந்த மதச்சண்டைபோல உலகமுழுதும் நடந்தேயிருக்கிறது. ஆகிலும் எந்தமதம்கட வுளைக்காண்பித்ததோ! கையைப்பிடித்துக்கொண்டு மோட்ச லோகங்கொண்டு சேர்த்தது எந்தமதமோ! ஏனிப்படியெல் லாம் செய்யவேண்டும், மதப்பயித்தியமென்னும் பேய்பிடித் தல்லவா இப்படியெல்லாம் ஆட்டிவைத்தது, என்ன! மதக் கொடுமை! மிகக்கொடுமை!

மதுமாம்சபக்ஷணம் விபசாரம் முதலிய அக்கிரமங் கள் நிறைந்த புத்திரகாமேஷ்டி, மதனகாமேஷ்டி, அஸ்வ மேதி, அஜமேதி, நரமேதி, குக்குடயாகம் முதலிய ஆர்யஸ் மிர்தி வழியினர்கள் செய்த வேள்வியின் கதையோ மிக்க ஆபாசமுடையதே.

---

## சித்தாந்தப்புரட்டு.

ஆதியில் ஜனங்களுக்குக் கடவுள் நம்பிக்கை ஏற்பட் டபின் மரங்களை வணங்கிவந்தார்கள், பின் விக்கிரத்தைச்

செய்துவைத்து கோவில்கட்டி பக்தியுடன் பூஜித்துவந்தார்கள் பின்பு மூர்த்தி, தலம், தீர்த்தம்இவைகள்மூலம் நாம் எவ்வளவு பாவம் செய்தாலும் கடவுள் தீர்த்துவிடுவாரென்னும் நம்பிக்கையுண்டுபண்ண புராணங்கள் முதலியவைகளைக் கற்பித்து, ஜனங்கள் கொடுக்க வாங்கி உண்டு வயறுபிழைக்கிறார்கள். ௸சித்தாந்தக்கொள்கை உலகமுழுதும் வேரூன்றி முளைத்து மரமாகிவிட்டது அதைச்சில அறிவாளிகள் ஆக்ஷேபித்து பொய்க்கதையென்று ரூபித்துவிட்டார்கள். கல்லில் கடவுளிருப்பாரர்? செய்யும் பணிவிடைக்கும், கொடுக்கும் பொருளுக்கும் பூசைக்கும் பாவத்தை மன்னிக்கமாட்டார் என்று தெளிவித்து, சகலமும் பஞ்சபூதியங்களாலுண்டாகி அழிவது இயற்கையென்றும், அவர்அரூபி அரூவாரூபமற்ற சுத்தசைதன்யம் அறியமுடியாத சுத்தசூனியமென்றும் நாஸ்திகக் கொள்கையை ஸ்தாபித்து வேதாந்தநூலை ஏற்படுத்தி அனுஷ்டித்துவந்தார்கள். அது அவ்வளவாய் உலகில்வேரூன்றவில்லை. ௸ சித்தாந்தக் கொள்கையை ஒழிக்கமுடியாமல் அதிலேகலந்துவிட்டது. அதிலும்வேதாந்தத்தை இரண்டாகப்பிரித்துவிட்டார்கள். சிவன், சீவன் இரண்டையும் ஒன்றாகப்பாவிப்பது அத்துவிதம், பிரித்துப்பார்ப்பது துவிதம்; ஆனால் ௸வேதாந்த சித்தாந்தமெனு மிரண்டும் தீச்செயல்களைச்செய்ய ஆயுதமாகவும், ஏமாற்றிப்பிழைக்க ஒருவழியுமாய்விட்டது. முற்காலத்து வித்துவான்களும் ஸ்மார்த்த ஆரியதந்திரிகளும் அராபிநயிட் விக்கிரமாதித்தன் கதை போன்ற புராணசாஸ்திரங்களையும் பனுவல்களையும் செய்து ஒன்று பத்து நூறாக மனம் போனபடியெல்லாம் புளுகிக்கட்டிவிட்டார்கள். அதுபோல ஒவ்வொருமதங்களிலும் நடந்

திருக்கிறது. தங்கள்பிழைப்பை முன்னிட்டு வஞ்சகமாயிவர்களிப்படிச்செய்ய, அதைநம்பி அக்காலத்து அறிவு தெளிவில்லாத ஜனங்கள் பயபக்தி அமைதியுடனொழுகி வந்தார்கள். ஆனால் காலக்கிரமத்தில் அதுஉலகம் பூராவையும் மதப்பயித்தியம் பிடிக்கச்செய்து மூடபக்தியில் ஆழ அமிழ்த்திவிட்டதென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை.

---

## வேதாந்தப் புரட்டு.

அதுநிற்க, இக்காலத்தில் சில நூதனப் பிரசங்கிகள் பித்தங்கொண்டவனுக்குப் பிராந்தியையும் சாருயத்தையும் குடிப்பித்ததுபோல, ஷ கதை புராணங்களைக் கட்டுக்கதையென்றும் உண்மையில் நடக்கவில்லையென்றும் அவர்கள் ஒத்துக்கொண்டாலும், அக்கதை புராணங்களைத் தத்துவார்த்தமென்றும், அக்கதா நாயகர்களாகிய பஞ்சபாண்டவர்கள், இராமன், கிருஷ்ட்ணன் முதலியவர்களைப் பஞ்சபூதங்களென்றும், பஞ்சேந்திரியங்களென்றும், பஞ்சீகரணங்களென்றும், தசநாடி தசவாயுக்களென்றும் ஒப்பமைத்துப் பிரசங்கிப்பது எப்படி யிருக்கிறதென்றால், "குட்டித்திரட் கரடியாறேழுகக்கோன் குதித்துக் கட்டிப்புதைந்த கதையோக்கும்". அதாவது குட்டிகளுடன் சிலகரடிகளை ஆற்றுவெள்ளமடித்துக்கொண்டுவருவதைக்கண்டு ஒரு ஆட்டிடையனதை ஒரு ஆட்டுக்கூட்டமென்று நினைத்து ஆற்றில் நீந்திப்போயவாவுடன் அவைகளைக்கட்டிப்பிடிக்க அவைகளுமிவனைக் கட்டிப்பிடித்து எல்லாம் ஆற்றோடு முழுகிப்போனது போலிருக்கின்றது; அன்றியும், மனதை ஒடுக்கவாவது, ஆசையை நீக்க

வாவது, பொறிபுலன்களை அடக்கவாவது ஒருவராலும் முடியாதென்பது நிச்சயமாதலால், அப்படி முடியாத காரியத்தை முடித்தாற்றான் முத்திகிடைக்குமென்றும், சகல ஜீவகோடிகளும் உழைத்து உண்டு சுகித்து உறங்கி உயிர்த்து உயிர்களை உற்பத்திசெய்கிறது உலக அனுபவமாயிருக்க, விழிகண்குருடராகி யாவும் கானல் ஜலம்போல் தோற்றமென்று சொல்மாத்திரத்தில் சொல்லிக்கொண்டும், ஒன்றுமே விளங்காத ஆருதாரமென்றும், பாழாய்ப்போன முப்பாழும் பாழாய் முதற்பாழ் வெறும்பாழாய் முடிவிலொரு சூனியமாய் அப்பாழுக்கப்பாழென்றும், அறிவோடிருக்கும் தன்னை அறிவுகெட்ட பித்தனுகவும் பேயனுகவுமாக்கிக்கொண்டு தன்னைத்தான் அறியவேண்டுமென்று சொல்லிக்கொண்டும், விழிப்பு, தூக்கமென்பதைச் சாக்கிர சொற்பனமென்றும், அதற்கப்பால் மெய்யறியாப் பொய்யனுக்கு மலடிமகன் மூன்று என்பதுபோல் சுழுத்தியென்றும், அதற்கப்பால் துரியமென்றும், அதற்கப்பால் துரியாதீதமென்றும், அவைகள் அவஸ்தைகளென்றும் அவைகளை அறிவதும் அடைந்துகடப்பதும் முத்தியென்றும், அவயவ ஓய்வடைந்த காலமாகிய நித்திரை மயக்கென்னும் சொற்பனத்தில் கண்டவன்யார்? அறிந்தவன்யார்? வித்தின்றிமரமில்லை வேபற்ருல் பிழைக்காது, முன்னுமில்லை பின்னுமில்லையென்றுமில்லையென்னு முண்மையேயிருக்க, எங்கிருந்தோம்? எங்கு வந்தோம? ஏன் வந்தோம்? எங்கு போகிறோம்? என்று விதண்ட கேள்விகளைக்கேட்டுக்கொண்டும்; பொருளைச்சுருட்டுகிறதில் கருத்தைவைத்துக்கொண்டு, ஒருசவத்தை அடக்கம்செய்த ஒருசமாதியை ஒருபெரியவர் அடங்கினரென்று பிரஸ்தாபம்செய்துகொண்டு அதைப்பூஜித்துவந்து பின் சில

சோம்பேறிகளைக்கூடச் சேர்த்துக்கொண்டு, பிச்சை யெடுத்து சிரவணம் செய்வதாய்ச்சொல்லி அதில் ஒரு கட்டடத்தைக்கட்ட ஆரம்பித்து, அதில்சில பயித்தியகாரர்கள் சொத்துக்களையும் முண்டைகள் சொத்துகளையும் சேர்த்து ஒரு சிறுகட்டடம்கட்டி, இருந்த இடத்திலிருந்துகொண்டு நவரச அன்னபானாதிகளை கோயில்மாடுபோலத்தின்று கொழுப்பேறி சகலரையும் ஏமாற்றிப் பொருள்சம்பாதிக்கவும், விபசாரம் கொலைமுதலிய அக்கிரமங்களைச் செய்யவும் இது ஒரு வழியென்று தெரிந்து நடத்திவரும் அவர்கட்கு ஊரெல்லாம் பெண்டாட்டி அவன் வேதாந்தி நித்தியபிர்மாச்சாரி, நாளுக்கு நாலுவேளை சாப்பிட்டவன் நித்திய உபவாசியென்றும், தானேபிர்மமாய் மனதைப்பிரித்து நிறுத்தி நின்றவனும், என்னசெய்தாலும் தன்னைப்பற்றாதாம் என்றகதையையும் சொல்லிக்கொண்டு செய்யாத அக்கிரமங்களையெல்லாம் செய்கின்றார்கள். தாயுடன்போனாலும் தகப்பனைக்கொன்றாலும் அவர்கள் அக்குற்றம் செய்தவர்களல்லவாம். எவனாவது தன்னைமறந்து எந்தக்காரியமாவது செய்யமுடியுமா? நன்றாய் ஆலோசிக்க! பொய்யே பூரணமாயமைத்து, முடிவில்சூனியமென்றுமுடித்து, சிலேடைகளைநிறைத்து, வழக்கத்திலில்லாத வடமொழிப்பதங்களைச்சேர்த்து எழுதிப் புரட்டிவிட்ட வேதாந்தநூலை பயஸ்கோப் காண்பித்து யோகஞானமுத்தி மோக்ஷவழி காண்பிப்பதுபோல ஏமாற்றிப்பிரசங்க முதலியனசெய்து புத்தியைக்கெடுத்து மதியைமயக்கி சுகத்தைநீக்கித் துக்கத்தை அனுபவிக்கச்செய்து சுத்த சோம்பேறிகளாக்கிக், குடும்பத்தைக்கெடுத்துத் துன்பத்துக்குள்ளாயிரந்துண்ணச்செய்து விபசாரம், கஞ்சா, குடிமுதலிய அக்கிரமங்களைப்பெருக்கி ஆயுள்குன்றச்செய்து அநேகசிசு வதை

கொலை பழிகளுக்குங் காரணமாய் பரமசண்டாளராய் மேற் சொல்லிய இருவழிகளிலும் வயிறு பிழைக்கிறார்கள். ஆ! என்ன! கொடுமையிலுங்கொடுமை! மிகக்கொடுமை! மிகவுங் கொடுமை!

ஆதலால், "எப்பொருள் யார் யார் வாய்கேட்பினும் அப் பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு, எப்பொருள் எத்தன் மைத்தாயினு மப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு."

ஆனால், இக்காலத்திலோ பலதேசத்து தத்துவசாஸ் திரிகளும், ஞானிகளும், அறிவாளிகளும் Scientists, Philosophers, Free thinkers ஆராய்ச்சிசெய்து அனுபவித்துக் கண்ட உண்மைகளை பூமிசாஸ்திரம், வானசாஸ்திரம், ரசாயனசாஸ் திரம், தாபரசாஸ்திரம், சரீரசாஸ்திரம், தத்துவசாஸ்திரம், தேசசரித்திரம், உலகசரித்திரம், Geography, Astronomy, Botany.Physyology. Chronology. Science. History, World History, Geology, Biology: Zoology, Sicology முதலான அநேக சாஸ்திரங்கள் மூலமாக வெளியாக்கி இருக்கிறார்கள்.

ஆதலாலிதுவரை நம்மை மயக்கியிருந்த அறியாமை யென்னுமிருளை நீக்கும்பொருட்டு மேற்படி உண்மைகளுதய மாகி கோடிசூரியனைப்போலப் பிரகாசித்து ஜொலித்துக் கொண்டிருக்கிறது.

---

## மனிதன் நிலை.

இவ்வுலகில் மனிதன் மனிதர்களாலடையுந் துன்பத் திற்களவில்லை. செல்வத்தினாலும் பிறப்பினாலும் உயர்ந்தவர் களென்று தம்மைத்தானே நினைத்துக்கொண்டும், பிறரை அவ்வாறு நினைத்து மதிக்கத்தூண்டிக்கொண்டும் வருகிறார்

கள். பிறப்பினுல் உயர்வு தாழ்வு எப்படி ஏற்படும்? ஆரம்பத்திலே செல்வனென்ருெருவனும், ஏழையென்ருெருவனும் பிராமணனென் ருெருவனும், சூத்திரனென் ருெருவனும் உண்டாகவில்லையே! தன் விருப்பம் ஒன்றுமின்றி மனிதன் பிறக்கிருன். பின்பு தன் விருப்பத்தினுல் பலசெய்கிருன். அச்செயலினுலவனுக்கு உயர்வோ தாழ்வோ இருக்கிறது. தன் மனம் சிறிதுமின்றி அவன் பிறக்கும் பிறப்பு உயர்வையாவது தாழ்வையாவது உண்டாக்குமா? உயர்வு தாழ்வு என்னும் விசேடனச்சொற்கள் பொருள் கொடுப்பதுண்டா? "இன்மையினின்னுமை யாதேனில் இன்மையில் இன்மையே இன்னுதது" செல்வர்களையாவது உயர்ந்த ஜாதியென்போரையாவது பொறுமைகொண்டு சொல்லவரவில்லை. பொருளினுலகங்காரங்கொண்டு ஏழைகளை அற்பப் புழுக்களெனக்கருதி காலின்கீழ் நசுக்காமல் அன்போடும் ஆதரவோடும் நடத்தி வரும் செல்வர்களின் அறிவுமேன்மையுடையதே. "சுற்றத்தாற் சுற்றப்படவொழுகல் செல்வந்தான் பெற்றத்தாற் பெற்ற பயன்" "செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்" என்ற பழமொழிப்படி ஏழைகளை ஆதரித்து செல்வர்களாகச் செய்வது செல்வந்தர் கடமை. ஏனென்ருல், எவ்வளவு குறைவற்ற செல்வத்தோடிருந்தாலும் இறந்துவிடுவது திண்ணம் "நெருநலுள ஞெருவன் இன்றில்லை யென்னும் பெருமையுடைத்திவ்வுலகு" "உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு" ஆகையால், நம்மக்களென்னும் சந்ததிகளும் உண்மையுணர்ந்து சுகமடைய ஆதரிக்கவேண்டியது அவசியந்தானே. மனிதர்களெல்லாம் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள்போல் ஏற்றத் தாழ்வு—தத்தம் குணத்தாலன்றி வேறு வகையினுலின்றி இல்லாதவர்களாய் ஒற்றுமையுடன்

வாழவேண்டுமென்ற எண்ணம் நிறைவேற பல இடையூறுக ளிருக்கின்றன. ஆனால், உண்மையாக உழைக்கக் கங்கணங் கட்டிக்கொண்டு சிலர் முயலுவார்களானால் அவ்விடையூறு கள் நீங்கிவிடும்.

---

## பூமி ஒரு ஜீவன்.

பூமியானது கிராவிட்டி, கிராவிட்டேசன் (Gravity and Gravitation) என்னும் காந்த சக்தியினால் தன்னிட முள்ள சகல பொருள்களையும் சமுத்திரத்தையும், காற்றை யும், நீராவியென்னும் மேகத்தையும் தன்னைவிட்டு நீங்காமல் இழுத்துக்கொள்ளும், அதுபோல சூரியன் தன்னை இழுக்க வும் தான் சூரியன் முதலியவைகளை இழுக்கவும், தன்னைத் தானே சாய்த்து உருட்டிக்கொண்டு சூரியனைச் சுற்றிவரவும் உள்ள ஆக்ருண சக்தியுமுடையது. அதுபோல ஆகாயத்தில் சகல கோளங்களும் யாதொரு ஆதாரவுமன்னியில் அந்தரத் தில் நிற்கிறது. பூமாதேவியென்னும் நம்முடைய தாய் அக் கினியை உள்ளே யுடையதாய் பந்துபோல உருண்டைவடி வுடையது. கல்லையும் உருக்கிக் குழம்பாக்கி அவ்வக்கினிச் சேற்றை வெளியிற் கக்கும் எரிமலைகள் வெந்நீர்க்கிணறுகள் பூகம்பங்கள் முதலியவைகளும் அதின் காரணமாயிருக்கின் றது. அந்த அக்கினியிருக்கும் வரை அது செயலுடையதா யிருக்கும், நாளடைவில் அவ்வக்கினி உருவில் குறைந்து கொண்டும் உஷ்ட்ணம் அதிகப்பட்டும் வருகிறது. சகல உயிர்களைப் போலவே ஒருகாலத்தி லவ்வக்கினி நீங்கிவிடும், அல்லது அவ்வக்கினி பொறுக்கமுடியாமல் வெளிகிளம்பி

னாலும், அல்லது மற்றக்கிரகங்களினிழுவை அதிகப்பட்டுத் தன்னிடமிழுத்துக்கொண்டாலும், பூமிதன்னிலே குலேந்து தன் உடலாகிய பூமியிலிருக்கப்பட்ட தாபரசங்கம சகலஉயிர் களும் பொருள்களும், நம்முடல் அழியுங்காலத்தில் அதி லுள்ள பிராணிகளெப்படி நாஸ்தியடையுமோ அதுபோல அழிந்துவிடும். ஆகையால் அது ஒரு உயிருள்ள பெரியபிரா ணியென்றே மதிக்கவேண்டும். அப்படியழிந்தபின் பழைய படி சகல கோளங்களும் ஒன்றுசேர்ந்து அக்கினிச்சுவாலே யாகக் கொதித்து ஏகஜோதிமயமாகி அக்கினிச்சேருகி அதி னின்றும் பழையபடி உண்டாகுமென்றும், இப்படியெத்த னேயோதடவை அழிந்தும் உண்டாகியு மிருக்கலாமென்றும் சாஸ்திரிகள் தீர்மானித்திருக்கிறார்கள்.

---


## ஏன் உயிர்கள் பிறந்தது.

இந்தப் பெருவெளியுமதில் நிறைந்த பொருள்களும் செயலென்னும் சக்தியுடையதா யிருக்கின்றது. அப்படிப் பட்டசக்தி தன்னுள் அமர்ந்தும் வெளிப்பட்டும் ஒவ்வொரு அணுவிலும்செயல் (Energy) நிறைந்திருக்கிறது. அப்படியே பிராணவாய்வு கரியமலவாய்வு ஜலம் இம்மூன்றுடன் கந்தகம் தீமுறுகற்பாஷாணம் இச்சத்துக்கள் சம்மந்தப்பட்டமட்டில் தாதுகந்த மூலபிராணிகளும் அதற்கு ஆதாவாகிய உயிர்ச் சத்தும் (Protoplasm) உண்டாகிறது. பால்கட்டி கெட்டுப் போன மாம்சம் இவைகளிலும் உயிர்ச்சத்தாகிய புரோட் டோபிளாசம் உண்டாகிறதை நாம் பார்க்கிறோம். ஆகை யால் உயிர்ச்சத்துண்டானல் உயிர்கள் தானுயுண்டாகும்,

பிராணிகளும் தாபரங்களும் அதினுற்றுனுண்டாகிறது வித்துக்களை விர்த்திசெய்கிறது. தாபரங்கள் ஷேசத்துக்களைத் தன்னுள்நின்ற நிலையிற் கிரகித்தும் தன்னுடம்பைப் போஷிக்கும்படி தண்ணீர், கரியமலவாய்வு, உஷ்ட்ணம், வெளிச்சம் முதலிய சத்துக்களை உட்கொண்டும், சில தனக்கு உதவாத மற்றப்பிராணிகளுக்கு முக்கிய ஆதாரமாயிருக்கின்ற பிராணவாய்வு முதலான சத்துக்களை வெளியே தள்ளியும் இலைகள் மூலம் சுவாசிக்கிறது. அதுபோல் நாம் முதலிய சகலபிராணிகளும் அத்தாபரங்களால் வெளியிற்றள்ளிவிடப்பட்ட சத்துக்களாகிய பிராணவாயுவைச் சுவாசித்துக்கொண்டும், ஆகாரம்முதலிய அநேக உயிர்ச்சத்துக்களை உண்டும், தாபரங்களுக்கு முக்கிய ஆதாரமாயிருக்கிற கரியமலவாய்வு முதலான சத்துக்களை வெளியேதள்ளிக்கொண்டும் நம்மையறியாமல் நம்முடனும் வளர்கின்றது. அதனுல் மூளையும் பலமடைந்து, இரத்தம் சுத்தியடைந்து, அறிவு விர்த்தியாகி வித்தின்மூலம் மிகவும் பெருக்கமடைந்துகொண்டு வருகிறோம். சகல உயிர்ப்பிராணிகட்குத் தாபரம் மருந்தாகவும், உணவாகவும், மற்றும் அநேகவிதமாகவும் உதவுகின்றது. தாபரங்கள் கொடுக்கும் சத்தை பிராணிகள் வாங்கிக்கொண்டும் பிராணிகள் கொடுக்கும் சத்தைத் தாபரங்கள் வாங்கிக்கொண்டும் சத்தைக்கொடுத்து ஒன்றுக்கொன்று ஆதரித்து வருகிறதினுற்றுன், இரண்டுவித உயிர்களும் உலகிற் சமமாய் ஜீவித்துக்கொண்டு வருகிறது.

பூமியாகிய நம்முடையதாய் இளமைப்பருவமடைந்த ஆதிகாலங்களில் தாபரசங்கம பிராணிகளையும், ஊர்வன, நடப்பன, நீர்வாழ்வன சகலமிருகங்களையும், பட்சிகளையும் இயற்கையாய் ஒன்றிலிருந்து பலவகையாக்கி ஜாதிமாறிக்

# ஜீவவர்க்கப்படம் (12).



கூடிக்கருவுற்றும் தானுய்வித்தை விகற்பித்தும் உண்டாக்கிற்று. அதன் பின் வித்தின்வழியே ஒழுங்குபட்டு உற்பத்தி செய்ய தன் பிள்ளைகளுக்கு இடங்கொடுத்துவிட்டது. ஆனுலும், இன்னும் பழையகுணங்களைக் காண்பிவிக்கும்படியான சம்பவங்கள் ஏகதேசமாய் நடந்துகொண்டுவருகிறது.

---

## பிராணிகள்.

அதாவது, ஒருபிராணியிலிருந்து வேறுபிராணியும், ஒரு தாபரத்திலிருந்து வேறு தாபரமும் உண்டாகிறது. உதாரணமாக குரோட்டன் வித்திலிருந்து வேறுகுரோட்டன் உண்டாகிறது. எருமைவயிற்றில பன்னிக்குட்டியும் ஒருபெண் வயிற்றில் கழுதைக்குட்டியும் பிறந்திருக்கிறது. அதாவது, மதுரை அம்மன் சன்னதித்தெருவில் 35 வருஷங்களுக்குமுன் ஒருபிராமணப்பெண் வயிற்றில் ஜனனமானது சென்னை முத்தியாலுபேட்டையில் ஒருபெண்வயிற்றில் ஒரு நூதனமான உருவமுடைய ஒருமிருகம் பிறந்தது, பிறந்தவுடனே நடந்தோடியது உடனே அதைப்பிடித்துக்கொன்றுவிட்டார்கள். அப்படியே மேலே சொல்லப்பட்ட கழுதைக் குட்டியையும் கொல்லப்பட்டது. திருநெல்வேலி ஜில்லா குருவிக்குளம் ஜமீனில் ஒருபன்றி ஒரேகுட்டியீன்றது. அது யாளிரூபமாய் துதிக்கையுடனிருந்தது. நாளது 1926ம்வருஷ பிப்ரவரி மாசத்தில் நடந்த சம்பவம், அது இறந்துவிட்டது. ஜமீந்தார் அதைகாக்ஷிசாலைக்கி அனுப்பிவிட்டார். பம்பாய் மாகாணத்தில் ஒருபெண்வயிற்றில் புலிக்குட்டி பிறந்தது. அது இறந்துவிட்டது, பின் அதைக்காக்ஷிசாலையில் பாடம் பண்ணிவைக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களில் பாம்பைப்

பெற்றதாயும் வெளியாகிறது. இப்படி அநேக இடங்களில் அநேகவிதமான சம்பவங்கள் இன்னும் நடந்துகொண்டு வருகிறது.

அரட்டளையென்பது மீன்போல் வாலுள்ளதாய் பின் இரண்டு கால்களுண்டாகி ஜல ஜெந்துவாய் ஜலத்தில் நீந்திக் கொண்டு ஜீவித்து விருத்தியாகிறது. பின் வாலில்லாமற் போய் நாலுகால்களுண்டாகித் தவளையாய் மாறிவிடுகிறது. தவளையின் இருதயத்தை தனியாயெடுத்து திராவகத்தில் போட்டுவைத்தால் ஓயாமல் துடித்துக் கொண்டிருக்கிறது. மூளைசம்மந்தமில்லை, அதுகாரணம்பற்றியே தவளை முதலிய சில ஜெந்துக்கள் மண்ணில் புதைநது சருகாயுலர்ந்து போனு லும், மழைபெய்யவும்ஏககாலத்தில் எதேஷ்டமாயுண்டாகி விடுகிறது. வரால்மீன் முதலியவைகள் முட்டைகளை ஆடை போல தண்ணீரின் மேற்பரப்பிற் பரவவிட்டு பாதுகாத்து வெய்யில்வெப்பத்தினுற்பொரித்துவிடுகிறது. இந்திரகோபப் பூச்சி மீன்சினப்பு இவைகளைக் காயவைத்து ஷை தூளைத் தண்ணீரில் போட்டால் உடனே உண்டாகிவிடும். மீன்முத லியவைகளின் சினப்பு என்னும் முட்டைகள் தண்ணீரில் லாத காலங்களிற் றரையிற் கிடக்கிறது, மழைபெய்யவுமுண் டாகிவிடுகின்றது. தவிர சில ஜெந்துக்கள் மூன்று நான்கு பிறப்புள்ளவைகளாயிருக்கின்றன. அவைகளாவன குளவி, தேனீ, வண்டு, பொன்வண்டு, வண்ணாத்திப்பூச்சி, கொசு, ஈ, தட்டான், விட்டில் முதலியன. இவைகளில் குளவி தன் முட்டைகளைச் செடியிலிட்டு சூரியவெப்பத்தாலது வெடித் துப்புழுவாகி உள்ளே குளவி உருவுடையதாய் அந்தச்செடி யிலுரித்திரிந்து வளர்கிறது. பருவகாலம் வரவும் ஷை

குளவி அதையெடுத்துக் கூட்டுக்குள்வைத்து மண்ணால்மூடி, பின் பக்குவம் வரவும் திறந்துவிடும். பின் அது குளவியாய் வெளியில்பறக்கும். வண்ணாத்திப்பூச்சியுமப்படியே முட்டையிலிருந்து புழுவாகி உள்ளுருவுடையதாய் கம்பிளிப்பூச்சியாய்த்தானே ஒருகூடாயமர்ந்திருந்து வெடித்துப்பின்வெளியிற்பறக்கும். வண்டுகள்பொன்வண்டுகள் அவைகளிடும் சிறு முட்டையிலிருந்து வெடித்துப்புழுவாகி உள்ளுருவுடையதாய் குப்பையிலும் மரங்களிலும் ஊரித்திரிந்து வளர்ந்து பெரிதாகிப் பின் தானே ஒரு கூடுபோலுண்டுபண்ணி அதிலமர்ந்திருந்து பின் வெடித்து வண்டாகியும் பொன் வண்டாகியும் வெளியிற்பறக்கும் கொசுவும் தண்ணீரின்மேல் முட்டையிட்டு பொரித்துப் பின் புழுவாய் உள்ளுருவுடையதாய் ஜலதாரைமுதலிய தண்ணீரில் நிறையத்திரியும் மழை பெய்யவு முண்டாகிவிடும். ஈயும்முதலிற் புழுவாய் உள்ளுருவுடையதாய்த்தானே ஒரு கூடாயமர்ந்திருந்து வெடித்து வெளியிற் பறக்கும். தேனீயும் புழுவாயிருந்து உள்ளுருவுடையதாய் பின் தேனீயாகும், விட்டிலுமப்படியே. தட்டானும் குளத்துத்தண்ணீரின்மேல் காய்ந்தசருகு, குச்சியின் மேலிட்ட முட்டையிலிருந்து வெடித்து நாலுகாற்பூச்சியாய் உள்ளே தட்டானுருவுடையதாய் தண்ணீரின்மேல் நீந்தித் திரியும், மழைபெய்யவும் வெடித்துப்பழைய பூச்சிக்கூட்டை நீக்கிவிட்டு ஏககாலத்தில் எதேஷ்டமாய் தட்டானாய் வெளியிற்பறக்கும். அக்காலத்திலவைகளின் பழைய பூச்சிக்கூடுகள் குளக்கரையில் ஒதுங்கிக்கிடப்பதைப் பார்க்கலாம், (படம் 13) தரையிலும் தண்ணீரிலும் ஜீவிக்கும்படியாய சுவாசக் கருவிகளாகிய செகுள்களுமுடைய பிராணிகளு

முண்டு. வாய், கண், மூக்கு, செவி, கை, கால்களில்லாத ஜீவ ஜெந்துக்களுமுண்டு, அது தன்னைப்பற்றிய இரையைப்பரிசித்துக்கண்டு தன் சரீரத்திலிருந்து ஒருபாகத்தைக் கைபோல் நீட்டிப்பிடித்துத்தின்று வளரும். அது இருபிளவாய் இரண்டு ஜலப்பிராணிகளாய் மாறிக்கொண்டேவரும். இரண்டு வகை ஜனனேந்திரியங்களும் ஒரே சரீரத்திலிருக்கும் கீடாதி அட்டை முதலிய ஜெந்துக்களுமுண்டு அவைகளைச்சூரிய கிரணம் படும்படி நாம் செய்யும் பக்குவங்களினால் ஆணாகவும் பெண்ணாகவும் மாற்றலாம். அநேகமாய் காதுமடலுள்ள பிராணிகள் முட்டையும் மற்றவைகள் குஞ்சு குட்டிகளைப் பெறும். ஆமைமுதலிய ஜலஜெந்துக்கள் கரையில் முட்டையிட்டு சூரியவெப்பத்தால் குஞ்சு பொரிக்கும். கோழி மற்றப்பிராணிகளின் முட்டையை வைத்தாலும் அடைகாத்து குஞ்சுபொரித்து வளர்க்கும். பாமபின் முட்டைகள் ஒன்றேடொன்று தொடுத்திருக்கும். பாம்பு ஓணான் முதலியவை முட்டைகளை மண்ணிற்புதைத்துவைத்து சூரியவெப்பத்தாற் பொரிக்கும். கிளி, புறு, நாய், பாம்பு முதலியவைகளில் எத்தனையோ வகையுண்டு. விரியன் பாம்பிலிருந்து தேள், பூரான், நண்டுத்தவளை அல்லது நட்டுவாக்காலியும் சில விஷப்பாம்புகளுமுற்பத்தியாகிறது. ஆதிகாலத்திலிப்படி உற்பவமனேகமிருந்தது. மச்சுப்போன மரப்பட்டை எருமுட்டை ஓலைச்சருகு அடுப்புக்கரி முதலியவைகளில் மோரைத் தெளித்துவைத்தாலும் ஷடி ஜெந்துக்களும் கருநாகம் முதலியவைகளும் தானாயுண்டாகும். அப்படியே நாமுமுற்பத்திசெய்யக்கூடும். பறக்கும் மாயப்பூனையும் ஒந்தியுமுண்டு அவைகளுக்கு வவ்வால்போல தோல் சிறகுண்டும். பச்சைத்

தவளையை வைக்கோலில் சுற்றிவைக்க அதிலிருந்து பச்சை நிறமுடைய சிலபறவை ஜெந்துக்களுண்டாகின்றது. எருமையிற் காளை சேர்கிறது, அதிலிருந்து காட்டெருமை காட்டு மாடு உற்பத்தி. கழுதையிற் குதிரை சேர்கிறது அதிலிருந்து கோவேறு கழுதை உற்பத்தி. வாத்து, வான்கோழியில் சேவல்சேர்கிறது, கோழிகளில் வாத்து சேர்கிறது, பிறப்பது அநேகமாய்தாயின்வழியே ஏகதேசங்களில் மாறுதலான நூதனப்பிராணிகளு முற்பத்தியாகிறது. மனிதரில் பெண்கள் நாய் மந்தி குரங்குமுதலிய பிராணிகளுடனும் ஆண்கள் கழுதை குதிரை ஆடுமாடு முதலியபிராணிகளுடனும் சேர்கிறார்கள். மிருகப்புணர்ச்சிக்கு அரசாங்க தெண்டனை யுண்டு. ஒருபெண் பிரசவத்தில் 300 முட்டைகளீன்றனள். தாயின்உதவியால் வளரக்கூடிய பிராணிகள் தாயின்வழியாகவும், ஷஉதவியின்றி வளரக்கூடிய பிராணிகள் தானாகவும் ஒன்றிலிருந்து பலவாறாகவும் உண்டாகும். தேள், நண்டு, சிப்பி முதலியவை குஞ்சுகளை உற்பத்தி செய்தவுடன் இறந்துவிடுமென்பது உண்மையல்ல. யாளியும் அன்னபட்சியும் சந்ததியன்னியில் அழிந்து போனவைகள் அன்னம் தண்ணீரை நீக்கிப்பாலைப்பிரித்துக் குடிக்கும். அன்றில்பட்சி ஜோடிபிரியாமல் கழுத்தைப்பின்னிக்கொண்டே யிருக்கும், ஒன்று இறந்தால் மற்றதும் இறந்துவிடும்.

பிராணிகளில் இயற்கைக்கு மாறுதலாய்-கோழிக்கு மூன்று கால், மாட்டிற்கு அஞ்சுகால், கோழிக்கு வாத்துக் கால், இரண்டுதலை ஆடு, மாடு, பாம்பு, பாம்பரணை, ஐந்து தலைப்பாம்பு இரட்டை வால் ஜெந்துக்களுமுண்டு. இரட்டைப்பிள்ளை அதற்கு ஆசனவாய் ஒன்றே. உடல் இரண்டு

தலையொன்று, உடல் ஒன்று தலையிரண்டு இப்படி விநோத மான பிறப்புக்கள் அநேகமாயுண்டு. ஒரே பிரசவத்தில் நாலு ஐந்து பிள்ளைகள் பிறக்கிறது. குறவன் தன் உடம்பில் சதையை வளர்த்து நறுக்கி வேறு ஒருபெண் காதுடன் சேர்த்துத் தைத்து வளர்த்துவிடுகிறான். சிறுகுடல் வியாதிக்கு டாக்டர் ஷெ குடலை அறுத்தெறிந்துவிட்டு ஒருசாணளவில் வைத்துத் தைத்துவிட்டிருக்கிறார். அவனுக்கு மெல்லிய உணவே. ஒரு சிப்பாய் குண்டடிபட்டுக் குரல்வளை சேதப்பட்டதற்கு வெள்ளியினால் செய்துவைத்து அதில்விட்டிருக்கும் ஒரு துவாரத்தின் மூலம் சுவாசிக்கிறான்; இடகலை பிங்கலை சுழிமுனை எங்கேபோயிற்றோ. அவன் அத்துவாரத்தை அடைத்துக்கொண்டு பேசுகிறான். சேதப்பட்ட கால், கைகளை அறுத்தெறிந்துவிடுகிறார்கள். பிரசவக் கஷ்டத்தினால் வயிற்றைக் கிழித்துக் குழந்தையை எடுத்துவிடுகின்றார்கள். அறுபது வயது வரை பற்கள் முளைக்கின்றது. இரட்டை வரிசையாயும் முளைக்கிறது. பல்லுடனும் குழந்தைகள் பிறக்கிறது. முதிர்ந்து விழுந்த பற்களும் முளைக்கிறது. கைக்கு ஆறு விரல்களுமுண்டாகிறது. சிரசு முதலிய அவயவங்களை அறுத்தெடுத்து வேறு சரீரங்களில் ஒட்டுக் கட்டுகிறார்களாம். இரண்டடி உயரமுள்ள தோடர்கள், குறும்பர்கள் என்னும் மலைச்சாதியார்கள் நீலகிரி மலை முதலியவிடங்களில் வசிக்கிறார்கள். விந்திய பர்வத மலைச்சாதியார் ஒரு முழம், ஒன்றரை முழம், இரண்டு முழம் வரை உயரமுள்ளவர்களாய் தங்கள் நீண்ட தலைமயிரால் உடம்பை மூடிக்கொள்ளுகிறார்கள். மூன்றடி உயரம் முதல் அஞ்சடி வரை காட்டுப்பளிஞர், முதுவர், புலையர், மன்னூர் ஊராளி

களும் மனிதர் பார்வைக்கு எட்டாமல் மறைவாய்ஜீவிக்கும் சிலகாட்டுமனிதஜாதிகளுமுண்டு. கருப்பை, வயிறு, கைகால், ஜனனேந்திரியம், மண்டை, பல், மூளை, முலைக்காம்பு முதலிய அவயவங்கள் நமக்கும் பூர்வீக குரங்குகளுக்கும் ஒத்திருக்கிறபடியால் பூர்வீகக் குரங்குகள் நம்முடைய முன்னோர்கள் தானென்றும், நாம் அவைகளிலிருந்துவந்த பிராணிகள்தானென்றும் அநேக தத்துவசாஸ்திரிகள் தீர்மானம் செய்திருக்கிறார்கள். நாம் அறிவு விர்த்தியடையும் வர்க்கத்திற்றோன்றிய முதிர்ந்த அறிவுடைய பிராணிகள். அறிவு விருத்தியடையா வர்க்கம், பாலுடைய வர்க்கம், பாவில்லா வர்க்கம் முதலிய அநேக வர்க்கங்களுண்டு. மலைமங்கான் எனும் பட்சிக்கு ஓரடி நீளமுள்ள வளைந்த மூக்குண்டு, அதினால் அது மந்தி முதலிய பிராணிகளை தலையிற் குத்திக் கொன்று மூளையைத் தின்னும். குழந்தைகளை எடுத்துப் பறந்து செல்லும் சக்தியுடைய கழுகுகளுமுண்டு. பூமியின் ஏழு அதிசயங்கள். இந்தியாவில், சலவைக் கல்லினுற் செய்யப்பட்ட ஆக்ரா தாஜ்மால் 1, மயில்வாகன சிம்மாதனம் 2, கோகட் என்னும் பெரிய வயிரரத்னம் 3, சீனுவின் பெரிய கோட்டைச் சுவர் 4, சுயேஸ்காலுவிலமைக்கப்பட்ட பெரிய விக்கிரகம் 5, ஐரோப் பூராவும் ஆண்ட நெப்போலியனுற் செய்யப்பட்ட பெரிய மாஸ்கோமணி 6, பைசா நகரின் சாய்ந்த கோபுரம் 7, கண்ணுடியில் நெசவுசெய்த ஒருவஸ்திரம். மனிதன் யுக்தியாய் ஒரு பெரிய பங்களா கட்டிடம் கட்டி அதற்கு கீழ் தண்டவாளங்கள் சக்கரங்களமைத்து அவ்வீட்டை நினைத்த யிடத்துக்கு நகற்றிக்கொண்டானும். ஜர்மனியில் அடுக்கு மாடி வயல்செய்து வெள்ளாமை செய்கிறார்கள். 100 மாடிகள் வரையும் வீடுகள் கட்டுகிறார்கள். இரண்டாள் உயரமுள்ள ஒட்டகைக்கோழி யென்னும் பூதவர்க்கக் கோழியுமுண்டு, அதன் முட்டைக்கூடு தண்ணீர்ப்

பாத்திரமாக உபயோகப்படுகிறது. யானையைத் தூக்கிச்செல்லும் அண்டாரண்டப் பட்சிகளிருந்ததாகக் கதை சொல்லுகிறார்கள். வயிற்றில் ஏற்பட்ட தொட்டில் போலுள்ள அறையில் ஆறுமாதம் வரை குட்டியை வளர்த்துச் ஜீவிக்கச்செய்யும் மூன்று கால் மிருகங்களும், மயிர்க்கால் வழி பாலைக்கிரகித்துச் சாப்பிட்டு வளரும் பிராணிகளுமுண்டு. பிராணிகளில் இன்னுமெத்தனையோ அற்புத உற்பத்திகளிருக்கின்றன.

## (16) பிராணிகளின் கர்ப்பகால அளவு.

| | நாட்கள் | | நாட்கள் | | வாரம் | | வாரம் |
|---|---|---|---|---|---|---|---|
| கடற்பட்சி | 12 | முயல் | 32 | | | செம்மறி | 21 |
| கோழிவாத்து | 21,26 | | வாரம் | ஓநாய் | 10 | கலைமான் | 24 |
| கூஸ்வாத்து | 29 | வீட்டெலி | 5 | சிங்கம் | 14 | காடி குரங்கு | 30 |
| கொக்கு | 42 | பூனை | 8 | பன்றி | 17 | | |
| சுண்டெலி | 24 | நாய் நரி | 9 | வெள்ளாடு | 22 | மான் | 36, 40 |

| | மாதம் | | | | |
|---|---|---|---|---|---|
| குதிரை ஒட்டகை | 13 | காண்டாமிருகம் | 18 | மனுஷர் | 40 |
| | | யானை | 24 | மாடு | 40 |

## (17) பிராணிகளின் ஆயுட்காலம்.

| | ௵ | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மனிதன் | 100 | நாட்டுப்பன்றி கோழி | 38 | செம்மறி வெள்ளாடு | 14 | குயில் | 17 |
| காகம் பாம்பு கிளி, கழுகு, ஆமை, கோட்டான் | 1000 | குதிரை ஒட்டகை | 37 | நாய் நரி | 12 | | ௴ |
| மகா விருக்ஷம் | 1000 | பசு எருமை | 24 | நீர்மனுஷன் நீர்ஆடு | 10 | தேனீ | 6 |
| மகரமீன் | 1000 | காட்டுப்பன்றி முள்ளம்பன்றி | 21 | ஆறுகுளமச்சம் | 6 | ஈ கரையான் புழு சித்தெறும்பு வியர்வைசெந்து தேள் விளக்கொட்டுப்பூச்சி மின்மினி | 1 |
| வயிர விருக்ஷம் | 500 | நீர்க்காக்கை சிட்டுக்குருவி | 20 | அரணை உடும்பு, நாரை, ஓந்தி | 5 | | நாள் |
| காடிமுதலை | 300 | அன்னம் | 15 | கீரி பெருச்சாளி பல்லி | $4\frac{1}{2}$ | கொசுவு | 7 |
| சிம்மம்யானை | 100 | காண்டாமிருகம் முசல் மான், செந்நாய் | 16 | காணுங்கோழி எலிமூஞ்சுறு ஜலசெந்து | 3 | நுரையிலுண்டாகும் ஜெந்து | 5 |
| கொக்கு | 90 | | | | | | |
| புலி பூனை | 64 | | | | | | |
| கழுதை | 25 | | | | | | |

## தாபரமும் உயிர்ப்பிராணிகளே.

தாபரங்களில் ஒருபனை புஷ்பிக்கும் ஒருபனை காய்க்கும், ஒருதாழை புஷ்பிக்கும் ஒருதாழை புஷ்பிக்கும் காய்க்கும், ஒருபனையில் ஒரு ஆலமரம் முளைத்து உற்பத்தியாகிறது, ஆலமரத்தில் பனை முளைக்கிறது, மரங்களிலும் குரோட்டன் முதலிய செடிகளிலும் வேறுமரம்செடி ஒட்டுக்கட்டுவதால் ஒன்றில் அநேகம் உண்டாகிக்காய்க்கிறது. ஒருபனை அநேகம் கிளைவெடித்துக் காய்க்கிறது, தென்னையிலுமப்படியே, புல்லுருவி என்னும் வேற்றுமரம் மரங்களிலேவெடித்துக்கிளம்புகிறது. பலா அடிமரத்திற் பூக்காமற்காய்க்கும் சில பலா மண்ணிற்புதைந்துள்ளவேரில் காய்த்துப்பழுக்கும். நிவர் கடலை வேரில் காய்க்கும் வெளியிற் புஷ்பிக்கும், ஏலச் செடி கிழங்கிலிருந்து வெடித்த கொடியிலிருந்து வெளியிற் பூத்துக்காய்க்கும், மூங்கில், கூடாரப்பனை கொடிப்பாசிமுதலிய சில ஒரேகாலத்திற் பூத்துக் காய்த்து மடிந்துவிடும் ஒருவாழைமரம் அனேகம் கனுக்களுடையதாய் அநேகம் பூப்பூத்தது, வாழையில் அனந்தவர்க்கம்உண்டு. தென்னை முதலியவைகளை வேரிறக்கித் தறித்து வேறிடத்துக்குக் கொண்டுபோய் வளர்க்கப்படும். சில பூவில்லாமற் காய்க்கிறது, சில புஷ்பிக்கிறதுமில்லை காய்க்கிறதுமில்லை. லஸ்தர்பூமரத்தின் மகரந்தத்தை அப்பூவின்நடுவில் நாமெடுத்துவைத்துவிட்டால் அது சுரைக்காய்போலப் பெரியகாய்களைக் காய்க்கிறது. எறும்பு வண்டு தேனீ முதலியவை இப்படியே மகரந்தத்தை ஒவ்வொரு பூவினரம்பில் விழும்படிசெய்கிறது, தானுகவும் காற்றின்மூலமாகவும் அசைந்து மகரந்தம் அப்பூவினரம்பில் விழுகிறது. பிராணிகள் சரீரசம்மந்தப்

பட்டதுபோல் மகாந்தமாகிய சுக்கிலம் நரம்பின் அடிப்பாக மாகிய அண்டக்கருப்பையில் விழவும் அது புழுப்போல் உட்சென்று கருத்தரிக்கிறது. ஆகையால், தாபரங்களும் பிராணிகளைப்போலவே போகபோக்கிய சுகங்களை அனுபவித்து ஆனந்தித்து குழந்தைகளை வித்தின்மூலம் உற்பத்தி செய்கிறது. ரோஜா, தென்னை, மா முதலியவைகளில் எத்தனையோவகை. பிராணிகள் தொட்டால் பிடித்திழுத்துக் கொள்ளும் கொப்புகளும் விழுதுகளும் உள்ளமான்யீட்டர் (Man eater) என்னும் மரங்கள் தன்னிடமகப்பட்ட பிராணிகளைவிடாது வளைந்து சுற்றிக்கொண்டு கொன்று பக்ஷிக்கும். (படம் 9-14) சில நீர்ச்செடிகள் தன் இலைகளிலமர்ந்த பட்சி ஜெந்துக்களைச் சிக்கவைத்து வெளிவிடாதபடி மூடிப்பிடித்துக்கொண்டு கொன்று அதைப்பட்சித்து ஜீவிக்கிறது. சில நீர்வாழ் செடிகளில் கொம்புபோலு முட்களுண்டு. அதன் நுனியில் பிசின் உண்டாகிறது. அதில்படும் ஜெந்துக்களை ஒட்டுவைத்துப்பிடிப்பதுபோல மடக்கிப்பிடிக்கும், அச்செடிகளுக்கு மக்க ஜாலி, உட்ராக்குளோரியா, சண்டியூ (Macka-jali Utracloria Sundue) என்றுபெயர். சிலநீர்வாழ்செடிகள் பைபோலும் வலைபோலு முடையதாயிருக்கும், அதிலகப்படும் ஜெந்துக்களை வாய்மூடிக்கொண்டு வெளியில் விடாது கொன்று பட்சிக்கும். அழுகணிச்செடி கண்ணீர் உதிர்வது போல் எந்நேரமும் ஜலம் சொட்டிக்கொண்டிருக்கும். பாலைவனங்களில் சில விருக்ஷங்கள் தன் இலையில் தொண்ணை போல ஜலம் நிரப்பிவைத்திருக்கும். அவ்விடங்களில் யாத்திரை செய்பவர்கட்கு தாகத்திற்குதவும் தொழுகணிச்செடி கையெடுத்துக் கும்பிடுவதுபோல எந்நேரமும் இலை குவிந்

தும்விரியும். நின்று சிணுங்கி, தொட்டாச்சிணிங்கி தொட்டா வாடியென்னும் செடிகள் அசைத்தாலும் தொட்டாலும் இலைமூடிக்கொள்ளும். வாடாமல்லிகைப்புஷ்பம் எக்காலத்தி லும் வாடாமலிருக்கும், சீமைவாடாமல்லிகைப்பூ அப்படி யிருப்பதுடன் தண்ணீர்பட்டவுடன் குவிந்து மூடிக்கொள் ளும் உணர்ந்தால் விரிந்துகொள்ளும். உதிரவேங்கை மரத் தின் பட்டையை வெட்டினால் அதின்பால் இரத்தநிறமாய்ச் சொரிகிறது. மலையில்லாத சில இடங்களில் மழைமரமென்று (Rain tree) ஒருவிதமாமுண்டு, அதுமேகங்களைக் கவர்ந்து அதினின்று ஜலம் மழைபோல இராக்காலங்களிற் கொட்டும் அதைக்கொண்டு அவ்விடத்து ஜனங்கள் பயிர்த்தொழில் செய்வார்கள் ஆடையொட்டிக்குச் சமீபித்தால் அதன்கொடி நம் ஆடையை எட்டிப்பிடிக்கும். சிலமரங்கள் சாயந்திரமா னால் இலைமூடிக்கொண்டு நித்திரைசெய்து காலையில் விரியும். சில புஷ்பங்கள் சாயந்திரத்திலும் இரவிலும் மலரும், சில பக லில் மலரும், சூரியகாந்திப்பூ சூரியனைநோக்கித் திரும்பும். மண் உரம் பூமிவித்தியாசத்தினால் சிலபனை முதலிய மரங்க ளும் செடிகளும் சில இடங்களில் சில நேரங்களில் வளைந்து விழுந்து கிடந்து பின்எழுந்துநிற்கிறது. தாபரங்களுக்கு சுக துக்கங்களை அறியும் அறிவும் பேச்சும் உண்டென்று கண்டு பிடித்திருக்கிறார்கள். அதில் முக்கியமானவர் தற்காலத்தில் உபேந்திரபோஷ் என்னும் இந்தியப்பிரபு இதுவரை ஒருவரா லும் கண்டுபிடிக்கப்படாதிருந்த ஷை உண்மைகளை சிலகருவி கள் மூலமாய் பிறநாட்டாருக்கு ஒப்புவித்து ருசுப்படுத்தி உலகமுழுதும் பிரக்யாதி கீர்த்தியடைந்தவர் அப்படியே ரபீந் திரநாத்டாகூர் என்னும் பிரபு கவிச்சக்ரவர்த்தி யென்னும்

கீர்த்திவாய்ந்தவர் ஆதிபிர்மாண்டத் தாபரவர்க்க விக்டோரி யாரிஜியா (Victoriaregia) என்பது ஒரு அடிப்பூவும் எட்டடி குறுக்களவுமுள்ள இலைகளையுடைய முள்ளல்லி, ரப்ளிஸ்யா அரிநலம் (Reflisia arnoldi) என்பது ஒன்றரை அடிகுறுக்கள வுள்ள பாரிஜாதமென்னும் பூவுடையதாமரை. பூதப்பனையு முண்டு (Gigantic Palmyra) அதன்கொட்டை ஓரடி நீள முடையது அதை இருகூறாக அறுத்து சன்னியாசிகள் திரு வோடென்னும் பிச்சைப்பாத்திரமாக உபயோகிக்கிறார்கள். சிலகொடிகளும் செடிகளும் கணுவுக்குக்கணுவு வேரூன்றி அநேகம் செடிகளாக உண்டாகும். சிலகொடிகள் வெளியி லும் கிழங்குவைக்கும் ஜோதிவிருக்ஷம் நீமுறுகல்பாஷா ணச் சத்துடையதானதால் இரவில் பிரகாசமாய்த்தோன் றும், அதில் வெட்டுப்பட்ட இடங்களில் ரெம்பவும் பிரகாச மாய்த் தெரியும் கூந்தர்ப்பனை கூந்தலை அவிழ்த்துவிட்டது போல புஷ்பக்கொடியுடையது. மயில்ப்பனை மயிலைப்போல் அழகிய தோகையுடையது. தாபரங்களில் நஞ்சுள்ளவைக ளும், விஷத்தைத்தீர்க்கக் கூடியவைகளும், போதை நமைச் சல் உண்டாக்கக்கூடியவைகளுமுண்டு. பால்பட்டால் வீக்கங் கொடுக்கும் மரங்களும் செடிகளும், இன்னும் அநேக அற்புதங்களைச்செய்யும் சக்தியுடையவைகளுமுண்டு. ஆல் முதலியவை வித்தின்மூலமாயும் விழுதின்மூலமாயும் கட்டை மூலமாயும் விர்த்தியாகிறது. சிலசெடிகள் கிழங்கு, குச்சி, கொப்பு, வித்துமுலமாயுமுண்டாகிறது. சில இலைகளும் வே ரூன்றி வளர்கிறது. அவரை முதலிய கொடிகள் முருங்கை முதலிய மரங்களிற்சார்ந்துகொண்டு வேரின் உதவியின்றி உண்டாகிக் காய்க்குங்காலங்களிற் கிளைத்துக்காய்க்கிறது.

மல்லிகைமுதலிய கொடிகளுக்கு நாம் தண்ணீர்கட்டும் பக்குவத்தினால் வேண்டியநாட்களில் வேண்டிய புஷ்பம் புஷ்பிக்கும்படி செய்யலாம். அவைகளை முள்ளுமுருக்கை முதலிய மரத்திற்சேர்த்து வளர்த்துத் தறித்துவிட்டால், அவைகள் ஷைமரத்தின்புஷ்பநிறத்தைக் கிரகித்து சிகப்பு முதலிய வர்ணமுடைய பூ புஷ்பிக்கும். காலையில் வெள்ளை, மத்தியானம் மஞ்சள், சாயந்திரம் நீலவர்ணமாகமாறி நிறங்கொடுக்கும் புஷ்பச் செடிகளுமுண்டு. அன்னப்பக்ஷிபோலும் புறாவைப்போலும் புஷ்பிக்கும் கொடியும், பத்மநாபலிங்கம்போற் புஷ்பிக்கும் மரமுமுண்டு. பூசிணிக்கொடி சுரைக்கொடி முதலியவைகளின் கொடியைப்பிளந்து அதிற்கொஞ்சம் இரசத்தை ஊற்றிமுடிவிட்டால் பிறகு அது ஏராளமான காய்களைக்காய்க்கிறது என்கிறார்கள். கட்டுக்கொடிச் சாறுபட்டால் தண்ணீர் இறுகிப்பனிக்கட்டி போலாய்விடும். செடியைப்பிளந்து அதினடு நரம்பை ஒருசாணளவு எடுத்துவிட்டுச்சேர்த்து வளர்த்துவிட்டால் அதன் காய்களுக்குள்ளும் பழங்களுக்குள்ளும் விதை உண்டாகாது அப்படிவந்தது தான்விதையில்லா திராட்சைப்பழம், மாதுளம்பழம் முதலியன. வாசனை இல்லாதசில புஷ்பங்களுக்கும் பழங்களுக்கும் நாம் பயிர்செய்யும் பக்குவத்தினாலும் உரத்தினாலும் வாசனையும், ருசியும், பருமனும், நிறமும் உண்டுபண்ணலாம். ஆல் அத்திப்பழத்தில் உள்ளே அலிப்பூ, ஆண்பூ பெண்பூ என்னும் புஷ்பமுடையதாயிருக்கின்றது. அதனுள் ஈபுகுந்து மகரந்தம் விழும்படி செய்கின்றது. அதில் அவைகள் முட்டையிட்டு வெடித்துப் புழுக்களாய் அதிலிருக்குமிரையைப்புசித்துப்பின் ஈயாய் வெளியிற்பறக்கும். அத்திப்பழத்திலவ்வள

வும் புழுக்களென்பதுவுமிதுவே. தண்ணீரிலும்நிறையப்புழுக் களிருக்கிறது. மாம்பழவித்துள் வண்டு இருந்து பறக்கிறது. சிலோனில் ஒருவித செடியுண்டு அதன் இலை துண்டுதுண் டாய்க் கத்தரித்துவிழும் உடனே அவைகள் உயிர்ஜெந்துவா யுண்டாகும். உலர்ந்து சருகாய்ப்போன சில ஜெந்துக்கள் எவ் வளவுகாலஞ்சென்றாலும் தண்ணீர்பட்டால் உடனே உயிராய் விடும். புகையிலை அமெரிக்காவிலிருந்து 300வருஷங்களுக்கு முன் இந்தியாவுக்குக் கொண்டுவந்து பயிர்செய்யப்பட்டி ருக்க அதைபிர்மபத்திரமென்றும் சிருஷ்டிகாலத்தில் இங் நாட்டில் பிர்மனால் சிருஷ்டிக்கப்பட்டதென்றும் சொல்லுகி றார்கள். கொய்னாமரம், ரப்பர்மரமிவைகளும் பிறநாட்டிலி ருந்து இங்கு கொண்டுவரப்பட்டது. தன்பக்கத்திலிருக்கும் கல்லுக்குமிதற்கும் வித்யாசம் தெரியாது கல்லைப்போலும் நிறமுடைய செடிகளுமுண்டு. இரவில்திரிந்து ஜீவிக்கும் பிராணிகளும், பறவைகளும், புஷ்பிக்கும் தாபரங்களுமுண்டு இன்னும் தாபரங்களிலெத்தனையோ அற்புதங்களு மிருக் கின்றது.

---

## சகலமும் உயிருள்ளவைகள்.

இனிப்பூமியில் மண்ணெண்ணெய், ரசம், கெந்தகம், ஈயம் முதலான சரக்குகளும், உலோகங்களும், ரத்னங்களும் உயிராய் விளைவாகிறது. உப்புச் சுரங்கங்களுமுண்டு, அது முற்காலத்திற் கடலாயிருந்து பூமியின் உள் அக்கினியாற் சுவறப்பட்டு விளைவானது. பொன், வெள்ளி முதலான லோகங்களும், சில ரத்தினங்களும் மலைக்கல்லில் விளைகிறது. வளர்ந்து நிமிருங் கற்களுமுண்டு. நிலக்கரி ஆதிபிர்மாண்ட வர்க்க மரங்கள் பூகம்பத்தினாற் புதைந்ததின் விளைவு. அதில்

விலே உயர்ந்த ரத்னங்கள் என்னும் வயிரங்கள் விளேவாகிறது. பர்மாவில் சிகப்பு எனும் கெம்புக்கல்லாகிய மாணிக்கம் முத லியவை பூமியில் உற்பத்தியாகிறது. மலேயும் உயிருள்ள பிராணியே, அதிலிருந்து கல்மதம், கல்நார் உண்டாகிறது. கல்பழம் என்னும் ஒருவித கல்நிறமுடைய புளிப்புள்ளபழம் பழுக்கும். கல்லில் தேரையும் அதிலுற்ற ஜலத்தைக்கொண்டு ஜீவிக்கிறது. ஆக, சகலமுமுயிருள்ளவைகளாய்த்தானிருக் கின்றது. இப்பூமியைச் சுற்றி 50 மைல் உயரம் வரைதான் காற்று இருக்கின்றது என்று சொல்லப்படுகின்றது. ஆக நாமும் ஜலத்தில், மண்ணிலிருக்கும் பிராணிகளும் ஷ காற்று என்னும் சமுத்திரத்தில் வசித்து ஷ காற்றை சுவா சித்துக்கொண்டு திரியும் பிராணிகளே. பூமியிலும், பூமிக் குள்ளும், சமுத்திரத்திலும், சமுத்திரத்திற்குள்ளும், ஆகா யத்திலும் எவ்வளவோ உயிர்ப்பிராணிகளும் அற்புதங்களும் நிறைந்திருக்கின்றன. நாம் சுவாசிக்கும் சுவாசத்திலிருந்து எத்தனேயோ உயிர்களேப் பட்சிக்கிறோம்.

ஆகாயமோ எல்லேயற்றது, அதுபோல ஒரு உடலில் எத்தனேயோ உயிர்கள் ஜீவிக்கிறது. அவைகளுக்குள்ளுமப் படியப்படியே, ஆக அதுவும் எல்லேயற்றது. அவைகளின் உள்மனம், வெளிமனம், உள் அறிவு, வெளியறிவு, உள் அவ யவம், வெளி அவயவம், அவைகளின் உட்செயல், வெளிச் செயல், ஊண், உறக்கம், ஞாபகம், நினேப்பு, போகபோக்கி யம், வித்தின் பெருமை முதலாக அணுவு முதல் அகிலம் வரையுமுள்ள சகலத்தையுமறியும் நம்முடைய உள் மூளே, வெளிமூளே யென்னும் மூளேயினமைப்பும், அறிவின்மகிமை யும் அளவிடமுடியாப் பெருமையுடையதாயிருக்கின்றது. ஆக, அதுவும் அச்செயலென்னு முயிர்நீங்கினுல் ஒன்றுமில்

ஊயே! எல்லாம் ஒழிந்துவிடுகின்றதே! என்ன அற்புதம்! ஆச்சரியம்! ஆ, வெளியே! ஒளியே! செயலே! சக்தியே! அறிவே! பொருளே! ஆனந்தமயமே! என்று சொல்லிமுடித்தார். ஞானவிலோசனியாயிருந்து வேடந்தாங்கிய ஞானவிலோசனன்.

---

## ஆறுவது அத்தியாயம்.

அவ்வூர் அரசனும் அவர் செய்த பிரசங்கத்தைக் கேட்டு ஆனந்தமடைந்து அவரைத்தன் அரண்மனைக்கழைத்துப்போய், அவரை தனக்கு இரண்டாவது மந்திரியாகிய பிரதானியாக நியமித்துக்கொண்டார். சிலகாலம் சென்றது, தன் உபராஜ்யமாகிய விவேகபுரியில் அரசனும், அரசியும் திடீரென்றிறந்துபோகவும், அதைப்பரிபாலிக்கும்பொருட்டு தன்னிடம் பிரதானியாயிருந்த நண்பன் ஞானவிலோசனனுடைய கூர்மையான புத்தியைத் தெரிந்து அவரையே விவேகபுரிக்கு அரசனாக்கி அவ்விராச்சியத்தையவரிடமொப்பிவித்தார். "உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே யிடுக்கண் களைவதாம் நட்பு".

எதிர்பார்த்திருந்த ஜனங்கள் எல்லோரும் ஏகோபித்து வந்து புது அரசனை வணங்கி நாங்களுமது குடிகள், அதோ பொன்னூஞ்சலிலாடும் பாலகி எங்களரசன் புத்திரி, அவரையு மித்தேசத்தையும் எங்களையும் உமது கையில் ஒப்புவித்திருக்கின்றோம் என்று பலமுகமன்கூறிப் புது அரசன் செய்தியை தேசமெங்கும் பரவச்செய்தார்கள்.

---

## அரசியல்.

ஞானவிலோசனனும் சற்று யோசிக்கலானான், இக் குழந்தை தனித்திருக்கின்றது, இன்னும் பார்த்துக்கொள்ளு வோம். ஆனால் நாம் பூண்டிருக்கும் ஆண்வேடமே நமதன் பணியும் சேனையையும் காணுதற்கு இது ஒரு நன்னெறி, அதி காலையிலெழுந்து செய்யுங்கடன்களை அந்தரங்கமாய் முடித் துக்கொள்ளவேண்டியது என்று தீர்மானித்துக்கொண்டு, அக்குழந்தையுடன் உண்டி அருந்தி உறங்கிப்பின் காலையி லெழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு, நன்மொழி யும் மிருதுவான தொனியும் உயர்ந்த வித்தையுமுள்ள பெண் ஒருத்திக்குத் தகுந்த சம்பள மேற்படுத்தி அக்குழந்தையை யவளிடத்தி லொப்புவித்து குழந்தை கெட்ட சொல் பேசு மானால் நீயே சிட்சிக்கப்படுவாயென்று வற்புறுத்தி சர்வ ஜாக்கிறதையா யிருந்து வித்தை கற்பிக்கவேணுமென்று சொல்லி அனுப்பிவிட்டுப் பின் அரச குடும்பத்துக்கு வேண் டியதைத் தவிர மற்ற வீண் செலவுகளையெல்லாந் தவிர்த்து யானை குதிரை பசு முதலிய மிருக ஜாதிகளிலும் அவசியமில் லாதவைகளை அகற்றிப் பொக்கிஷக்காரர்களை அழைத்து இருப்பை விசாரித்து வீண் ஆபரணங்களையெல்லாம் விற்று பொக்கிஷத்திற் சேர்த்துவிட்டு, அவ்வூர் குடிகளையெல்லாம் வரவழைத்து உட்காரச்செய்து, பட்டாளத்தையு முடைத்து விட்டு, சகல ஆடவர்களும் அஞ்சு வயது முதல் பனிரண்டு வயதுக்குள் யுத்தப்பயிற்சி பயின்று யுத்தத்துக்கு வேண்டிய மருந்து முதலிய ஆயுதங்களையும் பெற்றுக்கொண்டு யுத்த சமயம் தயாராயிருக்கவேணுமென்று தீர்மானித்துவிட்டுத் தான் செய்யப்போகும் அரசின் முறையைச் சொல்லத்தொ டங்கினான். "நாடோறு நாடி முறைசெய்யும் மன்னவன் நாடோறு நாடு மிகும்".

கேளுங்கள், கொஞ்ச நாளாய் நம் தேசத்தில் ஆர்ய ஸ்மிருதிப் பூண்டுகள் முளைத்து ஒற்றுமைப் பயிர்தீய்ந்து வெள்ளாண்மை குன்றி என்றும் பஞ்சம், எங்கும் கொள்ளை, சாதிச்சண்டை, சமயச்சண்டை, தேசப்பிரிவினை, நாட்டுப் பிரிவினை, தெருப்பிரிவினை, குடும்பப்பிரிவினை, இன்னுமெத் தனையோ பிளவு, எத்தனையோ இழவு, கல்வி கடலேறிவிட் டது, பாஷை பாதாளம் போய்விட்டது, மானிபம் விட்டு மண்டபம் கட்டி கற்சிலை பேசுவதாய்க் கற்பனைசெய்து வஞ் சிக்கும் ஆரியமந்திரக் குடியரசின் குணங்களைக் கண்டிருக்கி றீர்கள், நானே இவைகளொன்றிலும் சேர்ந்தவனல்லன்; ஐக்கியமென்னுங் கயிற்றால் உங்களைப் பிணைத்து, கல்வியென் னும் பலத்தால் இழுத்து, ராஜவிஸ்வாசமென்னுந் தூணிற் கட்டி, செல்வமெனும் தழையில் மேய்த்து ஆராய்ச்சியென் னும் நீருருத்துவேன். வித்யாசாலைகளும், தொழிற் கல்விச் சாலைகளும், தொழிற்சாலைகளு மேற்படுத்தி, பெண்கள் புரு டர் பாலகி பாலகர் எல்லோரும் கட்டாயம் கல்வி கைத் தொழில் பயிலவேண்டும். ஆடவரில்லாமல் களவிற் பிள்ளை பெறுபவர்களையும், விபசாரிகளையும், பரஸ்திரீகளைச் சேரும் புருஷர்களையும், என்ன பாவம் செய்தேனோ என்ன கர்மம் செய்தேனோ இப்படிக் கஷ்டப்படுகிறேனென்று சொல்லிக் கொண்டு ஒருதொழில் முயற்சியும் செய்யாதிருக்கும் சோம் பேறிகளையும், ஒரு தொழிலுந் தெரியாதவர்களையும், கல்வி கல்லாதவர்களையும் விசாரணையன்னியில் தேசப்பிரதிஷ்டம் செய்யப்படும்; சரியான முகாந்திரமன்னியில் பிச்சையெடுப் போரையும் கொடுப்போரையுந் தண்டிக்கப்படும். முனிசி பாலிட்டி, கிராமப்பஞ்சாயத்து ஆங்காங்கு ஒட்மூலம் தெரிந் தெடுத்துக்கொண்டு ஒவ்வொரு கிராமத்திலும் திட்டமாய்

நடக்கவேண்டும். அரசாங்கச் செலவிலேயே சகல பாஷை வல்லவர்களை வைத்துக்கொண்டு எத்தேசத்திலேனும் எப்பாஷையிலேனும் ஏற்பட்டிருக்கும் நூதன கைத்தொழில் முதலியவைகளைத் தெரிந்துவரச்செய்தும், பூகோள கணித சாஸ்திரங்களைத் தருவித்து நம் தேசபாஷையில் மொழிபெயர்த்து ஸ்கூல் பாடங்களாக ஏற்படுத்தி நூதன கைத்தொழில்களையும் வித்தைகளையுங் கற்பிக்க வேண்டியது. "விசும்பிற்றுளி வீழினல்லான் மற்றாங்கே பசும்புற்றலைகாண் பரிது, துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூம்மழை, ஏரினும் நன்றாலெருவிடுதல் கட்டபின் நீரினும் நன்றதன் காப்பு" என்றதுபற்றி தேசவிர்த்தி விவசாய விர்த்தி செய்யும்பொருட்டு இஞ்சினியர்களை அனுப்பி தண்ணீர் வரவுக்கு அணைகளைக் கட்டுவித்தும், கால்களை வெட்டுவித்தும், கண்மாய் குளம் சீர்திருத்தியும், நூதன யந்திரங்களைச்செய்யவும் கைத்தொழில்களை நடத்தவும், கடலிலுந்தரையிலும் வியாபாரத்தை விர்த்திசெய்யவும், விவசாயக் கூட்டுவர்த்தகம் நடைபெறும் பொருட்டும் அரசாங்கத்திற் பாதிப்பணம் கொடுக்கப்படும்.

எல்லோரும் ஆதிதேசபாஷையென்னும் ஒரே பாஷையாகிய அருமையாகிய தமிழையே எழுதவும் பேசவும்வேண்டும். புருஷர் பாரியர் பாலகர் பாலகிவரை அதிகாலையிலெழுந்து ஸ்நானம்செய்யவேண்டும் சுத்தமான வஸ்திரங்களைக்கட்டவேணும் அறிவைப்பேதிக்கச்செய்யும் எவ்வகை உணவையும் சாப்பிடக்கூடாது. போஜனச்செலவை அதிகப்படுத்திச்சத்தான உணவை உண்டு பக்குவமறிந்து கூடி குணமும் பலமுமறிவுமுள்ள நன்மக்களைப் பெறவேண்டும். எல்லோரும் தேகப்பயிற்சி செய்துவரவேண்டும். ஒரேதா

யின்மக்களைப்போல நேசித்து ஒற்றுமையாயிருக்கவேண்டும் சூதாட்டம், கூத்தாட்டம், சடங்கு, சிரார்த்தம், காளி கருப்பன் பலி, விரதம், நோன்பு, பாற்குடம், காவடி, உற்சவம், முளைக்கொட்டு, விவகாரம் முதலிய வீண் செலவுகள் செய்யக்கூடாது. மதவித்தியாசத்தினாலாவது உண்டி உடை அணிவகைகளினாலாவது வேற்றுமை பாராட்டக்கூடாது. சரியான காரணமின்றித் தாயாதி பங்கிட்டுக்கொள்ளக்கூடாது. யாவரும் ஆபரணங்களணியக்கூடாது. அதற்காகத் தேகத்திற் தொளையிட்டு அங்கவீனம்செய்து கொள்ளவுங் கூடாது.

---

## விவாகம்.

ஆதியில் மனிதர்களுள் விவாகமென்பதே கிடையாது, மிருகங்களைப்போலவே நடந்துவந்தார்கள், கிரீஸ்தேசத்திலும் வெகுகாலம் அப்படியே நடந்துவந்தது. பிற்காலங்களில் சிலவகுப்பார் அக்காள்மகளையும் அப்பனுடன் பிறந்த அத்தைமகளையும், சிலர்சிற்றப்பன் மகளையும் சிலர் தாயுடன் பிறந்தவளையும் மதினிமகளையும் இன்னும்பலவிதமாயும், அந்தந்த நாட்டுக்கும் ஜாதிவழக்கத்துக்குந்தகுந்தபடி விவாகம் நடத்திவருகிறார்கள். முற்காலத்தில் விதவைகள் குரு கொழுந்தன் முதலியவர்களைக் கூடிப்பிள்ளைகளைப் பெற்றிருக்கிறார்கள். சித்திரவீரியனிறந்துபோக அவன்பத்தினிகளாகிய விதவைகள் குருவாகிய வியாசரைக்கூடிபாண்டுராஜன் முதலியவர்களைப் பெற்றார்கள். இப்படி அநேக சம்பவங்கள் நடந்திருக்கிறது. அப்பாண்டு ராஜனுந் தன் மனைவிகளைச்சேர சில காரணங்களால் சக்தியில்லாதொழிய அவர்கள் தேவர்களைச்சேர்ந்து தருமன் முதலிய பஞ்சபாண்டவர்

களைப்பெற்றதாயும், குந்தி, தான் கன்னியாயிருக்கும்போது சூரியனைக்கூடி கர்ணனைப்பெற்றதாயும் அது மனதுக்கு ஒவ்வாததினாலே வெளியிற்றெரியாதிருக்கும்படி மறைவாய்ப் பேழையில்வைத்து ஆற்றுவெள்ளத்தில் விட்டுவிட்டதாயும் சொல்லப்பட்டிருக்கிறது. இதன்உண்மையைக் கவனித்தாராய்க. மற்ற ஐந்துபேர்களுக்கும் வருஷத்திற் கொருவராக துரோபதை மனைவியாயிருந்து வந்தாளென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. பெரிய அந்துஸ்துள்ள குடும்பங்களில்நேரிடும் குறைகளைச் சிலாக்கித்துக் கூறுவதுவழக்கமாதலால், பரபுருஷர்களைச்சேர்ந்தாலும் தேவர்களைச் சேர்ந்தாளென்றும், சந்ததி விர்த்திக்காக விதவைகள் முதலானோர் குரு முதலியோரைச் சேரலாமென்றும், அஞ்சுபேருக்கொருத்தி யுவளழியாதபத்தினியென்பதும் அவர்களுக்கந்தச்சட்டம் மற்றவர்களுக்கிந்தச்சட்டமோ! துரியோதனன் பஞ்சபாண்டவர்களை வெறுத்ததும் மேற்சொல்லிய காரணமென்றேகூறுகின்றார்கள். ஒருஸ்திரீ மூத்தசகோதரனைமணந்து மற்றசகோதரர்களுக்கும் பொதுமனைவியாயிருக்கிறது இக்காலத்தில் கொங்ககாப்பிலிநாட்டிலும் மலையாளம் சிலோன் முதலியவிடங்களிலும் சொற்பமாய் நடந்துகொண்டு வருகிறது.

"தோப்புப்பெருத்து விளை நிலம் பாழ்த்தது தொண்டரிறு
மாப்புப்பெருத்து மடாலயம் பாழ்த்தது மாதர்களின்
மூப்புப்பெருத்து மலையாளம் பாழ்த்தது முப்புரிநூற்
பாப்புப் பெருத்தல்லோ சமஸ்தானமெல்லாம் பாழ்பட்டதுவே."

பார்ப்பனர்களைத் தெய்வமென்றெண்ணி அவர்கள் வலையிற் பூராவுமகப்பட்டு விபசாரத்தை ஏற்றுக்கொண்ட நாடாகிய மலையாளம் அடுத்தநாட்டின் பழக்கவழக்கங்களைக் கவனித்து தற்காலத்திற் கொஞ்சங்கொஞ்சமாய்ச் சீர்திருத்த

மடைந்து வருகின்றது. பெண்கள் புருஷர்களைத்தெரிந்து மணந்துகொள்வதும், அப்புருஷர்களை நீக்கிவிட்டு வேறுபுருஷர்களைத் தெரிந்தெடுத்துக்கொள்வதும் சொத்துக்களை மருமக்கள் ஒப்புக்கொள்வதும் அந்நாட்டின் வழக்கமாகவிருக்கிறது. பர்மாவிலும் பெண்களே புருஷர்களாக நடிக்கிறார்கள். மற்றதேசங்களிலும் பெண்களுக்கு அநேக சுதந்திரமிருக்கின்றது. பல ஸ்திரீகளை ஒருவன் விவாகம் செய்துகொள்ளுகிறான். ஆணும் பெண்ணும் உடன்கட்டையேறும் பழையகுரூர வழக்கங்களும் பிற்காலங்களில் நிறுத்தப்பட்டிருக்கின்றது. ஆதியில் சகலரும் விதவைவிவாகம் நடத்திவந்தார்கள். பாலியவிவாகமுங்கிடையாது. தற்காலத்தில் நம்மில் சிலர்விதவைவிவாகமும் தீர்த்துக்கட்டலு மனுசரித்துவர மற்றவர்கள் விதவை விவாகம்கூடச் செய்யாதொழுகல் பெரிய அவமானத்தையும் ஆபத்தையுந் துன்பத்தையும்விளைவிக்கிறதை நாம் கண்கூடாகப்பார்த்திருந்தும் நிவிர்த்திதேடாதிருப்பது பெரியகுறைவேயாம். பால்ய விவாகமும் கூடாது.

ஆதலால், விதவைகள் விவாகம்செய்து கொள்ள வேண்டும், அல்லது விதவைகள் பள்ளியிற்சேர்ந்து கணவரைத்தெரிந்து மணந்துகொள்ளவேண்டும். அவசியமானல் தீர்த்துக்கட்டலும் செய்யலாம். ஆனல் பால்பிளே, ரவிக்கைத்திருவிழா, வல்லடியான் கோவிலில் நடக்கும் வரப்புத்தாண்டுந்திருவிழா ஒருபால் காரியமென்றாலும் விபசாரம் நிறைந்திருப்பதால் வெறுக்கத்தக்கதே. மாடுகளுக்கு இளங்கன்றாயிருக்கும்போதே கொம்பைச் சுட்டுவிட அதற்குக் கொம்பு முளைக்காமல் மோளையாய்ப்போவதுபோல பார்சீக ஸ்திரீகளுக்கு ஸ்தன்யமே கிடையாது. ஷிஸ்திரீகள் பருவ

மடையும் சமயத்தில் தடித்தஸ்தனக்காம்பை ஊசியாற்குத்தி நீரை யெடுத்துவிடுகிறார்கள். பிறக்குங் குழந்தைகளுக்குப் பெட்டிப்பாலே. அது நல்ல வழக்கத்திற் சேர்ந்ததல்ல. சுன்னத்தினால் ஸ்பரிச உணர்ச்சி குறைந்துவிடும் அதுவு மப்படியே.

கல்யாணத்தில் மணமக்கள்சரீரம் புது அனுபவமாறு தலடையும் சமயமாயும் நுட்பசரீரங்களாயு மிருப்பதாலும் விருந்து நடத்துவதிலும், விசாரிப்பதிலும் சாமான் சேகரிப்பதிலும் அதிக சரீர உழைப்பும் பாட்டுக் கச்சேரி முதலிய வைகளால் நித்திரை பங்கமு முண்டாகிறது. திருப்பூட்டன்று பட்டினிகிடப்பதும் ஒத்துக்கொள்ளாத பலகார பட்சணங்களும் அகாலப் புசிப்பும் ஊர்வலத்தன்று நித்திரை கெட்டுப் பால்பழ மருந்துவதினாலும் சிலவிடங்களில் நேரம் சென்றதினால் பால்கெட்டுவிடும், கொட்டிவிட்டபாலை வழித்துச்சேர்த்துவிடுகிறார்கள், பலவிதப்பாலுங் கலந்துவிடுகிறது பூனைகுடித்த பாலையும் கலந்துவிடுகிறார்கள், அதில் கெட்டுப் போனபழங்களையும் சேர்த்துவிடுகிறார்கள் சரீர அசௌக்கியம் நேரிடுகிறது. ஜனநெருக்கத்தினாலும் மத்தாப்பு வாணப்புகை புஷ்பப்பல்லக்கு புஷ்பப்படுக்கை அறையில் விளக்கேற்றிவிட்டு சன்னல்களை அடைத்துவிடுவது மூலமாயும் கெட்ட காற்றை சுவாசிக்க நேரிடுகிறது. சிலசமயங்களிற் படுக்கை அறையிலேயே பிணமாய்க் கிடக்க பூநாகம் தீண்டிற்றென்று சொல்லுகிறார்கள். கல்யாணம் முடிந்த பின்னும் அப்படி ஆபத்துக்கள் நேரிடுகிறதுமுண்டு.

பர்மாவில் மணமகனும் மணமகளும் காட்டுக்குப் போய் சுகமாயிருந்து காந்தர்வ விவாகம செய்துவரும் நல்ல பழக்க வழக்கங்களை அனுசரித்து வருகிறார்கள்.

ஆகையால், நம் நாட்டில் கல்யாணம் செய்பவர்கள் வாணவேடிக்கை மேளக்கச்சேரி பாட்டுக்கச்சேரி பட்டணப் பிரவேசம் பல்லக்கு கொட்டகைச் சிங்காரம் ஊர்வலம் முதலிய வீண் செலவுகள் செய்யக்கூடாது. செய்யும் முறையாவது பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட மணமகனும், ருதுவாகி இரண்டு வருஷத்திற்கு மேற்பட்ட மணமகளும் இவர்கள் சம்மதங்கேட்டு நிச்சயித்த கல்யாணத்தில் புதுவஸ்திரந்தரித்துப் புஷ்பாலங்கிருதராய் மணமேடையில் நின்று பந்துக்கள் சிநேகிதர்கள் முன்பாக மாலைமாற்றி மோதிரம் மாற்றி ஒரேமாதிரி திருமங்கல்யம் தரிக்கவேண்டியது. தாம்பூலமன்னியில் கல்யாணப் பத்திரிக்கை மூலம் தெரிவிக்கவேண்டியது. திருப்பூட்டவும் சந்தன தாம்பூலம் கற்கண்டு கொடுக்கவேண்டியது. இஷ்டமிருந்தால் ஒருவேளை விருந்து நோட்டீசு கொடுக்கப்பட்டவர்களுக்கு மட்டும். ஒருநாளைக் காரியம் கல்யாணம் ரிஜிஸ்டர் புஸ்தகத்திற் பதிவுசெய்து கொள்ளவேண்டியது. "செல்வமிருந்தால் உலகமுண்டு அறிவும் கல்வியும் ஆதாரம்."

---

## செல்வம்.

"பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை, பொருள்தன்னைப் போற்றிவாழ்" "ஆற்றினளவறிந்தீக வதுபொருள் போற்றிவழங்கும்நெறி". மாதம் ஒன்றுக்கு நூற்றுக்கு ஒன்று வீதம் வட்டியை அசலுடன் வருஷத்திற் கொருமுறை சேர்த்துப் பெருக்க அசல் ஆறு வருஷத்தில் ரெட்டிக்கும். அப்படியே விர்த்திசெய்ய அசல் ஆயிரம் ரூபாய் நூறு வருஷத்திற் பத்துக்கோடிரூபாயாகிறது நூறுரூபாய் நூறு வருஷத்தில் கோடி ரூபாயாகிறது, அசல் ஒரு ரூபாய் நூறு வருஷத்தில் லட்ச ரூபாயாகின்றது. அசல் பத்து ரூபாய் எண்பது வருஷத்திலும்,

நூறு ரூபாய் அறுபது வருஷத்திலும், 1000 ரூ. 40வருஷத்தி லும், 10,000 ரூ. 20வருஷத்திலும் 30,000 ரூ. 10வருஷத்திலும் 50,000 ரூ. 5வருஷத்திலும் லட்ச ரூபாயாகப் பெருகுகிறது. அதிலும் அசல் மூன்று வருஷத்தில் இரட்டிக்கும் தின்வட்டிக் கணக்குப்படி கணக்கிட்டுப் பார்த்தால், மேற்சொல்லிய காலவரையிற் பாதிகாலத்திலேயே அத்தகைய தொகை பெருகுகிறது. ஆகையால், ஆபரண முதலிய வீண் செலவிலிருந்து மீதிசெய்தரூபாயை மாப்பிள்ளை பெண்போரால் வட்டிக்குப் போட்டு அரசாங்க அதிகாரப் பொருப்பிலேவிட்டு முதல் விர்த்தி செய்யவேண்டியது. அல்லது தொழில் வியாபாரம் கிருஷிமூலமாயாவது முதலதனையும் அதன் வரும்படிகளையு மழிக்காமல் விர்த்தியாகும்வழியில் விர்த்தி செய்யவேண்டியது. அதினால் உலகிற்செல்வம் பெருகுகின்றது. செல்வம் பெருக இது ஒரு சூக்ஷ்மவழி. இல்லாவிட்டால் "கடன்பட்டான் நெஞ்சம்போற் கலங்கினான்." என்றபடி கடன்பட்டுக் கல்யாணம்செய்து கடனுக்குப் பயந்து சொத்தையும், மனைவியையும் மனையையும் விட்டுப்பிரிந்து நெஞ்சம் புண்ணாகித் துறவியாய் ஜயிலாச்சிரமமடைந்து தவம்புரிந்து உடனே முத்திபெற வேண்டியதுதான்.

இறந்த பிரேதத்தை ஆசந்திகட்டி எடுத்து மயானத்திற் புதைத்துவிடவேண்டியது. சமாதி முதலிய கட்டடம் கட்டக்கூடாது. அதுவும் ஒருநாட் காரியந்தான். ஸ்நானம் செய்தபின் வந்தவர்களுக்குச் சிற்றுணவளிக்கவேண்டியது. வேறு அபரகிரியைகள் செய்யக்கூடாது.

ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த ஏழு கிராமங்களில் சாலியரென்னு மோர்வகுப்பினர் லட்ச வீட்டுக்காரர்கள் உண்டு. அவர்களொற்றுமையும் கட்டுப்பாடும் மகமை வசூலும் ஓயாத உழைப்பும் மெச்சத்தக்கது. அதுபற்றி அவர்

களை சாலிய எறும்புகளென்று அதிகாரிகளாலழைக்கப்படு கிறார்கள்.

ஆதிவேளாளர் துவாலபாலகர் கோத்திரத்தைச்சேர்ந்த ஆறுவீட்டுக்காரர்களாம். தற்காலத்தில் சைவர்களாயும் அசைவர்களாயும் எங்கும் லட்சக்கணக்காய் விர்த்தியடைந்திருக்கிறார்கள். வெள்ளாண்மையும் பிள்ளையென்ற பேரும் அவர்களுக்குறியதாய் அதின்மூலம் உலகை இரட்சித்து வருபவர்களாயிருப்பதால் அவர்கட்கு நன்றி செலுத்தும்பொருட்டு, எக்குலத்திற் பிறந்த குழந்தைகட்கும் பிள்ளை பிறந்ததென்ற சொல் என்றும் வழங்கப்பட்டு வருகிறது. அது நிற்க, அவர்களில் மகம்மதியர் கலகத்தில் மதுரையிலிருந்து வெளியேறிய ஒரு கூட்டத்தார்கள் திருநெல்வேலிக்கடுத்து இரண்டு மைல் விஸ்தீரணமுள்ள ஓரிடத்தில் மண்கோட்டை கட்டிக்கொண்டு அதில் குடியிருந்துவருகிறார்கள். அவர்களிற் பெண்கள் எந்தக்காரணத்தினாலும் வெளியில் வரக்கூடாது, பரபுருஷர்களையும் பார்க்கவுங்கூடாது முதலான குரூரவழக்க மூடவைராக்கியத்தை அனுசரித்து வருகிறார்கள். அரசாங்க அந்தப்புர ஸ்திரீகளுநங்கூட வெளியில் வருகிறார்கள், பரபுருஷர்களுக்குப் புலப்படாமல் மறைந்து உலகின் விநோதங்களையும் ஸ்தலங்களையும் ஜனங்களையும் தரிசித்து ஆனந்தமடைகிறார்கள். மகம்மதியர்களிலும் அந்தப்புரம் மறைப்பு முகமூடி தற்காலத்தில் துருக்கி தேசத்திலேயே நிறுத்தப்பட்டு உத்தியோகம் முதலான வேலைகள் பார்த்துவருகிறார்கள். பெண்கள் சமசுதந்தரமடைந்த இந்தக் காலத்திலுங்கூட அவர்களை இப்படி ஆயுள்பரியந்தம் சிறையில் வைத்து நடத்துவது கொடுமையிலுங் கொடுமையன்றோ! அதையொழிக்க அவர்களே தகுந்த முயற்சிதேட வேண்டும். அரசாங்கத்திலுங் கவனிக்கவேண்டியது.

ஆரியர்களென்னும் பார்ப்பனர்கள் முற்காலத்திலிருந்ததுபோல புறம்பாகத் தனியிடத்தில் வசிக்கவேண்டியது. அவர்கள் வேதம் சொல்லியும், யாகம் செய்தும், ஓமம் வளர்த்தும், ஜோஸ்யம் சொல்லியும், மந்திரம் சாந்தி பூஜை சிரார்த்தம் முதலிய எவ்வித சடங்குகளும் செய்து ஏமாற்றிப் பொருள் சம்பாதிக்கக்கூடாது. உபாத்திமை தொழில் வியாபாரம் செய்து பிழைக்கவேண்டியது.

தேவாலயம் மடாலயம் இவைகளின் மானிப முதலிய சகல வரும்படிகளையும், தருமமென்று சொல்லி உலகப் பிரயோசனமில்லாத காரியங்களிற் செலவு செய்பவர்களின் சொத்துக்களையும், பூமியிற் புதைந்திருந் தெடுக்கப்பட்ட சொத்துக்களையும் தேசப்பொதுநன்மை பண்டுக்குச் சேர்த்து விர்த்திசெய்யவேண்டியது. ஆண்மக்களைப்போலவே பெண்மக்களுக்கும் சொத்துமுதலிய எல்லாவற்றிலும் சுதந்தர பாத்தியமுண்டும், பெண்களும் உத்தியோகம், கல்வி, வியாபாரம், கைத்தொழில் முதலியவைகள் செய்யலாம், குறைசொல்லிக்கொள்பவர்கள் அரசனிடம் நேரில் தெரிவித்துக்கொள்ளலாம்.

இப்படி அநேக சட்டதிட்ட நிபந்தனைகளேற்படுத்தி தண்டோரா நோட்டீசுமூலம் தேசமெங்கும் பரவச்செய்து நீதிசெலுத்திவந்தான் ஞானவிலோசனியாயிருந்து வேடந் தாங்கிய ஞானவிலோசனன்.

---

## 7-வது அத்தியாயம்.

### கள்ளர்கள் அரண்மனை.

இந்நான்கு நாட்களாய் காடுமலை வனம் கடும்புனல் சேறுறுகளையுங்கடந்து, கற்களென்றும் முட்களென்றும் திரணமும் பாராது நடந்துவந்ததினால் எனக்கு இரண்டுபாதங்

களும் கொப்பளித்து நோகின்றதே! நாடு நகரமற்று, நடக் கப்பரிகளற்று, செல்லவண்டியற்றுக்கால்களால் நடக்கலா னேனே! இக்காரிருட்காட்டைக்கண்ணுற அச்சமும் வருத் தமு மதிகரிக்கின்றதே! ஐயோ! நாளுக்கு மூன்றுவேளை திவ்யபோஜன முண்கின்ற எனக்கு இப்போது ஓர்கவளங்களி கூர்ந்தளிப்பவர் யாவர்? எனது அன்னை மகனே மகனே யென்று அரண்மனையி லழைத்துவருவாளே! அவள்மடிமீ தேறி மழலைமொழிகூறுவேனே! இனியவளுடைய இனிய மொழிகேட்பதேது! எனது பிரியதந்தை உறவுமித்திரர்களை பிரிந்துழல்வதைக் குறித்துத்தானேவேனே! ஐயோ! காத டைக்கின்றதே! என்செய்வேன்! இதுவென்ன ஆச்சரியம்! இத்தடாகம் வருமளவும் சூரியகிரண மெவ்வளவு கடுமை யாய்த்தாக்கிற்று. தடாகத்தில் தண்ணீர்பருகியபிறகு சூரிய னிருப்பதாகவே தோன்றவில்லையே! ஆஹா! எவ்வளவு குளிர்ந்தகாற்றும் நிழலும் இக்காடுமிகவும் அடர்த்தியாகவும் வளர்ந்தோங்கிய மரங்களுடனிருப்பதாலும் நம்மரண்மனை யைக்காட்டிலும் அதிக குளிர்ச்சியும் சகல பரிமளமும்பொ ருந்தியிருக்கின்றதே! என்றுசொல்லிக்கொண்டு களைப்பு மிகு தியால் ஓர் மரத்தடியிலுற்ற கல்லாசனத்திலமர்ந்து, தன் எதிரிகள் பின்புறம்வந்து பிடித்துக்கொள்ளுகிறார்களோஎன் கிறபயத்தினால்திரும்பித்திரும்பிப்பார்த்துக்கொண்டிருக்கும் நம்மிளங் குமாரன்மீது திடீரென ஓர் புதரிலிருந்து புலிகளைப் போற் பாய்ந்து கண்ணிமைகொட்டுமுன் கைகளைத் திருடர் கள் பிடித்துக்கொண்டு, நீயாரடா, உன்னைப்பார்த்தால் ராஜ குமாரன் போலிருக்கின்றதே, யெங்கடாபோகிறாய் சீக்கிரம் சொல்லென்று பயப்படுத்திக் கொண்டிருப்பதைக்கண்டு, நான் வழிப்போக்கன் என்னிடம் பொருள்களிருக்கின்றது,

அதை நீங்களெடுத்துக் கொள்ளுங்கள், இப்போதெனக்கு அதிகப்பசியா யிருக்கின்றது. கொஞ்சம் சாப்பாடுகொடுத்தால் நிரம்ப உதவியென்றான். திருடர்கள் சரி, அப்படியா! ரெம்ப நல்லவன் போலிருக்கிறாய், எங்கள் எஜமானனிடங் கொண்டுபோய் விடுகிறோம் என்று சொல்லிக்கொண்டு, தங்களிடமிருந்த அக்கானகத்துக் கனிவர்க்கங்க ளளிக்கவும் இளங்குமரன் "இதோபுசிக்கின்றேன், என்னசுகம் சரீராதியந்தம் சிலீரெனவிருக்கின்றதே! ஆயாசமெல்லாங் காயாசம் வாங்கிவிட்டதே! ருசிநாவைச் சுழற்றுகின்றதே! என்று சொல்லிக்கொண்டருந்திப் பசிதீர்ந்தான். பின்பு திருடர்கள் வாலிபன் கண்களைத்துணியாற் கட்டிவிட்டுக் கைகளைப்பிடித்துக்கொண்டு வளைந்துவளைந்து செல்லும்புதர்களிலும், ஒற்றடிப்பாதைவழியாகவும் வெகுதூரங்கூட்டிச் சென்றனர்." நாம்பெரும் ஆபத்திற் சிக்கிக்கொண்டோம், இதிலிருந்தெப்படித்தப்புவது, இவர்கள் நம்கண்ணைக் கட்டிக்கொண்டு கூட்டிச்செல்வது மறுபடியுந்தானாய் திரும்பிவரக்கூடாதென்று இவ்வண்ணம் செய்கின்றார்கள். இன்னும் பார்ப்போம் கடலின் ஒலிகேட்கின்றது. இவர்கள் கப்பற்கொள்ளைக்காரர்களாக இருக்கவேண்டும். நம் தேசத்துக் கப்பல் வியாபாரிகளும் சமுத்திரத்திற் பொருளைப் பறிகொடுத்து வந்ததாகக் கேள்வியுற்றோமே, அவர்களாக ஒருவேளையிருந்தாலுமிருக்கலாமென்று யோசித்துக்கொண்டேசெல்ல ஒருகதவுதிறக்கப்படும் சப்தம் நம்வாலிபனுக்குக் கேட்டது. பின்வாலிபன் கைகளையும் விட்டுவிட்டுக் கண்களையு மவிழ்த்துவிட்டார்கள். பார்க்க விசித்திரமாயதிக வேலைப்பாடுள்ள ஒரு முற்றத்தைப் பார்த்தாச்சரியப்பட்டான். அதையுங்கடந்த பின்னர் எதிரிலிருந்த ஒரு இரும்புக்கதவைத்திறக்க அதனுள் திருடர்கள்

வாலிபனைக் கூட்டிக்கொண்டு கீழ்நோக்கி அநேக படிக்கட்டு கள்சென்று பின்மேல் நோக்கியும் கீழ்நோக்கியும் படிகள் வழியாய்ச்சென்று ஒரு விசாலமான அறைக்குவந்து சேர்ந் தார்கள். அவ்வறையில் ஆயுதங்கள் தரித்த அநேகவீரர்கள் சயனித்துக்கொண்டும், சிலர் பேசிக்கொண்டும், சிலர்பாடிக் கொண்டு மிருந்ததுகண்டு, இது அரண்மனைபோலக் காணப் படுகிறது என்று உள்ளுக்குள்வியப்பும் திகிலுங்கொண்ட வனாய் வழிகாட்டிகளுக்குப்பின் சென்று கொண்டிருந்தான். மற்றொரு கதவுந்திறக்கப்பட்டது. இவ்வறையானதுசலவைக் கல்லினால் வழுவழுவென்று தளம் போடப்பட்டும் நான்கு புறத்துச்சுவர்களில் ஆயுதங்கள் தொங்கிக் கொண்டிருப்ப தைக்கண்ட வாலிபன் இது ஆயுதங்கள் வைக்குமறையென்று, நினைத்துக்கொண்டு செல்ல மற்றொருகதவுந் திறக்கக்கண்டு "நானிதுவரை யிவ்வளவு பிரகாசத்தைக் கண்டதில்லை யென்று" கொஞ்சங்கொஞ்சமாய்க் கண்களைத் திறந்து அவ் வறைக்குள் நுழைந்து நான்கு புறமும் சுற்றி நோக்கினான். சுவர்னச்சுவர்களும் வயிரத்தூண்களும், மரகதப்பலகைகளும், சந்திரகாந்தக் கற்களால் தளம் போடப்பட்டும் விலையுயர்ந்த ரத்தினங்களாலிழைக்கப்பெற்ற சோபாக்களும், நாற்காலிக ளும் வட்டமாய்ப் போடப்பட்டும், வில்வெட் கம்பளிகள் விரிக்கப்பட்டும், நான்குபுறங்களிலும் நிலைகண்ணாடிகளமைக் கப்பட்டும் நேர்த்தியான படங்களையுங்கண்ட வாலிபன் இது கொலுவிருக்கும் அறையென்று சுற்றிலும் பார்த்துக்கொண் டிருக்க, திருடர்கள் மற்றொருகதவைத்திறக்க எதிரே ஒரு புருடன் ஏதோ யோசித்தவண்ணமாய் சோபாவில் சாய்ந்து கொண்டிருந்தான். அவன் தரித்திருக்கும் விலையுயர்ந்த ஆடைகளையும் அணிந்திருந்த ஆபரணங்களையுங்கண்ட வாலி

யன், இப்புருடன் கள்ளர்களுக்குத் தலைவனென்று கண்டு மரியாதையாய்த் தலைவணங்கி நின்றான். இதுகண்ட தலைவன் "நீயார் என்ன சமாச்சாரம், இங்குவரவேண்டிய காரணமென்ன" என வாலிபன் மிகுந்தவணக்கமா யறிக்கையுடனின்றுகொண்டு "சொல்லுக சொல்லைப்பிறிதோர் சொலச் சொல்லை வெல்லுதலின்மை யறிந்து," சொல்லுக சொல்லிற் பயனுடை சொல்லற்க சொல்லிற் பயனிலாச்சொல், என்றபடி நிதானித்துச் சொல்லத்தொடங்கினான்.

கேளும், வேந்தே! இதற்கப்பால் வெகு தூரத்தில் பாண்டி நாட்டில் என் தகப்பன் அறிவானந்தன் என்னுமரசன். ஆரியஸ்மார்த்த பார்ப்பனர்களைக் கோவில் பூஜை திருவிழா கல்யாணம் திதி சடங்கு முதலிய வீண் செலவுகளை நமக்குண்டுபண்ணி நம்மை ஏமாற்றிப் பொருள் சம்பாதிக்கவொட்டாமலும், அவர்களைச் சோம்பேறிகளாக உண்டு களிக்க வொட்டாமலும் அடக்கி ஆண்டு வரும்பொழுது, செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர் செயற்கரிய செயகலாதார், "வில்லேருழவர் பகைகொளினுங் கொள்ளற்க சொல்லேருழவர் பகை" "வாள்போற் பகைவரை யஞ்சற்கவஞ்சுக கேள்போற் பகைவர் தொடற்பு, "பல்லார் பகைகொளலிற் பத்தடுத்ததீமைத்தே நல்லார் தொடற்கை விடல்". எங்கள்மீது துவேஷங் கொண்டு, அடுத்த தேசத்தரசர்களை வஞ்சனையாலேமாற்றி அவ்வரசர்களெல்லாம் ஒன்று சேர்ந்து எங்கள்மீது படையெடுக்கத் தூண்டிவிட்டார்கள். அவர்களும் அப்படியே படையெடுத்து எங்கள் தேசத்தை அடுத்துவரவும் பெரிய யுத்தம் நடந்தது. அதில் எதிரிகள் ஆறு அரசர்களானபடியால், அவர்களுடன் எங்கள் படைகள் எவ்வளவோ எதிர்த்துப் போர்புரிந்தும் தோல்வியடைந்துவிட்டது கண்ட நான்

ஓர் சுரங்க வழியாக வெளியேறி நாட்டைக்கடந்து இக்காட்டில் வந்துகொண்டிருக்கும்போது தங்கள் ஆட்கள் என்னைப் பிடித்து இங்குகொண்டுவந்து சேர்த்தார்கள் என்று சொல்லி முடித்தான். இதுகேட்ட தலைவன் நம் வாலிபன்மீது தயவு கூர்ந்து "அன்பின் வழியதுயிர் நிலை யஃதிலார்க்கேன்பு தோல் போர்த்த வுடம்பு" என்றபடி அன்பு மிகுந்து "அப்பா ராஜ குமாரா! நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம் உன் எதிரிகளைக் கூடிய சீக்கிரத்தில் ஜெயித்து உன் தாய் தந்தைகளை எங்கிருந்தாலுந்தேடி அழைத்து வரும்படி செய்கிறேன், நீ இங்கு எனக்குத் துணையாக இரு" என்றுசொல்லித் தன் புத்திரனைப்போல நடத்த உடலு முயிரும்போல இருவரும் விளங்கினார்கள்.

சிலநாட் கழிந்தபின் தலைவன் இளங்குமரனுக்குப் பட்டங்கட்டும்படிச் சொல்லிவிட்டுக் காலகதியடைந்தான். உடனே கள்ளர்கள் நம் ராஜகுமாரனுக்குத் தலைவப்பட்டங் கொடுத்து கடலிற்சென்று கப்பற்கொள்ளையடித்துக்கொண்டு பொருள் சேகரித்துக்கொண்டிருந்தார்கள். "காலங்கருதியிருப்பர் கலங்காது ஞாலங்கருதுபவர்" என்றபடி நம் வாலிபன் முன்னிருந்த படைகளுக்கு யுத்தப்பயிற்சிகளை புதிது புதிதாய்க் கற்பித்தும் அதிகமான படைகளைச் சேர்த்தும், ஆயுதம் மருந்து குண்டு பாம் முதலியவைகளை ஏராளமாய் சேகரித்துக்கொண்டு யுத்தத்திற்கு ஆயத்தமாகித் தனக்குத் துன்பம் செய்த ஆறு அரசர்களில் முதன்மையான வீமாபுரி அரசனான வீரமதகேசரியுடன் போர்புரிய உத்தேசித்துத் திடீரென யுத்த சைன்னியத்துடனே போய் கோட்டையை வளைந்து முற்றுகை போட்டு கோட்டையைப் பிடித்துக் கொண்டு உள் நுழைந்து அரசனையுங் கைதியாக்கி அவன்

சேனைகளையும் வசப்படுத்தி வெளியில் அபாயச் சுரங்கங்களும் தயார் செய்துகொண்டான். "தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார் தோன்றலிற் றோன்றாமை நன்று." வீரமத கேசரியையுங் கைதியாக்கி வீமாபுரியையும் நம்மிளவரசன் கைப்பற்றிக்கொண்டானென்ற செய்தியை மற்ற ஐந்து அரசர்களுங் கேள்விப்பட்டு ஒன்று சேர்ந்து வீமாபுரிக் கோட்டையை முற்றுகைபோட்டார்கள். நம்மிளவரசன் பூமிச் சுரங்கங்களில் வைத்திருந்த மருந்து பாம் திடீரென்று வெடித்துக் கொப்பத்தில் யானையைக்கவிழ்த்தது போல அதிலிருந்து கிளம்பியமருந்து குண்டுமுதலிய பல ஆயுதங்களினால் எதிரிகளின் சர்வ படைகளையும் அழித்துவிட்டான். ஷ எதிரிகள் தங்களுக்குப்பின் துணையாகவைத்திருந்த கடற்படைகளனைத்தையும், டார்பிடோ சம்மரின் ஏர்ஷிப்முதலிய சண்டைக்கப்பல்களால் நாசஞ்செய்துவிட்டான். அவ்வைந்து அரசர்களின் ராஜ்யத்தையும் பாண்டி நாட்டையுங் கைப்பற்றிக்கொண்டு தனக்கு நேரிட்டதுன்பத்துக்குக் காரணமாயிருந்த ஆரியர்களைப் பிரத்தியேகமாய் ஒருபட்டினத்துக்குள்வசித்துக் கொண்டிருக்கும்படி பந்தோபஸ்துச்செய்துவிட்டுத்தான் ஜெயங்கொண்ட சந்தோஷத்தைக் கொண்டாடும்படி விருந்து விழா நடத்திவைத்து தன் சேனைகளிற் சிலவற்றைத் தன் அரண்மனையாகிய கள்ளர்களரண்மனைக்கனுப்பி அதைப் பாதுகாப்புச்செய்துவிட்டு ஜெயங்கொண்ட ஆறு ராஜ்யத்திலடைப்பட்ட கைதிகளை வீமாபுரி சென்ட்ரல் ஜெயிலுக்கு வரவழைத்து வீமாபுரியைப் பிரதானபட்டணமாக்கி அரசுபுரிய ஆரம்பித்துச் சிம்மாசனமேறிக் கொலுவிலமர்ந்து மந்திரிபிரதானி சகிதனாய்த் தேசவிசாரணை நீதிவிசாரணை புரிவதுடன் மேற்சொல்லிய ஜயிற்கைதிகளையும் விசாரித்து நீதிசெலுத்தத் தொடங்கினான்.

## முதலாவது விசாரணை விபூதி பரிவட்டம்.

அரசன்:—பியூன், கைதிகளைக் கொண்டுவா.

(இரண்டு கைதிகள் ஆஜரானார்கள்)

எந்த ஊர் பெயரென்ன, உங்களைத் தெண்டித்த கேசின் விபரம் என்ன?

1வது கைதி:—ஐயா, எங்களூர் வில்லங்கபுரம் என் பெயர் வில்லாதிவில்லன். 2வது கைதி என் பெரிய தகப்பன் மகன் பெயர் வல்லாளகண்டன். எங்களூர் சிவன் கோவிலுக்கு தெப்ப உற்சவம், பிராமண போஜனம் அபிஷேகம் முதலியவைகளுக்கு ரூபாய் மூவாயிரம் நாங்கள் செலவு செய்து விழா நடத்துவது வழக்கம், பஞ்சாட்சர பரிவட்ட மரியாதை என்னைச் சேர்ந்தது. என் தம்பி பத்துவயதுக்கு எனக்கு இளையவன், தனக்கு வேண்டுமென்று நாலுவருடமாய் விவகாரம் செய்து எனக்குச் செலவு இருபதினாயிரம். அவனுக்குச் செலவு முப்பதினாயிரம் விவகாரமின்னுந் தீரவில்லை. இதற்குள் இரண்டு கட்சிக்காரர்களும் கலகம்செய்து முன்னோர்கள் சம்பாதித்த சொத்தும் போய்க் கடனாளிகளாகி அரசனால் தெண்டனைக்குள்ளாகி யிருக்கிறோம், கேசு எப்படித் தீர்ந்தாலும் கடன் கொடுத்தவர்களினிம்சையிச்சயில் தெண்டனையிலுமதிகமாக இருக்கிறது.

அரசன்:—நல்ல புத்திசாலித்தனந்தான், சிறிய தகப்பன் மகனும் பெரிய தகப்பன் மகனுமிப்படி ஒற்றுமையாயிருந்தாற்றான் கூடிய சீக்கிரம் தேசம் முன்னுக்கு வந்து விடும், சரி செலவழிந்த தொருபுற மிருக்கட்டும், கோவிலுக்கு ரூபாய் மூவாயிரம் செலவு செய்தால் உங்களுக்கென்ன கிடைக்கும், ஷை பஞ்சாட்சரம் பரிவட்டமென்பது என்ன? என்ன விலை பெறும், பார்க்கலாமா?

1வது கைதி:—எங்களுக்கு ஷெ மரியாதையைத்தவிர வேருென்றும் கிடைக்காது; பஞ்சாட்சரமென்பது விபூதி, பரிவட்டமென்பது ஒரு முழ நீளம் ஒருமுழ அகலமுள்ள வலேபோலும் ஒரு துணி ஒரு அணுவுக்கு வாங்கலாம்.

2வது கைதி:—இந்தச் சம்படத்தைத் திறந்து பாருங்கள் அதுதான் விபூதி இதுதான் பரிவட்டம்.

அரசன்:—முதலில் பஞ்சாட்சர மென்றீர், ஐந்தெழுத்தாயிருக்குமென்று நினைத்தேன் பின்புவிபூதி யென்றீர் மூன்றெழுத்தாயிற்ருேவென்று யோசித்தேன். இதைத் திறந்து பார்க்கச் சாம்பலாயிருக்கின்றதே! ஒரு பைசாவுக்கு வாங்கிளுல் ஊர் முழுக்கக் கொடுக்கலாமே. மூவாயிரம் ரூபாய்ச் சாமானை யெடுத்துக்கொண்டு பிரயோசனமற்ற ஒரு சிமிட்டா சாம்பலைக்கொடுத்து ஒருமுழக் கந்தைத்துணியைக் கட்டுவதுபோற் பாவனை பண்ணிக்கொண்டு கட்டி விடுகிருன். இதற்காக எனக்குனக்கென்று உங்களிற்கட்சி விரோத முண்டுபண்ணிவிட்டு, ஜீவாதாரமான லட்சக்கணக்காயிருந்த திரவியத்தைச் செலவிடச்செய்து, சுக ஜீவியாயவர்களிருக்க, நீங்களிப்படி அவஸ்தைப்பட அவர்களறிவையும் உங்களறிவையும் சீர்தூக்கிப் பார்த்தால் அணுவும் மேருவும் போலாகிறது. உங்கள் மூளையைத்தின்று விட்டீர்களா? நன்ருய் யோஜித்துப்பாருங்கள்.

1வது கைதி:—சற்று தலைகவிழ்ந்து யோசித்துப் பெருமூச்செறிந்து, ஐயா ஆதியில் என் தம்பி ஒன்றையும் விரும்பாமல் என் பக்கம் சும்மாதான் நின்று கொண்டிருந்தான், அந்தப் பட்டன் தானே விபூதி பரிவட்டம் கொண்டுவந்து அவர் மூத்தவர் மகனுகிவிட்டதே, யாருக்கு முந்திக்கொடுத்து பரிவட்டம் கட்டுகிறது என்றுனே. அதன் பின்னல்

லவா என் தம்பி தனக்கு வேண்டுமென்ருன். எல்லாமிந்தப் பாவிசெய்த கூத்துத்தானே, இவனை வெட்டிப் பலிகொடுத்தாலும் எங்கள் துன்பம் தீராதுபோலிருக்கின்றது. நானாவது அவனுவது அந்தக் கந்தலையுஞ் சாம்பலையும் வாங்கிப் பார்த்து என்ன பிரயோசனமென் றெறிந்துவிட்டு வாராமல் வீண் விவகாரம்செய்து கெட்டுப்போனேமே, புத்தி வந்துவிட்டது தம்பிக்கே கட்டிவிடுங்கள்.

2வது கைதி:—ஐயா, இந்தக்கந்தலும் சாம்பலும் எனக்கும் வேண்டாம் நாங்கள் செலவுசெய்யவும் வேண்டாம் தம்பிகையைப் பிடித்தான்.

அரசன்:—இனி, நீங்களிப்படி ஆசியர்கள் வலையிற்சிக்க மாட்டீர்கள் போலும், அந்தப்பட்டன் இவ்வளவுக்கும் காரணஸ்தனு யிருந்தபடியால் உங்களுக்குக்கடன் கொடுத்தவர்கள் அந்தப்பட்டன்பேரில் வியாச்சித்து வசூல்செய்துகொள்ளவேண்டியது. அந்தப்பட்டனையும் ஆரியர் பட்டனத்துக் கனுப்பிவிட்டேன் கேசுவிடுதலை போய்வாருங்கள்.

---

## இரண்டாவது கேசு ஆசாரி கற்சிலை.

அரசன்:—பியூன் அடுத்தகேசு, கைதியைக்கூப்பிடு.

நீரெந்தவூர், உம்பெயரென்ன, கேசு என்ன?

கைதி:—ஐயா, நானிந்தவூர் கல்தச்சனுசாரி, என்பெயர் வெள்ளத்தங்கம். இவ்வூர் சிவன்கோவில் வேலைபூராவும் எங்கள் பாட்டனைப்பெற்ற சுந்தரலிங்கம் ஆசாரி செய்தார். அச்சிலை அவர்கையால் சிற்பசாஸ்திரப்படி அடிக்கப்பட்டது என் பாட்டனர் செய்தவேலை நுட்பத்தைக் கவனித்துப்பார்க்க அச்சிலையருகிற் சென்றேன். உடனே என்னைப்பிடித்தடித்து இவ்வரசன் முன்னிலையில் இந்தப்பட்டர் கொண்டுவந்து

சேர்த்தார். அரசன் இவர்கள் பேச்சைச்கேட்டு என்னைத் தெண்டித்துவிட்டார்.

ஆரியன்:—ஆரியர்களாகிய எங்களைத்தவிர, யாரும் உள்ளே பிரவேசிக்கக்கூடாது. நாங்கள் எவ்வளவோ மந்திர உச்சாட்ணம்செய்து இவ்வளவுசக்தி அதில் விளங்குகிறது. அதைக்கெடுக்க நினைக்கலாமா? எங்கள் மந்திரம் லேசானதல்ல, செபிப்போமானல் இவ்வுலகைக்கூட பஸ்மீகரம் செய்துவிடுவோம், ரட்சித்தாலும் ரட்சிப்போம்.

அரசன்:— நல்லவேளையிலின்று சூரியனுதயமாயிற்று. நமக்குக் கப்பங்கட்ட யோசிக்கும் சந்திரபுரி அரசனையும் அவன் சேனைகளையும் உடனேபோய் தகித்துவிட்டு வாருங்கள், இல்லாவிட்டால் பீரங்கி வாய்வழியே உங்களைப்பொன்னுல கேற்றிவிடுவோம், அப்பாலந்த அரசும் உங்களுக்கே இருவகையிலும் லாபந்தானே உடனே புறப்படுங்கள் காலதாமதம் செய்யக்கூடாது.

ஆரியன்:—ஈதென்ன, பெரிய மோசமாக இருக்கிறது இதற்கென்ன யுக்தி செய்கிறதென்று சற்று யோசித்து நின்று, அப்படி யெல்லாம் போகக்கூடாது பெரிய மந்திரங்களெல்லா மிக்காலத்திலென்னதிற்கென்று அலட்சியம் செய்துவிட்டோம் வந்த விவகாரத்துக்கு மட்டும் பைசல் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

அரசன்:—அப்படியா, கம்மியர்களடித்துவைத்தகற்களை யெல்லாமவர்களே யிடித்தெடுத்துக் கொள்ளட்டும், உங்கள் மந்திர சக்தியினல் நிறுத்தக்கூடியதை நிறுத்திக் கொள்ளுங்கள்.

ஆரியன்:—அப்படியானல் விக்கிரகத்தையு மெடுத்துக் கொள்ளுவார்களோ?

அரசன்:—அதிலென்ன சந்தேகம்! விக்கிரகம் உங்களப்பன் அடித்ததா?

ஆரியன்:—சற்று யோசித்து, அடா கற்பூரம், சாந்து ஈதென்ன விபரீதமாயிருக்கின்றது. இத்தனை தொல்லை எதுக்கு, அவர்களும் சித்தூர் ஜில்லா முதலிய கோர்ட்டுகளில் விஸ்வப்பிராமணுளென்று எத்தனையோ தீர்ப்புகள் வாங்கித் தான் வைத்திருக்கிறார்கள், அவர்கள் வந்தாலும் இரண்டு தேங்காய் பழமாவது கொடுக்கமாட்டார்களா? விவகாரம் வேண்டாம் சமாதானமாய்ப் போனுலென்ன, பிரபு சமாதானமாய்ப்போகிறோம் வாருங்கள்.

அரசன்:—மிகுந்த சந்தோஷம், நானும் சமாதானத்தையே விரும்புகின்றேன். ஆர்யப்பட்டர்களே! இனியாவது உங்கள் மோசத்தைவிட்டு விடுங்கள் ஒரு வகுப்பில் சிலர் பிழைக்க உலக முழுவதையுங்கெடுத்து விடலாமா? நன்மை கடைப்பிடியுங்கள், சரி போய் வாருங்கள் கைதி விடுதலை.

---

## மூன்றுவது விசாரணை செட்டி தருமம்.

அரசன்:—பியூன், அடுத்த கேசு, கைதியைக் கூட்டிவா.

(ஒரு கைதி ஆஜர் செய்யப்பட்டான்.)

நீயார், எந்தவூர், என்ன கேசு?

கைதி:—ஐயா, என் பெயர் பரங்கிரிசெட்டி, நானிருப்பது காரைக்குடி எங்கள் பந்து அதோ நிற்கும் பாபநாசஞ் செட்டியார் மூன்றுகோடி ரூபாய் செலவு செய்து கோவில், தடாகம், சத்திரம் முதலியவைகளை இதுபோலனேக இடங்களிலும் கட்டி மகேசுரபூசை உற்சவம் நடந்து வருகிறது. நானிவ்வூர் மகேசுரபூசை போஜனத்தில் உள்ளே போயுட் கார்ந்து சாப்பிட்டேன். கை கழுவவும் என்னைப்பிடித்துக்

கட்டியடித்து, அதோ இருக்கும் பிராமணர்கள் அரசனிடம் சேர்த்தார்கள். அரசன் என்னைத்தெண்டித்து விட்டார்

பிராமணர்கள்:—ஐயா, இவன் கீழ்ச் சாதி எங்கள் பந்தியில் உட்கார்ந்து சாப்பிட்டதினுல் எங்களையும் எங்கள் சாப்பாட்டையும் சேஷப்படுத்தி விட்டான். செட்டியாரைக் கேளுங்கள்.

அரசன்:—ஆர்காணும் செட்டியாரே! இங்கே வாரும், உமக்கு மூளை யிருக்கின்றதா? உலகிற் கால்பங்கு ஜனங்கள் தொழிற் கிடையாது வருந்திப் பட்டினியாய்ச் சீவன்விடும் இக்காலத்தில் கோடிக்கணக்கான பணத்தைச் செலவழித்து எத்தனை கோயிலை யிடித்தீர்? எத்தனை கோயிலைக் கட்டினீர்? எத்தனை கல்லை நட்டுவைத்தீர்? என்ன தர்மம்! பார்ப்பானென்ற சோம்பேறிக்குத்தான் சாப்பாடு, உன் இனத்தான்கூட சாப்பிடக்கூடாதா? வீணுய்ச் செலவழித்த பணத்தைக்கொண்டு எத்தனை கல்விச்சாலை வைக்கலாம் தொழிற்சாலை வைக்கலாம் எத்தனை ஜனம் பிழைக்கும், பழைய கந்தப்புராணப் புளுகை நம்பித்தானு தருமம் செய்கிறது. தொழிலில்லாது பட்டினியிலிறந்த ஜனங்கள் பாவம் உங்களைப்பிடிக்காதா?

செட்டியார்:—ஐயா, எனக்கொன்றுந் தெரியாது அதோ நிற்கும் சோமாசிப்பட்டர் மகன் சுப்பாதீட்சதர் என் காரியஸ்தன். இந்த இழவெடுப்பான் பேச்சைக்கேட்டு என் கையிலிருந்த எழுபதுலட்சம் ரூபாயும் போய் சென்னை, பம்பாய், கல்கத்தா, ரங்கூன், கொழும்பு, சிங்கப்பூர், பினுங்கு இவ்விடங்களிலுமுள்ள என்னுடைய கடைகளும் போய் நானும் பாப்பர் ஆனேன், கேள்க்காத சொற்களும் கேட்கலானேன் "தீயினுற் சுட்ட புண்ணுள்ளாறு மாறுது வாயினுற் சுட்டவடு" அவனைத்தானே கட்டியழுங்கள். மோட்ச சாம்பிராச்சியம்

கிடைக்குமென்று அவகப்பன் சொன்னான்; வாரண்டு சாம்பி ராஜ்யந்தான் கிடைத்திருக்கிறது. புதுச்சேரி என்னுமோட்ச லோகத்துக்குப் போகச் சொல்லுகிறார்கள், எனக்கு அந்த லோகந்தான் கிடைக்கப்போகிறதோ அல்லது இந்த பழைய சேரி ஜயில் லோகந்தான் கிடைக்கப் போகிறதோ என்று பெரு மூச்செறிந்தான்.

அரசன்:—ஏன்காணும் காரியஸ்தரே! இதோ வாரும் நன்றாய்த் தெரிகின்றது, "தேரான் றெளிவுந்தெளிந்தான் கண்ணயுறுவும் தீராவிடும்பை தரும்" என்றபடி உம்மை நம்பியதற்கு செட்டியார் மூழுப்பயித்தியகாரரென்றறிந்துகொண்டு உங்களினத்தாருக்கே உதவியாயிருந்து இத்தனை தந்திரம் செய்துவிட்டீர் போலும். செட்டியார் உம்மைத்தான் கட்டியழச் சொல்லுகின்றார், உம்மை என்ன செய்கிறது, எனக்கொன்றுந்தோன்றவில்லை, ஆனாலும் நீரே ஷை கடனுக்குக் காரணமாயிருந்தபடியால் நீரே அந்தக்கடனுக்கு ஜவாப் செய்யவேண்டியது. செட்டியாரை யாரும் இனி வாரண்டில் பிடிக்க கூடாது. ஏன்காணும் பிராமணரே! நீங்கள் சொன்னபடி சாப்பாடு சேஷப்பட்டது நாங்களும் சேஷமடைந்து விட்டோம் என்றீர்களே, அதனால் அப்படி ஏதாவது சாப்பாடு கறுப்பேறிவிட்டதா? அல்லது சிவந்துவிட்டதா? நீங்களாவது அப்படி நிறம் மாறிவிட்டீர்களா? ஒன்றுமில்லையே! எனிப்படிப் பிதற்றுகிறீர்கள். இனியாவரும் இதுமுதல் பந்தியில் ஜாதிவித்தியாசம் பாராட்டக்கூடாது. இப்படி உலகப்பிரயோசனமில்லாத உற்சவம், கோவிற்பணி முதலிய காரியங்களில் தருமமென்றுசொல்லி வீண் பணச்செலவு செய்யக்கூடாது. செய்தால் ஷை யார்கள் சொத்துக்களை அவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்படும். கைதி விடுதலை.

## எட்டாவது அத்தியாயம் நாலாவது விசாரணை

## சன்னியாசி, ஜென்மம், பதவி.

அரசன்:—பியூன், அடுத்தகேசு. [ஒருகைதி ஆஜரானன்].
நீயார், உன்னூரென்ன, பெயரென்ன, கேசென்ன?

கைதி:— ஐயா, நான் மோசபுரி, என் பெயர் ஆஷாடபூதி அதோ நிற்கும் சன்னியாசியிடம் சீடனாகி நாலைந்து வருடமாகியும் அவர் எனக்கு ஒன்றும் சொல்லிக்கொடுக்கவில்லை, நானும் பார்த்தேன், என் குடும்பம் ரெம்பவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தது, சன்னியாசி ஜனங்களை ஏமாற்றி லோபித்தனமாய் சேகரித்து வைத்திருந்த சொத்தை என்குடும்பத்திற் சேர்த்துவிட்டேன். என் பிழைப்பைக் கெடுத்து இவரை நம்பித்திரிந்ததற்கு இதாவது எனக்குக்கிடைக்கக்கூடாதா? சன்னியாசி அரசரிடம் கேசுகொடுத்து என்னை விசாரித்தார், பொருள் செலவாகிவிட்டதென உண்மையைச் சொன்னேன், என்னைத் தெண்டித்துவிட்டார்.

சன்னியாசி:—ஐயா, நானிவ்வுலகை நீங்கினவன், மோட்சத்தை விரும்பினவன், சிவசின்னமணிந்தவன், ஜடாமுடி புனைந்தவன், குடும்பத்தை வெறுத்தவன்; நான் வெளியேறி சம்பாதித்து ரகசியமாய் வைத்திருந்த சொத்தை இவன் மோசஞ்செய்தான்.

அரசன்:— அதிருக்கட்டும், நீர்பேசிய முதல் வார்த்தையே பொய்யல்லவா? "எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவதென்ப திழுக்கு" அதைநீர் எண்ணாது இவ்வேடம் பூண்டீர். ஆனல், நீர் உலகை நீங்கினவனென்றால் இப்பூமிக்குமேலே ஒரு அங்குலமாவது உயரவல்ல வாசிரிய வேண்டும், நீர் இருக்கிறதும் படுக்கிறதும், நடக்கிறதும் பூமியிலேயே வைத்துக்கொண்டு உலகை நீக்கினவனென்பது

எனக்கொன்றுந் தெரியவில்லை, ஈரக்கந்தையிற் சுற்றித்தலையி விருக்கும் ஒருசுமைதானே முடி, என்னஞானம், சவரகன் சிறைத்தெறிந்த மயிரைப் பசையால்ஒட்டி நீட்டிச்சுமையாக் கிக்கொண்டீர். கழுத்தில் ஒரு வகையானமாலை இலந்தைக் கொட்டைகளைச் சரஞ்சரமாய்க் கோர்த்துத் தொங்கவிட்டி ருக்கிறீரே, அது ஒரு சின்னமாக்கும், வெள்ளைவஸ்திரத் தைக்காவியில் நனைத்து அழுக்காக்கி எவ்வித ஆபாசம் பட் டாலும் தோன்றுதிருக்கும்படி அணிந்து சாம்பலைப்பூசிய தும் ஒரு சின்னமாக்கும். உமக்கு உபதேசித்த மடாதிபதி குடும்பத்தை வெறுத்ததுபோல, நீரும் குடும்பஆசை நினை ப்பு முதல் யாவையும் மனத்தைவிட்டு நீக்கினவரோ! அப் படியானால் இழந்த பொருளைப்பற்றி ஏனிவ்வளவு கவலை. ஷிமடாதிபதியிதைக் கையாடி அதினால் பசியமர்ந்து மன தடங்கிச் சமாதானமுண்டாகி ஆயுள் விர்த்தியாகி பல மடைந்தாரோ! இவ்வேடம் பூண்டு எவ்வளவு காலமிருக்கும், ஏனிப்படியலைகின்றீர்?

சன்னியாசி:—அவரும் என்னைப்போலத் தானிருக்கிறார், சொல்லப்புகின் அவருக்கு ரெம்பக்கஷ்டம் மற்றவைசொல்ல மனந்துணியவில்லை. என்றாலும், தன்னிடம் வேதாந்தசிர வணம் செய்துகொண்டிருந்த காமரூபி என்னும் ஒருபெண் ணால் அவர் தான் சேர்த்து வைத்திருந்த பொருள்களை யெல்லா மிழந்துவிட்டுப் பரதவிக்கின்றார். "நலக்குறியார் யாரேனில் நாமநீர் வைப்பிற் பிறர்க்குறியா டோடோயாதார்." நானுமவருக்குச் சீடனாகி பதினைந்து வருடந் திரிந்தும் ஒன் றையுங்காணேன். பூர்வ ஜென்மாந்திர விதியிப்படி யலைகின் றேன், அதிலும் இருந்தபொருளையு மிந்தப்பாவி மோசஞ் செய்துவிட்டான்.

அரசன்:—அதென்ன, பூர்வ ஜென்மமா? அப்படிப் பூர்வ ஜென்மம், எந்ததேசத்தில், எந்த ராஜதானியில், எந்த ஜில்லாவில், எந்த ஊரிற்பிறந்தீர், வீட்டின்நம்பர் தெருப்பெயரென்ன? அங்கு என்னகாரியம் செய்தீர், பாக்கியுள்ளதையா இப்போது செய்கின்றீர்?

சன்னியாசி:— அதுவொன்றுந் தெரியவில்லை, எப்படியானாலும் ஜென்மம் இருக்கத்தானே வேண்டும்.

அரசன்:—ஆம் அவசியமிருக்கத்தான் வேண்டும் அதோ நிற்கின்ற உம்முடைய தாயுந்தகப்பனுமே உம்முடைய முன் ஜென்மம், அந்தவித்தின்பலமே இந்தமரம், இதோ நிற்கின்ற உம்முடைய பிள்ளைகள் உம்முடைய பின் ஜென்மம் ஷை மரத்தின் பலனேயாம். விதை நிலங்களிலேதாவது மேக நீர்ச்சம்மந்த வியாதிகளேற்பட்டிருந்தால் பிந்தின இந்த ஜென்மங்களிற் றொடர்ந்து கொண்டேவரும், அதுதான் முன்செய்தவினை யெனுங்கருமம் பிந்தித்தொடர்ந்து வருமென்பது.

சன்னியாசி:— ஐயா, ஜென்மம் போனாலும் போகட்டும் மோட்சலோகமாவது கிடைக்காதா?

அரசன்:— ஆம், ஒவ்வொருவரும் தேடும்பொருள் இன்னதென்றும், அது இருக்குமிட மின்னதென்றும் தெரிந்து முயற்சிசெய்து தேடவேண்டும். இவ்வாறின்றித் தேடப் புகின் எவ்வூருக்கோ செல்கின்றோமென்ற பிரயாணிகளை யொக்கும். அதுசரி, மோட்சமென்பதென்ன, எங்கிருக்கிறது, யார் போய்வந்தவர், யார் மூலம் கேள்வி, தந்தி கடிதாசிப் போக்குவரத்துண்டா, அல்லது நீரே நேரில் பார்த்திருக்கின்றீரா? பின்னை எவ்வகை நியாயங்கொண்டு தேடுகின்றீர்.

77654

சன்னியாசி:—வேத புராணங்கள் முறையிடுகின்றனவே.

அரசன்:—ஆம், அது உம்மைப்போல ஒரு மனிதன் எழுதிவைத்ததுதானே, அல்லது தானே அந்தரத்திலிருந்து விழுந்ததா? சுருதியானது யுக்திக்கும், அனுபோகத்துக்கும் ஒத்திருந்தாலல்லவோ சரி; நாம் நல்வழியில் நடந்து சுகமனுபவிப்பது மோட்சம், தீயவழி சென்று அவஸ்தைப் படுவது நரகம். இதைச் சந்தேகமற நம்பும்.

சன்னியாசி:—ஆனல், தெய்வமுமில்லையா?

அரசன்:—இல்லையென்று பயித்தியக்காரன்கூட சொல்ல மாட்டானே, தெய்வமானது சர்வ சக்தி மயமாய், அளவிட முடியாததாய், அழிவற்றதாய் எங்கும் நிறைந்ததாய், எல்லாவற்றையுந் தன்னிடங்கொண்டதாயும் எல்லாந்தானயுமிருக்கின்றது. அதுவும் அறிவின் மயமாயக்கினிச்சூடாய் எலக்டிரிக் சக்தியாயும், சகலத்திலும் விளங்கிக் கொண்டிருக்கிறது. ஒருவன் தான் செய்த குற்றம் தன்மனசுக்கே சுட்டு தன்னைக்கண்டிக்கிறது தெண்டித்து நடத்துகிறது.

சன்னியாசி:— நம்முன்னேர்க ளிருந்தபடி நாமும் நடந்துவர வேண்டியதல்லவா?

அரசன்:—ஆம், அது நல்ல மாதிரி, அந்தப்படியே உம்முடைய முன்னேர்கள் எளியவர்கள், நீரும் உம்மிடமிருக்கும் பொருளை எறிந்துவிடும், உம்முடைய தகப்பன் குருடன், உம்முடைய கண்களைக் கெடுத்துக்கொள், அவர் நொண்டி உம்முடைய கால்களை ஒடித்துக்கொள்ளுவீரா? இதுவென்ன பயித்தியம் முன்னேர்கள் அறிவிற் குறைந்திருந்தார்கள், பின் விர்த்தியடைந்து தற்காலத்தில் நாம் எவ்வளவோ முன்னேற்ற மடைந்திருக்கிறேம் இதுகூடத் தெரியாதா?

சன்னியாசி:—அப்படியானால், நான் இவ்வளவு காலம் பாடுபட்டும் வீணாய்ப் போயிற்றே, இனிப்பிழைக்கும் வழி சொல்லும்படி பிரார்த்திக்கின்றேன்.

அரசன்:—நீர் செய்யவேண்டியது உம்முடைய குடும்பத்திற் போய்ச்சேர்ந்து விவசாயம், வியாபாரம், கைத்தொழில் எதையோ உமக்குப் பிரியமானதைச்செய்து, இதுவரையிருந்ததுபோலிராமல் பிள்ளைகளுக்கு வித்யாப்பாசம்செய்து வைத்து, உம்மாலேற்பட்ட ஜனங்களுக்கு அனுகூலமுண்டாகும்படி செய்துவையும்.

சன்னியாசி:—நான் குடும்ப சவரட்சணைக்குப் போய் வருகிறேன். அகக்கண் திறந்துவிட்டது, இனி ஆரியர் கண்ணியிற் சிக்கமாட்டேன், தங்களுபதேசங் கிடைத்தது, பதினைந்து வருடமுந்தேடிக் காணாத ஞானம் இன்றே அடைந்தேன்.

அரசன்:—சரி, போய் வாரும். ஆஷாடபூதி! நீ இனி திருடக்கூடாது, சன்னியாசிகளுக்கும் மற்றவர்களுக்கும் நல்லறிவைப்போதித்து தொழிற் முயற்சி செய்து ஜீவிக்க வேண்டியது. கைதி விடுதலை சபை கலைந்தது. அரசன் அரண்மனை சேர்ந்தான்.

மறுநாள், ஐந்தாவது விசாரணை, கோவில் மானேஜர்.

அரசன்:—பியூன், கேசு, (ஆஜர், ஒரு கைதி.)

நீயார், உன் ஊரென்ன பெயரென்ன? எந்தக்கேசில் தண்டிக்கப்பட்டாய்?

கைதி:—ஐயா, நானிவ்வூர் சுப்பிரமணியசுவாமி கோவில் மானேஜர், என் பெயர் சிவாநந்தன். நான் அக்கோவிற் பட்டர்கள் செய்யும் அநியாயங்களைக் கண்டித்து, சரியான படி பூஜை உற்சவம் முதலானது நடக்கும்படி செய்ய ஆரம்

பித்ததிலிருந்து, பட்டர்கள் என் பேரிற்று வேஷங்கொண்டு ஷெ கோவில் சொத்தை நான் கையாடல்செய்ததாய் பொய்க் கேசு கொண்டுவந்து விடவும், உண்மை இன்னதென்று அரசனும் சரியாய் விசாரிக்காமலும், அதிகாரிகளும் பிராமணர்களானதால் அவர்களும் அவர்கள் பக்கமே சேர்ந்துகொண்டு எனக்கு விரோதமாய் சாக்ஷி சொல்ல என்னை அநியாயமாய் அரசன் தெண்டித்துவிட்டார்.

பட்டர்:—பரம்பரையாய் நாங்கள் அக்கோவிற் குருக்கள் இடையிலெத்தனையோ மானேஜர், தாசில்தார், பேஷ்கார் வருகிறார்கள். ஒருவரும் எங்களைத் தடுத்துச் சொல்லமாட்டார்கள். இவ்வூர் குடிகள் எங்களையே தெய்வமென்று பாவிப்பார்கள். நாங்களும் கடவுளுக்கு உண்மையாகவே நடப்போம் மிகுந்த வரும்படி எங்களுக்குக் கிடைக்கும் அதைக் கெடுக்க எதிரி ஆரம்பித்து கஜானுச்சொத்தையும் கையாடல் செய்தான்.

---

## ஆரியர் சூழ்ச்சி.

அரசன்:—என்ன, ஆதியில் மனிதர் வித்தியாசமில்லாமல் ஆதிபாஷையாகிய தமிழையே பேசிக்கொண்டும், ஒரே பாஷையுடையவர்களாய் ஒன்றாயிருந்தார்கள். அன்னிய நாட்டிலிருந்து குடியேறிய ஆரியர்களால் பாஷை வித்தியாசமேற்படுத்தி, தமிழர் எல்லாம் ஒரு ஜாதியாகவும் ஆரியர் ஒரு ஜாதியாகவுமிருந்தார்கள். ஆரியரும் தங்களுக்கு முன் பர்சியாவிலிருந்து வந்து குடியேறி ஓதிவைத்துக் கொண்டிருந்தவர்களைப் பிராமணர்களென்றும், அவர்களையும் தங்களுடன் சேர்த்துக்கொண்டும், வியாபாரிகளையும் விபசாயிகளையும் வைசியரென்றும், அரசர்களையும் யுத்தம் பயின்றவர்களையும் க்ஷத்திரியரென்றும், மற்றவர்களைச் சூத்திரரென்றும்

தொழிலுக்குத் தகுந்தபடி வகுத்துப் பிரித்துவிட்டார்கள். அக்காலத்திலேயே ஜனங்களதை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் காலக்கிரமத்திலது அனுஷ்டானத்துக்கு வந்துவிட்டது. மேலும், அவர்கள் தங்களைத்தவிர மற்ற எல்லாரையும் சூத்திரரென்றே அழைத்துவருகிறார்கள். சூத்திரன் என்னும் பதத்துக்கு மூடன், அஞ்ஞானி, பணிசெய்பவன், தரித்திரன், அடிமை, வேசைமகன் என்றும், ஆரியன் என்ற பதத்துக்கு உத்தம குணமுடையவன் மேலானவன் என்றும், பொருள். மிலேச்சன் என்ற அர்த்தமுமுண்டு. சுராபானமுடையவர்களானபடியால் அவர்களை சுரர்களென்றுமழைக்கப்பட்டார்கள். அதையாவது கவனித்தார்களா? அவர்களுக்கும் அறிவு இருக்கிறதா? அக்காலத்தில் கொள்வன, கொடுப்பன, உண்பன, குடிப்பன இவைகளில் வித்தியாசம் பாராட்டாமலே நடந்துவந்தது. “பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொக்கும் செய்தொழில் வேற்றுமையால்” என்றபடி ஜன்மத்தினால் ஜாதியில்லை செய்தொழிலினால் வகுப்பு. அதுபோல கபஸ் என்பவர் வேசை மகன், அத்திரி சூத்திரச்சி மகன், விஸ்வாமித்ரன் க்ஷத்திரிச்சி மகன் இவர்கள் முதலியோர் கன்மத்தினால் பிராமணர்களானார்கள். நீங்களும் பார்சீகர்களல்லவா? இடையில் பூஜைத்தொழிலாற் சைவ பண்டாரங்களென்னும் பார்ப்பனரானீர்கள், பின் ஸ்மார்த்த ஆரியரானீர்கள். இக்காலத்தில் மேற்சொல்லியபடி நடக்காமல் வித்தியாசம் பாராட்டி ஒற்றுமையைக்கலைத்து வேட்டையாடி விட்டீர்கள். ஆனால் உங்களையும் மற்ற ஆரியர்கள் வேறுபடுத்திக்கொள்வன கொடுப்பன உண்பன முதலியவைகளை நிறுத்தியிருக்கிறார்களே, அது உங்களுக்குத்தெரியாதா? அப்படி யிருக்க நீங்களுமவர்களுடன் சேர்ந்துகொண்

கண்டதெல்லாந் தெய்வம், சொன்னதெல்லாம் மந்திரம், கட்டுவதெல்லாம் கோவில், சோம்பேறியாய்த்திரிவதே ஞானம், ஆத்மா ஆரியர்க்குத்தானுள்ளது, அவர்கள் சொல்லுவதே வேதம் என்றும், தெய்வ பேதமோ கோடி, ஜாதிபேதமோ அதற்கிரட்டி, ஐயோ! பாவம் இம்மட்டிலாவது தேசவிர்த்தியைத் தேடப்படாதா? பேதை ஜனங்களே மூளையை விற்றுவிட்டீர்களா?

இன்னும், அக்கினிலிங்கம் பூசிய சந்தனம் காய்ந்துவிடுமாம், அது ஒரு காந்தக்கல்லினுற் செய்யப்பட்டது. வாய்வுலிங்கம் அதனடுத்து எரிகின்ற விளக்கு ஆடுகின்றது. லிங்கத்தினிருபக்கத்திலும் பொடித்து வாரங்களுண்டு, வெளியிலிருந்து அதின் வழியே காற்று பிரவேசிக்க ஜாய்ண்டு துவாரங்களுமுண்டு. அத்துவாரத்தை அடைத்துவிட்டால் விளக்காடாது. அப்புலிங்கம், ஒருவித சலவைக்கல்லினுற் செய்யப்பட்டது. லிங்கத்தில் வியர்வை கொப்பளிக்கிறதாம் அது தண்ணீரில் முளேத்த ஜலலிங்கமாம். மூலஸ்தானத்துக்குப்பக்கத்தில் ஒரு தெப்பக்குளமிருக்கிறது. அதிலிருந்து தண்ணீர் ஊறும்படி முன்னிருந்த ஆரியர்கள் செய்த சூழ்ச்சி இப்போது தேவஸ்தானம் மராமத்துச் செய்துவிடவும் வெளியாகிவிட்டது. ஆகாசலிங்கம் அதில் கால் பாவாடை, அரைப்பாவாடை, முக்காற்பாவாடை, முழுப்பாவாடையென்று திரையைக் கொஞ்சங்கொஞ்சமாய்த் திறந்து காண்பிக்கிறீர்கள். அதில் காவித்திரையைத் தவிர நட்டு வைத்திருக்குங் கல்லேக்கூடக் காணேம், ஆகாயந்தானிருக்கிறது. அதற்கு ஆயிரக்கணக்கான பொருளே வாங்கி அபகரிக்கிறீர்கள். சுயம்பாய்ப் பாறைகளும் மலேகளும் உற்பத்தியாயிருக்க கம்மியனுலடித்துவைக்கப்பட்ட லிங்கத்தைச் சுயம்புலிங்கம், தானுய் முளேத்தது என்கிறீர்கள்.

இன்னும் கோ + இல்-கோவில் அரசன் இல்லம், அதாவது மதுரை சொக்கலிங்கம் சோமசுந்தர பாண்டியன் சுந்தரானந்தர் சமாதி, மீனாக்ஷி அவர் பாரி சமாதி, திருப்பரங்குன்றம் அவர்கள் குமாரன் உக்ரகுமாரபாண்டியன் சமாதி, அழகர் கோவில் ராமதேவர் சமாதி, கஞ்சி, காளாஸ்திரி, இராமீஸ்புரம், சிதம்பரம், திருவொற்றியூர், ஸ்ரீரங்கம், திருப்பதி முதலிய அனேக ஸ்தலங்களில் உள்ள கோவில்களிலும் இப்படியே சமாதியென்னும் புதை குழியே தவிரவேறில்லை யென்பதிற் சந்தேகமில்லை.

இன்னும், திருப்பரங்குன்றம் முன்னே காளி கோவிலாகவிருந்து பின்னே விஷ்ட்ணு கோவிலாயிருந்த அடையாளங்களுமிருக்கிறது. இப்போது சுப்பிரமணியர் மூலைத்திருக்கிறார். ஒரு பிரபலஸ்தன் புதைக்கப்பட்ட இடத்தில் ஆரியர்கள் கூடிப்பெரிய கட்டடம் கட்டும்படி முன்னுள்ள ஏமாளி அரசர்களை ஏமாற்றிக் கம்மியர்களால் விக்கிரகங்களை வார்த்தும் அடித்தும் வைத்துக்கொண்டு தாங்களே பூசாரிகளாக ஏற்பட்டு காணிக்கை வரும்படிகளைப் பிடுங்கித்தின்கிறீர்கள். அதுநிற்க, புதைக்கப்பட்டவன் மீனாக்ஷி மகன் உக்ரகுமாரபாண்டியன் தானே. பகவன் என்னும் ஓர் பார்ப்பனனுக்கு கருவூர் ஆதியென்னுமோர் புலைச்சிபெற்ற வள்ளுவர் முதலிய எழுவர்களுடன் சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் அதாவது கிறிஸ்து பிறந்த காலத்தில் பிறந்து பின் குறத்தி வளர்த்தெடுத்த வள்ளியைச் சேர்ந்தவன் தானே. தனக்கே சக்தியில்லாமல் இரண்டு பத்தினிகளைக் கட்டியும் பின்னுங்காணுமல் பழைய தந்திரிகள் நட்டுவைத்த காளிகோவிலண்டை காத்திருந்தும், பாரிகளிம்சை பொறுக்க மாட்டாமல் சன்னியாசம் பூண்டு படாத பாடெல்லாம் பட்டு

இறந்துபோனவன் தானே. இஃதாரறியார், உயிரோடிருக்கும்பொழுது தன்னை ரக்ஷித்துக்கொள்ளமாட்டாமல் இத்தனை பாடுபட்டவன் செத்துப்பல்லாண்டகன்ற பின், ஆரிய தந்திரிகளாகிய உங்களாலடித்து வைக்கப்பட்ட கல்லில் நுழைந்துகொண்டு நம்மை ரக்ஷிப்பானுக்கும் என்ன அறிவு! நாமும் மனுஷஜென்மந்தானே, நம்மைப்போல ஆரியனும் மனிதன் தானே.

இஃதிருக்க பழனியில் மச்சக்காவடி சர்க்கரைக்காவடிக்கதையைக் கேட்டதில்லையோ! காவடியை எடுத்துச்செல்வோன் கொண்டுபோயிறக்க ஒருமண்டபமிருக்கிறது, அதில் வைத்து விடவேண்டியது. சுவாமி உத்திரவான பிற்பாடு வாவென்றனுப்பிவிட்டு திரையைப்போட்டு விடுகிறார்கள். பின் ஆரிய தந்திரிகள் திரையுட்சென்று காவடியை அவிழ்த்து மணலுக்குச் சர்க்கரையும், கறிமீனுக்கு உயிர்மீனும் வைத்து மறுபடியும் கட்டிவிட்டு உத்திரவாய்விட்டது ஓடிவாவென்றோலமிட்டுப் பேயாண்டி தோளிற்றூக்கி வைத்தொட்டுகின்றார்கள். நடந்த வேலையை என்னவென்று கவனிப்பாரைக்காணோம், சர்க்கரை யிருந்தது மீன் துள்ளிற்று என்று கொண்டுவந்த பணத்தைக் கொட்டிவிட்டு வந்தால் எப்படிப் பிழைப்போம், எந்நாள் முன்னுக்கு வருவோம், ஏழை ஜனங்களே! எத்தனைமோசம்! எத்தனை தந்திரம்! என்னசூழ்ச்சி! எதற்குத் தப்புவது! நாடெல்லாம் அவர்கள் வைத்தகண்ணி.

இராமீஸ்புரத்தில் உப்புத்தண்ணீரில் முழுக்கி உள்ளது உரியதைப் பிடுங்கிக்கொண்டு திரும்பிப்பாராமல் ஓடிப்போவென்று விரட்டிவிட்டுக், கூட்டி வந்தவனுக்குப்பாதி தங்களுக்குப் பாதியாகப் பங்கிட்டுப் பிழைக்கிறீர்கள்.

இன்னும், பால் அனுமார், பாயாசஅனுமார், வாயில் ஊற்றும் பால், பாயாசம் எல்லாம் குடங்குடமாய்க் குடிக்கிறாராம். வாயிலிருந்து துவாரம் காலின்வழியாய்ப் பூமிக்கு இறங்குகிறது. அதிலிருந்து ஒருகுழாய் வழியாய் அதற்குச் சமீபமாயுள்ள மடப்பள்ளி அறையிற் கட்டியிருக்கும் தொட்டியில் வந்து விழுகின்றது. பணத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பத்திரும்ப அதையே அபிஷேகம் செய்கிறார்கள்.

திருக்கழுக்குன்றம், கழுகுக்கிரைகொடுத்து பயிற்றுவைக்கப்பட்டிருக்கின்றது. வேளைக்கிரமப்படி வந்து தின்றுவிட்டு அக்குன்றிலடைந்து கொள்ளுகின்றது, ஒருவேளை வராமலும் போகின்றது. கழுகும் ஓர் வகைக் கோழி யினந் தானே! இதிலென்ன ஆச்சரியம், அக்கழுகுகளை இரண்டு ரிஷிகள் இக்கலியுகத்தி லிப்படி உருமாறித் திரிகிறார்களென்று ஏமாற்றுகிறீர்கள். அசூசியைப் புசிக்கும் ஓர்வகைப் பருந்தாகிய கெருடப்பட்சியைக் கிருஷ்ட்ண பகவான் என்றும், குரங்கை அனுமாரென்றும், எருதை நந்தீயீஸ்பரனென்றும், இன்னும் அநேக பிராணிகளையும், பட்சிகளையும், விருக்ஷங்களையும், புல் பூண்டுகளையும் தெய்வமென்று வணங்கி வரும்படி செய்திருக்கிறீர்கள். உள் நுழைந்து விசாரித்தால் ரிஷிமூலம் நதிமூலம் விசாரிக்கப்படா தென்கிறீர்கள்.

இன்னும், மனித வேட்டைக்காரர்களாகிய நீங்கள் காலைமாலை ஜெபமந்திரம் சூரியனை அசுரர்கள் யுத்தஞ்செய்து தடுக்கிறார்களாம், அதற்கு இவர்கள் மந்திரம் ஜெபித்து விலக்கி விடுகிறார்களாம். ஆரியனென்ற நாற்றமும் மந்திரமென்ற வாசனையுமில்லாத மற்ற தேசங்களிற் சூரியன் பிரகாசிக்கவில்லையா? அதாவது நீங்கள் செய்யும் சூழ்ச்சி சூரி

யனே பேதை ஜனங்களின் அக்கண்ணைத் திறந்துவிடாதே யும், எங்கள் மோசம் வெளிப்பட்டுவிடும், எங்கள் கெதி அதோகெதியாகாமற் காப்பாற்றுமென்று ஜெபிப்பதுதானே

## ஒன்பதாவது அத்தியாயம்.

### வேதம்.

ஆனதுபற்றி, வேதத்தை மற்றவர்கள் பார்க்கக் கூடாதென்கிறீர்கள். நாலுரிஷிகள் நாலுவேதத்தை உண்டு பண்ணினதாகவும் சிலர் கூறினும், முன்னுள்ள அறிவாளி களான 21 பேர்களாற் செய்யப்பட்ட நீதிநூலென வெளி யாகிறது. அதில் 11 ஆரியர்களும் 3 பெண்கள் உள்பட 10 தமிழர்களும் செய்திருக்கிறார்கள். அக்காலத்தில் அது பள் ளிப்பாடமாக நடந்துவந்தது. பின் அதை வாதாயணன் என்ற வியாசன் அதிற்சில வியாசங்களைச்சேர்த்து நாலுவேத மாக்கி, அவைகள் ஈஸ்பரவாக்கே என்றும், அருள்வாக்கென் றும் ஜோடித்து எழுதிவைத்தான். அதில் பிற்காலத்தில் ஆக்பர் உபநிஷத்தென்று ஒன்று சேர்க்கப்பட்டிருக்கிறது. தவிர, ஷிவாதாயணன் விஷ்ட்ணு புராணம் நாலும், சிவ புராணம் பத்தும் மற்றும் சில புராணங்களும் செய்துமுடித் தான். அதிற் சிவபுராணம் விசேஷமென்று பிரசங்கித்து வலதுகையைத் தூக்கவும், உடனே வைணவர்கள் கோபங் கொண்டு அவர் வலதுகையை வெட்டி விட்டார்களென வெளியாகிறது. ஆதலால், அதுமுதல் அவர் மற்றவர்களுக் குப்பதில் நமஸ்காரம் செய்யமுடியாமல் இடது கையைத் தூக்கி நமஸ்கரித்து வந்தார். அதையேயிப்போது இடது கையைத்தூக்கி வருகிறீர்கள். கேட்டால் வலதுகையில் அக் கினியிருக்கிறது அதைச்சேர்த்து ஆசீர்வதித்தால் எரிந்து

போவீர்களென்று சொல்லுகிறீர்கள், அந்தப்படி ஒருவரும் இறந்து போகவில்லையே!

தற்காலத்தில், உங்களிற் பிளவுபட்ட ஆரிய சமாஜக் கூட்டத்தார்கள், வேதத்தைச் சகலரும் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற கருத்துக்கொண்டு அதைத் தமிழ் முதலிய பாஷையில் மொழிபெயர்த்து வெளியாக்கிவிட்டார்கள். ஓமம் செய்வதில் அதின் நறுமணப்புகையால் கெட்ட காற்றுகள் விஷக்கிருமிகள் ஒழிந்துவிடுகிறது, பிராணாயாமம் செய்வதால் ரத்தம் சுத்தியடைகிறது, காலையில் சந்தியாவந்தனம் மூலம் சுத்தஜலம்உட்கொண்டால்கண்டத்தைப்பற்றியவியாதிகள் நீங்கிவிடுகிறது என்ற சுகாதாரமே கருத்தாகக்கொண்டு விதவா விவாகத்தையும் ஒத்துக்கொண்டு, உங்கள் கொள்கைகளுக்கு விரோதமாய் ஜாதி வித்தியாசம் விக்கிரக ஆராதனை இவைகளை நீக்கி கன்மம், பிறப்பு, பதவி முதலிய சிலவற்றை ஒப்புக்கொண்டே நடப்பதுபோலப் பாவனை செய்துகொண்டு முதலில் உலகத்தை அனுசரித்தே உண்மையைக் காட்டுவதுபோல ஒற்றுமையைச் செய்யவேணுமென்று தந்திரமாய் நடக்கிறார்கள். அதுபோல பிர்மசமாஜம், இந்து மகா சங்கம் முதலிய நடக்கின்றன. உங்கள் மனுதர்ம சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி சிரார்த்தத்துக்கு மது மாம்சம் சமைத்துவைத்துச் சாப்பிட்டு வந்த நீங்கள் பிற்காலத்திலதை நிறுத்தியிருக்கிறீர்கள். சிரார்த்தம் திதி என்று சொல்லி நீங்கள் வாங்கிச் சாப்பிட்டுப் பசியாறிக்கொள்ளுகிறீர்கள். இறந்தவர் வந்து சாப்பிட வழியில்லையே! ஒரு அறையில் உங்களை அடைத்துவைத்து உங்கள் மக்களை உங்களுக்குத் திதி கொடுக்கச்செய்து ஒருவாரம் சென்று உங்களைத் திறந்துவிட்டால் பசிதீர்ந்திருப்பீர்களா? உங்களிலும்

மோசக்காரர்கள் உலகத்திலுண்டா? எங்களைத்தான் மோசம் செய்கிறீர்களென்று நினைத்தாலும், உங்களிலுமிப்படி எத்தனையோ அளவிறந்த ஜனங்களையும் சாந்தி பரிகாரமென்று செலவு செய்யச்சொல்லி ஏமாறச்செய்கின்றீர்களே! அவர்களுக்காவது மூளையிருக்கின்றதா? ஆனால் நீங்களோ சிரார்த்தத்துக்குஅரிசிதெட்சணை காய்கறியில்லாமல் உங்கள் சொந்தக்காரர்கள் அஞ்சுபேர்களுக்குச் சாப்பாடுசெய்து முடித்துவிடுகிறீர்கள். மதுமாம்ச நரமாம்ச பட்சணிகளாய் மிலேச்சர்களாயிருந்த நீங்கள், வெளிநாட்டிலிருந்து இந்நாட்டில் வந்து குடியேறிய பின்னல்லவா இந்நாட்டு வழக்கமாகிய ஜீவகாருண்ய சைவமென்பதைக் கையாடியும் முடியாமல், வேள்வி என்னும் பெயரைவைத்துக்கொண்டு ஷை அக்கிரமங்களைக் கையாடி வந்திருக்கிறீர்களென்பதும் உங்களுக்குத் தெரியாததா? தற்காலத்தில் ஜீவவதை செய்யாதவர்களென்று சொல்லிக்கொண்டு அனேகவதை செய்யும் பாவிகளல்லவா நீங்கள். மனுதர்ம சாஸ்திரமென்பது தருமசாஸ்திரமாகா,அதில் எவ்வளவோ பாரபட்சச்செய்கைகளும் மதுமாங்கிஷ பட்சணங்களும அநீதி அக்கிரமங்களும் கலந்திருக்கிறது.

கற்சிலையென்பதை நீங்களே தெய்வமென்று வைத்துக்கொண்டீர்களா? இயற்கையாகவே அமைந்ததா? நன்றாய் மூளையிற் கவனம்செலுத்தி ஆலோசித்துப் பாருங்கள். நிலாக்காட்டிச் சோறூட்டும் பருவகாலங் கடந்துவிட்டது, வயது முதிர்த்து போயிற்று, எத்தனையோ படிப்பாளிகள், எத்தனையோ தத்துவசாஸ்திரிகள், வானசாஸ்திரிகள், பூமி சாஸ்திரிகள், ஆராய்ச்சியின் குணம் வந்துவிட்டது, தெய்வ பக்திக்குக் கல்வியாலயம் காரணமல்லது கல்லாலயங்காரணமாகமாட்டாது.

நாம் சிறு பிள்ளைகளாயிருக்கும்போது மணல் வீடு கட்டி அதில் ஒரு சிறுகல்லை வைத்துக் கும்பிட்டதுபோல, கல்லாலயத்தைச்செய்து வைத்து விக்கிரக ஆராதனைசெய்து வருவது பெரிய பிள்ளைகள் விளையாட்டு "உள்ளமே பீடமு ணர்வே சிவலிங்கம்தெள்ளியர் அர்ச்சிக்குமாறு" என்றபடி சரீர மே கோவில், அதில் மனமே பீடம், அறிவே தெய்வமாகக் கொண்டு ஏகாக்கிரசித்தனாய் எந்த லட்சியத்தை வைத்துச் சிந்திக்கிறானோ அவனுக்கு அவ்வறிவே தெய்வமாக அவ்வுரு வாய்த்தோன்றி அனுக்கிரகிக்கும்.

தவிர, இத்தேசத்தில் ஆண்ட சிவன், விஷ்ட்ணு, எமன், அக்கினி, வருணன், வாயு, குபேரன், இந்திரன், சூரி யன், சந்திரன், ராவணன் முதலியவர்களும், ராமர், பஞ்ச பாண்டவர்கள், துரியோதனன், கர்ணன், கிருஷ்ட்ணன், மாவலி, பரசுராமன் முதலிய அரசர்கள் யாவரும் மனிதர் களன்றித் தெய்வமல்லவே.

மானேஜர்.—ஐயா, இவர்கள் சூதுசெய்து பொருள் சம் பாதிக்க நான் ஒரு இடைஞ்சற் காரணனேன். அவர்கள் கோவிலிற் செய்யுமக்கிரமங்கள் என்னாற் சொல்லமுடியாது. ஆகிலும் தாங்களே இதுவரை சொன்னது போதும். விப சாரநாரிகள் கிரகப்பிரவேசராய் ஸ்நானம்செய்யாமல் அசூசி யுடன் கோவிலுக்குள் நுழைந்து அவசரத்தினால் ஒரு வேளை களிலங்கேயே மலவிசர்க்கனஞ்செய்து விடுகிறார்கள். அபி ஷேகத்துக்குக் கொடுத்த பொருள்களைச் சரியாய்ச்செய்யா மல் அவர்கள் வீட்டுக்கும் ஷை நாரிகள் வீட்டுக்கும் அனுப்பி விடுகிறார்கள். எவ்வளவு நெய் கொடுத்தாலும் சரியாய் விளக் கிடாமல் வீடுபோய் சேர்ந்துவிடுகிறது. சாமிக்குச்சாப்பாடு செங்கல்லே, செங்கற்கல்லை அடுப்பில் போட்டுப் பழுக்கச்

சூடேற்றி அதைத்தட்டில் வைத்து ஈரத்துணியைப்போட்டு மூடி தண்ணீரை மேலே தெளித்துவிட்டு சாதம் ஆவிவருவதுபோற் காண்பித்துவிடுகிறான். குடித்துப் போதையுடன் பூஜை செய்கிறான். காலாகாலங்களில் உற்சவம் பூசை முதலானது நடத்தாமலும், அவர்களிஷ்டம்போற் செய்வதுடன் கோவிலே தங்களுடையதென்றும் கோவிற் சொத்து தங்களுக்கே சொந்தமென்றும் சொல்லுகிறார்கள். நம்மவர்கள் கோவில், தருமம், மடம் வகையறுக்களைச் செலவுசெய்து கட்டி மானிபங்களும் விட்டிருக்க அதில் அவர்கள் வந்திருந்து அதிகாரம்செய்து தின்றுகொண்டும், சுவாமிதரிசனத்துக்கு வருகிறவர்களை உள்ளேவிடாமல் தாங்களே உள்ளே சென்று மறைத்துக்கொண்டு இடைஞ்சல் செய்வதுடன், சுவாமி பாதகாணிக்கை, சொர்ணபிஷேகம் முதலியவைகளை கஜானுவுக்குச்சேர்க்காமல் கொள்ளைகொண்டும் சமயத்திற்குத்தக்கபடி அருச்சனை அபிஷேக தெட்சணைகளை அதிகம் கேட்டு வாங்கிக்கொண்டும் சரியாய்ச் செய்யாமல் மோசம் செய்கிறார்கள். ஷை சொத்துக்கள் மோசம் போகாமல் விஷயங்களைச் சீர்திருத்தம்செய்ய சட்டம் ஒன்று ஏற்படுத்த வேண்டியது அவசியமாயிருக்கிறது. அவர்களைக் கண்டித்தேன். என்னை இக்கெதியாக்கி விட்டார்கள். நானுமவர்களுடன் சேர்ந்திணங்கி நடந்திருந்தால் ரெம்பவும் க்ஷேமமாயிருப்பேன். நான் கையாடல் செய்யவே இல்லை.

அரசன்:—அப்படி மானேஜர் கையாடற் செய்தாரென்பதற்கு என்ன ருசு, ரிக்கார்ட்டு?

பட்டர்:—ஐயா, நாங்கள் குன்றுடைக்கு மரன்தன்றனை நாளும் சென்றடி பரவும் நன்றறிவுடையார், ஐங்கரன்றம்பி செங்காத்தெழுதிய திருமுகப்பாசுர மிதோவிருக்கின்றது, பார்க்கட்டும்.

## வெண்பா.

தீரமிகு வீமபுரச் செவ்வேள்யாம் உத்தமமாய்
வீரமத கேசரிக்கு விள்ளுவோம்—நேராகா
எங்கோவில் மானேஜர் எம்பொருளை வவ்விளுன்
வெங்காவல் வைத்துவிடு.

அரசன்:—என்காணும் இது நனைந்த கோழி பிடிக்கும் பழைய தந்திரமல்லவா? முன்னுள்ள ஏமாளி அரசர்களுக்கு உங்கள்முன்னோர்களிப்படி தானெழுதுகிறது. தருமிக்குப் பொற்கிழி கொடுத்தது, பாணபத்தனுக்காகச் சேரர் பிரானுக்கெழுதியகைச் சீட்டு, மாணிக்கவாசகர்சொல்ல திருச்சிற்றம்பலவன்கையெழுத்து என்றிப்படி அனேகம் ஏமாற்றுகள். என்னைப் பழையகாலத்துப் பாழரசென்று நினைத்துவிட்டீர்கள். அந்தப்பப்பு வேகாது; யார் இது கொண்டுவந்தவன், நேரேவா, இதுயார் கையெழுத்து? உண்மையைச்சொல்.

பட்டர்:—பிரபு, நாங்களப்படி வஞ்சகம் செய்வோமா? இது காங்கேயன் கையெழுத்துத்தான்.

அரசன்:—உண்மையைப் பேசுங்கள், காங்கேயன் படிக்குங்காலங்களிலிப்படி எழுத்துகளே கிடையாது. முன்னுள்ள கற்சாசனம், தாம்பூரச் சாசன மிவைகளைக் கவனித்தாவது வேலை செய்தீர்களா? மகாவஞ்சகர்களே! இப்போது என்ன சொல்லுகிறீர்கள்?

பட்டர்:—அவர் சொல்ல நாங்கள் தானெழுதியது.

அரசன்:—நாங்களென்றால் எத்தனை பேர்.

பட்டர்:—நான்தானெழுதியது மற்றோருபகாரிகள்.

அரசன்:—அக்குகன் நேரில் சொன்னாரா? சொன்னவரை சாட்சிக்குக் கொண்டுவர முடியுமா? அல்லது அங்கேயே போய் விசாரித்தாலாவது பேசுவாரா?

பட்டர்:—நேரில் சொல்லவில்லை சொற்பனம்சாதித்தார்.

அரசன்:—நீங்க ளிதுவரை சொல்லிவந்தது பொய் தானே, "தன் நெஞ்சறியப் பொய்யற்க பொய்த்தபின் தன் னெஞ்சே தன்னைச்சுடும், பொய்யாமை பொய்யாமை யாற்றினறம் பிற செய்யாமை செய்யாமை நன்று; யாமெய்யாக் கண்டவற்று ளில்லை எனைத்தொன்றும் வாய்மையினல்ல பிற" என்று சொல் லப்பட்டிருக்கிறது தெரியாதா? இதுதான் நிஜமாக்கும், கனவுகண்டீராக்கும், அதை நம்பி எழுதினீர்களோ! அக் கனவும் நீரே கண்டு கொண்டதுதானே, அதுஉன் சொந்தப் புளுகல்லவா?

பட்டர்:—பிரபு, மன்னிக்கவேண்டும், நாங்கள் பரம் பரையா யிப்படிச்செய்வது வழக்கம், இப்படி வருமென்று எங்களுக்குத் தெரியாது, இனி ஒருபோது மிப்படிச் செய் யவேமாட்டோம்.

அரசன்:—தீர்ப்பு எழுதுகிறேன்—துருக்கி தேசத்தில் மதம் என்பதையே ஒழித்துவிட்டு தேசத்தைப்பற்றிய சீர் திருத்தங்களைச்செய்ய ஆரம்பித்து விட்டார்கள். எவ்வ ளவோ மேன்மையடைந்திருந்த நம்தேசமும் ஷமதத்தினு லல்லவா மிகவும் தாழ்மையான ஸ்திதியில் வந்துவிட்டது. ஆகையால், நாம் நம்தேச முன்னேற்றத்திற்குப் பாடுபட வேண்டும். அதற்கு முதலாவது நம்மதக் கொள்கைகளை யும் அதற்குக் காரணமாயிருந்த வேதபுராண சாஸ்திரக் கதை முதலிய சகலத்தையும் அறவே ஒழித்துவிடல்வேண் டும். வேதம், பாரதம், ராமாயணம், பாகவதம், திருவிளையா டல், ஆழ்வார்புராணம் முதலிய மதநூல்களை வைத்திருப்ப வர்களையும் பிரசங்கம்செய்வோரையும் படிப்போரையுங்கேட் போரையும் தண்டிக்கப்படும். சயின்ஸ் நீதிநூல் முதலிய

வைகளைத்தவிர மேற்சொல்லிய நூல்களைச் சாம்பலாயெரித்துப் போடவேண்டியது. ஒவ்வொரு கிராமங்களிலும் பட்டனங்களிலும் உண்மையறியும்சங்கம், அனுபோக ஆராய்ச்சி சங்கம் ஏற்படவேண்டியது. விக்கிரக ஆராதனையே கூடாது. வேணுமென்ற எண்ணம் சிலருக்கிருக்குமானால், பழைய மாதிரி கோவிலை கூடாது, வெகு தூரத்திலிருந்து பார்த்தாலும் தெரிசனம் செய்யக்கூடியதாய் பெரிய உருவமாய் விசாலமான வெளியில் உன்னத மேடையில் ஏகநாயகன் என்னும் பெயரையிட்டு ஒரு விக்கிரகத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது. வாரத்துக் கொருநாள் கால்மணி நேரம் அதில் பக்தி பிரியமுள்ளவர்கள் பூசை, அபிஷேகம், அலங்காரம் சகலமும் அப்பீடத்தைச் சுற்றிய எந்த இடத்திலும் செய்துகொள்ளலாம். அச்செலவும் ஒரு அணுவுக்கு மேற்படக்கூடாது. அதிகம் வேண்டுமானால் அக்கடவுளே அரசாங்கத்தில் நேரிற் கேட்டுவாங்கிக்கொள்ள வேண்டியது. பலி கொடுக்கக்கூடாது, அதற்கு ஆபரணமணிபக்கூடாது, உற்சவமும்கூடாது. பழைய கோவில்களிலிருக்கும் விக்கிரகங்களை எடுத்தெறிந்துவிட்டு சுத்தஞ்செய்து அவ்விடங்களைப் பொதுச்சங்கம், வித்யாசாலை, தொழிற்சாலை முதலியவைகளுக்கு உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டியது. ஷை கோவில்களின் மானிப முதலிய வரும்படிகளிலிருந்து அக்கடவுள்பேரால் ஒருதொழிற்சாலை ஏற்படுத்தி ஏழை ஜனங்களுக்குக் கூலியுடன் பல தேசங்களும் விரும்பும் விநோத சாமான்கள் செய்யப்பயிற்றுவிக்க வேண்டியது. அதுபோல மடாலயங்களும் சீர்கெட்டுப் போயிருக்கிறபடியால், மடத்து வரும்படி பூராவிலிருந்து, மடாதிபதிக்கு அன்னவஸ்திரமும் ஒருவேலைக்காரன் சம்பளமும் தவிர வேறே ஒருசெலவு மிருக்கக்கூடாது. அனுபோக உண்மை ஞான ஐஸ்கூல்

என்று பெயரிட்டு ஒருகல்விச்சாலை ஏற்படுத்தி, அதில் சயன்ஸ் முதலிய சகல வித்தைகளும் பயிற்றுவிக்கவேண்டியது. மாணவர்களுக்கு யாதொரு செலவுமில்லாமல் ஊண் உடை கொடுத்து ஆதரிக்கவேண்டியது. மடத்துக்கும் இம் மடாதிபதிக்கும் பிந்திப்பட்டமே கிடையாது. போர்ஜரி செய்த குற்றத்திற்காகவும், பொய்க்கேசு உற்பத்தி செய்த கற்பனைக்காகவும் "பிறர்க்கின்னு முற்பகற் செய்யிற் றமக்கின்னு பிற்பகற் றானேவரும்" என்றபடி பட்டருக்குத் தீவாந்திர சிட்சை. ஆரியர்களே! இனியாவது நன்னெறியடையுங்கள். உங்களாற் கோவிலுக்கும் மடத்துக்கும் இனி நல்லகெதி தான். மானேஜர் விடுதலை.

---

## ஆறுவது விசாரணை. (பெரியவர்)

அரசன்—பியூன், அடுத்த கேசு, கைதியைக்கூப்பிடு.

ஆஜர், (சடைமுடியுடைய ஒரு பெரியவர் வந்தார்).

நீர் யார்? உம்முடைய பெயரென்ன? ஊரென்ன? என்ன கேசு?

கைதி:—ஐயா, நானிருப்பது பாண்டிநாடு, என் பெயர் நித்தியானந்தன், இவ்வூரிற் சிலரெனக்கு ஆதரவு செய்து, உண்மை ஞானம், உலகஉண்மை, ஆரியர் சூழ்ச்சி இவைகளைப்பற்றிப் பிரசங்கம் செய்யச்சொன்னார்கள். அப்படிச் செய்தேன். அதனால் ஆரியர்கள் என்பேரிற்று வேஷங்கொண்டு ராஜதூஷணை தெய்வதூஷணை செய்ததாகப், பொய்க் கேசு உண்டுபண்ணிவிடவும் அரசன் என்னைச்சரியாய் விசாரிக்காமல் தெண்டித்துவிட்டார்.

அரசன்:—அதுசரி, அதை நான் சரியாய் விசாரிக்கிறேன், ஆனால் நீர் செய்த பிரசங்கத்தைக் கேட்டுத்தான் முடிவுசெய்யவேண்டியிருக்கிறது. அதைக்கேட்க இச்சபை

யாரும், இவ்வூர் ஜனங்களும் தயாராகயிருக்கிறார்கள். அதை இன்னுமொருமுறை சரியாகப் பிரசங்கம் செய்வீராக. ஊரில் தெரிவிக்கவும் சகலரும் வந்து சேர்ந்தார்கள்.

---

## தமிழ் உலகம்.

நித்தியானந்தன்:—சகலருக்கும் வந்தனம், கேளுங்கள் சகோதர சகோதரிகளே!

கடல் சூழ்ந்த இவ்வுலகில் ஆதிபாஷை தமிழே. இக்காலங்களில் வழங்கிவரும் சகல பாஷைகளிலும் தமிழ்ப்பதங்கள் கலந்திருக்கின்றன. தமிழ் அட்சரங்கள் சரீர அம்சங்களிலிருந்தும் மற்றப் பிராணிகளின் வாக்கியப் பதங்களிலிருந்தும் அமைக்கப்பட்டவை. எந்த நாட்டிலும் கன்றுக்குட்டி தாயை அம்மா என்றுதான் கூப்பிடுகிறது. அந்தப்பதம் தமிழிற்றானுண்டு. ஷை சப்தத்திலிருந்து தாயாரை அம்மா வென்று நாம் அழைக்கிறோம். அதுபோல அதிலிருந்து பிந்தி ஏற்பட்ட மற்றப் பாஷைகளிலும் மா, மாதுர், மம்மா, மதர் முதலான வாக்கியங்கள் வழங்குகிறது. அதுபோல காகா, கரீச்சான், வாத்து, சொக்கா கோழி என்று அவைகளுக்குப் பெயர் ஏற்பட்டது. ஓயாமற் பறக்குந் தொழிலாற் பருந்தென்றும், நிறத்தால் செம்பருந்து, செம்போத்து, செந்நாயென்றும் சப்தம், தொழில், நிறம், குணம், ரசம், உருவம் முதலியவைகளிலிருந்து பிராணிகளுக்கும் தாபரம்புல்பூண்டு விருக்ஷங்களுக்கும் மற்றப் பொருள்களுக்கும், செயல்களுக்கும், காரணமாயுமிடுகுறியாயும் பெயரமைக்கப்பட்டு வழங்கி வருகிறது. தம் + அக்கை-தமக்கை, தம் + ஆய்-தாய், தம் + அப்பன்-தகப்பன், தம் என்னும் உரிமைச்சொல்லும் இழ் என்னும் ஒலிச்சொல்லும் சேர்ந்து தம் + இழ்-தமிழ் எனவும், தமிழ் உலவு அகம்-தமிழ் உலகம் எனவாயிற்று. ஆதியில்

வேற்று பாஷையில்லாததினல் தமிழுக்கு ஆதியிற் பெயர் ஏற்படவில்லை. ஆறுதார அட்சரங்களாகிய நமசிவய என்னும் பஞ்சாட்சர அட்சரத்தைக்கவனிக்க; அவ்வாறுதாரக் கொள்கையை அனுசரித்துவந்த ஆர்ய, சமஸ்கிருத, மகம்மதிய இஸ்லாத்திலும் அப்பாஷை எழுத்துக்களமையவில்லை. அமைத்தாலும் பொருந்தாது, அக்காலத்தில் அப்பாஷைகளே கிடையாது. தமிழ் அட்சரவடிவே அவ்வடிவாகும், தவிர சில அட்சரங்களில் மெல்லிய தொனிமுதல் கடின தொனிவரை தொக்கியிருக்கின்றது. பிந்தி ஏற்பட்ட பாஷைகளில் அதை விரித்துவிட்டிருக்கிறார்கள். ங. ஞ. ள. ழ. ற. ந. ண அட்சரங்கள் அன்னியபாஷைகளிற் கிடையாது. ஒரு அட்சரத்துக்கு, ஒருபதத்துக்கு அநேக அர்த்தங்களும், பொருள்களும், செய்யுள், சங்கீதம், ராகம், ரசாயனங்கள், பரதம், வல்லப சம்பிரதாயங்களும் தமிழுக்கே உரியது. அது 15000, 20,000 வருஷங்களுக்கு முன்னிருந்தே வழங்கி வந்ததாக சரித்திரம் மூலம் வெளியாகிறது. மற்றவைகள் 10,000 வருஷங்களுக்குப் பிந்தின சரித்திரமுடையவை. சம்பாஷிக்க முடியாத அதாவது பேச்சற்றவாயில்லா ஊமைபாஷையாகிய சமஸ்கிருதத்தை தமிழிலிருந்தும் பிந்தி ஏற்பட்ட பாலி முதலியபாஷைகளிலிருந்தும் வால்மீகரென்னும் ஒரு இந்தியரால் சேர்த்து வடஇந்தியாவிலுண்டாக்கப்பட்டது. தற்காலத்திலும் பேச்சு வழங்காமல் செத்துப்போய்விட்டது. (Dead-language) அதை இந்தியாவின் தென்னாட்டில் விருத்திசெய்ய நினைத்து 2000 வருஷங்களுக்கு முன் அதாவது நிலந்தரு பாண்டியன் என்னும் இராவணன் அரசாக்ஷி காலத்தில்வந்த அகஸ்தியன் தமிழின் அருமை பெருமையைக்கண்டு வியப்படைந்து அதையே பிரதானமாகக்கொண்டு முன் புலஸ்திய

ஞல் ஏற்பட்ட தொல்காப்பியத்துக்குப்பிந்தி சமஸ்கிருதம் கலந்த ஒரு இலக்கண நூலைச் செய்துமுடித்தான். அகத்திய மென்னுமந்த நூலில் வடமொழி கலந்திருந்தபடியாலதை ஷை பாண்டியன் ஏற்றுக்கொள்ளாமற் தள்ளிவிட்டபடியால் அந்நூல் தலையெடுக்கவேயில்லை. அதிலிருந்து ஷை அகஸ்தியர் கோபத்துடன் வடக்கே திரும்பிப்போய் விட்டாராம்.

அதி உஷ்ட்ணமாயிருந்த ஆதிகாலங்களில் உண்டாகிய மனிதர்களும் பிராணிகளும் அதிக உயரமுடைய இமயகிரி பர்வதங்களில் உஷ்ட்ணம் குறைவாயிருந்தபடியால் அதிலும் அதை அடுத்தும் வசித்துவந்தார்கள். தற்காலத்தில் அதை ஏரேப்பிளேன் மூலமாய்ப்போய் சோதித்ததில் பிராணிகளின் எலும்புகள் அதிலகப்படுகின்றன. பின் அதில் குளிர்ச்சி அதிகப்பட்டகாலத்தில் அதினின்று கீழ் இறங்கி ஜனங்கள் இந்தியாவிற் குடியேறியவர்களென்று வெளியாகிறது. ஜனங்கள் ஆதி உற்பத்தி, பாலைவனமாகிய மத்திய ஆசியாவிலென்று சாஸ்திரிகள் கூறினும் அது சமுத்திரமாயும் பின் பாலைவனமாயுமானதா யிருக்கிறபடியால் அதை நம்ப ஏதுக்களில்லையென்றும் ஆனல் இமயகிரி இந்தியாவென்றே மதிக்கக்கூடியதா யிருக்கின்றது. இமயகிரிக்கு வடக்கே யிருக்கும் பாலைவனம் முன் சமுத்திரமாயிருந்து பின் முதல் ஊழியென்னும் பூகம்பங்களினல் தோன்றிய மணற்காடு. அப்படியே ஆதியில் இந்தியா கிழக்கே பர்மா, ஜப்பானுடன் சேர்ந்தும், ஆஸ்திரேலியாவரை துயர்ந்தும், மத்தியரேகைக்கப்பால் தெற்கே நீண்டும் தென் ஆபிரிக்காவரை துயர்ந்த பூமியாய் கிரீஸ் அமெரிக்காவரை சம்மந்தத் தொடர்ச்சி யிருந்திருக்கிறது. இன்னும் பசிபிக் மகாசமுத்திரத்தின் சிலதீவுகளில் தமிழ் பாஷையே வழங்கிவருகிறது.

அதுவும் ஆதித்தமிழாகவே யிருக்கிறது. ஆதி தமிழ் உலக த்துக்கு வடக்கு வேங்கடமென்றும் தெற்கு குமரியென் றும் சொல்லப்பட்டது. அதாவது இந்தியாவைச் சேர்ந்த வேங்கடமல்லவென்றும் அதுவெப்பம்பொருந்திய பாலைவன மணற்காடாம், 4000 மைல்வரை தெற்கே நீண்டிருந்து பின் சமுத்திரமாகிய இந்துமகா சமுத்திரத்தில் தெற்கேயிருந்த குமரிதானென்றும் இப்போதிருக்கும் கன்னியாகுமரி அல்ல வென்றும், கிழக்கும் மேற்கும் பூமியாய் நீண்டிருந்தபடியால் எல்லை சொல்லப்படவில்லையென்றும் வெளியாகிறது. அதைத் தான் தமிழ் உலகமென் றழைக்கப்பட்டது. பின் இந்தி யாவினின்று வெளியேறி ஷிவேங்கடத்துக் கப்பாலும் கிழக்கிலும் மேற்கிலும் ஆப்பிரிக்கா அமெரிக்கா வரையும் ஜனங்கள் குடியேறினார்கள். அதற்கு வெகுகாலத்துக்குப் பின் ஐரோப்பாவிற்குடியேறப்பட்டது, ஆகஇப்பூமியிலுள்ள ஜனங்கள் யாவரும் ஆதித்தமிழ் உலகத்தினின்று வேளியே றிய தமிழ்மக்களேயாவர். ஒரு கூட்டத்தினராயிருந்து பல தேசங்களிலும் குடியேறிப் பலவித பாஷையும் தெய்வக் கொள்கைகளுமுடைய மதத்தினர்களாயும், பின் சிலர் அதி னின்று இந்தியாவுக்குத் திரும்பவந்து குடியேறியு மிருக்கி றார்கள். ஆகையால் உலகில் ஜனங்களை வேற்றுமை வித்தி யாசம் பாராட்டுவதும் சரியல்ல. பின் முதல் ஊழி இரண் டாவது ஊழிகளென்னும் பூகம்பங்களாலும் ஜலப்பெருக் காலும் இந்தியா பிரிக்கப்பட்டிருக்கிறது. வங்காளக்குடாக் கடலும் அரபிக்கடலும் இரண்டாவது ஊழியிற்றோன்றி யவை டெட்ஸீ (Deadsee) என்னும் அதிஉப்புக்கடல் பூமியி னூடேவந்ததும் அதேகாரணம். இரண்டாயிர வருஷங்க

ளுக்கு முன் மதுரைமாநகரில் கடைச்சங்க மிருந்ததாகவும், அதற்கு வெகுகாலத்துக்கு முன் நடுச்சங்கமும், அதற்கு பதினயிர வருஷங்களுக்கு முன் முதற்சங்கமும் இப்படி முத் தமிழ்ச் சங்கங்கள் நடைபெற்றும், நாகரீகம் ஆராய்ச்சி முதலியவைகளில் ஆதிகாலத்திலிருந்தே சிறப்புற்றோங்கி யிருந்திருக்கிறது. ஆக, தமிழ்தான் ஆதிமுதற்பாஷை யென்பதற்கு இன்னுமனேக ஆதாரவுகளும் ருசுக்களுமிருக்கின்றன. அரும் பொருளமைந்த அற்புத முத்தமிழின் சுவை அமிழ்தினுமினியதே! ஆகையால், ஆதியில் மனிதர்களுற்பத்தியாகி வசித்துவந்த தேசமும் நம் பரதகண்டமே அதில் வழங்கிவந்ததும் ஆதி தாய்பாஷையுந் தமிழே. ஏனெனில் இந்தியாவே சகல தேசங்களுக்கும் நேத்திரம்போல விளங்கியதாய் சகல பிராணிகளுற்பத்திக்கும் ஏதுவான வளப்பமுடையதா யிருக்கின்றது.

---

## பத்தாவது அத்தியாயம். உயிர்.

அது நிற்க, உயிர் நிறைந்த இவ்வுலகம் உடலும் செயலுமாய் நிறைந்திருக்கின்றது என்று சொல்லவும் ஒருவர் எழுந்து ஒரு கேள்வி கேட்கின்றார். ஒரு உடலுக்கு ஒரு உயிரா பலவுயிரா? ஒரு செயலா, பலசெயலா? என்றார். மற்றொருவரெழுந்து கடவுள் என்னை ஏன் சிருஷ்டித்தார், நான் சிருஷ்டிக்கச் சொன்னேனா? என்றார். அக்கேள்விகளுக்குப் பதில் பின் வருமாறு கூறுகின்றார்.

ஒரு உடலுக்கு ஒரு உயிருமல்ல, பலவுயிருமல்ல ஒரு செயலாயிருக்கின்றது. அதிலிருந்து பல உடலாகிப் பல செயலாகியும், வித்தின் வழியும், வேரின் வழியும், விழுதின் வழியும், கிழங்கின் வழியும், கொடியின் வழியும், கொப்பின் வழியும், இலையின் வழியும் வேரூன்றி யந்திரமாகிய உடலாகி

உற்பத்தியாகி அநேகம் செயல்களாக ஆகின்றது என்பது தீர்மானம். வித்தினின்றும் சத்தினின்றும் தாபரங்களையும் உயிர்களையும், முட்டையினின்று குஞ்சுகளையும் உஷ்ணத்தைக்கொடுக்கும் ஒருயந்திர மூலமாயும் உடனே நாம் உற்பத்தி செய்து விடுகிறோம். ரேடியம் என்னும் அதிக விலையுயர்ந்த மிக்க பிரகாசமுடைய தற்காலத்திற் கண்டு பிடிக்கப்பட்ட ஒரு வஸ்துவினால் உடம்புக்குள்ளிருக்கும் ஸ்திதியையும் மறை பொருளையுங்கண்டறிந்து விடுகிறார்கள். தற்காலத்தில் (Artificial flesh & eggs) மாம்சம் முட்டை முதலியவைகளை உண்டுபண்ணுகிறார்கள். அதிலிருந்து குஞ்சுகளை உயிருடன் உற்பத்தி செய்யும் வழி இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை. பிற்காலங்களில் கண்டு பிடிக்கப்படலாம். அதுபோலக் கருப்பையிலிருந்து உண்டாகும் உயிர்களையும் Artificial ஆக உண்டு பண்ணக்கூடும். தாபரங்களை ஒட்டுக்கட்டுவதுபோல இரண்டு பிராணிகளின் சுவாசத்தையும் ரத்த ஓட்டத்தையும் தடைப்படுத்தி நிறுத்திவிட்டுக் கழுத்தை அறுத்துச்சிரசை சரீரத்தை மாற்றி ஒட்டவைத்துத் தைத்துச்சேர்த்து ஜீவிக்கும்படி தற்காலத்தில் நாய் பூனை முதலிய பிராணிகளிற் பரீட்சித்தறிந்து செய்து வருகிறார்களென்றும், குரங்கின் நரம்பின் சத்தை மனிதனுக்கு இன்ஜக்ட் செய்வது மூலமாயும், இளம்பிராணிகளின் இரத்தத்தை முதிர்ந்த பிராணிகளுக்கு இன்ஜக்ட் செய்வது மூலமாயும் வயது சென்ற பிராணியை இளமையடையச்செய்தும் வருகிறார்களென்றும் கேள்விப்படுகிறோம். அப்படியே பெண்சிரசை ஆண் சரீரத்திலும், ஆண் சிரசைப் பெண் சரீரத்திலும் மாற்றி ஒட்டுவதின் மூலம் ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் ஆயுளை விர்த்தியோ குறைவோ செய்யக்கூடும். கழுதையைக்

குதிரையாகவும் குதிரையைக் கழுதையாகவும் மாற்றக்கூடும், அவைகளின் அறிவிற்குச்சிரசே பிரதானம். இன்னும்வரும்.

---

## கருவோற்பத்தி (முன் தொடர்ச்சி)

ஆண் இந்திரியம் ஸ்கலிதமானல் வலது பீஜமும் பெண்ணனல் இடதுபீஜமும் உயர்ந்துவிடுமென்றும், மேலே சொல்லியபடி வலது பீஜத்தி லுற்பத்தியாகும் இந்திரியம் ஆண் இடது பீஜத்திலுற்பத்தியாகும் இந்திரியம் பெண்சிசுக் கருவென்றும் பின் வருமாறு ரூபிக்கப்படுகிறது. உதாரணமாக நாய் பூனை முதலிய பிராணிகளின் வலது பீஜத்தை அறுத்தோ அல்லது கயிற்றூற்கட்டியோ ஆண் இந்திரியத்தைத் தடுத்துவிட அதுசேர்ந்து பெண்குட்டிகளையும், இடது பீஜத்தைக் கட்டிவிட ஆண்குட்டிகளையும் பெற்றது என்றும் டாக்டர் டரால் (Doctor Trall) என்னுமொருவர் சோதித்தறிந்திருக்கிறர்; ஆகையால், நாம் நினைத்தபடி ஆணையோ பெண்ணையோ உற்பத்தி செய்யலாம்.

அடியிற்கண்ட பத்துக்கட்டளைப்படி ஒருவன் நடந்துவந்தால் ஆயுளை இருநூறு வயதுக்குக் குறையாமல் விருத்தி செய்யலாமென்று ஜப்பான் சயன்டிஸ்ட் ஒருவர் காரண்டிகொடுத்துத் தெரிவித்திருக்கிறர். (1) கூடியவரை வெளிக்காற் றோட்டத்தை அனுபவிக்க, (2) நாளுக்கொரு வேளை புசிக்க, (3) தினம் ஒருவேளை வெந்நீர் ஸ்நானம் செய்க. (4) குளிர்தேசமானல் கெட்டியான கம்பளி உடைதரிக்க, என்றும் சுத்தமான வஸ்திர உடைதரிக்க (5) தீப வெளிச்சமில்லாமல் அதாவது இருட்டில் நல்ல காற்றோட்டத்திற்காக ஜன்னல்களைத் திறந்து வைத்துக்கொண்டு ஆறுமணிநேரம் நித்திரை கொள்க. ஏழரை மணிக்குமேல் கூடாது. (6)வாரத்துக்கொருநாள் உண்ணவிரதமாய் ஒய்ந்

திருக்க, (7) அதிக கோபமும் மூளைக்கு அதிகவேலையுங் கூடாது. (8) விதவைகளும் பெண்ணை இழந்தவர்களும் மறு கல்யாணம் செய்துகொள்ளவேண்டியது. ஏனென்றால் அதிக சுக்கிலச்செலவும் சுக்கில பந்தமும் நோய்க்கிடம். (9) நிதான மான சரீரஉழைப்பு (10) அதிகப்பேச்சும் ஏக்கமுங்கூடாது. இப்படி அனேக சுகவழிகளுண்டு. மேலும்மேலும் கொழுக் கச் சாப்பிடுவதால் ஒருவித விஷக்கொழுப் புண்டாகிறதென் றும் அதைச் ஜீரணிக்கச்செய்யும் உள் அவயவம் சக்தியற் றுப்போய் சீரழிவு உண்டாவதாயும், வாரத்துக்கொருநாள் உண்ணாவிரத மிருந்துவந்தால் அதுசரியாக ஜீரணித்து அவ் வியாதிநீங்கி விடுவதாயும், அதுபோல ஆவிஸ்நானம் முதலிய சிகிச்சைகள் மூலமாயும் உணவு லங்கனம் மூலமாயும் அவுடத மன்னியிற் சகல வியாதிகளும் நீங்கிவிடுகிறதென்றும், பாம்பு தீண்டினால் சிரசில் குளிர்ந்த ஜலத்தை ஊற்றிக்கொண்டே யிருந்தால் விஷமிறங்கி விடுமென்றும் டாக்டர்கள் கண்டறிந் திருக்கிறார்கள்.

தூக்கமென்பது நாம் சிறு குழந்தை முதற்பழகிவந்த பழக்கம், அதை நீக்கிவிடமுடியும் அதனாற் கெடுதலில்லை யென்றும் சொல்லுகிறார்கள். எப்படியென்றால் ஒருநாளை க்கு ஐந்துநிமிஷமாகக் குறைத்துவிடலாம். அதுபோற் சாப் பாட்டையுங் குறைத்துவிடலாம் கால்படி கொள்ளும்படி சந்தனக்கட்டையிற்செய்த ஒரு உழக்கில் அரிசியை அளந்து போட்டுச் சமைத்துச் சாப்பிட்டுவருகிறது. சாப்பாடு தீர வும் அந்த உழக்கைச் சந்தனக்கல்லில் குப்புறக்கவிழ்த்தி சந் தனமறைத்துப் பூசிக்கொண்டுவர நாளுக்கு நாள் உழக்கும் தேய்ந்துவிடும் சாப்பாடும் குறைந்துவிடும். சாதகத்தினால் சுவாசபந்தனம் செய்து சமாதியிலிருந்து வெளியில் வரலாம். தவளையும் வெகுகாலம் மண்ணிற் புதைந்திருந்து வெளியில்

வருகிறது. அதற்கு மிதற்குமென்ன வித்தியாசம். அதில் என்ன நன்மையடைந்தார்கள் அல்லது உலகத்திற்கு உண்டு பண்ணினார்கள். ஒன்றுமில்லையே!

நமக்கு ஒரு விநாடிக்கு ஒரு இரத்தத்துடிப்பும், அப்படி நாலு துடிப்புக்கு ஒரு சுவாசமும் ரத்தம் சரீரத்தில் ஒரு சுற்றுச் சுற்றிவர மூன்று நிமிஷமும் செல்லும். அதாவது 180 துடிப்பு அல்லது 45 சுவாசநேரம். ஒரு மணிக்கு 3600 துடிப்பு 900 சுவாசம் 20 ரத்தச்சுற்றோட்டம், ஒரு நாளைக்கு 86400 துடிப்பு 21600 சுவாசம், 1440 சுவாச ஓட்டம் 480 ரத்த சுற்றோட்டம் நடக்கிறது.

## இரத்தோட்டம் சுவாசம் 18.

| விநாடி அல்லதுரத்தத் துடிப்பு | சுவாச ஓட்டம். | நிமிஷம் | ரத்த சுற்றோட்டம் | மணி | நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 4 | 1 | | | | |
| 60 | 15 | 1 | | | |
| 180 | 45 | 3 | 1 | | |
| 3,600 | 900 | 60 | 20 | 1 | |
| 86,400 | 21600 | 1440 | 480 | 24 | 1 |

பிராணாயாமம் அதாவது சுவாசத்தை நீளவாங்கி தம்பித்து அடக்கிச்சிறுக விடுவதாம். அதனால் இரத்தம் நரம்புக் குழாய்களிலும் நுரையீரல் இரத்தாசயம் முதலிய சரீர அவயவ மூலை முடுக்குகளிலும் இரத்தம் பொருமி ரத்தம் சுத்திவடைந்து வியாதி நீங்கி ஆயுள் விருத்தியுண்டாகின்றது.

கன்றுக்குட்டியின் ரத்தத்தை கிழட்டுமாட்டுக்கும், வாலிபன் ரத்தத்தைக் கிழவனுக்கும் இன்ஜக்ட் செய்வது மூலமாய் கிழட்டு மாட்டை இளமாடாகவும், கிழவனைக் குமரனாகவும் ஆக்கிவிடுகிறார்களென்றும், வெள்ளை மனிதன் வலது கை ரத்தத்தைக் கருவி மூலம் வேதனையின்றி எடுத்துக் கறுப்பு மனிதன் இடது கையில் இன்ஜக்ட் செய்து, கறுத்த மனிதனை வெள்ளை மனிதனாகவும், அப்படியே வெள்ளை மனிதனைக் கறுத்த மனிதனாகவும் செய்து விடுகிறார்களென்றும் கேள்விப்படுகிறோம். நேட்டாலில் ஒரு டாக்டர் வேகமாய் ஒரு குதிரையில் போய்க்கொண்டிருந்தவர், தன் விலையுயர்ந்த குதிரை திடீரென விழுந்திறந்து விடவும், பக்கத்திலிருந்த மற்றொரு கேவலமான குதிரையின் ரத்தத்தை எடுத்துத் தன் குதிரைக்கு இன்ஜக்ட் செய்து அதை உயிர்ப்பித்து விட்டாராம். ஆகையால் பிற்காலங்களில் ஆராய்ச்சி அறிவு முதிர்ச்சியினால் இறந்த பிராணிகளையும் உயிர்ப்பிக்கச் செய்யக்கூடுமென்று நிச்சயமாய் நம்பவேண்டியிருக்கிறது.

---

## உயிர் துடர்ச்சி.

நம்முடைய உயிரெனப்படுவது ஒரு பொருளாகவும் ஒரு ரூபமாகவுமிருக்கவில்லை. அது ஒரு செயல், அதாவது இயற்கையான இச்சரீரமென்னும் யந்திரத்துக்கு ஏற்பட்ட ஒரு விசை. பிராணிகளாகிய நம்முடைய சரீரமும் தாபரங்களைப் போலவே விர்த்தியாகி அழியும்படியான காலங்களில், அதாவது ஜீவ ஆதார உறுப்புகளிற் சேதமடைந்து ரிப்பேரானபோது, அதாவது கெடுதலடைந்த காலத்தில் அழிந்துவிடும். அவ்வித ரிப்பேரைச் செப்பனிட முடியாது. எப்படிப் பாதுகாத்து வந்தாலும் வந்தே தீர்கிறது. அதற்குத் தப்பினவர் இந்த உலகம் உண்டான காலந்தொட்டு யிதுவரை

ஒருவருமில்லை. நரை திரை, பிணி, மூப்பு, சாக்காடு வந்து கொண்டேயிருக்கிறது. "துஞ்சினுரென்று தூற்றப்பட்டாரல்லது எஞ்சினு ரொருவருமில்" வேறு என்னவித சூட்சமங்கள் மூலம் ஆயுள் விர்த்தி, சரீர பலம், சரீரசித்தி முதலிய செய்தாலும் அழியாமல் நிலைத்திருக்குமென்பதில்லை. அப்போது அந்தச்செயலும் நின்றுவிடுமே ஒழிய, வேறு ஒரு சரீரத்தில் நுழைந்துகொண்டு பிறவி எடுக்க அது ஒரு பொருளுமல்ல அதற்கு ஒரு சக்தியுமில்லை. அது எப்படி யென்றால், ஆகாயத்திலிருந்தெடுக்கப்பட்ட காற்றையாவது சமுத்திரத்திலிருந்தெடுக்கப்பட்ட ஒரு பாத்திர ஜலத்தையாவது திரும்ப அதிற் கொட்டிவிட்டால் அதை எப்படி மறுபடியும் எடுக்க முடியாதோ, தவிர ஒரு பொருளாயிருக்கும் அதையே யெடுக்கமுடியவில்லை அதுபோல் செயல் மாத்திரமன்றிப் பொருளாகவே யில்லாத யிதை யெப்படி எடுக்கமுடியும்? முடியாது. ஆதலால் நாம் இறந்த பிறகு வேறு ஜென்மம் எடுக்கமுடியாதென்பது திண்ணம், அதுபோல் முந்திப்பிறந்து வந்தோமென்பதும் பொய், அதாவது செயல் நீங்கி உடம்பென்னும் பொருள் வெளியின் பொருளிற் கலந்துவிடுகிறது. பூர்வகர்மத்தினல் உயிர்கள் பிறக்கிறதென்கிறார்களே! அப்படியானல் ஆதியிற் பிறந்த உயிர்களுக்கு கர்மமேது. தாயுந்தகப்பனும் செய்த கலவி யென்னும் கர்மத்தினலல்லவா நாம் பிறந்தோம், வேறு கர்மம் ஒன்றையும் யிதுவரை கண்டவர்களுண்டோ? நன்றாய் ஆலோசிக்க. ஸ்டீம் மூலமாயும், யந்திரம் மூலமாயும் மழையையும் இடிமின்னல்களையும் உண்டு பண்ணுகிறார்கள். பெரிய மலையையும் தகர்த்தெறியலாம், எல்லாம் வல்லமையுடையவர் கடவுள் என்றால் சென்ற காலத்தைச் சிருஷ்டிக்க முடியுமா? கடவுள் முந்தியா, காலம்முந்தியா? என்று ஒருவர் எழுந்து கேட்கின்றார். அக்கேள்விக்குப் பதில்.

## கடவுள்.

ஆதியில், நம் முன்னோர்களாகிய மனிதப்பிராணிகள், பூமியின் இயற்கை சிருஷ்டிக் காட்சியையும் சூரிய சந்திர நட்சத்திரங்களையும், மழை இடி மின்னல் பருவகாலங்கள் முதலிய சம்பவங்களையுங்கண்டு பயந்து ஏதோ கடவுள் என்று ஒருவர் இருந்து அவரால் ஷை காரியங்கள் நடைபெறுவதாய் எண்ணி அதைப் பின்பற்றி வந்தார்கள். பின் சில வஞ்சகர்கள் கன்மம் ஜென்மம் உண்டென்றும், சகல காரியங்களையும் தங்கள் மூலம் அக்கடவுள் நடத்துகிறாரென்றும், தாங்களே அவருக்கு அடுத்தபடி யென்றும் ஏமாற்றி வரும்படி பெற்று வயிறு பிழைக்கிறார்கள். அப்போதே சில அறிவாளிகள் ஜனங்களுக்கு இன்னும் கொஞ்சம் பயத்தை அதிகப்படுத்த நினைத்து, இறந்தபின் பாவம் செய்தவனுக்கு நரக தெண்டனையும், புண்ணியம் செய்தவனுக்கு சுவர்க்க சுகமுமுண்டென்றும் ஸ்தாபித்து தன் மனதாற ரகசியமாயும் குற்றம் செய்யாமல் உலகம் சமாதானமாய் நீதியாய் நல்வழியில் ஒழுக இதுவும் ஒரு வழிதானென்று கண்டு ஸ்தாபித்தார்கள். முதலில் பிர்மாண்ட விருட்சங்களே கடவுள் என்று மதித்து அனேக விருட்சங்களை வணங்கி வந்தார்கள். ஆதியில் ஆங்கிலேயர்களும் ஓக்ஸ் என்னும் பெரிய விருக்ஷத்தைப் பூசித்துவந்தவர்கள் தான். மதுரையில் கடம்பமரம் திருவானைக்காவலில் வெண்ணாவல் திருவாலங்காட்டில் ஆத்திமரம் அரசு வேம்பு முதலியவைகளை பூசித்து வந்தார்கள்.

அதன் பின் ஷை விருட்சங்களின் பக்கத்தில் ஒரு கல்லை நாட்டிப்பூஜித்தும், பின் சிலைகள் விக்கிரகங்களமைத்தும் கோவில் முதலிய கட்டடம் கட்டி வணங்கிவந்து கொண்டிருக்கிறார்கள். அதுவும் புத்தர் இறந்தபின் அவருடைய சரீர அங்கங்களை அடக்கம் செய்த இடங்களில் கோவிலாகக்

கட்டி வணங்கிவந்த பழக்கம். அதற்கு முந்தி கோவிலென்பதே கிடையாது. பின் வீரனையும், அரசர்களையும், கற்புடைய மாதர்களையும் அவர்கள் யாவுகார்த்தமாய் வணங்கி வந்து அவர்களுக்காக கோவிலையும் கட்டிமுடித்தார்கள். உலகில் ஜீவகோடிகள் விர்த்தியானதுபோல் சில உருவ மாத்திரத்தி லிருந்த கடவுள் பெண்ஜாதி பிள்ளை குட்டிகளுடன் விருத்தியாகி முழத்துக்கொன்று சாணுக்கொன்றுமாய் முளைத்து எண்ணிலடங்காததா யுண்டாயிருக்கிறது. ஆக, கடவுளென்பது வேறு படாதது எவ்வுருவுமவ்வுருவாய் எங்கும் நிறைந்து எல்லாந்தானுகி எச்செயலும் அச்செயலாய் அறிவாய் விளங்குவதும் நினைப்பதும் நிகழ்வதும் நினையாமல் நேர்வதும் விருப்பும் வெறுப்பு மற்று சாட்சி மாத்திரமாய் நிற்கிறது. ஒருக்கால் இவ்வெளியிற் சகலத்தையும் முன்னிலையிற் சிருஷ்டித்து வைத்துவிட்டதாய் எண்ணிக்கொண்டாலும் சென்றகாலம் எப்படித் திரும்பும்? அதுமுடியாது. காலம் முந்தியது, கடவுளென்பது நாம் பிந்தி ஏற்படுத்திக்கொண்டது. ஒருதுளி இரத்தத்தில் எத்தனையோ உயிர்ச்சத்தென்னு முயிர்கள் ஜீவிக்கிறது. உடம்பு நிறையப் புழுக்கள். நாளுக்கு நாள் விநாடிக்கு விநாடி எவ்வளவோ உயிர்கள் விர்த்தியாகிக் கொண்டேவருகிறது. முன் ஆதியிலுண்டான உயிர்களுக்கு மேல் இவ்வளவு ஏராளமான உயிர்கள் எங்கிருந்து வந்ததோ? எந்தப் பிரமன் சிருஷ்டித்தானே? மூளையைச்செலுத்தி நன்ருய் ஆலோசித்துப் பாருங்கள்.

ஆகையால், ஒரே உயிராயிருப்பதா யெண்ணிய ஒரு உடல் என்னும் பூமியில் எத்தனையோ அளவிறந்த உயிர்கள் ஜீவிக்கிறது. அவைகள் ஒவ்வொன்றிற் குள்ளும் அப்படியப்படியே ஒவ்வொரு பூமியாயிருப்பதால் முடிவு பெறவில்லை. ஆகையால் ஒரு உயிரைக்கூட சிருஷ்டி திதிசங்கா

ரஞ்செய்து நியாயந்தீர்த்துப்பதவி அளிப்பது முடியாதிருக்க, சகல உயிர்களையும் நடத்துகிறாரென்பது எப்படியோ! நன்றாய் ஆலோசிக்க.

புத்த கவுதமரை சிஷ்யர்கள் கூடி கடவுள் உண்மையை விசாரிக்க மூன்றுதடவை முயன்று கேட்டார்கள். அவர் இறக்கும் சமயமாகிய கடாசித்தடவையிற் கேட்டுங் கூட அவர் பதிற்சொல்லவில்லை. ஆனால், அவர் எழுதி வைத்த முடிவுரை என்னவென்றால், நாம் கடவுளைப்பற்றி விசாரிப்பது அனுவசியமென்றும்; உலகில் நன்மையைக் கடைப்பிடித்து நடப்பதே முறையென்றும் தெரிந்துகொண்டார்கள், நம் கடமையுமதுவே. ஆதலால், எல்லாமியற்கையே உண்மை, அதுவேகடவுள் எங்கும் நிறைந்தும் பஞ்சபூதியங்களாலாகிய ஆதாரமாய் அதற்குளதுவாய் அக்கினிமயமாய் கற்றன்ட்ஸா யிருக்கப்பட்ட அறிவே தெய்வமென்று அனுமானிப்பதே சாஸ்திரம் யுக்தி அனுபவத்துக்கும் பொருத்தமென்பதை அநேக தர்க்கவாத சாஸ்திரிகளும் தத்துவ ஞானிகளும் தாஷ்டாந்த திருஷ்டாந்த மூலமாய் ஒப்புக்கொண்டு தீர்மானித்திருக்கிறார்கள்.

ஆகையால், இந்த உலகம் ஒருவனால் ஒரு காலத்தில் யாதொரு உதவிப்பொருளு மில்லாமல் ஓரிடத்திலிருந்துகொண்டு சொல்மாத்திரத்திலும் நினைப்பு மாத்திரத்திலும் உண்டுபண்ணினதாக நினைக்கிறதற்கு ஒருவித ஆதாரவும் நம்பிக்கையுங் கிடையாது. ஒருபொருளை அழித்துவிட்டால் அது வேறு பொருளாக நிற்குமே தவிர நாஸ்திபண்ணவாவது ஒருபொருளை உற்பத்திசெய்யவாவது யாராலும் எதினாலும் எக்காலத்திலும் முடியாதென்பது தத்துவசாஸ்திரச் சட்டம். Law of Science (Nothing can be created or destroyed.)

கிறிஸ்து தேவகட்டளை பத்து, மற்ற மதங்களிலும் தெய்வகட்டளையென்று அனேகமிருக்கிறது. அவை முன்னுள்ள புத்திசாலிகளான மனிதர் கட்டளையே. தெய்வ கட்டளையானுல் மீறி நடக்கமுடியுமா? அப்படி மீறிநடக்க அவர் பார்த்துக் கொண்டிருப்பாரா? அதைக் கடவாது அதின்படியே யார்தான் நடந்தவர்கள்? குரானில் வேதம் சொல்லிக் கழுத்தை அறுப்பது வழக்கம். தன்னைத்தொழுது ஜீவஹிம்சை முதலிய தீச்செயல்களைச் செய்யச்சொன்னவர் கடவுளாவாரா? அவர் சொன்னது வேதமாகுமா? பரதேசியாவதும், பட்டினிகிடப்பதும், பலிகொடுப்பதும் அவருக்குச் சந்தோஷமா? எல்லாம் அவராய் அவர் பொருளாயிருக்க பால் பழம் மதுமாம்சம் அன்னபானுதிகளை அவருக்கு நாம்படைத்துப் பூஜித்தால் நம் குற்றத்தை மன்னிப்பாரா? அப்படியானுல் அவர் பாரபட்ச முடையவரே! நீதி தவறி தற்புகழுக்கும் பொருளுக்கும் ஆசைப்பட்டவராவ ரன்றோ. நன்ருய் அறிவைச்செலுத்தி ஆலோசிக்கவேண்டும்.

கடவுள் யாவற்றையும் சிருஷ்டித்தா ரென்றுல், அவரை யார் சிருஷ்டித்தது. அவர்தானுய் இயற்கையா யுண்டானவரென்றுல் அப்படியே இயற்கையா யுண்டான யாவும் கடவுள்தானே! அதாவது இயற்கையே கடவுள் அல்லவா? கழுத்தை அறுத்துக்கொண்டாலும் கடவுளைக் கண்டாருமில்லை கேட்டாருமில்லையே!

---

## மதம் பக்தி.

ஆதியில் நம்முன்னேர்கள் மிருகமாயிருந்தவர்கள். அறிவிற் குறைந்திருந்து நாளடைவில் விர்த்தியடைந்து வந்தவர்களாகையால், நம் முன்னேர்களும் நாமும் இதுவரை அறியாமை யென்னுமிருளால் மூடப்பட்டு உண்மையின்ன

தெனத் தெரியாமலிருந்தாலும், அதுவெளிப்படும் படியான காலம் கொஞ்சகாலத்துக்கு முன்னிருந்தே வெளிகிளம்பி வருகிறதென்பது இனித்தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம். அதைப்பற்றி நம்முன்னோர்களானஞானிகளும், அக்காலத்து மதக்கோட்பாட்டால் மூடியிருந்த ஜனங்கள் அரசர்கள் பயத்தினல்பயந்து நாஸ்திகமே உருவாய்வந்த வேதாந்தமென்னும் ஓர் நூல் வழியாக மறைவாகக் கூறியுளார் நேரே சொல்ல முடியவில்லை. "யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு," யார்தான் கண்டவர்கள்? ஒருவருமில்லையே! அதுபோலக் கடவுளைக் காணுவுலகம் முழுதும் நாஸ்திகமாயிருக்க நான் ஆஸ்திகனென்றால் கடவுளைக் கண்டேனென்றுவது ஒப்பிக்கமுடியுமா?

மேலும், விழலுக்கிறைத்த நீரானேனென்றும், வீணுக்குழைத்து வீணனெனென்றும், முடிவில் சுத்த சூனியம்ஒன்றுமில்லையென்றும், நேமங்கள் நிட்டைகள் வேதாகமங்கள் நீதிநெறி, ஓமங்கள் தற்பனம் சந்தி செபமந்திரம் யோகநெறி, நாமங்கள் வெண்ணீறு சந்தனம்பூசி நலமுடனே, சாமங்கள் தோறுமவர் செய்யும்பூசனை சற்பனையே. உளிபிட்டகல்லையு மொப்பிட்ட சாந்தையு மூத்தையறப் புளியிட்ட செம்பையும் போற்றுகிலேன், கல்லினுஞ் செம்பினுமோவிருப்பானெந்தன் கண்ணுதலே, எட்டிற் கிடக்குமெழுகோடி மந்திரமென்ன கண்டாய், தத்துவக் குப்பையைத் தள்ளுங்கடி, அந்த சாஸ்திரப் பொத்தலை மூடுங்கடி, சாஸ்திரத்தைச்சுட்டுச் சதுர்மறையைப் பொய்யாக்கி சூஸ்திரச் செயல்கண்டு சுகம்பெறுவ தெக்காலம், வெட்டாத சக்கரம் பேசாதமந்திரம் வேறொருவர்க் கெட்டாத புஷ்ப மிறையாத தீர்த்தமினி முடித்துக் கட்டாதலிங்கம் கருதாத நெஞ்சங் கருத்தினுள்ளே, முட்டாத பூசையன்றோ, நட்டகல்லைத்

தெய்வமென்று நாலு புட்பஞ்சாற்றியே சுற்றிநின்று முணு முணென்று சொல்லு மந்திரமேதடா நட்டகல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையில், சுட்டசட்டி சட்டுவங்கறிச் சுவை யறியுமோ, காசி காசியென்று நீர் கால்கடுக்க வோடுறீர், காசியோடியாடினுங் கறுப்பு வெள்ளையாகுமோ, கறந்தபால் முலைபுகா கடைந்த வெண்ணெய் மோர்புகா, உடைந்து போன சங்கினோசை யுயிர்புகாவுடம்பினில், உதிர்ந்தகாயு மலர்ந்தபூவு மீண்டுபோய் மரம்புகா, இறந்தவர்கள் பிறப்ப தில்லை யில்லையில்லை யுண்மையே. சூரியனும் புவி சந்திரன் நட்சத்திரங்கள் தோன்றாத இருள்செறிந்த காலம் மாறி, வீரிய வித்தில்லாமல் விளைவாய் வித்தில் வேறு விதமாய்ப் பலவாய் வித்தின்வழியாய், காரியமாய்த் தாபரமும் ஜீவன் யாவுங்கணக்கில்லா வெகுகோடி காட்சியாச்சு, ஆரியநூல் மதம் வேதம் புராணம் சாஸ்திரம் அணுவளவு மெய்யெனவே நம்பொணாதே. வித்திருந்தால் மாமுமுண்டு உயிர்தானுண்டு வேரற்றால் பிழைக்காது விளைவாகாது, சத்திருந்தால் வித்து முண்டு சமஸ்தமுண்டு சாகாத மனிதருமே ஒருவருண்டோ, செத்தசவமுயிரடங்கி நின்றபோது சிறு மதலையாய்ப் புவியிற் பிறப்பதேது, இத்தையினி யறியாதா னுலகத்தாசான் இறந்த வுயிர் பிறக்குமென் றியம்பினரே. தனக்கவஸ்தை வருகி றதை யறியமாட்டார் சாஸ்திரங்கள் சொல்லி வயற்றனை வளர்ப்பார், எனக்கு முத்திதருவ மென்றாரவருமாண்டார் இயலான தீட்சைபெற்று யிவரு மாண்டார், கணக்காக வகுத்து மிதைப்பார்க்கும்போது கருத்திலுந்தான் மறு பிறவி கனவிற்காணேன், மனக்கவலை திகிலுடனே மாந்தர் சாக மறுமை முத்தி நரகமென்று மறைந்திட்டாரே.

வியாசனுமே வேதாகம பாரதத்தில் வீணாக வெகு பொய்தானிறைத்து விட்டான், ஆயபந்து கவி பாடிவிட்டான்

கம்பன் வம்பன் அதீத ராமாயணத்திலநேகம் பொய் தான், சாயாமல் அதிவீர பாண்டியன் தானும் தமயந்தி சரித்திர நைடதமும் சொன்னான், சுயமாகா விக்கவிதான் சுத்தப் பொய்தான் தொடுகவி மாணிக்கவாசகன் சொன்னானே.

தேவாரமான திருவாசகத்தை ஜெகத்தோர்கள் படித்து மெத்தத் தியங்கினார்கள், பேயான ஆண்டி கட்டுப் பிழைப்புக் காகப்பேசி வைத்தார் மற்றொன்றும் பிசகோயில்லை, தாயா ரும் தந்தையுமே நம்மையீன்றார் தாணிதனில் மாந்தர்களு மக்களை யீன்றாரே, ஆயாது திரிமூர்த்தி அநேக தெய்வம் அளவில்லா ஜாதி மதம் அமைத்தாராண்டே, ஓயாது பிறப் பென்பாரிதனையன்றி ஒன்றையுமே கண்டதுண்டோ உலகின் மாந்தர். அந்தத்துக்குச்சற்று மாகாதபேரை யாயன் பிடித் துத் தலையைச் சிறைத்துப், பந்தத்தைக்கொண்டு பொசுக்கிப் பின்முத்திரைபார்த்திட்டு நாமத்தைச்சேர்த்திட்டடிப்பதும், பாவமிதல்லவோ. பாதிக்கல்லை மீதிபடியாக்கி பாதிக்கல்லைச் சிலை உருவாக்கிப் பாடப்படுமோ பரமனென்றுன்னை. பண் ணேனுனக்கான பூசை யொருவடிவிலேன் பாவித்திறைஞ்ச வாங்கே, பார்க்கின்ற மலருடும் நீயா யிருத்தியப்பனி மலரெ டுக்க மனமும், நண்ணேனலாமலிருகை தான் குவிக்கவெனி ணுனுமென்னுளம் நிற்றி நீ, நான் கும்பிடும் போதரைக்கும் பிடாதலால் நான் பூசை செய்ய முறையோ. அவனன்றி யோரணுவுமசையாதெனும் பெரியவாப்தர் மொழியொன்று கண்டா, யறிவாவதேது பினறியாமை யாவதெது வறிந்தார் களறியார்களார், மவுனமோடிருந்ததா ரலாதென்போற் வாயாற் பிதற்றுமவரார், மனதெனவு மொருமாயை யெங்கே யிருந்துவரும் மவுன பூதங்களெங்கே, புவனம்படைப்பதென் கர்த்தவ்ய மெவ்விடம் பூதபேதங்களெவிடம், பொய் மெய் யித மகிதமொடு நன்மை தீமையெனும் பொறை பொருமையு

மெவ்விட, மெவர் சிறிய ரெவர் பெரிய ரெவர் பகைஞரெவரு றவர். இப்பிறவி தப்பிலினி யெப்பிறவி வாய்க்குமோயாது வருமோ வறிகிலேன் என்றும் முதலான கருத்துக்களடங்கச் சொல்லிய அகஸ்தியர், சிவவாக்கியர், கபிலர், ஔவை முத லிய சித்த முனிவர்களும், வேதாந்திகளும், பட்டினத்தார், தாயுமானவர், பத்திரகிரியார், மஸ்தான் முதலியஞானிகளும் தீர்மானித்த முடிவைக் கவனித்துப்பார்த்தால் நன்குவிளங் கும், அறிவையே தெய்வமென்றுதான் கூறியிருக்கின்றார் கள். திருவள்ளுவர் முதலிய சிலர் தங்கள் பாடல்களை சங் கத்திலும், ராஜ சபைகளிலும் அரங்கேற்றும் பொருட்டாக வும் மற்றும் சில காரணங்களாலும் இவைகளை யநேகமாயனு சரித்தே சிலபாகங்களி லனுசரிக்காமற் சொன்னாலும் அவர் கள் உட்கருத்து இக்கருத்தேயாம்.

மதம், மனிதர்களுக்குப் பரமவிரோதி. சுயபுத்தி யைக் கெடுக்கிறது, பொய் நடித்தலை அங்கீகரித்து அவிவே கப் பழக்கங்களுக்கிணக்குகிறது. உலக சம்மந்தமான மண், பொன், மனை, மக்கள், சுக, துக்கம், உறவு மித்திரர்களை வெறுத்து, அவைகளில் அக்கரை கொள்ளாமல் அசட்டை உண்டு பண்ணி, ஜாதி வித்தியாசத்தை வளர்த்து ஜனங்கள் ஒற்றுமையைக்கலைத்து சண்டை மூட்டிவிட்டு அநேக ஜீவ ஹிம்சைகளுக்குக் காரணமாயிருக்கிறபடியால், மதபோதனை யைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

---

## பதினோராவது அத்தியாயம். மனம்

மனமென்பது மூளை யென்னும் பாட்டரியிலிருந்து தானாய் நம்மையறியாமல் வெளியேறும் எலக்டிரிக் கற்றன் ட்ஸ் என்னும் சத்துடைய அறிவு, யோசனை, ஞாபகம், நினைப்பு முதலியவைகளே. அதுவே தெய்வச்செயல். ஒரு

வன் தான்செய்த செய்கை ஒன்றுமேயில்லை. அதுவே சகலத்தையும் நேர்ந்து நடத்திவைக்கிறது. அவன் தன் மனே உதயப்படி செய்து முடிக்கிறுன். ஆகையால் அவன்செய்த குற்றம் யாது? ஒருவன் வழிப்பறி கொலை முதலிய அக்கிரமங்கள் செய்து அநேகர் சொத்தைக் கொள்ளை கொண்டு தன்னை நம்பிய குடும்பம், பந்து, சிநேகிதர் முதலியவர்களைக் காப்பாற்றுகிறுன். அரசனவனிலுங் கொடியோனன்றே? அவனும் சேனைகள் முதலிய பலவிஷயங்களிற் மிகுந்த செலவுகட்குட்பட்டு, அநேக உயிர்ப்பலிகட்காளாகி மிகுந்த கடனாளியாக விழிக்கிறுன். என்ன பரிதாபம்! ஒருவன் கஷ்டநஷ்ட ஆபத்துக்களடைவதும் ஒருவன் சுகமடைவதும் கஷ்டமடைந்தவன் தன் தப்பிதத்தைத்தெரிந்து எச்சரிக்கையாய் நடக்க மற்றவனுக்குப்புத்தி கற்பிக்கிறதாகும். அப்படியே புல் பூண்டு பிராணிகள் முதலிய சகலமும் புத்தி கற்பித்துக்கொடுக்கிறது. ஒருவன் ஒரு காரியத்திற்றேர்ச்சியடைய எவ்வளவோ கஷ்ட நஷ்டங்களுக்குள்ளாகிறுன். அறிவின் றெளிவே பகுத்தறிவாம். ஒருவன் செய்கிற பாவமும் அக்கிரமமும் மற்றவனுக்குப் புண்ணியமும் நல்வழியுமாகிறது. ஆகையால், எவன் நல்லவன் எவன் கெட்டவன், எவன் சின்னவன் எவன் பெரியவன், எவன் ஜீவகாருண்யன் எவன் ஜீவவதை செய்பவன், எவன் புலாலுண்பவன் எவன் புலாலுண்ணுதவன், எவன் மூடன் எவன் விவேகி, எவன் துரோகி எவன் ஆப்தன், எது பாவம் எது புண்ணியம்? ஆகையால், உலகம் தற்போது நடந்து வருகிறபடி நடந்து வரவேண்டியது தானே.

நாம் ஒன்றை நினைக்கும்போது அசரீரியாய் ஒருவன் சொல்லும் சொற்பலிதமாகிறது. ஒருவன் இறக்கும்போது மற்றொருவனுக்கு எப்படியோ மனதிற்றுக்குகிறது. ஒரு

வனை நினைக்கவும் அவன் எதிரே வந்து விடுகிறான். ஒருவன் சொன்ன வார்த்தைப்படியே நடந்து தீர்கிறது. பித்தனுக்கும் அப்படியே தோன்றிப் புலம்புகிறான். அதுபற்றி அவனைப் பெரியவாளென்று நினைத்து அவனுக்கு மரியாதை செய்கிறார்கள். தூங்கி எழுந்திரிக்கவும் அப்போது சொற்பனத்திற்கண்ட மனிதன் தன் எதிரில் நிற்கிறான். ஒரு காலத்திற் சொற்பனத்திற்கண்ட நகரத்தையோ, பொருளையோ, சம்பவத்தையோ காணவோ அனுபவிக்கவோ நேர்கிறது. நாம் கொட்டாவி விட்டால் பக்கத்திலிருப்பவனுக்கும் கொட்டாவி வருகிறது. ஒருவன் படும் கஷ்டத்தையோ சந்தோஷத்தையோ ஆபத்தையோ நாம் கண்டால் நமக்கும் உண்டாகிறது, மனம் பதை பதைக்கிறது. இதைப்போல அனேக சம்பவங்களும் ரகசியங்களும் அகஸ்மாத்தாய் நடைபெறுகிறது. அது உள் மனதின் அறிவின் செயல் என்னும் கற்றன்ட்சினுடைய காரணமே. அதாவது, மனம், சக்தி, செயல், அக்கினி, ஆன்மா, நினைப்பு, அறிவு, உயிர், ஞாபகம், யோசனை, இயற்கை யென்பதும் ஒன்றேயாம். (Energy, heat, Current, life, soul, mind, Knowledge, motion, power, force, universal electric power, Universal knowledge, nature.)

அறிவே அறிவின் மயமாய் சுகதுக்கமென்னும் பதவிகளை நிலைக்கச்செய்து வருகிறது. தன்னெஞ்சே தன்னைச் சுடுமென்ற முதுமொழிப்படி, தான் செய்த குற்றம் தன் எண்ணத்திற்பட்டு தன்னை அறியாமல் தன்னைக் கண்டிக்கிறது தெண்டித்து நடத்தி அரசாளுகிறது. உள் மனதைக் கண்டறியும் சக்தி அனுவளவு தெரிந்தால் அவன் மற்றவர்களின் மனதைத் தன் வசப்படுத்தி அவைகளையும் மற்றஉயிர்களையும் ஆளும் சக்தியும் திரிகால வாத்தமானியாகி இறந்தவர்களைப் பாவனையாக நேரிற் காண்பிவித்துப்பேசி அவர்க

ளால் மறைத்த பொருளேயோ சங்கதிகளேயோ அறிவிக்குந் திறமையும் இன்னும் அநேக அற்புத அதிசயங்களேச் செய்யும் சக்தியுமுண்டாகிறது. அது எப்படி யென்ருல் உள் மனது இரண்டு செயலுடையது:—உள் அவயவங்கள் முதலியவைகளே நடத்தும் மோட்டர்செயல் ஒன்று, மற்ருென்று அறிவாய் விளங்குவது. வெளிமனதில் ஞாபகம் யோசனே எப்படித்தானுய்த் தோன்றுகின்றதோ அதைப்போல உள்ளறிவிலுந் தோன்றும். அகண்டாகார அறிவே எலக்டிரிக்கற்றன்ட்ஸாய் எங்கும் நிறைந்த அறிவென்னும் சமுத்திரத்தில் இறந்தவர்களின் கற்றன்ட்ஸாகிய அறிவு மடங்கியதே. அதிலிருந்து ஒரு காலத்தில் நம்மறிவிலுமுதிக்கும். அப்பெருங் கடலிற் கலந்துலாவும் நம்முள்ளறிவும் திரிகால வர்த்தமானங்களேக் கண்டறியும் சக்தியுடையது. ஒருவன் ஆவேசங் கொண்ட காலத்திலும், மனமடங்கித் தன்னே மறந்த காலத்திலும் செயலற்ற நித்திரையிலும் அது தன்னே யறியாமலுதயமாகும். உள் மனதையறிய முயலுவோர்கள் வெளிமனதின் வேலேயை நிறுத்தப் பழகவேண்டும், வெளியறிவு உள்ளறிவில் லயமாகும் சமயம் உணரப்படும். அனுபவமேலிட விர்த்தியாகும். முன்னேர்களின் புரோட்டோபிளாசம் என்னும் ஷெல்களுடைய உயிர்ச்சத்தாகிய வித்தாக நாமிருப்பதால், அவர்கள் நுண்மையறிவும் அச்சந்ததிக்குள் ஒவ்வொரு காலங்களில் உதயமாகிறது. அப்படியே அநேக திருஷ்டாந்தங்களுண்டும். ஒருவன் தான் நித்திரையிலிருப்பதாய்த் தெளிந்து அவ்வித அயர்ந்த நித்திரையில் தான் உலாவித் திரிந்து அறிந்த விஷயங்கள் பின் சம்பவத்தில் அப்படியே நடக்கிறது. நினேத்தவுடன் தன்னே மறந்து நித்திரையுண்டாக்கிக்கொண்டு மெஸ்மரிஸாகிச் சொற்பனத்திற் கலந்து அறிவுடன் மற்றவர்களின் கற்றன்ட்ஸில் சேர்ந்து ஷி யோக

நித்திரை யென்னும் உள் மனதில் நிகழும் அனுபவமாகிய திரிகால சம்பவங்களையும் சொல்லுகிருன். அப்படிக் கற்றன்ட்ஸில் கலந்த பிறமனிதனும் இவனை நேரில் கண்டதாயும் பேசினதாயும் சொல்லுகிருன். அதாவது அவனும் மெஸ்மரிஸாகிக் கண்டதை சாக்கிரத்தி லனுபவித்ததாக நினைக்கிருன். ஷை யோகநித்திரை யென்பது உள் மனதில் சார்ந்தது. அது அறிவுடன் கலந்த சொற்பனயாவுகமே. அதுவே அறிவாளிகளான நம் முன்னோர்கள் திரிகாலமுணர்ந்த வழி. ஏகாக்கிரச்சித்தம் அதற்கு முக்கியமானதென்றுங் கண்டறிந்திருக்கிருர்கள். தற்காலத்தில் நாமும் கண்டனுபவித்து வருகிறோம். அதுபோல பிறநாட்டில் ஒரு தத்துவ சாஸ்திரஞானி ஷை அனுபவத்தை அனுபவித்தார். அதைப் பேப்பரில் போட அதைத்தெரிந்து சென்னையில் ஒரு வக்கீல் அதை அனுசரித்து வந்தார். அவர் காலையில் எழுந்து அன்றாடகம் தனக்கு நடக்கும் காரியங்களை எழுதிவிடுகிறது வழக்கம். அந்தப்படி நேர்ந்து வந்தது. ஒருநாள் அவர் தனியாய் தன் அறையில் அவ்வித நித்திரையிலிருக்கும் போது, அவர் மனைவி அவரைத் திடீரென்று பலத்த சப்தமிட்டுக் கதவைத்தட்ட அவர் இறந்துபோனர். பயத்தினல் இரத்தக்குழாய் வெடித்துப்போயிற்று. அதிலும் அப்படி நித்திரையிலிருப்பவன் விழிக்க உத்தேசித்தால் எந்த இடத்தில் தான் உலாவித்திரிந்தாலும் தான் படுத்து நித்திரை செய்கிற இடத்தை அவ்விடத்திலிருந்து கொண்டே நினைக்க வேண்டியது முறை. உடனே விழிப்புண்டாகிவிடும். ஷை நித்திரையிற் றேர்ச்சியுள்ளவர்கள் தன்சரீரத்தையும் கவனத்தில் வைத்துக்கொண்டே மற்றவர்கள் உள் மனதுகளில் உலாவிச் சம்பாஷிக்கிருர்கள், அவர்களுக்கு மேற்சொல்லியபடி எவ்வித ஆபத்துக்களும் நேரிடாது. நித்திரையில்

யாவரையும் பலமாய் சப்தமிட்டு எழுப்பக்கூடாதென்பதுவு மிதுவே காரணம். அசாத்தியமானதை சாத்தியமாய் நடக் கக்கண்டு சொற்பனமெனத் தெளிந்து நடப்பதுவும் யோக நித்திரை. ஆகையால் பிற்காலங்களில் நம் முன்னோர்களனுப வித்து வந்த யோக நித்திரையை விருத்திக்குக் கொண்டுவர வேண்டியது நம்முடைய கடமை. அதனால் இன்னும் அநேக அற்புத சுகமடையப்படும்.

ஒருவன் நூறுமைல் தூரமுள்ள ஊரிலிருக்கும் தன் முதலாளி கடைக்குப்போய் பணத்தைப் பெற்றுக்கொண்டு தானிருக்கும் கடைக்கு ஒருபகலில் திரும்பிவிடுகிறான். ஒரு வன் தூங்கிக்கொண்டே இரவில் படுக்கை விட்டெழுந்து வெகுதூரம் நடந்துபோய் ஓரிடத்திற் றியங்கிநின்று நானெப் படி வந்தேனென்று யோசிக்கிறான். ஒருவன் பெரிய மரத் தினுச்சியில் இரவில் குரங்குபோல ஏறிநிற்கிறான், ஒவ்வொரு கொப்பின் வழியாயும் இலைவழியாயும் குதித்துக் குதித் திறங்கி அடிக்கொப்புக்கு வரவும் இறங்க முடியவில்லை யென்று அலறுகிறான். பின் ஏணியின் மூலம் இறங்குகிறான். சன்னல் கம்பிவழி உள்நுழைகிறான். எழுதகத்தில் ஒடுங்கி றான். திடீரென்று தன்னை ஒரு பட்டினத்திற் றாக்கிக் கொண்டு வைத்து விட்டதாகக் காண்கிறான். மறுநாளிர வில் தன்னிருப்பிடம் சேர்ந்துவிடுகிறான். அவன் நடந்து சென்றது அவனுக்குத் தெரியவில்லை. ஒரு வேலைக்காரி தன் எஜமானி வீணைவாசித்து விட்டுத் தூங்கும்போது, தானும் நடு இரவில் எழுந்து ஷை வீணையில் அதிலுமினிதாக வாசித்துக் கொண்டிருப்பதை ஷை எஜமானி பார்த்துவிட் டுக் காலையிற் கேட்க தனக்கு ஒன்றுமே தெரியாதென்று அழுகிறாள். பிரபு ஒருவர் பெரியஷாப்பில் நுழைந்துவரும் போது ஒரு அற்பப்பொருளைத் திருடித் தன் பாக்கட்டில் போட்டுக் கொள்ளுகிறார். இவைகளை இங்கிலீஷில் சிம்நம்

பிஸிசம் (Symnomblism) என்று சொல்லுவார்கள். அதாவது மனதின்வலி நரம்பு இசுவைப்பற்றிய மயக்கவியாதியென்றும் அதற்கு டாக்டர் மருந்துமூலம் சவுக்கியம் செய்திருக்கிறார். அதைபேய், முனி, பிர்மராக்ஷஸி என்று தவறுதலாய் நினைக்கிறார்கள்.

ஒரு சந்ததியில் மறைபொருளைத் தெரிவிப்போன் அஞ்சு தலைமுறைக்கொருவனாகத் தோன்றுகிறான். (இதுநார்வேஸ்வீடன் தேசத்தில் ஒருகுடும்ப அனுபவம்) அப்படியே திரிகால வர்த்தமானி (இது யாழ்ப்பாணத்தில் ஒரு குடும்ப அனுபவம்) அவதானி, ஆருடி, ஏகசந்தக்கிராகி எக்கணக்கும் உடனே தீர்ப்போன், மறைத்த அல்லது தவறிய பொருளையோ பிராணியையோ தெரிவிப்போன் முதலியவர்களும் தோன்றுகிறார்கள். அவர்கள் அறிவுமிக்க வியப்படையத்தக்கது. அதைச்சிலர் கவியிலும், தெய்வத்திலும் மந்திரயோக ஞானத்திலும் சேர்த்துத் தவறுதலாக மதித்துவிடுகிறார்கள். மேலே சொன்னபடி அது ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு வழிப்பாரம் பரைவித்தின் பெருமைபால் ஏகதேசத்தில் ஒவ்வொருவர் மூளையிற்றோன்றி வழங்கிவரும் அறிவின் அற்புதத் திறமையே.

---

## மெஸ்மரிசம்.

மெஸ்மரிசம் ஹிப்நாட்டிஸம் மனோவசியத்தொழில் அதாவது மனநூல், மனோசக்தியை பலப்படுத்தி மற்றவர்கள் மனதை அடிமைப்படுத்தல், தன் மனதை ஒரு நிலையில் நிறுத்தி வெளிமனதின் வேலையை ஒழித்து உள்மனதில் நுழைவதுதான் மனவலிமை யடைதலாம். அப்படி அடைந்தால் தான் நினைக்கும் அல்லது பார்க்கும் மற்றவர்கள் மனது தன் வசப்படும். தூரதிருஷ்டி தெரியும், அவடதமன்னியில்

வியாதி விஷம் நீங்கும். வாசிப்புத்தெரியாத ஒருவனைத் தெரியாத பாஷையிலுள்ள ஒரு பெரிய புஸ்தகத்தில் ஏதோ ஒரு சயிட்முதல் கையிலும் புஸ்தகத்தைக் கொடாமல் வைத்துக்கொண்டு அவனை வாசிக்கச்சொல்ல அவன் மெஸ்மரிசாகி வாசிக்கிறான், பாடல் பாடுகிறான், தன்னைமறந்து நித்திரை செய்துகொண்டு நின்று இரவிலே பாராக்கொடுத்துக் கொண்டிருந்த ஒரு பட்டாளத்து சிப்பாய் திடீரெனக்கர்னல் வரவும் விழித்து நழுவவிட்டிருந்த கையிலிருந்த துப்பாக்கி என்று நினைத்துத் தன் பக்கத்திலிருந்த ஒரு பீரங்கியைத் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு எதிரில் நிற்பதைக் கண்டு கர்னல் பயந்தோடிவிட்டானும். ஒருமாசப் பயணத்துக்கப்பாலி லிருக்குமொருவனை மெஸ்மரிசத்தால் உடனே போய் நேரில் கண்டுபேசித்தன் இடத்தை நினைத்து உடனே திரும்பி வந்திருக்கிறார்கள். அதாவது கற்றன்டஸாகிய அறிவு மற்றவன் அறிவிற்கலந்து மெஸ்மரிசாகி மெய்மறந்து சம்பாஷித்துக் கொண்டதாகும். ஷை கற்றன்டஸை சூக்கும சரீரமென்று தவறுதலாய் மதித்து வந்திருக்கிறார்கள்.

---

## நரம்படி வர்மம்.

நரம்படி வர்மம் என்பது உடம்பில் பல ஸ்தானங்களுண்டு, அதில் விரலாற்குத்த வலிப்பு மயக்கம்வந்து செயலற்று விழுந்துவிடுகிறான் சில சமயங்களில் அதற்கு மாற்று செய்யாவிட்டால் இறந்து விடுகிறான். உடனே அவனைக் காதைப் பிடித்திழுத்து முதுகில் ஓங்கி அடிக்க அவன் ஷை வலிநீங்கிச் சவுக்கியமடைகிறான். இப்படிப் படுவர்மம் 18 தொடுவர்மம் 96 முதலிய அனேக மர்மஸ்தானங்களுண்டும். இதை மலையாளம் ஜப்பான் முதலிய விடங்களிலிதை அனுசரித்து வருகிறார்கள். அதை வெளிப்படுத்தவில்லை. அது

போல ஒருவனுக்கு குளோரோபாம் பிரயோகம் பண்ணுவதற்குப் பதிலாக அவன் தலையில் ஸ்தானமறிந்து கையால் தட்டவும் உடனே அவன் மயங்கி விழுந்துவிட ஆப்பரேஷன் சர்ஜரி முதலிய செய்து பின்வேறு ஒரு இடத்தில் அவன் தலையில் தட்ட எழுந்திருக்கிறன். நம்முன்னோர்கள் செய்துவந்த இதுபோலநேகம் அற்புதச் செயல்களை நாம் அனுபோகத்துக்குக் கொண்டுவராமல் மறந்து விட்டுவிட்டதாக வெளியாகிறது. மெஸ்மரிசத்தால் மனிதர் மிருகங்கள் முதலிய சகல பிராணிகளையும், நாம் நினைத்தபடி யெல்லாம் ஆட்டிவைக்கலாம், தோற்றுவிக்கலாம், பேசுவிக்கலாம், வசப்படுத்தலாம் இன்னும் அறிவு முதிர்ச்சியினுல் பிற்காலங்களில் மிகவும் முன்னேற்றமடையும். அதனுலிதுவரை எதிர்பார்த்த அனேக சுகங்களடையப்படும். இதையே நம்முன்னோர்கள் பெரியதுறவுபூண்டு சகல சுகங்களுமிழந்து அவஸ்தைப்பட்டு, சருகு வாய்வுபட்சணம் செய்து சம்பாதித்த பொருள். (பின்னும் வரும்)

---

## மூளை.

மூளை இருவகை, முன் மூளை வெளிமனதுக்காதாரமாய் ஞாபகம், நினைப்பு, யோசனை முதலியவைகளுற்பத்திக்குக் காரண மூலம். பின் மூளை நினைப்புப்படி வெளி அவயவங்களையும், நினைப்பில்லாமல் உள் அவயவங்களையும் சுவாசம் இரத்தஓட்டம் முதலியவைகளையும் ஆட்டி நடத்திவைக்கும் மோட்டர். அது ஞாபகம், பாடம் முதலியவைகளைச் சேமித்து வைக்கும் களஞ்சியம் அதாவது அக்குமுலேட்டர் என்னும் ஞாபக லைபிரெரி ஸ்டோர். அது உள் மனதுக்காதாரமாயிருக்கிறது. அதிலிருந்து முதுகின் வழி மூளை நரம்புகள் உள்ளும் வெளியிலும் எங்கும் நிறைந்திருக்கின்றது.

சரீரத்தில் எங்கும் நிறைந்த ஷை அறிவு நரம்புகள் சகல சங்கதிகளையும் மூளைக்குத் தெரிவிக்க அமைந்திருக்கிறது. திமிங்கலம் யானையைத்தவிர மற்ற எல்லாப் பிராணிகளைப் பார்க்கிலும் மனித மூளை பெரியது. சாதாரணமாய் ஆண்களுக்கு 48 முதல் 50 அவுன்சு வரையும் பெண்களுக்கு 46 அவுன்சும் மூளையின் நிறை. எழு வயது வரை வெகு விரைவில் விர்த்தியாகி, அப்பால் சாதாரணமாய் 30, 40 வயது வரை விர்த்தியாகிறது. அதிலிருந்து பத்து வருஷத்துக்கு ஒரு அவுன்சு வீதம் குறைந்துவிடும். ஆகையால் வயதுசெல்லச் செல்ல அறிவுகுறைந்து உடம்பு தளர்ச்சியடைந்து பாவைபோலாய் விடுவாராதலால், மரணத்தை வென்றவர்கள் சிரஞ்சீவிகள் யோகிகள் வெகுகாலம் ஜீவித்திருந்தவர்களென்று சொல்லுவது எப்படிப் பொருந்துமென்பதை நன்ருய் ஆலோசிக்க! பெரிய அறிவாளிகளாயிருந்த சிலருக்கு மூளை 63. 64. அவுன்சுவரை இருந்திருக்கிறது. பித்தர்களுக்கு 23. அவுன்சுக்குக்குறையும். மூளை நரம்புகளாய்ச்சுருண்டு சுருண்டு அமைந்திருக்கின்றது. மிக துட்பமான அவயவ உறுப்பு மூளை; காற்று ஜலம் பட்டாலும் தாங்காது ஷை மூளையிலும் இரத்தாசயம் முதலியவைகளிலும் மனிதன் கையாட முடியவில்லை.

---

## ஜாதி ஆச்சாரம் சைவம்.

நாம் மாமிசத்தாலாகிய சரீரிகளாயிருக்க நான் மாமிசத்தை நீங்கினவன் சைவன் என்று சொல்லுவீது சரியா? மாம்சத்தைச் சமைக்கும்போது காற்றினல் அதன் சத்து ஆகாயத்திற் பாவிச் சகலரும் உட்கொள்ளுகிருர்கள். சூரிய வெப்பத்தாலும் அச்சத்து வெளியேறுகிறது. தாபரவர்க்கத்திலிருந்து ஜீவவர்க்கம் உற்பத்தியாகிறது. தாபரங்களை

மட்டும் சாப்பிடும் பிராணிகளும், மாம்ச பட்சணம் செய்யும் பிராணிகளும், இரண்டையும் புசிக்கும் பிராணிகளும் உண்டு. அதில் நாம் கடாசி வர்க்கம். இரண்டையும் புசிக்க ஏதுவாய் நம்பற்களமைக்கப்பட்டிருக்கிறது. மனதுக்கு அசூசியாய் வெறுப்புடையவர்களைப்பற்றிச் சொல்ல இடமில்லை. வடநாட்டில் ஆரியர்கள் தண்ணீர்த் தாபரமென்று சொல்லிக் கொண்டு மச்சங்களைப் புசிக்கிறார்கள். ஆச்சாரம் பார்க்கும் ஆரியர்களும் வெளிநாட்டார் செய்தனுப்பும் மாம்சங்களையும் மச்சங்களையும் அதின் ரசங்களையும் அவுடதங்களென்று சொல்லிக்கொண்டு கீழ்க்கடையார் செய்யும் சோடாவாட்டர் ரொட்டி பிஸ்கோத்துகளையும் தாராளமாய்ப் புசிக்கிறார்கள். ஜீவகாருண்யத்தை இன்னதெனத் தெரியாது ஆதிகாலங்களில் அனுசரித்து வந்தவர்களானாலும் ஆச்சாரம் பார்த்துக் குளிக்கப்போய் அனாசார மேலிட்டுச் சேற்றைப் பூசிக்கொள்ளுகிறார்கள். ஜலம் நிறையப்புழுக்கள் செத்தபிராணிகளின் மலமாம்சச்சத்துக்கள் கலந்திருக்கிறது. அசூசி யென்னும் மாதவிடாய் சுசீகரமான குழந்தையாகிறது. ரஜஸ்வலையான நாட்களில் தீட்டென்று பெண்களை ஒதுக்கி வைத்துக்கொண்டு சில வகுப்பார் இருக்க மற்றவர்கள் அப்படிப் பகிரங்கப்படுத்துவது கேவலமென்றும் அது தீட்டல்லவென்று நினைத்து சரீர சம்மந்தமட்டும் அந்நாட்களில் நிறுத்தியிருக்கிறார்கள். தாபரங்களே முளைக்காத பனிக்கட்டி நாடுகளில் எதைப் புசிப்பார்களோ! எச்சிலாகாப்பொருளே கிடையாது. தானியம், காய், கறி, கிழங்குகள், கனி வகைகளும் மலமாம்சச்சத்துக்களாலாகிய உரத்தாலுண்டாகிறது. பாலும் நெய்யும், மாட்டின் இரத்தமும் ஊனுந்தானே. ஆடு மாடு முதலிய பிராணிகளின் கொழுப்பை, உருக்கி நெய்யிற் கலந்து விற்கிறார்கள். மதுமாம்சம் புசிக்கும் பார்ப்பனர்களையும்,

புலையனைச்சேர்ந்த பெண்ணையும், புலைச்சியைச்சேர்ந்த ஆணையும், அவர்கள் பெற்ற பிள்ளைகளையும் விலக்கிவிட்டார்களா? பறையன் மாட்டிறைச்சியைப் புசிக்க மற்றவர்கள் மாட்டின் சத்தாகிய பாலையும் நெய்யையும் புசிக்கிறார்கள். உலகில் தொன்றுதொட்டுச் சகல ஜாதிகளும் ஒன்றுக்கொன்று சரீர சம்மந்தப்பட்டு குழந்தைகளும் பிறந்து பெருக்கமடைந்து ஒரே ஜாதியாய் ஒன்றாய்க் கலந்திருக்க வெளியில் வித்தியாசம் பாராட்டுவது பகல் வேஷமல்லவா?

இன்னும் மனிதர்களுடைய மலம் எச்சில் முதலிய அசுசிகளைத் தின்னும் மாடு முதலிய பிராணிகளை அவ்வசுசியை மிதித்த காலுடனே கோவில் முதலிய விடங்களிற் புகவிட்டும் அதின் மலமாகிய சாணத்தைப்பிடித்து வைத்து விநாயகரென வணங்கிக்கொண்டும், ஷை சாணத்தை ஷை இடங்களில் மெழுக்கிட்டும், ஷை சாணம் முதலியவைகளை எரித்த சாம்பலை பரிசுத்த வெண்ணீறென்றும் கடவுள் பிரசாதமென்றும் சொல்லிக்கொண்டு விக்கிரகங்களுக்குச் சாற்றியும் உடம்பிற் பூசி பக்தியுடனணிந்து கொண்டும், அதன் நீராகிய கோமயத்தை பரிசுத்தம் செய்யும் ஜலமெனக்கொண்டு ஷை இடங்களிற்றெளித்து யாகாதி கன்மங்களுக்கும் உபயோகித்தும் வருகிறதிலிருந்து, மிருகத்திற்கும் அற்ப பிராணிகளுக்கும் கீழாக மனிதனைப் புறக்கணித்து விடுவது நீதியா? தீண்டாமையை ஒழிக்கப்பாடுபடு மிக்காலத்தில் ஒருவனைக் கீழ்ச்சாதி யென்றும், அவனைத் தீண்டக்கூடாதென்றும், அவனை கோவில் கிரகம் தெரு முதலியவிடங்களிற் பிரவேசிக்கக்கூடாதென்று அருவருத்து இகழ்வதும், பிரவேசித்துக்கொண்டிருக்கும் மற்றவர்களைப் படிப்படியாய்விலக்கி நிற்கச்செய்வதும், நான் உயர்ந்த ஜாதி பார்ப்பனன், சைவன் அவன் தாழ்ந்தஜாதி பள்ளன் பறையன் என்றுசொல்லி ஜாதி

வித்தியாசம் பெருமை பாராட்டுவதும் வடிகட்டிய மடத்தன மன்றோ. வெட்கம், வெட்கம், நன்றாய் மூளையைச்செலுத்தி, நிதானித்து, சற்று ஆலோசனை செய்து பாருங்கள்.

---

## கன்மம், பதவி, பிறப்பு, தேவருலகம், பிதிருலகம்.

புரோட்டோபிளாசம் என்னும் உயிர்ச்சத்து மேலே சொல்லியபடி அணுவிலுஞ் சிறியதாய் ஒரு அறை முதல் பல ஷெல்களென்னும் அறைகளுடையதாகி அற்பப்பிராணியிலி ருந்து பெரிய பிராணிகள் வரை உண்டாயிற்று. மனிதருக் கும் அதைப்போல அறிவிலும் மூளை விர்த்திபெற்றது. அப் படிப்பட்ட உயிர்ச்சத்து நம் உணவாய் இரத்தமாய் சுக்கில மாய் அதில் வித்தாய் அப்படியே தாயினுடைய சுரோணித மாயதில் வித்தாய் கலவியிற் சேர்ந்து ஒரு பொருளாய்க் கரு வாய் கருப்பையிற் புகுந்து பின்னும் தாயினுடைய சத்தால் வளர்கிறது. உருவும் செயலுமற்று சொல்லளவாய் நின்ற ஊழ் என்றும், கர்மவினை யென்றும், ஈசனென்றும் சொல்லப் பட்ட ஒன்று ஷை உயிர்ச்சத்துக்களை உண்டுபண்ணவாவது, கருப்பையிற் கொண்டுவந்து சேர்த்து உற்பத்தி செய்யவா வது, பின் நன்மை தின்மைகளுக்கிணக்கிச் சுகதுக்கங்களை அனுபவிக்கச் செய்யவாவது எப்படிக்கூடும்? அப்படியதினு லேயே முடியுமென்றால் தாயுந் தகப்பனும் வேண்டியதவசிய மில்லையே! தானே உற்பத்தி செய்து விடலாமே, அப்படியுங் காணோம். ஆகையால் முற்பிறப்பு பிற்பிறப்பு என்பதும் கன்மவினை யென்பதுங் கற்பனையே.

உலகில் ஒவ்வொரு மதங்களிலும் வெவ்வேறு வித மாய்ச் சொல்லப்பட்டதும், அணுவளவேனும் உண்மையில் லாததும், இதுவரை யாருங் காணாததுமான மோட்சமென் னும் வார்த்தையை நம்பி நம்முன்னோர்களும் நாமும் பிரயா

சைப்பட்டுச் சம்பாதித்த பொருள்களையும் சுகங்களையும் வீணில் அழித்து, இலவுகாத்த கிளிபோல ஏமார்ந்துபோகாமலும், நரகமென்று சொல்லப்பட்ட வார்த்தையை நம்பிப் பயந்து திகிலடைந்து நோயாகி ஆயுள்குன்றி ஆப்பைப்பிடுங்கிய குரங்குபோல அவஸ்தைப் படாமலும், அனுபவித்துக் காணுதகைக் கைவிட்டுக், கண்டதைக் கைக்கொண்டு, நம் முற்பிறப்பு நம்முன்னோர்கள் தானென்றும் நம்மக்கள் பின்னோர்நம்பிற்பிறப்பென்றும் உறுதிகொண்டு, மரத்தின்வித்து மரத்தின் குணத்தைக் காண்பிப்பதுபோல, அவர்கள் சம்பாதித்த சொத்துக்களும் நோய்களும் இப்பிறப்பாகிய நமக்குண்டும், அத்துடன் நாம் சம்பாதித்த சொத்துக்களும் நோய்களும் நம்பிற்பிறப்பாகிய நம்மக்களுக்குண்டும், இது தான் பூர்வீக கன்மமென்றும் சஞ்சித பிராரத்வ ஆகாமியமென்றும் வேதாந்தம் கூறுவது. மண்ணை அதாவது பூமியை பிர்மலோகமென்றும் ஜலத்தை அதாவது சமுத்திரத்தை விஷ்ட்ணுலோகம் அதாவது வைகுந்தமென்றும் அக்கினியை அதாவது சூரியனை ருத்ரலோகமென்றும் அதில் மறைபட்ட உடலை அவ்வவ் வுலகத்திற்குச் சென்றுவிட்டதாய் மதித்து வந்த இவர்கள் பஞ்சபூதங்களே உயிர்கட்டு ஆதாரமா யிருப்பதாலதையே தெய்வமென்றும் அக்கினியைத்தெய்வமென்றும் சூரியனைத்தெய்வமென்றும் வணங்கி வந்திருக்கிறார்கள். ஒன்றைப்பற்றி ஒன்றைவிடும் அட்டையைப்போல ஒருஉடலைத் தொட்டுத்தான் ஒரு உயிர் நீங்குகிறது என்பது உங்கள் மதக்கொள்கையல்லவா? அப்படியானல் பிதுருலகம் மோட்சபதவிகளிருக்க வேண்டியதவசியமல்லவே ஆகையால், பிதுர்லோகமென்றும் மோட்சலோகமென்றும் அதில் நம்பிதுர்க்கள் தொங்கிக்கொண்டிருக்கிறார்களென்பதும் சந்ததிகள் கொடுக்கும் திதி திவசம்

சிரார்த்தம் மூலமாய்ப் பசிதீர்ந்து கொள்ளுகிறார்களென்பதும் முழுப்பொய்யல்லவா? அது ஒரு பெரிய ஆரியப்புளுகே என்று தெளிவாய் விளங்கவில்லையா?

இன்னும், பிரமலோகத்திற் பிரமனும் வைகுண்டத்தில் விஷ்ட்ணுவும் கைலாயத்திற் சிவனும் தேவலோகத்தில் இந்திரனும் அரசுபுரிவதாயும், அதில் காமதேனு முதலான சகல சம்பத்துக்களும் நிறைந்து, சிரஞ்சீவிகள், தேவர்கள், ரிஷிகள், முனிவர்கள், பூதகணங்கள் முதலான அபாரசக்தியுடையவர்களும் ராட்சதர் முதலானவர்களு மிருப்பதாய்ச் சொல்லுவதும் வெறுங்கதையே. அப்படி லோகங்களுமேற்பட்டு அவர்களு மிருந்திருக்கும் பட்சத்தில் மிக நெருக்கடியான இந்தக்காலத்திலுங்கூட மரணத்தை வென்ற அப்பெருந்தொகையான கூட்டத்தார்களில் ஒருவராவது வந்து உலகம்படுங் கஷ்டத்தை நிவிர்த்திக்காம லிருப்பார்களா? அது நீதியா? மண்டையிலிருப்பது களிமண்ணா? அறிவைச் செலுத்தி நன்றாய் ஆராய்ச்சிசெய்து பாருங்கள்.

இந்திரன் திசைகிழக்கு, குபேரன் வடக்கு என்பதிலிருந்து நம் இந்தியாவுடன் துயர்ந்து கிழக்குத்தேசமாயிருந்த பர்மா ராஜ்யம், கெம்பு முதலிய ரத்தினங்கள் விளைவாகி வெட்டியெடுக்கும்படியான பூமியாகவும், அயிராவதம் என்னும் நதியுடைய செழிப்புள்ள தேசமாகவும், இந்திரனுடைய வாகனமென்று மதிக்கும் வெள்ளையானை அங்கிருந்ததாகச் சொல்லுகிற பல காரணங்களினாலும் அதைத் தேவலோகமென்றும், அதைப்போல வடக்குத் தேசமாகிய நேப்பால், பம்பாய், கல்கத்தா இவைகள் செல்வம் நிறைந்திருக்குங் காரணத்தால், இதைக் குபேரபட்டனமென்றும், அதுபோல கீழ் பூமியாகிய அமெரிக்காவைச் சேர்ந்த மெக்ஸிகோ தேசத்தில் தற்காலத்திலும் ஜனங்கள் சர்பவணக்கம்

செய்து வருகிறார்கள். அக்காரணத்தாலதைப் பாதாளலோக மென்றும், நாகலோகமென்றும் மதித்து வந்திருக்கிறார்களே யொழிய அப்பெயர்கொண்ட வேறு லோகங்கள் உண்டென்று எண்ண இடமில்லை.

---

## நாம் என்றென்றும் சந்ததியுடையவர்கள்.

உலகில் சிலர் மக்கட் பேறில்லாதவர்களாயிருந்தாலும், ஆதிமனிதர்களாகிய நம்முன்னோர்கள்-அவர்கள் யார்? நாமே நம் முற்பிறப்பே! எவ்வளவோ கணக்கில்லாத சந்ததியுடையவர்களல்லவா? ஷை முன்னோர்கள் பின்னோர்கள் ஜென்மமும் நம்முடையதே! ஆனதினால் நாம் ஏன் சந்ததியில்லாதவர்களென்று நினைத்துக்கொண்டு கவலைப்படவேண்டும்! தவிர சுருக்கமாய்ச் சொல்லுங்கால், சகல பிராணிகளையும் உற்பத்தி செய்த பூமியே தாயாயிருப்பதினால், நாம் எல்லோரும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள் தானே, அப்படியே சகலரும் நமக்குத் தாயுந் தந்தையும் மக்களுமே யென்று திருப்தியடைந்து, திடங்கொண்ட சந்தோஷத்துடன், நம் மாலியன்ற மட்டில் உலகிற்குதவி புரிந்து ஒற்றுமையாயும் நீதியாயும் "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும், தீயவை தீயபயத்தலாற் றீயவைதீயினுமஞ்சப்படும்" தீயவழியினின்று நீங்கி நல்வழி ஒழுகி நடப்பதே கடமை.

---

பனிரெண்டாவது அத்தியாயம்.

## நாம் பிறவாமுத்தி பெற்ற அழிவில்லாதவர்கள்.

நாம் இறந்துவிட்டால் அழிந்துவிட்டதாக எண்ணவேகூடாது. என்றும் சந்ததியுடையவர்களாகிய நாம் மக்களென்னும் மறுபிறவியாய் ஜீவித்துக்கொண்டிருப்பது நிச்சய

மாய் ஒரு பாலிருக்க, இந்தப் பூமியே யழிந்துபோனுலும் நாமும் சகல பொருள்களும் வேறு பொருளாக, அதாவது பிருதிவு அப்பு தேயு வாயு அல்லது புகை (Gas)யாகவாவது கடாகிப்பட்சம் ஈதராக மாறி நிற்குமே ஒழிய அழிந்துபோகாது மாறி மாறி உண்டாகிக்கொண்டிருக்கும். ஆகையால் நம்மை அல்லது எந்தப்பொருளையும் அழிக்கவாவது, ஒரு பொருளை உற்பத்திசெய்யவாவது ஒருவராலும் முடியாதென்பதை முந்தின அத்தியாயத்திலும் விளக்கியிருக்கிறோம். நம் முயிரென்னும் செயல் அழிந்து போய்விடும். நாம் வெளி, பொருள், செயல்(Space Mater Force) என்னும் திரிவிதநாமமுடைய பொருளிற் கலந்த பிர்மமே ஒழியவேறில்லை. ஆகையால் நாம் பிறவாமுத்தி பெற்றவர்கள், அழிவில்லாதவர்கள். நாமே பிர்மமென்னும் பெரியோர்கள் முடிவும் தத்வமசி என்னும் வேதாந்த முடிவுமிதுவே.

---

## மனிதன், ஒற்றுமை.

மனிதன் மனிதனுக்குச் சத்துரு, உலகத்திலுள்ள சகல பொருள்களும் அறிவுடைய மனிதப்பிராணிகளாகிய எல்லாருக்கும் சொந்தமாகிய பொதுச்சொத்து. அது ஒருவனுக்குச் சொந்தமென்றும், இன்னொருவனுக்குச் சொந்தமில்லை யென்றும், சொல்லவாவது அனுபவிக்காவது பாத்தியமில்லையென்பது நம் பூமாதேவியின் விருப்பமுள்ள ஆக்கினை தீர்மானம். நாம் சமசுதந்திரமுடனும், பிறப்பில் ஏற்றத்தாழ்ச்சியில்லாமலும், மனம் சிறிது மில்லாமலும் பிறந்தவர்களாகவு மிருக்கிறோம். இடையில் குணத்தினுல் மேன்மையோ தாழ்மையோ அடைந்திருக்கிறோம். அப்படியிருக்க செல்வர்களென்றும், பிரபுக்களென்றும், அரசர்களென்றும், மடாதிபதிகளென்றும் கோவில் தரும கர்த்தாக்களென்

றும் அதிகமான சொத்துக்களைப்பெற்ற அவர்கள் ஷ சொத்துக்களை ஒழுங்குபிறழ்ந்தவழியில் வீண்செலவுகள் செய்தும்; சரியானவழியில் விர்த்தி செய்யாமலும், கஷ்டப்படும் அனந்தங்கோடி ஏழை ஜனங்களுக்கு அன்பாதரவோடு நடக்காமலும் அவர்களுக்குக் கொடுந்துன்பம் விளைவிக்கிறார்கள். அவர்களுக்கு அந்தப்பட்டத்தையும் அந்தஸ்தையும் நாம் நாமே ஆயுதங்களாக ஏற்பட்டு எத்தனையோ உயிரைக் கொன்று, எவ்வளவோ இரத்தத்தைச் சிந்தி ஷ பதவிகளை அவர்களுக்குக் கொடுத்தவர்களா யிருக்கிறோம். "தினையளவு நன்றி செய்யினுமதனைப் பனையளவாய்க் கோள்வர் பயன்றெரிவார்." என்றதை நினைக்கிறார்களுமில்லை. அப்பதவிகளை அவர்களை விட்டு மாற்றவும், அவர்களுக்குப் புத்தி கற்பிக்கவும் பழைய ஆயுதங்கள் தயாராயிருக்கிறதென்பதை அவர்கள் மறந்துவிட்டு நான் அரசன், நான் பிரபு, நான் மடாதிபதி நான் தர்மகர்த்தாவென்றும் சிலர் உயர்ந்த ஜாதியென்றும் நினைத்து இறுமாப்புக்கொண்டு தங்கள் வசம் கிடைத்த சொத்துக்களை விருத்திசெய்து தங்கள் தங்கள் வார்சுகளுக்குமட்டும் ஒப்பித்து விடுவதுமூலம், செல்வம் அவர்கள் பக்கமே பெருக்கெடுத்து விடுகிறது. ஏழைகள் பக்கமோ தரித்திரமும் நஷ்டமும் மென்மேலும் பெருகிக்கொண்டு வருகிறது. உலகில் ஜனங்களும் பெருக்கமடைகிறார்கள். அதற்குத்தகுந்தபடி விளைநிலங்களாவது தொழில்களாவது விர்த்தியடையாததினால் உலகில்வறுமை பெருக்கெடுத்து எங்கும் பஞ்சம் அதிகரித்துவிடுகிறது. எவ்வளவோ கோடிக்கணக்கான ஏழை ஜனங்கள் மேடேற வழியில்லாமல் ஷ செல்வர்களுக்கு அடிமைகளாகி அவர்கள் காலடிப்புழுப்போல் நசுக்கப்பட்டு மடிந்துகொண்டு வருகிறார்கள். ஷ பிரபுக்கள் தங்கள் தங்களுக்குப் போதுமானது வைத்துக்கொண்டு

மீத சொத்துக்களையாவது அல்லது வட்டி வரும்படிகளையாவது தங்கள் பந்து மித்திரர்களுக்கு பிரித்துக்கொடுத்து உதவி செய்கிறுர்களுமில்லை. தொழில் முயற்சிசெய்ய பொருளுதவி செய்கிறுர்களுமில்லை, ஜனங்கள் ஒற்றுமையைக் கலைக்கிறதற்கு அவர்களே முக்கிய காரணஸ்தர்களாகிறுர்கள். வறுமையை நீக்கச் சரியான முகாந்திரங்கள் எடுத்துக்கொள்ளாத பெரிய குறைவினுலல்லவா உலகத்தில் சகலமானகொலை பழி அக்கிரமங்கள் நடந்துகொண்டுவருகிறது என்பது விளங்கவில்லையா? உலகம் எத்தனையோ அரசர்களையும் பிரபுக்களையுங்கண்டு கொண்டுவருகிறது. காவலன் என்னும் அரசர்களாவது சேனைமருந்துகுண்டு கப்பல் ஆயுதம் உடுப்பு உணவு முதலிய பெருங்கொண்ட செலவுகளை வேறுவழியாக நீக்கியும், யுத்தம் மூலம் சேதமாகும் உயிர்ப்பலிகளை ஒழித்தும் உலக நன்மைக்கும் ஒற்றுமைக்கும் ஆதரவு செய்தால், இதுவரையில்லாத ஒப்பற்றகீர்த்தி அவர்களுக்கே ஸ்தாபிக்கப்படுகிறது. ஷெ பிரயத்தனங்களை நம்மில் கொஞ்சம்பேர்கள் உண்மையோடு முயற்சிசெய்தால் நாளடைவில் சித்திபெறுமாகையால், ஜனசமூகங்களாகிய நாம் முதலில் ஒற்றுமையாய் நடக்கப் பிரயத்தனம் செய்யவேண்டும். ஜாதிமதபேதங்களை நீக்கி ஒரு தாய்பெற்ற பிள்ளைகளைப்போல் பாவித்து ஒழுகல் வேண்டும். பிரபுக்களும் அரசர்களும் இதற்கு முன்னின்றுழைக்கவேண்டும். ஜன சமூகங்களும் படிந்து நடக்கவேண்டும். இக்காலத்திலும் சிலர் தந்திரயுக்தி வழியாய் மதத்துள் நுழைந்ததுபோல பாவனைசெய்துகொண்டு, ஜனசமூகங்களை வசப்படுத்த முயன்றுகொண்டுவருகிறுர்கள். ஆனுல், உண்மையுடனும் ஆழ்ந்தயோசனையுடனும் தன்னுயிர்போல மன்னுயிரைக்கருதி ஊக்க விடா முயற்சியுடனு முழைத்து வந்தால் வெகுசீக்கிரத்தில் உலகம்

ஒற்றுமையாகி முன்னேற்றமடையும் மதத்துவேஷம் ஜாதி வித்தியாசம் நீங்கிச்சமத்துவ முதலிய சுதந்திரமடையப் படும், எங்கும் செல்வம் நிறையும், மேற்சொல்லிய ஞான உண்மை வேரூன்றி வளரும், அறிவோங்கிப் பிரகாசிக்கும், அதின் பலனாகிய ஞானக்கனி ரசத்தை அருந்தி உலகம் ஆனந்தமடையு மென்பதிற் சந்தேகமில்லை.

---

## இந்தியா.

இந்தியாவும் சுமார் ஆயிரம் மதங்களும் எத்தனை யோவாயிரம் ஜாதிகளுமுடையதாய்ப் பிளவுபட்டு மதவயி ரங்கொண்டு மூடபக்தியில் முழுகி ஒற்றுமை குலைந்து அனேக துன்பங்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறது. முற்காலங்களில் கல்வி, வியாபாரம் தொழில் நாகரீகம் முத லியவைகளிற் சகல தேசத்துக்கும் மேலாக உலகத்திற்கே நேத்திரமாக விளங்கிப் பிரகாசித்துக்கொண்டிருந்தது. இக் காலத்திலும் சகல தேசத்துக்கும் தாய் நாடாகச் சகல பொ ருள்களையும் விளைவித்து அளித்துக் காப்பாற்றிக்கொண்டு உதவிபுரிந்து வருகிறது. அதனால் மிகவுங்களைத்து இளைத் துப்போயிருக்கிறது தெரிந்துகொண்டும் மடுவை அறுத்துப் பால் கொள்ள எண்ணுவது முற்றிலும் நியாய விரோதமல்ல வா? நம் நாட்டில் எல்லாப் பருவகாலங்களும் மழையும் சீதோஷ்ணங்களும் சரியாய்ப் பொருந்தியிருந்தும் கால்ப் பாகம் மட்டும் விளை நிலங்களாக இருக்கிறது. மற்ற பாகங்க ளும் தேசங்களும் விளை நிலங்களாக ஏற்பட்டு சகலதொழில் களும் நிறையச் செய்யவேண்டியது. பிற்காலங்களில் ஜன நெருக்கம் ஏற்பட ஏற்பட உணவுப்பொருள்களிலும் உணவா தாரப்பொருள்களிலும் வறுமை ஏற்படும். அவ்வித கஷ்டங் களை நீக்கிலகுவில் பசியடங்கச்செய்ய நல்ல சூக்ஷ்ம யுக்திகளை யும்கண்டு பிடிக்க எல்லாரும் பிரயாசைப்படவேண்டியது

நீதியும் நன்றியறிதலுமாம். மாதா சுகமடைவாள் குழந்தைகளாகிய நாமும் சுகமடைவோம்.

முற்காலத்தில் அறிவாளிகள் உலக நன்மைக்குப் பாடுபட்டிருக்கிறார்கள். சில ஆக்ஷேபனைகளிருப்பினும் மொத்தத்தில் ராமன் துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனம் செய்து தந்தை சொற்படி நடக்கவும், பிறன்மனை வெறுக்கவும் புத்தி கற்பித்தவர்; கிருஷ்ட்ணன் சமத்துவ ஞானத்தை ஸ்தாபித்தவர், புத்தர் ஜீவகாருண்யத்தை நிலைக்கச்செய்தவர், அரிச்சந்திரன் சத்தியவுண்மையை தெரிவித்தவர், மாமூது மிலேச்சர் அக்கிரமத்தை ஒடுக்கினவர், கிறிஸ்து பொறுமையுடனொழுகக்கற்பித்தவர். ஆயினும் ஒருவரும் ஒற்றுமையை ஸ்தாபித்தவர்களல்லர். ஆகையால் ஜாதி மதம் வித்தியாசத்தை ஒழித்து ஒற்றுமையைப்பெருக்கி உண்மையை அறிவிக்கும் அறிவாளிகளையே எக்காலத்திலும் தெய்வமாக மதிக்கப்பட்டு கொண்டாடப்படுவார்கள்.

---

நூலின் முடிவு நம்மவர்கள் கொள்கையின் முடிவு.

## தீர்மானம்.

ஆகையால், ஜாதி மதம் தேசம் சமயம் முதலான வித்தியாசம் பாராட்டாமல், ஒற்றுமையே உலகிற் குறுதியெனக்கொண்டு, மதங்கொண்ட மதக்கொள்கைகளை வேரறக்களைந்து, ஈசன் முதல் எறும்பு வரையும் கோயில் முதல் கோடாங்கி வரையும் பேய்கொண்ட பொய்க்கதைகளையும், புராண ஆபாச மூடபக்திகளையும் ஒழித்து, அறியாமையையே ஆடையாகத்தரித்து உண்மையென்பது இன்னதெனத் தெரியாமல் விளக்கடி ஈசல்போற் மடியும் மாந்தர்களுக்கு இந்த உண்மை ஞானத்தை உபதேசித்து, நாம் பிறவாமுத்தி பெற்ற அழில்லாதவர்களென்னும் நிச்சயத்தைத் தெளி

வித்து, நிச்சயந் தெரியாரை ஏமாற்றிப் பொருள் சம்பாதிக்கும் ஆரிய மந்திர யோக கற்பவாத சோதிட வஞ்சக வேஷ தாரிகளையும் தெண்டித்து சாஸ்திரச்சடங்கு வெறும் விவகாரம் முதலிய வீண் செலவொழித்து கல்வியின் பெருமை செல்வத்தின் மகிமை ஒற்றுமையின் பிரயோசனம் யந்திரத்தின் உபயோகந்தெரிந்து, முறைப்படி வியாபாரத்தை நீதியாய் நடத்தியும் விபசாயம் முதலிய தொழில்களை யுக்தியாய்ச்செய்வது மூலம் செல்வம் பெருக்கி, உலகில் வறுமை பசி நோய் இவைகளை ஒழியும்படி செய்து, கல்விச்சாலை புத்தக லைபிரெரிசாலை, கைத்தொழிற்சாலை, கைத்தொழிற் கல்விச்சாலை, வைத்தியசாலை அன்னதான சத்திரம் கண் காட்சி சாலை முதலியவைகளை ஏற்படுத்தி, அவுடதமுண்ணப்போய் அபினியையுங் கஞ்சாவையும் சாப்பிட்டதுபோல மோசம் போகாமல், ஜாலவித்தையின் புரட்டை உலகப்பிரசித்தப் படுத்தி, உலகப்பிரயோசனமான வஸ்து கல்வி, செல்வம், அறிவுதானென்று தெளிவித்துப் பலவழிகளிலும் தேசப் பொது நன்மை நிதியைப் பெருக்கி பொதுத்தொழில் நூதனத்தொழில் விர்த்தி செய்து, மதம் என்னும் பெயர்கூட இல்லாதபடி ஒழித்து விடவேண்டியது, ஜாதியைக் குறிப்பிடும் பெயரை தன் பெயருடன் சேர்த்து உபயோகிக்கக் கூடாது. அனுபோக ஆராய்ச்சி உண்மைச்சங்கம் அறிவுநிதி கல்வி தொழில் விபசாயம் வர்த்தகம் அபிவிர்த்தி நல்வழிச் சங்கங்களும் சபைகளும் கூட்டங்களும், கிராமப்பஞ்சாயத்து முதலிய எங்கும் ஏற்படுத்தி, சமத்துவ ஒற்றுமையடைந்து எந்த வழியிலும் உலகம் ஒற்றுமையாய்ச் செல்வமாய் நாகரீகமாய் சுசீகரமாய் நீதியாய் நல்வழியில் நடக்கும் உபாயங்களைச்செய்து; அறிவோங்கி அற்புத அதிசய ஆனந்தமடையச் செய்யவேண்டியது. அதனல் எவ்வளவு திரவியச்செலவு

சரீரகஷ்டம் ஆபத்துகள் நேரிட்டாலும் பொருட்படுத்தாது வைராக்கிய விடாமுயற்சியுடன் செய்யவேண்டியது உலகில் மனிதன் எனப்பிறந்த அறிவுடைய ஒவ்வொரு பிராணியின் கடமை. அப்படி உலகிற்குதவி புரிவது நமக்கு நாமே உதவி புரிகின்றதாகும் என்று சொல்லி முடித்தார். கரகோஷம் முழங்கி நின்றது. பூமாலை போடப்பட்டது.

அரசன்:—நீர் செய்த பிரசங்கம் உலக நன்மையை உண்டுபண்ணி உண்மையை விளக்குகிறது. உம்மைத்தெண்டித்தது பிசகு ஆனால், உம்முடைய பிரசங்கத்தின் கொள்கை நம்முடைய கொள்கையை ஒத்திருக்கின்றது. முகத்தைப் பார்க்கும்போது ஏதோ ரெம்பவுங் கவலையடைந்தவரைப்போற் காணப்படுகின்றது. "அடுத்தது காட்டும் பளிங்கதுபோல் நெஞ்சங் கடுத்தது காட்டும் முகம்" என்றதுபோல கண்ணீர் ததும்பக் காரணமென்ன? சிறைச்சாலையில் ரெம்பவுங் கஷ்டமடைந்தீரோ ஒழிக்காமற் சொல்லும்.

நித்தியானந்தன்:—நான் பெண்சாதி பிள்ளைகளை விட்டுப் பிரிந்த கவலை தங்களைப்பார்த்தது முதல் ஆரம்பமாகி என் மனம் மிகுந்த சஞ்சலப்படுகிறது. அதனால் தான் உங்கள் முகம் பார்க்காமல் கவிழ்ந்து கொண்டிருக்கிறேன்.

அரசன்:— ஏன் கண்ணீர் வடிக்கின்றீர், சமாதானமாயிரும், சென்ற காரியங்களைப்பற்றி விசனப்படாதீர், வருவது வந்துதானே தீரும், கைதி விடுதலை.

நித்தியானந்தன்:— இவரைப் பார்த்தால் முற்றிலும் என் மகனைப்போலவே யிருக்கின்றது. உலகத்தி லொருவரைப்போ லொருவரை அநேகமாய்ப் பார்க்கலாம். அதிலும் நம் புத்திர ஆவலினலிப்படிச் சிந்திக்கிறோமோ? எதையுங் கேட்டுத்தானே தெளியவேண்டும், சரி, துணிந்துகேட்

போம், என்னதான் செய்து விடுவார்களென்று மனோராஜ்யம்செய்து கொண்டு பிரபு! நானொருசெய்தி கேட்கின்றேன் அதாவது தங்கள் ஜனனதேசமிதுதானோ?

அரசன்:—இல்லை, வெகுதூரமிருக்கின்றது.

நித்தியானந்தன்:—தங்கள் பெயர்யாது?

அரசன்:—தன்ய சீலன்.

நித்தியானந்தன்:—வேறு பெயருமுண்டுமோ?

அரசன்:—ஆம், அதைச்சொல்ல முடியாது சரி, நீர் என் பெயரைக் கேட்டதிருக்கட்டும், உமக்கு வேறு பெயருமுண்டுமோ? உள்ளதைச் சொல்லும்.

நித்தியானந்தன்:—நான் சொன்ன பிற்பாடாவது உம்முடைய பெயரைச் சொல்லவேண்டும், என்பெயர் அறிவானந்தன்.

அரசன்:—அப்பா, உன் மகன் ஞானசீலன் நான் தான் என்று சொல்லி மெய்மறந்து, கைகால் நடுக்கமுற்று ஐயா! உமக்கிவ்விதத்தெண்டனையும் நேரிட்டதோஎன்றுகதறவும்.

அறிவானந்தன்:—குழந்தாய்! ஞானசீலா! உன்னைக்காணும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததேயென்று கட்டித் தழுவி மூர்ச்சைதெளிந்து ஆனந்தப்பரவச மானார்கள். "கடந்த ஞானியும் மறப்பரோ மக்கண்மேற்காதல்." கைதிகள் பூராவும் விடுதலை செய்யப்பட்டது, சபையுங்கலைந்தது, எல்லோரும் திகிலும் பிரமையுங் கொண்டவர்களாய் ஆனந்தத்தில் மூழ்கிச்சென்றார்கள், இருவரும் அரண்மனை சேர்ந்தார்கள்.

---

## பதின் மூன்றாவது அத்தியாயம். சந்திப்பு.

ஆ! என்ன ஆச்சரியம்! இத்தனைநாளாய் எத்தனையோ நாடு நகரம் மலை வனங்கடந்தும் இன்னும் என்

தாயைக் காணமுடியவில்லையே! நம் அரசைத் தகப்பனாரிடம் ஒப்பித்து வந்தோமே, அவர் என்ன செய்கின்றாரோ? எங்கு அலைகின்றாரோ? எதிரிற்றெரியும் மைதானவெளி சமுத்திரம் போலும் பிர்மாண்டமா யிருக்கின்றதே! இதுவரை இப்பேர் பட்ட காட்சியை எங்கும் பார்த்ததில்லையே! இவ்வாரண் யத்திலிருந்து வீசும் குளிர்ந்த தென்றல் நறுமலர் வாசம் பொருந்தியிருக்கின்றதே! இவ்வாரண்யத்தில் வசிக்கும் பிரா ணிகளுக்கு இதுவும் ஒரு உறைவிடம்போற் றெரிகின்றது. அதோ தெரியும் நீரோடை சமீபத்தில் நம் சேனைகளுடன் இன்றிரவு தங்கிவிடலாமென்று யோசித்துக்கொண்டிருக் கையில் சேனைத்தலைவன்வந்து, அதோ எதிரில் ஒருசேனை படையெடுத்து வருவதுபோற் காணப்படுகின்றது என்றான். அரசன் பார்த்துக்கொண்டே யோசித்தவண்ணமா யெதிர் நோக்கிநின்றான். வடதிசையிலிருந்து வந்த அந்தச்சேனை களும் நம்மிளவரசனை நோக்கிவந்து சேர்ந்தது. அவ்வர சன் நம்மரசனைப்பார்க்கவும் தன் மகன் ஞானசீலன் இவன் தானென்று நிச்சயித்து, மனத்துடிப்புடன் அரசே! உன் பெயர் யாது? யாதுகாரண மிவண்வந்தது? என்று வினவ, நான் வீமாபுரி அரசன் என் தாயாரைக்காணத் தேடிவந் தேன். என்பெயர் ஞானசீலன் என்றான். உடனே அப்பா! மகனே! என் அருமைக்கண்மணியே! உன்னைத்தேடியே நானும் வந்தேன் என்றுகூறவும், இதென்ன ஆச்சரியம்! நம் தாயுமிப்படி ஆண்வேடந்தரித்து அரசுபுரிந்தாளோ எனச் சந்தேகித்து, என் தாயார் ஞானவிலோசனி அம்மாளா! என்று கதறவும், ஆம் என் அருமைக் குழந்தாயென்று, உடனே தானணிந்திருந்த ஆண்உடையை நீக்கிப் பெண் உடையோடு நின்ற தன் தாயாரைக்கண்டு மூர்ச்சையாகிப் பரவசமடைந்தார்கள். உடனே தென்றிசையிலிருந்து ஒரு

சேனை வந்தது. சமீபிக்கவும் அது தன் தகப்பன் சேனை யென்று தெரிந்துகொண்டு எதிர் கொண்டழைத்து ஒருவ ரோடொருவர் கட்டித் தழுவிக்கொண்டிருக்கும் போழ்து, கீழ்த் திசையிலிருந்து ஒரு சேனை வருவதைக் கண்டு, ஈதென்ன ஆச்சரியம் என்று எல்லாரும் அதையே நோக்கிக் கொண்டிருந்தார்கள். அவ்வரசனும் வந்து சேர்ந்தான். தங்கள் மந்திரி மதியூகியென்று தெரிந்துகொண்டு, எவ்வள வோ காலம் பிரிந்திருந்தும் இப்போது எல்லோரும் ஒருவ ரோடொருவர் ஏககாலத்திற் சந்திக்கும்படியான சமயம் வாய்த்த அருமையைப்பற்றியும் நினைந்து நினைந்து உருகிக் கரைந்து ஆனந்தக்கடலில் மூழ்கிப் பரமானந்தமடைந்தார் கள். "அமிழ்தினு மாற்றவினிதே தம்மக்கட் சிறுகையளாவிய கூழ்" மக்கண் மெய்தீண்டலுடற்கின்பம் மற்றவர் சோற்கேட்ட லின்பம் செவிக்கு" "குழலினிதியாழினி தேன்பர் தம்மக்கண் மழலைச் சொற்கேளாதவர் என்றும் அன்பிற்குமுண்டோ வடைக் குந்தா ழார்வலர் புன்கணீர் பூசறரும்". அங்கு அப்போதியற்றிய மேடையிலுட்கார்ந்து சகல சேனைகளுடன் பரிமள அறுசு வை நவரச அன்னபானாதிகளை உண்டு சந்தனந் தாம்பூல மணிந்து, ஆகாயத்தில் பூரண சந்திரன் தாவள்யமாய்ப் பிர காசித்துக்கொண்டிருக்க சில சம்பாஷணைகள் நடந்தது.

மதியூகி, தான் வித்வாம்சவேஷம் பூண்டு ரத்னபுரி அரசனிடம் தன் வித்வத்தைக் காண்பித்து அவ்வரசனுக்கு மந்திரியாகிச் சிலகாலம் சென்று, அவ்வரசனும் பின் வார் சின்றிக் காலகதியடைந்தான். பின் தானே அரசனாகி சிறிது காலம் அரசுபுரிந்து, அப்பால் ராஜ்யத்தைத் தன் மந்திரி வசம் ஒப்புவித்துவிட்டுத் தங்கள் எல்லோரையும் தேடிக் காணும்பொருட்டுத் தங்களைப்போலவே சில சேனைகளுடன்

புறப்பட்டு அநேக நாடுநகரம் மலைகளுங்கடந்து இதுவரை சந்தித்த சகல சங்கதிகளையும் சொல்லிமுடித்தான்.

பின்பு, அறிவானந்தன் இன்று இவடம் எல்லோருங் கேட்டானந்திக்கும்படி மந்திரிமதியூகி அவ்வரசனிடங் காண்பித்த வித்தைகளையும், அங்கு பாடிய பாடல்களையும் ஒரு முறை நடத்தும்படியாய்க் கேட்டுக்கொள்ள, உடனே மந்திரி மிகுந்த சந்தோஷத்துடன் சொல்லத்தொடங்கினன். பூமாலை போடப்பட்டது. சபைக்கு வந்தனமளித்து.

மதியூகி:—என் சகோதர சகோதரிகளே! சற்று கவனமாய்க் கேளுங்கள்.

---

1. உலகோர் பத்திவண்ணம்.

*தனதனதான, தனதனதான, தந்ததனந்த, தந்ததனந்த,*
*தனனதனந்த, தனனதனந்த, தானதானன், தானதானன,*
*(தந்ததனதான தானனு.)*

(1) ஒரு முதலான, பெருவெளிநாடி, யெங்கும் நிறைந்தளி, பொங்கி நெருங்கிப், புகையனலான, செயலுடன்கூடி, புகழ்பெறுசோதி, யதாமெனலாகி,

(2) ஒளிர்தருஜோதி, யதுவெகுகாலம், சுற்றிச்சுழன்றனல், பற்றிப்பிறிந்து, அதுலொருதுண்டு, புவிபுனலாகி, தாபரஜீவ, கோடியுமாச்சே.

(3) ஒன்றினிலொன்ருய், பலவிதமாகி,வித்தில் விளைந்தது, சத்தில்முதிர்ந்தது, கொண்டருசியோடு, எண்டிசைநாடு, தானியதவசம், நாணயமாயுதம்.

(4) உறுதொழில்யாவு, மணிபணியாடையும், விண்டவறிவுடன், மண்டினவீடு, ஆக்கினைதெண்டம், கொண்டரசாட்சி, யாகநிறைந்தது, போகமுதிர்ந்தது.

(உலகெங்கு மிம்மயமாகச் சிறந்ததே.)

## விருத்தம்.

ஆதியான பெருவெளியானதில், நீதியான நிறைந்த நிராமயச்
சேர்தியான செயலுயிர்ச் சேர்க்கையும், ஓதிநல்லறிவுய்யவுங் காப்பதே.

## அகவல்.

நான்முகன் படைத்த நாணு வகையுலகி,——லான்ற சிறப்பி னரும்பொருட் கூறுங்கால்,
ஆண்முதிதோ பெண்முதிதோ வன்றி யலிமுதிதோ,-நாண்முதிதோ கோண்முதிதோ நல்ல வெளிமுதிதோ
செல்வம் சிறப்போ வறிவு சிறப்போ, தொல்லைமா ஞாலந் தோற்றமோ படைப்போ,
எல்லாப் பிறப்பு மியற்கையோ செயற்கையோ, காலத்தாற் சாவரோ பொய்ச்சாவு சாவரோ,
நஞ்சுறுந் தேகந் துஞ்சுமோ துஞ்சாதோ, துஞ்சும்போ தந்தப் பஞ்சேந் திரியம்,
எஞ்சியென் செய்யுமோ வெவ்விடத் தேகுமோ, ஆற்ற லுடையீ ரருந்தவம் புரிந்தால்,
வேற்றுடம் பாகுமோ தமதுடம் பாகுமோ, உண்டியை உண்குவ துடலோ வுயிரோ,
விண்ட அவ்வுயிரும் பொருளோ செயலோ, உலகத் தீரே உலகத் தீரே,
நாக்கடிப் பாக வாய்ப்பறை யறைந்து, சாற்றக் கேண்மின் சாற்றக் கேண்மின்,
மனிதர்க்கு வயது நூறல்ல தில்லை, ஐம்ப திரவி லகலுந் துயிலினால்,
ஒட்டிய விளமையா லோரைந்து நீங்கும், ஆக்கை யிளமையில் ஐம்மூன்று நீங்கும்,
எழுபது போகநீக் கிருப்பன முப்பதுள், இன்புறு நாளுஞ் சிலவே யதாஅன்று,
துன்புறு நாளுஞ் சிலவே யாதலால், பெருக்கா றொத்தது செல்வம் பெருக்காற்,
றிடிகரை யொத்த திளமை யிடிகரை, வாழ்மர மொத்தது வாழ்நா ளாதலால்,
ஒன்றே செய்யவும் வேண்டு மொன்றும், நன்றே செய்யவும் வேண்டும் நன்றும்,
இன்றே செய்யவும் வேண்டு மின்றும், இன்னே செய்யவும் வேண்டு மின்னும்,

நாளை நாளை யென் பீராகில், நம்முடை முறைநா ளாவது மறியீர்,
நமனுடை முறை நாளாவது மறியீர், எப்போ தாயினுங் கூற்றுவன் வருவான்,
அப்போ தந்தக் கூற்றுவன் றன்னைப், போற்றவும் போகான் பொருளொடும் போகான்,
சாற்றவும் போகான் தமரொடும் போகான், நல்லா ரென்னுன் நல்குற வறியான்,
தீயா ரென்னுன் செல்வரென் றன்னுன், தரியா ளொருகணந் தறுக ணாளன்,
உயிர்கொடு போவா னுடல்கொடு போகான். உடலெயந்திர மதின் செயலே வுயிராம்,
நரைதிரை மூப்பு பிணி விபத்தாலே, சேத மடைந்துஞ் செயலொழிந் திடுமே,
இறந்தவ ரெப்பவும் பிறப்பது மில்லையே, எதுக் கழுவீ ரேழை மாந்தர்காள்,
உயிரினை யிழந்தோ வுடலினை யிழந்தோ, உயிரிழந் தழுது மென்றேது வீராகில்,
உடலினை யன்றலா தின்றுங் காண்கிலீர், உயிரினை யிழந்த வுடலது தன்னைக்,
களவு கொண்ட கள்வனைப் போலக், காலு மார்த்துக் கையு மார்த்துக்,
கூறை களைந்து கோவணங் கொழுவீஇ, ஈமத் தீயை எரியெழ மூட்டிப்,
பொடியடச் சுட்டுப் புனலிடை மூழ்கிப், பொய்த்தம ரோடும் புந்திநைந் தழுவது,
சலமெனப் படுமோ சதுரெனப் படுமோ, பார்ப்பன மாந்தர்காள் பகர்வது கேண்மின்,
நான்முக னென்பது நாற்றிசை யாகுங், கூற்றுவ னென்பான் தோற்றிய மரணம்.
(அன்றியும்) இறந்தவ ராயுமை யிவ்விடை யிருத்திப், பாவனை மந்திரம் பலபட வுரைத்தே,
உமக்கவர் புத்திர ரூட்டின போது, அடுபசி யாற்குலைந் தாங்கவர் மீண்டு,
கையேந்தி நிற்பது கண்டதார் புகலீர், அருந்தினர் பார்ப்பன ரவர்பசி களைந்தது.
திராவிட ராரிய ராதியி லிருவகை, கொள்வன கொடுப்பன உண்பன யாவும்,
ஒன்றாய்க் கலந்து நடந்தே றிற்றே. ஒட்டியர் மிலேச்ச ரூணர் சிங்களர்,

இட்டிடைச் சோனகர் யவனர் சீனத்தர், பற்பல நாட்டினும் பார்ப்பன ரிலையால்,
முற்படைப் பதனில்வே ருகிய முறைமைபோல், நால்வகைச் சாதியிந் நாட்டினில் நாட்டினீர்,
மேல்வகை கீழ்வகை விளங்குவ தொழுக்கால். பெற்றமு மெருமையும் பிறப்பினில் வேறே,
அவ்விரு சாதியி லாண்பெண் மாறிக், கலந்து கருப்பெறல் கண்ட துண்டோ?
ஓர்வகைச் சாதியா மக்கட் பிறப்பிலீர், இருவகை யாகநீ ரியம்பிய குலத்துள்,
ஆண்பெண் மாறி யணைதலு மணைந்தபின், கருப்பொறை யுயிர்ப்பதுங் காண்கின் றிலீரோ.
எந்நிலத் தெந்தவித் திடப்படு கின்றதோ, அந்நிலத் தந்தவித் தங்குதித் திடுமால்,
மாறிவே ருகும் வழக்கமொன் றிலையே. பூசுரர் புணர்ந்து புலைச்சிய ரீன்ற,
புத்திர ராயினோர் பூசுர ரல்லரோ! பெற்றமு மெருமையும் பேதமாய்த் தோன்றல்போல்,
மாந்தரிற் பேதமாம் வடிவெவர் கண்டுளார், வாழ்நா ளுறுப்புமெய் வண்ணமோ டறிவினில்,
வேற்றுமை யாவதும் வெளிப்பட லின்றே, தென்றிசைப் புலையன் வடதிசைக் கேகின்,
பழுதற வோதிப் பார்ப்பா னுவான், வடதிசைப் பார்ப்பான் றென்றிசைக் கேகி,
னடையது கோணிப் புலைய னுவான். பகவற்குப் புலைச்சி ஆதி யீன்ற,
கபில ரவ்வை வள்ளி வள்ளுவர், உருவை உப்பை அதிகமான் எழுவர்,
பார்ப்பனர் பாணர் குறவர் பறையர், சான்றோர் வண்ணா ரகத்தே வளர்ந்தும்,
செய்தனர் நீதி நூல்களு மதுபோல், [பிரமற்குக்] கூத்தி வயிற்றிற் பிறந்த வசிட்டரும்;
வசிட்டருக்குச் சண்டாளி யீன்ற சத்தியரும், சத்தியர்க்குப் புலைச்சி பயின்ற பராசரும்,
[அவருக்கு] மீன்வாணிச்சி பெற்ற வியாசர் முதலோர், உலகத் தோர்கள் பயந்து நடக்க,

சாஸ்திரம் வேதம் பாரதம் முதலாம், கதைகளுங் கூட்டிச் சாதியும் வகுத்து,
மாதவ ரெனவே வயங்கின ராதலால், மானிடச் சாதியா மக்கட் பிறப்பிலீர்,
மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ, காற்றுஞ் சிலரை நீக்கி வீசுமோ,
மாநிலஞ் சுமக்க மாட்டே னென்னுமோ, கதிரோன் சிலரைக் காயே னென்னுமோ,
மேல்நான்கு ஜாதிக் குணவு நாட்டினுங், கீழ்நான்கு ஜாதிக் குணவு காட்டினுமோ,
[ஆகையால்] சிறப்புஞ் சீலமு மல்லது, பிறப்பு நலந்தரா. பேதையீரே!

ஞானம்——உலக யந்திரம் அரிய வுயிரே, அகில யந்திரம் பெரிய செயலே.
வெளியி லமர்ந்த பொருள்கள் யாவும், செயல்கள் நிறைந்த வுயிரே யாகும்,
ஆக்கின தல்ல அழிக்கவு மாகா, மாநிலத் தீரே! மாநிலத் தீரே!
[நாம்] மாட்சிமை தங்கிய மானிட மிருகம், பகுத்தறி வுடைய பட்சியே நமக்குப்,
பிந்திப் பிறந்தது சாதியும் சாமியும், கோடி ஸ்மையொரு நொடிதனிற் போகும்,
யந்திர மேறி அந்தர வாசியாய், அளவிற் கோடி யுகங்கள் செல்லினும்,
அளவிட முடியா வகண்ட வெளியாம், அதினிறை வாயுவி னணுக்கள் நெருங்கிப்,
புகையா யனலாய்ச் சோதி மயமாய், சுற்றிச் சுழன்றதை விட்டுப் பிரிந்தன,
அவைகளி லொன்றிப் புவிபுன லாகி, தாபர ஜீவ கோடியு மாச்சே;
ஆக்கைக டோறு மளவிலா வுயிர்கள், அவையுளு மதுவே அணுவு முயிரே,
மரக்கறி யாவும் மாங்கிஷ சத்தே, உண்பொருள் யாவு முடலுயி ராதலால்,
புண்ணிய பாவமும் சைவமு மெங்கே, உண்மை யிதுவென வுணரச் செய்வதும்,

கல்வி கைத்தொழில் வைத்திய சாலையும், மற்று முதவியும் புரிவது புண்ணியம்.
செல்வம் புவியிற் செழிக்கச் செய்து, செழுங்கிளை தாங்குதல் செல்வர்க் கழகே.
தன்னுயிர் போல மன்னுயிர் காத்து, நீதி கைத்தொழி லறிவும் பெருக்கி;
வறுமை மதுக்குடி பேதமும் நீக்கி, சமத்துவஞ் செய்த லரசர்க் கழகே.
உண்மை விளக்கி ஒற்றுமை பெருக்கி, அறிவோங்கு வித்த லறிவினர்க் கழகே.
விவகாரம் நீக்கி வீண்செல வொழித்து, சுசியுடன் வாழ்வது மனிதர்க் கழகே.
கற்க கற்கக் கசடறக் கல்வியை, நிற்க நிற்க வதன்படி நிற்க,
கற்பமும் யோகமும் செய்த ரிஷிகளும், முப்பத்து முக்கோடி தேவரு மெங்கே,
கற்பின் வலிரச வாதமும் பொய்யே, கணித வாருடங் கனவிற் கிணையே,
சூக்கும காரண சரீரம் சுவர்க்கமும், மந்திரம் பேயும் மனதின் மயக்கே,
பெண்ணு மாணும் சமமே யாதலால், கற்பி லக்கண மிருவர்க்கும் பொதுவே,
விதவை வேட்டலு முலக நடையே, அறுத்துக் கட்டலு மொருசால் நன்றே.
கோவி லென்றுங் குருக்க ளென்றுந், தலங்க ளென்றுந் தீர்த்த மென்றும்,
பிழைப்புக் கிடமே செய்தன ராரியர், உலக நீதியை மனுச்சக்ர வர்த்தி,
தராசு முனையிற் கூறின ரதனுள், சுயநலப் பாப்பினர் சொற்பிழை செய்தனர்.
ஆதி பாஷை அற்புத முத்தமிழ், அங்கியை வணங்கும் பார்சிகர் பார்ப்பினர்,
ஆரியர் பாஷை வாயிலா வடமொழி, ஆரியர் செய்த யாகமுங் கொடுமையே.
முன்னோர் மூதோர் முற்பிறப் பாகும், மக்கள் பின்னோர் பிற்பிறப் பாமே,

அன்ன புவியோர் யாவரும் நாமே, வந்த திடையி லிந்திர ஜாலம்,
சொந்தத் தேக மியற்கைச் சக்தி. மனம்செயல் சக்தி ஆன்மா அறிவுயிர்,
ஞாபகம் யோசனை நினைப்பு மொன்றே. அதனை யன்றியோ ரணுவு மசையா,
ஒடுங்கி யமரி லொளிரு மவ்வுருவே, உறக்க மாவது வெளிமன வோய்வு,
சொற்பன மிடையே பரிபாஷை திருஷ்டி, உள்மன முள்ளறி வுன்னுயி ரியற்கை,
உள்ளறி வினிலே யொளிருமுக் காலம், உள்மனத் தோய்வு பரமா னந்தம்,
வெளிபொருள் செயலே பிரம மதுவே, நாமே பிரமம் அழியோம் மறுமைப்,
பிறப்பு மிலையது பிறவா முத்தியே, ஞானிகள் முடிவே நாஸ்திக மாமதை,
ஆரிய ருலகோ ரரசர்க்கு பயந்து; வேதாந்த மாக விளங்கக் கூறினர்.
பூத்துக் காய்க்கப் பருவ மாயிற்று, புராண சாஸ்த்ரம் சாதியுஞ் சாமியும்,
வறுமையும் பிணியும் பசியு மொழிந்து, அறிவும் ஒற்றுமை சமத்துவம் பெருகி,
கனியின் ருசியைக் கண்டு தெளிந்து, இறப்ப தொழிந்தே யிளமை படைவீர்.
அறிவே காட்சி அனுபவம் சாட்சி, அத்தகை யறிவா லநேக வற்புதம்,
எத்தனை செய்யினு மிறந்தபி னிலையே, காட்டானை யுண்ட கனியது வாகும்,
கடனீரைக் கடலிற் கவிழ்த்த தொக்குமே, (ஆக) திருவும் வறுமையும் செய்தவப் பேரும்,
சாவதும் வேறிலை தரணி யோர்க்கே. ஓ* ஓ** ஓ*** ஓ****
ஆதி யந்த மிலாத வநாதியே! ஜோதி யான சுயம்பிர காசமே*
அறிவே தெய்வ மதுவே யுயிரே, அறியோ முயிரை அறிவோம் செயலை,

அறியோம் அறிவோம் வெளியைப் பொருளை, அறியோம் அறியோம் அழிந்த பின்னே, 170
அறிந்தா ரறியா ரறியா ரறிந்தார், அறிவா ரறிவா ராரறி வாரே,
அறிவா ரறிவா ரவரே யறிவார். (உடனே) எழுமின்-ஃ-விழிமின்-ஃ-உழைமின்-ஃ-அறிமின்!
குலமும் ஒன்றே குடியும் ஒன்றே, இறப்பும் ஒன்றே பிறப்பும் ஒன்றே,
மோட்ச நரக முடிவு மிங்கே, யோக மந்திர ஜாலம் அங்கே,
பாவ புண்ணிய பலனு மெங்கே, வேத முடிவும் வெட்ட வெளியே,
ஆதி யந்த மற்ற பொருளே, அகிலாண்ட கோடி யடங்கும் சொரூபம்,
எத்தனை கோடி யுகங்க ளாயினும், இதுவே சத்யம் இதுவே உண்மை.
[இது] அழியா ஞானம் ஒழியாப் பானம், (ஆயினும்) முன்னோ ருரைத்த மொழி தவறாமல்,
ஒன்றே தெய்வ மென்றே கொள்க, உலகத் தோடே ஒத்து வாழ்ந்து,
புலையுங் கொலையுங் களவுந் தவிர்ந்து, நிலைபெற வறத்தி னிற்கு மறிவின்,
பெருமை விளக்கி உண்மை துலக்கி, பேணி யுரைப்பது பிழையெனப் படாது,
[இவ்] வுண்மை தெரிந் துழைக்கவும் வேண்டும், உலகத்திற் குதவி செய்யவே வேண்டும்.
உண்மையு மொறுமையு மின்றிச், செம்மை வெளிப்படா சீரியோரே.

## பதினாலாவது அத்தியாயம். பாடல்கள்.

நிறைவு குறை வொழிவற நிறைந்த வெளிபொருள் செயலாய்,
நிறைந்தவறிவின் மயமாய் நிறைந்ததெது ஒரு (பரம்) பொருளே
சிறந்தபிறப் பிறப்பு முதல் பேர் சாதி குலம் ஒன்றாய்
அறைந்தார் முனிவர் சிவயோகருடன் கபிலருமே.

(பொன்னுலவு சென்னிகுள நன்னகர் எனும் மெட்டு.)

ஆதிவழி வந்த வகை யையறிந்த மேலவர்கள்——யாருமில்லை யென்றுரைப்ப துண்மையே,
அது-பாருஜோதி யென்று சொல்வர் நன்மையே-ஜல-மான தாபரமே முளைத்தது ஜீவகோடியு மாயுதித்தது
அந்தரங்கந் தோன்றியதும் நாளுமே——நம்மள் சொந்த வுடலாடியதுங் கேளுமே.
ஆதிவழி வித்துமாறல் நீதிவழி வித்துவாதல் அத்தகையில் மாந்தரோர் பிராணியே
மதி-மதியொத்ததா லிலங்கிய திராணியே——இதி-லாய்ந்தவல்லுயிர் சேர்ந்துவொன்றையு மேய்ந்துதின்பது
லாகுமிந்தக் காரணங்கள் கூட்டியே— நாமும் வேகுமூனைத் தின்றுழலுங் கோட்டியே. [போந்த தன்செய
உள்மனது முட்செயலு முள்ளறிவு முன்னுயிராய் உன்னிடமே தற்செயலாய் நின்றதே,
ஒய்ந்தா-லன்னியமாகுந்தரமாம் நன்றதே,——நல மோடுபூவினில் நீபிறந்திடில் மேலுநல்லற மீது
உத்தமத் தானத்துடனே காக்கவே——சீவன் முத்தனுவ தையமில்லை நோக்கவே. [மக்களே
மன்னுமின்ப மோகபோக மென்னுமாசை தன்னிலாய வாஞ்சைகளென வுரைக்கும் யாவுமே
செந்நெல் பாஞ்சுகொண்டா லன்ன ஞானந்தாவுமே——நேய மாகவேசிவ யோகமுங்கிய ஞானவுண்மையினு
வாசலுக் கெதிர்நடக்க வாருமே——வேறு பூசனையி லொன்றுமில்லை பாருமே. [திதங்கிய

(மஞ்சுநிகர் குந்தளமின்னே என்னு மெட்டு.)

மண்ணிலுயி ரான சொரூபம், பலவளங்கள் மிகநிறைந்து வந்தசெய லான அரூபம்,——உயிர்
மணலிலுமள விடவுகந்தது தசையினுஞ்சுவை நசைமுதிர்ந்தது, [தே
வாரியொன்றை யொன்றுதின்றதே, செகுத்தபாவம் புவிக்கணைந்த வட்டையி லொடுங்கி நின்ற
புண்ணிய நெறியை நாடியே, சாதித்துவேஷம் பேசித்தமூடர் போதனைக்குருகி வாடியே 171

உங்கள்-பொருளெலாமவர், கவரவேபெரு வறிஞராயின ரறிவிலீரிது,
போதுமுண்மை மார்க்கமேகண்டு, சமத்துவத்திற் றமைத்துதித்து போற்றுவீ ரிரக்கமே கொ
பாலன்சிவ யோகன்வாக்கினுல் மனக்கவலை யினிக்கிடையா பத்தியை விளக்கும் நோக்கினுல்—நல்ல [ண்டு
பரிவுதாங்கியே சிலவுநீங்கியே யறிவுஓங்கியே கருதிநோங்கிய பாதையை யறிந்துபாருமே.

(இசைந்த ஏறுங் கரியுரிபோர்வையு மெனுமெட்டு.)

அக்ண்டவானு மதிநிறை கோளமுஞ் செயலாகி அமர்ந்த ஞான மதினறி வேயொரு பொருளா
விரிந்தவேத ம்தமிகு வாகம பலனுதி மிளிர்ந்தஞானி கனவினு மேயிது நினைவாரோ. [கும்
செரிந்தபூவின் மடியுறு தேகம துதியாதே திகழ்ந்தசேயு நமதுபின் றேகம தறிவாயே
விரிந்தசாமியு மிகுபல சாதியு மிலவானோர் மிகுந்தவீடும் புசிதமும் பாவமு மிலையேதே.

கண்ணிகள்.

ஆதிவெளி பிர்மமதி லமர்ந்தசத்தி வாய்வினிலே சோதிமய வன்னி சுயமாகத் தோன்றியதே.
சுற்றிச் சுழன்று சுழன்றுவெகு காலமது உற்றுச் சிதறியபின் னெவ்வொன்று மாடியதே.
அண்டத்தி லிவ்வா றளவிறந்த கோளமுமாய் பிண்டமா யெங்கும் பிரபலமாய்த் தோன்றியதே.
மிகையாக முன்னம் விழுந்த ஒருகோளம் புகையா யிறுகியது பூமியா யாச்சுதடி.
வெந்நீராய்த் தண்ணீராய் வேலை உவர்நீராய் அந்நாளிற் ரூபங்க ளாச்சே வெகுதிறமாய்.
பூமியில் நீரிற் பொருந்திய தாபத்தில் நாமுதலாய் மற்றுமுள்ள நல்லுயிர்க டோன்றியதே
முந்தி யிருந்தவர்கள் மோச வமாற்றுதலாய் அந்த மிகுங்கடவுள் யாமென்றுஞ் சொன்னரே.
சாதி நான் காகவந்நாள் சண்டாளர் செய்துவைத்த சாதியது மிந்நாள் சதுரா யிரமாச்சே.

சாமிகளு மெத்தமெத்த சாஸ்திரமு மப்படியே காமிக ளானவிவர் கண்டபலன் ஒன்றுமில்லை.
மோட்ச நரகமென்றும் முற்பிறப்பும் பிற்பிறப்பும் காட்சியுள்ள யோகமென்றுங் கண்கலக்கம் செய்தாரே.
சூக்கும சரீரஞ் சொலுங்காரணதேகம் வாக்குமங் கிரம்பேய் வகுத்தார் பலவாக.
சோதிட மாரூடஞ் சுயவிரத வாதமென்னும் பேதியா நன்மனதைப் பேதமுறச் செய்தாரே.
உண்ணும் பொருள்க ளுயிரென் றறியாமல் நண்ணும் பெருஞ்சைவம் நாமென்றுஞ் சொன்னரே.
கண்ணுறக்கண்டு கருத்தி லுணராது யெண்ணுது யெண்ணியல்லோ யேழைமதிபோனேமே.
சாஸ்திரத்தைச் சுட்டுச் சதுர்மறையைப் பொய்யாக்கி சூஸ்திரத்தைக் கண்டு சுகம்பெருவ தெக்காலம்.
மாநிலத்திற் ரூபரமாய் மண்ணீரில் வாழ்வனவாய் வானிற் பரவைகளாய் வல்லறிவா லானேமே.
உய்வதற்குத் தக்க வுபாயமுள்ள கைத்தொழிலைச் செய்து முடித்துமற்ற செல்வந் தழைத்தனன் று.
பசிநோய் மதுக்குடியைப் பங்கமுறச் செய்துவிட்டு அசுசி முதநீக்கி அறிவோங்கச் செய்தனன்று.
எத்தனை செய்தாலு மிறப்பது நிச்சயமாம் செத்தபின் மீண்டும் செகத்திற் பிறப்பதில்லை.
அன்னே உடலியக்க மாகுஞ்செய லேயுயிராம் பின்னேநம் பிற்பிறப்பு பிள்ளைகளல் லாதுமுண்டோ.
ஆனதினு லென்று மழியா வுதவிகளை மாநிலத்தில் மக்களுக்கு மாந்தர் செய்தலேநலமாம்.
சாதி சமயமுதற் சாஸ்திரச் சடங்குகளென் ருதியாம் வீண்செலவை யற்றிடச் செய்தனலம்.
முன்னுள் மறைத்ததுவை முற்றும் வெளியாக்கிவிட்டோம் இந்நாளி லிப்புவியோர் இன்புறவே எந்நாளும்.
எம்மதமு மிம்மயமா யெங்குந் தமிழோலியாய் சம்மதங்கோண்ட தனிப்பெருமை என்னசோல்வேன்.
உலகத்தோ ரேயிந்த வுண்மையுப தேசமிதைப் பலகாலு முண்டு பயமற்று வாழ்வீரே.

(என்று சொல்லிமுடித்தார் கரகோஷம் முழங்கிகின்றது.)

உடனே ஞானவிலோசனி எழுந்து எல்லோரும் நாளை என் ராஜ்பத்துக்கு வந்து ஞானசிலனுக்குப் பட்டங்கட்டவேணுமென்று கேட்டுக்கொண்டனர். "தேய்வந் தோழாள் கோழுநற் றேழுதேழுவாள் பெய்யேனப் பெய்யு மழை." அதைவிட்டு எல்லோரும் மறுநாள் அதிகாலை

யிலெழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு சிற்றுண வருந்திப் பின் விவேகபுரி நோக்கிப் புறப்பட்டார்கள். "நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல தன்றே மறப்பது நன்று." வழியில் சத்தியபுரிக்குச்சென்று எதிர்கொண்டழைத்த அவ்வரசன் குணசீலனையும் சச்சிதானந்தன் பூபதி முதலிய அனைவர்களை யும் அழைத்துக்கொண்டு விவேகபுரி அரண்மனைவந்து சேர்ந் தார்கள். பட்டணம் அலங்காரம்செய்யப்பட்டது. அன்று சகல ஜனங்களும் நடந்த செய்தியைக் கேட்டு, ஏகோபித்து வந்து வணங்கி "நாங்களெல்லோரும் செய்த தவமகிமை, சக்ரவர்த்தினியே வேடந்தாங்கிய அரசனாக இருந்தாரென்று பல முகமன் கூறினார்கள்.

ஞானவிலோசனி:- இனிப்பெண்களுக்கு சுதந்தரம்கொ டுக்க நாமே ஒரு காரணமாக இருக்கவேணுமென்று கொலுச் சபையில் வந்துட்கார்ந்து சொல்லத்தொடங்கினாள். இது முதல் நம் ராஜ்யமெங்கும் ஆண் மக்களைப்போலவே பெண் மக்களைப் பாவிக்கவேண்டும். பெண்கள் நாயகன் வருதிப் படி நல்வழியில் நடந்துவர வேண்டியது. கருவில் பத்து மாதம் சுமந்து வளர்த்து பிரசவ அவஸ்தைப்பட்டு குழந்தை களைப்பெற்று அவைகளுக்குப் பால்கொடுத்துப் பாதுகாத்து வளர்க்கிறது பெண்களுக்குஎவ்வளவுகஷ்டம். அப்படியிருக்க அவர்களுக்குப் பரிந்து பேசுவாரொருவரைக் கூடக்காணோம் மேலும், அவர்களைப் பேயென்றும், எமனென்றும், காளி, கூளி, மூளிகளென்றும் இழிவு கூறி அவர்களை மிருகத்துக் குங்கீழாக அடிமைகளாக்கிக் கேவலப்படுத்தி நடத்திவரு வது நியாயமா? மெஜாரிட்டி அதிகாரக் கூட்டத்தாராகிய ஆண்மக்கள் செய்துவந்தது பாரபட்ச செய்கையல்லவா? அவர்கள் மட்டும் எத்தனைபெண்களையுங் கட்டிக்கொள்ள லாம் விபசாரம் செய்துகொள்ளலாம். பெண்கள் கெட்ட

வழி நடக்க ஆண்களே காரணஸ்தர்களாதலால் பெண்களுக்கு ஆண்களே எமன். ஆனால் பெண்கள் மெஜாரிட்டியாய் சுதந்தரமடைந்திருந்தால் பழி தீர்த்திருப்பார்கள் என்பது நிச்சயம். ஆகையால், பெண்களுக்கு சொத்து முதலிய எல்லாவற்றிலும் சம சுதந்திரபாத்தியமுண்டும் மறுகட்டும் கட்டிக் கொள்ளலாம் என்றும் இன்னும் சில சீர் திருத்தங்களும் கொடுத்து "இனியவுளவாக இன்னாதகூறல் கனியிருக்கக் காய் கவர்ந்தற்று" என்ற மொழிப்படி இனிய மொழியோடு சொல்லி முடித்தாள். கரகோஷம் ஒலித்து முழங்கிற்று, அறிவானந்தனுக்கு முடி சூட்டப்பட்டது.

அரசன் அறிவானந்தன் முந்தின அரசகுமாரத்தி வித்வ விலோசனியைப்பார்க்க நினைத்து சபையின் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த அப்பெண்ணை வரவழைத்து விசாரிக்கத் தொடங்கினன். வாத்திச்சியும் கையில் ஒரு பிரம்புடன் வந்தாள்.

அரசன்:—இதுவரை யிந்தப்பெண் என்ன பயின்றிருக்கின்றது?

வாத்திச்சி:—சகல நீதிநூல்களும் இருதயகவர்ச்சி செய்யும் மெஸ்மரிசம் அல்லது மனோவசியமென்னும் ஓர் அற்புத வித்தையும் அப்பியாசம் செய்திருக்கிறாள்.

அரசன்:— அப்படியானால், அப்பேர்பட்ட மனோவசியமென்னும் வித்தையை இச்சபையில் எல்லோரும் பார்த்தானந்திக்கும்படி காண்பிக்க உத்திரவளிப்பாய்.

வாத்திச்சி:— வித்வ விலோசனி! என்ன தாம்சம்? சகல சாமானும் கைவசமிருக்கிறதே! ஆரம்பம் செய்வாய்.

## பதினைந்தாவது அத்தியாயம். மெஸ்மரிசம்.

வித்வ விலோசனி:—வாத்திச்சி உத்திரவுப்படி எழுந்து நின்று, சபையோர் எல்லோரையும் ஒருமுறைசுற்றிப்பார்த்து

எல்லோரும் என்னையே பாருங்கள் கவனியுங்கள். வித்தில்லாத மந்திரம் மேலுமில்லை கீழுமில்லை. நான் இப்போது செய்யப்போகும் வித்தையாவது, முன்காலத்தில் பாண்டிய அரசனை ஆரிய தந்திரிகளிலொருவராகிய மாணிக்கவாசகனென்னுமொரு அமைச்சன் குதிரை வாங்கிக்கொண்டு வருவதாய்ப் பணத்தைப் பெற்றுக்கொண்டு போய்க் கோவில் கட்டுவதாய் நடிக்க அரசன் பணங்கேட்க இவ்வித்தையால் ஏமாற்றிவிட்டான். சபையோர்களே! இதோ பாருங்கள். கவனமாய்ப்பாருங்கள், கையிலிருக்கிற சிறு புட்டியைத்திறக்கின்றேன் அதிலென்னவிருக்கிறது? இப்போது என்னேரமிருக்கும்?

சபையோர்:—நிரம்ப வெட்டுக்கிளிகள், அதாவது வீட்டிற் பூச்சிகளிருக்கின்றன. நேரமும் உச்சிப்பொழுது மணி பனிரெண்டடிக்கிறது.

வித்வ:—ஏன் பொய் சொல்லுகிறீர்கள். நன்ருய்க் கவனித்துப் பாருங்கள், நான் நரிகள் கொண்டுவந்திருக்கிறேன். உங்கள் கெடியாரத்தையும் பாருங்கள்எத்தனை மணியாயிற்று.

சபையார்:—ஆம், ஆம், அவ்வளவும் நரிகளாய்த் தானிருக்கின்றன. எல்லாக் கெடியாரத்திலும் மணி ஆறுதானடிக்கிறது, இப்போதுதான் சூரியனும் உதயமாகிருன். என்ன ஆச்சரியம்!

வித்வ:—இல்லை, இல்லை இன்னும் பொய்சொல்லுகின்றீர்கள் நான் கணக்கில்லாத குதிரைகள் கொண்டுவந்திருக்கின்றேன். பிரியமுள்ளவர்கள் ஏறிச்சவாரி செய்யலாம். இப்போது கடியாரத்தைப் பாருங்கள்.

சபை:—ஆம், ஆம் இதுவென்ன அதிசயம்! எத்தனை குதிரைகள்! அளவிடமுடியாது போலிருக்கின்றதே! மணி பனிரெண்டே காலாக மாறிவிட்டதே! சூரியனும் உச்சியைக் கடந்து நிற்கிறதே!

அரசன்:—பிரமை கொண்டு, அதுசரி, ரெம்பசரி. இவ்வளவு லட்சணமான குதிரைகளை நானெங்கும் பார்த்ததில்லையே! இளம் பெண்ணே வித்வ விலோசனி! இவ்வசுவங்களை விட்டுவிடாதே, கோடிக்கு மேற்பெறும்போலிருக்கின்றதே!

வித்வ:—அப்படியே செய்கிறேன், குதிரைகளைப் பந்தி பந்தியாய்க் கட்டி விடுகிறேன். ஆற்றிற் பிரவாகம் வந்துவிட்டதே என்ன செய்வீர்கள்? எப்படித் தப்புவீர்கள்? சமுத்திரமும் பொங்கி வருகின்றதே!

அரசன்:—ஓகோ! இதுவென்ன மாயம் பெரும் வெள்ளமாக வல்லவா வருகின்றது. ஒருபக்கம் சமுத்திரமே பொங்கி வருகின்றதே! ஞானவிலோசனி! ஞானசீலா! சபையோர்களே! எழுந்திருங்கள், வேறெங்கேயாவது ஓடிவிடுவோம்.

வாத்தி:—பிரபு! பயப்படாதீர்கள், தங்கள் கையிலிருக்கிற பிரம்பைக்கொண்டு வித்தைக்காரியை ஓங்கி அடியுங்கள் பிரவாகம் சகலமும் நின்றுவிடும்.

அரசன்:-இதோ அடிக்கின்றேன், என்னைத்தானடித்துக் கொண்டேன். அப்படியே சபையிலுள்ள எல்லோரும் என்னைத்தான் அடித்தீர்கள், என்னைத்தான் அடித்தீர்கள் என்று சொல்ல, அரசன் திக்பிரமைகொண்டு நின்முன். பிரவாகம் நின்றுவிட்டது பொங்கிவந்த சமுத்திரமு மடங்கிவிட்டது.

வித்வ:—எதிரேவந்து பயப்படாதீர்கள். அதோ நிற்கும் கற்கயம் அஃதாவது கல்யானை உங்களை நாடிவருகின்றதல்லவா? என்ன செய்யுமென்று நினைக்கிறீர்கள்?

அரசன்:-திக்முக்காடி வித்வவிலோசனி! அவ்வத்தியை விரட்டிவிடு வீறிடுகின்றதே! என்மேல் கையை நீட்டுகின்றதே! ஈதென்ன, வித்தை பிரமைகொள்ளச் செய்கின்றதே!

வித்வ:— அது உங்களை ஒன்றும் செய்யாது, அதோ இருக்கின்ற கரும்புக் கட்டுகளை எடுத்துப்போடுங்கள் தின்று

கொண்டிருக்கும் அகஸ்மாத்தாய் பெரியமழையல்லவாவந்து விட்டது.

அரசன்:—குதிரைகளெல்லா மிறந்துவிடும் போலிருக்கின்றதே!

பட்டாளத்துக்காகு மென்றல்லவா நினைத்திருந்தேன். இனி யென்ன செய்கிறது! ஐயோ! பாவம்! வித்தைக்காரி! இவ்வசுவங்களைக் காப்பாற்ற வேறு வழியில்லையா? தேங்கா யளவு கல்லாய் விழுகின்றதே!

வித்வ:—அதோயிருக்கின்ற பெரிய மலையை இவ்விடத்தில் தரவழைத்து அதை வேரோடு பிடுங்கிக் குடையாய்ப் பிடித்துக்கொள்ளுகிறேன் பயப்படாதீர்கள் என்று சொல்லி குடையாய்ப் பிடித்து நின்றாள். சற்று நேரத்தில் மழையும் நின்றுவிட்டது.

அக்கொடிய துஷ்டர்களாகிய அவ்வசுரர்களுடன் சண்டைசெய்து அவர்களைச் சம்மாரம் செய்யப்போகிறேன். இதோ, இந்நூலேணி வழியே மேலுலகம் செல்கிறேனென்று நூலேணிமேற் சென்று மறைந்தாள். உடனே ஆகாயத்தி லிருந்து யானைத்தலை, குதிரைத்தலை, மனித அசுரத் தலைகளும் கைகளுங் கால்களும் முண்டங்களும் விழுந்தது, இரத்த வெள்ளமா யோடிற்று, சபையோர் சகலரும் பிரமை கொண்டவர்களாய் மயங்கிக்கிடக்க சிறிது நேரத்தில் வித்வ விலோசனி அந்தரத்திலிருந்து கீழே இறங்கி வந்து அங்கு தோன்றிய பெரும் அக்கினிச் சுவாலையில் முழுகி எழுந்து அரசன் சமீபமாய் மிகுந்த களைப்புடன் நின்றுகொண்டிருந்தாள்.

அரசன்:—அவளை ஒரு ஆசனத்திலமரச் சொன்னான்.

வித்வ:—நான் அமர்ந்தது போதும், தாங்கள் சப்பாணியாய்ப்போய் விட்டீர்களே! எப்படி நடப்பீர்கள்.

அரசன்:-வித்தைபார்த்தது போதும், எழுந்திருக்கமுடியவில்லையே! மாயக்காரரே என்னை நடையுண்டாக்குங்கள்.

வித்வ:—என்ளுல் உங்களுக்கு நடையுண்டாகுமென்று விசுவாசித்தால் அது உங்களே இரட்சிக்கும்.

அரசன்:—அப்படியே விசுவாசிக்கிறேன், இதோ எழுந்து நடக்கின்றேன்.

வித்வ:—நீங்கள் நடந்து என்ன பிரயோசனம், அம்மா அவர்கள் ஊமையாய்ப்போய் விட்டார்களே! இனியாருடன் பேசுவீர்கள்?

அரசன்:—என் மனைவியா? அப்படிப்போனுள். இதோ எதிரில் தானிற்கின்ருள், கூப்பிடுகிறேன். ஞானவிலோசனி! ஞானவிலோசனி! என் பேசவில்லை? ஊமைச்சாடை செய்கின்ருய். என்ன விபரீதம்! வித்தைக்காரரே! என் மனைவியைப் பேசும்படி செய்யுங்கள், நீங்கள் கேட்டதெல்லாம் தருகின்றேன்.

வித்வ:—நீங்களெதைக் கொடுக்கப் போகின்றீர்கள்? அம்மாள் இறந்தல்லவா போய்விட்டாள், இனியென்ன செய்வீர்கள்.

அரசன்:—ஈதென்ன விபரீதம்! வேடிக்கை பார்க்கவந்து வில்லங்கத்தில் மாட்டிக்கொண்டேனே. ஞானவிலோசனி! ஞானவிலோசனி! ஐயோ! மூச்சொன்றுமில்லையே! நாடி பேசவில்லையே! உள்ளபடியே யிறந்துதானே போய் விட்டாள், இனியென்ன செய்வேன், மகாபாவியாய்ப்போய்விட்டேனே, ஆ! ஆ! தெய்வமே, என்னுயிர் தரிக்குமா, மாயவித்தைக்காரரே, மோசஞ்செய்து விட்டீர்களே! இனி என்ன செய்வேன் என்று மயங்குகின்ருர்.

வித்வ:—பயப்பட வேண்டாம், எடுத்துப் புதைத்து விடுங்கள், மூன்றும் நாள் எழுப்பித்தருகின்றேன்.

அரசன்:—இளம் பெண்ணே! மூன்று நாள்வரை என்னுயிர் தரிக்குமா? இப்பொழுதே எழுப்பிவிடு, இல்லையென்ருல் என் கையிலிருக்கும் வாளாயுதத்தால் நானும் இறந்து விடப் போகின்றேன்.

வித்வ:—ஏனிப்படி மயங்கிவிட்டீர்கள் சற்று கவனியுங்கள். தட், தடார், டப், டபீர் அம்மா எழுந்திருங்கள் பேசுங்கள் ஐயா பயப்படுகிருர்கள். வித்தை முடிந்துவிட்டது எல்லோரும் பாருங்கள்.

அரசன்:—ஈதென்ன மாயை! ஒன்றையுங் காணுமே முதல்முதல் வந்தபடியேதானே எல்லோரும் நிற்கின்றீர்கள், பரிகளெங்கே, யானையெங்கே, யானைத்தலை, குதிரைத்தலை, முண்டங்களெங்கே, கிரியைக் குடையாய்ப் பிடித்துக்கொண்டு நின்ருளே, இரத்தவெள்ளம் ஓடிற்றே நன்ருய்ப் பார்த்தேனே, ஞானவிலோசனி! எல்லாம் கவனித்தாயா? இதைப்பற்றி என்ன சொல்லுகின்ருய்?

ஞானவி:—ஆம், பிராணநாதா! நன்ருய்க் கவனித்தேன். இப்படி வித்தைகளைப் படித்துக்கொண்டு தானே முன்னுளில் கிறிஸ்து, கிருஷ்ட்ணன், புத்தன், மாமூது முதலியவர்களும் உலகத்தை ஏமாற்றி விட்டார்கள். பெண்மணி வித்வவிலோசனி! கிட்டவா உட்காரு இதன் விர்த்தாந்தங்களை எங்களுக்கு விளங்கும்படி தெளிவாகச்சொல்.

வித்வ:—அம்மா, இது ஒரு மயக்கம் இருதயக்கவர்ச்சியென்ருெரு வித்தை சாமான்யர்களுங் கற்றுக்கொள்ளலாம், இப்போது நான்செய்து காட்டியதின் விபரம், முதலாவது தங்கள் இருதயத்தைக் கவர்ந்து விட்டேன் பின்ணுல் நான் கேட்டதெல்லாம் ஒப்புக்கொண்டீர்கள் இதைத் தவிர வேறு இல்லை. இவ்வித்தையின் செயல் உலகெங்கு மொருசெயல் அநாதியாய்ப் பரவியிருக்கின்றது, அதை வசப்படுத்த சில முறைகளுண்டும் அதைத்தெரிந்து கொண்டால் யாரும் செய்யலாம், இதைத்தான் நம் முன்னோர்கள் பிரமமென்றும் அறிவென்றும் ஈசனென்றும் இதையறிந்து விட்டால் என்னமோ பெற்று விடலாமென்று எண்ணிக்கொண்டு தலைகீழாய்த் தொங்கியும் ஒருகாலில் நின்று தவம் புரிந்தும் ஓடியாடி அலுத்துத்துறவறம் பூண்டதும், மூச்சைப்பிடித்து யோகம் புரிந்தார்கள்.

## யோக நித்திரையின் பத்துப்படிகள்.

(1) குறிப்பிட்டவன் பேசும் சப்தம் கேட்கும், (2) அவன் உருவம் தெரியும் (3) அவன் எண்ணுவது தெரியும் (4) அவன் எண்ணமென்னும் உள் மனதில் கலந்து சம்பாஷித்தல் (5) அவனுக்கு நேர்ந்த முந்தின சம்பவங்கள் தெரியும் (6) அவன் பிந்தி அனுபவிக்கும் சம்பவங்கள் தெரியும் (7) உலகிலுள்ள மற்றவர்கள் செய்கை சம்பவ முதலியவைகள் தெரியும். (8) சகலரின் எண்ணமென்னும் உள் மனதுகளில் கலந்து சம்பாஷித்துலாவுதல். (9) உலகிலுள்ள சகல பிராணிகளின் உள் மனதில் கலந்து சம்பாஷித்து உலாவுதல். (10) அண்ட பிண்ட சரா சரங்களிலும் சென்றுலாவி சகலமும் தன்மயமாகும் தெய்வத் தன்மையாதல்.

சபையோர்களும் அவ்வூர் ஜனங்களும் சந்தோஷமாய் விருந்துண்டு சந்தன தாம்பூலம் பெற்றுக்கொண்டார்கள். அரசன் அரசியைக் கூப்பிட்டு இவ்விராஜ குமாரத்தி கெட்டிக்காரியாய் விட்டாள் பருவமடைந்த பெண்ணுமானுளல்லவா? விவாகம் செய்விக்க நாம் கவனிக்கவேண்டும். பெண்ணின் சம்மதமன்னியில் பெற்றோர்கள் நிச்சயிக்கும் கெட்ட வழக்கங்களை நீக்க நாமே நடந்து காட்டவேண்டும். நாளை முதல் ராஜகுமாரியும் தன் சினேகிதிகளுடன் நாம் செய்யும் நீதி விசாரணையிடத்துக்கு ஒரு முகூர்த்த காலம் போய்க் கவனித்துக்கொண்டு வரவேண்டும்.

அரசி:-நானும் அவளைக்கேட்கின்றேன், தாங்கள் சொல்லிய சமாச்சாரத்தையும் அவளிடம்சொல்லுகின்றேன். வித்வ விலோசனி! இப்போது பேசிய காரியத்தைக் கவனித்தாயா?

வித்வ:—ஆம் தாயே கவனித்தேன்.

அரசி:—வாத்திமைப் பெண்களே! உங்களுக்கு தகுந்த சன்மானம் அளிக்கும்படி கஜானுவுக்கு ஆர்டர்கொடுத்திருக்கின்றேன் பெற்றுக்கொண்டு போய் வருகிறீர்களா?

வாத்தி:—வந்தனம் தாயே பெற்றுக்கொண்டோம் போய் வருகின்ரோம்.

மதியூகி மறுநாட் காலையில் எல்லோரும் தன் ராஜ்யம் ரத்னபுரிக்கு வரும்படி கேட்டுக்கொண்டார். சபை கலைந்தது அரண்மனை சேர்ந்தார்கள். அதிகாலையிலெழுந்து ரத்னபுரிக் குப்புறப்பட்டார்கள். அங்கு வந்து சேரவும் சகல ஜனங்க ளும் இவர்கள் வரவைத்தெரிந்து எதிர்கொண்டழைத்துப் பல முகமன் கூறினார்கள். அன்று மதியூகிதன் அரசன் அறிவானந்தனுக்குத் தன் ராச்சியத்தைப் பட்டங்கட்டி விருந்து நடத்தி விழாக் கொண்டாடி முடிந்தது. மறுநாள் எல்லோரும் கள்ளர்கள் அரண்மனை சேர்ந்தார்கள்.

அரசன்.—அறிவானந்தன்:—ஈதென்ன இப்பேர்ப்பட்ட யுத்தவீரர்களும் ஆயுதங்களும் அளவிறந்த செல்வம் நிறைந்த மாளிகை எங்கும் பார்த்ததில்லையே! என்ன அற்புதம்! உல கில் உள்ள மாளிகைகளை யெல்லாம் ஒருங்கு சேர்த்தும் இதற் கிணையாகுமா? உலகத்தை அழிக்க, காக்கவல்ல இப் பேர்ப்பட்ட யுத்தவீரர்களும் ஆயுதங்களும் மருந்து குண்டு களும் விமானங்களும் சேனை தளங்களும் இம்மாளிகையும் கற்பக வனமும், அதில் நிறைந்த ரத்னம் போன்ற கனிகளை யுடைய மரங்களும் நிதிகளும் எப்படிக்கிடைத்தது மகனே?

ஞானசீலன்:—ஐயா, இவர்கள் மகா பராக்கிரமசாலிகள், இவர்கள் வீரத்தினாலல்லவா அவ்வைந்து அரசர்களையும் ஜெயித்தேன்; இவர்களிடம் நானகப்பட்டுக்கொண்டு பின்பு நானே இவர்கட்குத் தலைவனாகும் பாக்கியமெனக்குக் கிடைத் தது. இவர்கள் கப்பற் கொள்ளைக்காரர்கள்.

அரசன்:—"களவினாலாகிய வாக்க மளவிறந்தாவது போற் கேடும்" என்ற பழமொழிப்படி இனி அதுமுதல் அவர்கள் கப்பற் கொள்ளை முதலிய திருட்டுகள் செய்யக்கூடாதென்று உத்திரவு செய்துவிட்டு அவர்களுக்கெல்லாம் வேண்டிய சன் மானம் மெடல் பரிசு முதலியன கொடுத்து, கற்பகவனத் துட்சென்று அங்கு தயாரித்த அமிர்தம்போன்ற உணவுகளை யும் கனிவர்க்கங்களையும் அன்னபானாதிகளையும் அருந்தி பாதாள கங்கை யென்னும் அவ்விடத்திற்றோன்றிப் பிரகாசித் துக்கொண்டிருக்கும் ஜீவநதி ஜலம் பருகி பிர்மானந்தமடை ந்து பின் புறப்பட்டு வீமாபுரி வந்து சேர்ந்தார்கள்.

## பதினாறாவது அத்தியாயம்.

## கல்யாணம், பட்டாபிஷேகம்.

பின்பு ஞானசீலனுக்குக் கல்யாணம் செய்ய உத்தேசித்து அவனுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு விசாரிக்கும்போது அன்று வித்தை காண்பித்த அரசகுமாரியின் பேரில் "கண்டு கேட்டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும் ஒண்டோடி கண்ணேயுள, தொடிற் சுடினல்லது காமத்தீப் போல விடிற் சுடி லாற்றுமோ தீ" என்றபடி மயக்க முற்றவனாயிருந்தான்.

அது நிற்க அவ்விளங் குமரியை விசாரிக்க "உள்ளினுந் தீராப் பெருமகிழ் செய்தலாற் கள்ளினுங் காமமினிது, ஊடுதல் காமத்திற்கின்ப மதற்கின்பம் கூடி முயங்கப்பெறின்" என்றபடி அவளும் நம்மிளவரசனிடம் தன் மனதைப் பறிகொடுத்துத் தன்னை மறந்தவளாகக் காணப்பட்டாள்.

அவ்விருவருக்கும் கல்யாணம் நிச்சயித்துத் திருமணப் பிரசுரம் உலகமெங்கும் பரந்தது. பட்டனங்களெல்லாம் அலங்காரம் செய்யப்பட்டது. நாடெல்லாம் சமாதானம். ஊரெல்லாம் ஒற்றுமை, வீடெல்லாம் சந்தோஷம், இச்சமாச்சாரத்தைக் கேட்ட பிரபுக்களெல்லோரும் சந்தோஷத்தினால் தங்கள் தங்கள் கிராமங்களில் வித்யாசாலை, தொழிற்சாலை, தொழிற் கல்விச்சாலை, வைத்தியசாலை, காட்சிச்சாலை, புத்தகலைபிரெரிசாலை, முதலியவைகளுக்கு வேண்டிய பொருள்களை அனுப்பியும், ஏற்படுத்தியும் சொத்துக்களை அதற்குத் தான சாசனம் செய்து வைத்தார்கள். ஜாதி மதம் வித்தியாசம் பாராட்டாமல் ஒவ்வொரு கிராமங்களிலும் பட்டணங்களிலும் விருந்து விழா குறித்த காலம்வரை நடந்துகொண்டிருந்தன.

அழகும், அறிவும், வீரமும் ஒரே உருவாயமைந்த மணமகன் ஞானசீலனும், சந்திரன் போன்ற அருண்மிகு முகமும், ஆடிக்கபோலமும், தாமரை மலர்போன்ற கைகளும், சேலைப்பழித்தகண்ணும், காரைப்பழித்த கூந்தலும், குமிழமலர்போலும் நாசியும், முத்தமுறுவலும் பவள இதழும், கிளிமொழியும், அமுதவசனமும், மோப்பக் குழையும்

அனிச்சமலரும் அன்னத்தின் றூவியும் நெருஞ்சிப்பழமாக அழுத்தும் மெல்லிய புறங்களும், ஆலிலைபோல் வயிறும், துடி இடையும், அன்னநடையும், மயில்சசாயலும் பொற்சிலை போலுருவமும், ஒப்புவமையற்ற அழகும் குணமும் நல்லறிவும் மணமும் வித்வம் முதலிய பெருமைவாய்ந்த மணமகள் வித்வ விலோசனியும் புது வஸ்திரந்தரித்துப் புஷ்பாலங்கிருதராய் சபையினடுவிலமைத்த மேடையிலெழுந்தருளினார்கள். மாலை மாற்றப்பட்டது மோதிரம் மாற்றப்பட்டது திருமங்கிலியம் பூட்டப்பட்டது. கல்யாண ரிஜிஸ்தர் புஸ்தகத்தில் தாக்கல் செய்யப்பட்டது. புரோகிதப் பூசைகள் சடங்குகள் யாதொன்றுங் கிடையாது கல்யாணம் முடிந்தது.


'நித்யானந்தனென்று பேர்விளங்கிய அறிவானந்தன் எழுந்து மகா ஜனங்களே! தன்யசீலனும் விளங்கிய ஞான சீலனையும் மணமகள் வித்வ விலோசனியையும் கவனித்துப் பார்த்தீர்களா? எதாவது ஆபரண மணிந்திருக்கிறார்களா? அழகு குறைந்திருக்கின்றதா, மேலிட்டிருக்கின்றதா? நன்றாய்க் கவனியுங்கள். "பெறு மவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த மக்கட்பே றல்ல பிற" "கண்ணுடையராவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்" என்றும் "கல்வி நலனே கலனல்லால் மற்றோரணிகலம் வேண்டாவே—முற்றும் முழுமணிப்பூணுக்குப் பூண்வேண்டா யாரே அழகுக்கழகு செய்வார்" என்றும் நமதன்னையாராகிய ஔவையா ரருளிச்செய்த வாக்கிய முதலியவை இன்று நிறைவேறியது போலும்.

நீங்களுமிவர்களைப் பின்றொடர்ந்து ஒற்றுமை பெருக்கி வீண் செலவொழித்தல் விவகாரங்கழித்தல் முதலானவைகளை உங்களில் ஐஸ்வரியவான்களாகிய பிரபுக்களே முதலில் கையாடவேண்டும் ஏழை ஜனங்களும் உங்களைப் பின்தொடரும் உலகம் ரட்சிக்கப்படும். என்று சொல்லிமுடித்து அவர்களுக்கே சகல ராஜ்யத்திற்கும் ஏகச்சக்கரவர்த்திப் பட்டமும் கட்டி முடிசூட்டினார்கள்.

'பொங்கும் மங்களம் எங்கும் தங்குக' வாழ்க வாழ்க நீடூழிவாழ்க, என்று கரகோஷத்துடன் பட்டாபிஷேகம் நிறைவேறியது. சுபம்.

முற்றிற்று.

77654




படம் (1)